www.padippakam.com

# வெற்றி நமதே!!

## சே குவாரா

தமிழில் :
குமாரசாமி
நெடுஞ்செழியன்
புருஷோத்தம்
ரமேஷ் பாபு
பிரபாகர்

படிப்பகம்

| | |
|---|---|
| சே குவாரா - ஒரு அறிமுகம் | 3 |
| புரட்சிகரமான மருந்து | 23 |
| நாம் நடைமுறைப் போராளிகள் | 30 |
| கட்சி உறுப்பினர்கள் புரட்சியின் முதுகெலும்பு | 36 |
| கட்சியின் போர்க்குணம் | 40 |
| முக்கண்டங்களுக்கும் செய்தி | 49 |
| ஃபிடலுக்குக் கடிதம் | 59 |
| குடும்பத்தினருக்குக் கடிதம் | 61 |
| எப்போதும் வெற்றியை நோக்கியே முன்னேறுவோம் | 62 |

# சே குவாரா - ஒரு அறிமுகம்
# எழுதியவர் : ஜான் கேரஸ்

*[ஜான் கேரஸ் அகிலஉலகஉறவு சம்பந்தமாக பாடம் நடத்தும் பேராசிரியராய் சான் பிரான்சிஸ்கோ பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார். அவர் 'டைம்ஸ்' மற்றும் 'தி நியுயார்க் டைம்ஸ்' பத்திரிக்கைகளுக்காக லத்தீன் அமெரிக்காவில் இருந்து கொண்டு வேலைப் பார்த்தார். கூடவே 'நியூஸ்வீக்ஸ்' என்ற பத்திரிக்கையின் முன்னாள் பதிப்பாசிரியரும் ஆவார். அவர் மாணவர் போராட்டத்தின் போது, மாணவர்களுக்கு ஆதரவு அளித்ததற்காக, பேராசிரியர் பதவியில் இருந்து பணிநீக்கம் செய்யப்பட்டார். பின்னர் லண்டனில் போய் வாழ்ந்து வந்தார்]*

1967 அக்டோபர் 9-ம் தேதியன்று எர்னஸ்டோ சே குவாராவின் மரணம் பற்றிய வதந்தி, அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குள் கசிந்து வந்தது. அதற்கு மறுநாள், சான் பிரான்சிஸ்கோ அரசுக் கல்லூரியில், 'மூன்றாம் உலகில் தேசியமும், புரட்சியும்' என்ற தலைப்பில் பாடம் எடுப்பதற்காக, என்னுடைய வகுப்பிற்குள் நுழைந்துக் கொணடிருக்கும் போது, அந்தப் பத்தொன்பது வயது மாணவி நேராக என்னிடம் வந்தாள். அவளது சட்டையின் மார்பில், 'போரை உருவாக்காதே; அன்பை உருவாக்கு' என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது. அவள் கண்களில் கண்ணீர் நிரம்பியிருந்தது. "உண்மையில் இந்தச் செய்தியை நீங்கள் நம்பவில்லை, இல்லையா?" என்று கேட்ட அவள், "அதாவது அவர் உண்மையிலேயே இறந்திருக்க முடியாது, அப்படிதானே?" என்றாள்.

நாங்கள் அன்றைய வகுப்பு முழுவதையும் சே பற்றி, அவரது கொரில்லா போர்க் கருத்துகளைப் பற்றி, அவருடைய தனிப்பட்ட கடப்பாடு பற்றியும் பேசிக் கழித்தோம். எவருமே - அந்த வகுப்பில் இருந்த அறுபது மாணவர்களும், நானும் - அவர் இறந்திருப்பார் என்பதை நம்பவில்லை. உண்மை என்னவென்றால், எவரும் அதை நம்ப விரும்பவில்லை என்பதுதான்.

எனக்குத் தெரிந்தவரை அந்த வகுப்பில் பழமைவாதிகள் என்று யாரும் கிடையாது. ஆனால் பகுத்தறிவாதிகளுடன், தாராளவாதிகளும் சமாதானவாதிகளும் பலர் இருந்தனர். ஆனாலும் அனைவருக்கும்- அவருடைய நடைமுறை உத்தி குறித்து மாற்றுக்கருத்து கொண்டிருந்தாலும்- அவர் இறந்து போயிருக்கலாம் என்ற செய்தி கடுமையான மனச்சோர்வை அளிப்பதாயும், தனிப்பட்ட இழப்பை ஏற்படுத்துவதாயும் இருந்தது. சே அவர்களை அப்படிக் கவர்ந்திருந்தார். அவர்கள் அவரை மதித்தனர்; போற்றினர். அவரது வாழ்க்கைப் பற்றி அவர்கள் அறிந்திருந்தது மிகவும் குறைவுதான்; அதைப் பற்றி நாங்கள் வகுப்பில் விவாதித்தது இல்லை. ஆனாலும் அவர்கள் சே ஒரு இலட்சியப்பிடிப்பு உடையவர் என்றும், பிறருக்கெனவும், தான் சந்தித்திராத மக்களுக்காகவும், ஏழைகளுக்காகவும், சுரண்டப் பட்டவர்களுக்காகவும், அனனியப்பட்டவர்களுக்காகவும், சகமனிதனுக்காக சற்றும் கவலைப்படாத பேராசைக் கொண்ட சக்திவாய்ந்த மனிதர்களின் கையில் தன்னையறியாமல் கருவியாக மாறி விட்டதாக நினைப்பவர்களுக்காகவும் வாழ்ந்தவர்- அவர் இறந்து விட்டார் என்ற செய்தி உண்மையாய் இருக்கும் பட்சத்தில் - என்று அவரைப் பற்றி அறிந்திருந்தார்கள். அன்று நாள் முழுவதும் நாங்கள் பேசியதில் இருந்து, சே என்னவோ, இந்த தாரளவாத மற்றும் சமாதானவாத மாணவர்களுக்காக இறந்தது போல அவர்கள் உணரந்துள்ளனர் என்பது எனக்குத் தெளிவாயிற்று. அவர்கள் ஏன் அவரின் சாவு அப்படியொரு எண்ணத்தை ஏற்படுத்தியது என்பதை புரிந்துக் கொள்ள விரும்பினார்கள். அவர்கள், அவருடைய அனுபவங்களை தங்களுடைய அனுபவத்துடன் பொருத்தி பார்க்க விரும்பினார்கள். சேயின் வாழ்க்கை பின்புலம், அவர்களுடைய வாழ்க்கையை ஒத்திருந்தது. அதனால்தான், அமெரிக்காவின் 'புறநிலை ஆய்வாளர்கள்' ஒப்பு கொள்வதை விட தங்கள் வாழ்க்கையுடன் சேயின் வாழ்க்கை சம்பந்தம் உள்ளதாக அந்த அமெரிக்க மாணவர்கள் கருதினார்கள். சொல்லப் போனால், பெரும்பாலான அமெரிக்க மாணவர்கள் வளர்க்கப்பட்டிருந்த முறையிலேயே சேயும் வளர்க்க பட்டிருந்தார்.

எர்னஸ்டோ சே குவாரா 1928-ஆம் வருடம் ஜீன் 14-ம் தேதி, அர்ஜெண்டினாவிலுள்ள போனஸ் அயர்சுக்கு அடுத்த இரண்டாவது பெரிய நகரமான ரோசரியோவில் பிறந்தார். அவரது தந்தையின் பெயரும எர்னஸ்டோதான். அவர் வீரதீரமிக்க முரடர். எடுத்துக் கொண்ட கொள்கையில் உறுதியாக இருப்பவர். அவர் கப்பல் கட்டும் தொழில், 'மேட்'[1] வளர்ப்புத் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டு கொஞ்சம் செல்வம் சேர்த்தார். பின்னர் கட்டிடக்கலை பட்டம் பெறாமலேயே கட்டிடக்கலை நிபுணரானார். அவர் மிகுந்த பரந்த மனப்பான்மை உடையவராகவும், தாராளவாதியாகவும் திகழ்ந்தார்.

---

[1] 'மேட்' என்பது கசப்பான பச்சை நிறத் தேநீர். அர்ஜென்டைனியர்கள், உருகுவேயர்கள், பாரகுவியர்களும், சூடாகவும் குளிர்ந்தும் வெள்ளி மற்றும் மரக்குவளையில் இதை அருந்துவர். சேவிற்கும் மேட் ரொம்ப பிடிக்கும். கியூப காப்பியை அருந்த பழகிய பின்பும், 'மேட்' அருந்துவதை அவர் விடவில்லை.

அவர் தனது ஐந்து குழந்தைகளையும், அவர்களின் மேல் கட்டாயமாக எந்த ஒரு நம்பிக்கையையோ, வாழ்க்கை முறையையோ திணிக்காமல் வளர்த்தார். அவர் தனது மரபு குறித்து பெருமை கொண்டிருந்தார். அவரது மூதாதையர்களின் ஒரு கிளை, முற்காலத்து அர்ஜென்டைனா பெருங்குடிமகனான வைசிராய் லீனியர்ஸ் வம்சத்தைச் சார்ந்தது.

குவாராவின் முன்னோர்களில் ஒருவரான ஜான் அன்டனியோ குவாரா அர்ஜென்டைனாவின் சர்வாதிகாரியாகத் திகழ்ந்து வந்து ஜான் மானுவல் சோசாஸை எதிர்த்துப் போரிட்டுத் தோற்று, 1850வாக்கில் நாட்டை விட்டு வெளியேறினார். கலிபோர்னியா வந்து சேர்ந்த அவர், அங்குள்ள லாட்டினோ தங்க வேட்டையாளர்களின் அஞ்சத்தக்க தலைவரானார். அவர் அங்கு மெக்சிகோ நாட்டைச் சேர்ந்த கான்செப்சியான் காஸ்ட்ரோ என்ற பெண்ணை திருமணம் செய்துக் கொண்டார். அமெரிக்க குடிமகனாகப் பிறந்த அவரது மகன் கலிபோர்னியாவைச் சேர்ந்த எலிசபெத் விக்டோரியா லிஞ்ச்சை மணமுடித்துக் கொண்டார். இந்தத் தம்பதியினர் அர்ஜென்டைனாவிற்குத் திரும்பினர். அங்குதான் அவர்களின் முதல் குழந்தையான ‘சே’யின் தந்தை பிறந்தார்.

சேயின் தாய் ‘சீலியா டி லா செர்னாவும்’ பெருங்குடி ஒன்றில் இருந்து வந்தவர்தான். பின்னாட்களில் அவர் தீவிர மார்க்சியவாதியாக மாறியிருந்த போதிலும், 1965-ல் அவர் இறக்கும் வரை, தன் பெயரில் இருந்த ‘டி’ குறித்து மிகவும் பெருமை கொண்டிருந்தார். மனஉறுதியும், மூர்க்கத்தனமும் படைத்த அவர் சுரண்டலாலும் உள்ளூர் மூலதனத்தாலும் ஒடுக்கப்பட்டு அல்லலுறும் மக்களுக்காக இயைந்து மணிக்கணக்காக அரசியல் விவாதத்தில் ஈடுபடுவதற்காக எப்போதும் தயாராக இருந்தார். சீலியா தன் குழந்தைகள் அமெரிக்க சீர்திருத்த மரபுப்படி, ஒரு ‘மதிப்பான’ வாழ்க்கைத் துறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அவகளுக்கு வழிகாட்டினாலும் கூட, அவர்களின் சொந்த விருப்பப்படியே அவர்கள் வாழ்வதை ஊக்குவித்தார்.

இணையான பின்புலத்துடனும் மனநிலையுடனும் இருந்தக் காரணத்தினால், எர்னஸ்டோவும் சீலியாவும் அடிக்கடி தங்களுக்குள் அனைத்து விஷயங்கள் குறித்தும் விவாதித்துக் கொள்வது வழக்கம். தங்களுக்கு இடையேயான கருத்து வேறுபாடுகளை கூட அவர்கள் தங்கள் குழந்தைகளிடம் இருந்து மறைத்ததில்லை. அவர்களின் திருமணம் கடைசியில் முறிந்து விட்டது. ஆனாலும் குழந்தைகள் அவர்கள் இருவரின் மீதும் மதிப்பு வைத்திருந்தனர். இதற்குக் காரணம், இப்பெற்றோர் ஒருபோதும் பணம் குறித்தோ, வாழ்க்கைத்தரம் குறித்தோ சண்டையிட்டுக் கொள்ளாது, எப்போதும் மனிதனின் மதிப்பு குறித்தும் அவனது பெருமுயற்சிகள் குறித்துமே விவாதித்துக் கொண்டதேயாகும்.

சேயின் தந்தை தனது வாழ்க்கை முழுவதும் ஓரிடத்தில் நிலைத்து நிற்காமல் மாறிக் கொண்டே இருநதார். சே பிறக்கும்போது, அவர்கள் ரோசரியோவில் இருந்தனர். அதைக் குறித்து அவர் கூறுகிறார் : “நான் மிசியோனெஸ் பிராந்தியத்தில் மேட் வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டிருந்தேன். நானும் எனது மனைவியும், தொழில் விஷயமாக ரோசரியோ வந்திருந்தோம். இன்னும் குறைந்தது ஒரு மாதத்திற்காகவது நாங்கள் குழந்தையை எதிர்பார்க்கவில்லை. திடீரென்று என் மனைவிக்கு பிரசவவலி எடுத்து,, மருத்துமனையில் சேர்த்தோம். குறித்தக்காலத்திற்கு முன்பே பிறந்த எர்னஸ்டோ, நோயுற்று எலும்பும் தோலுமான குழந்தையாக இருந்தான்.

அதைத் தொடர்ந்து நான்கு குழந்தைகள் அவர்களுக்கு பிறந்தன. சேயை விட இரண்டு வயது குறைவான சீலியா; இப்பொழுது பிரபல வழக்குரைஞராக இருக்கும், சேயை விட மூன்று வயது குறைவான ராபர்ட்டோ; நான்கு வயது குறைவான அன்னா மரியா; கடைசியாக 13 வயது குறைவான ஜான் மார்டின்.

சேயின் முதல் 18 மாத வாழ்க்கை மிசியோனாவில் கழிந்தது. பின்னர் சேயின் தந்தை மேட் தொழிலை விட்டு விட்டு, போனஸ் அயர்ஸ் நகருக்குச் சென்று, கப்பல் கட்டும் தொழிலில் ஈடுபட்டதால், அவர்கள் இடம் பெயர்ந்தனர். ஆனால் அங்கு சேயின் தந்தை வேறொரு முக்கியமான வேலையிலும் ஈடுபட்டார். அதுதான் தனது நோஞ்சான் குழந்தையை கட்டுடல் மிக்க வாலிபனாய் மாற்றும் பணி, அவர் சேயை வெறும் ஜட்டியிடன் வீட்டின் குளிரான பால்கனிக்கு அழைத்துச் சென்று அவருக்கு குளிர்குளிப்பு செய்வார். சே கொஞ்சம் திடமானாலும், தொடர்ந்து இருமிக் கொண்டிருந்தார். அவருக்கு கடுமையான ஆஸ்த்மா இருந்தது கண்டுப் பிடிக்கப்பட்டது. மருத்துவர்கள் போனஸ் அயர்ஸின் ஈரமான தட்பவெப்ப நிலை ஆஸ்துமாவுக்கு ஏற்றதல்ல என்று கூறியதால், அவர் தனது கப்பல்கட்டும் தொழிலை பங்காளிக்கு விற்றுவிட்டு (இன்று அர்ஜென்டைனாவிலேயே பெரிய கப்பல் கட்டும் தளம் அதுதான்), சேக்கு நான்கு வயதாகும் போது, கொர்டோபாவிற்கு வந்து, அங்குள்ள மலை வாசஸ்தலமான அல்டா கிரேசியாவில் குடியேறினார். “சே நன்றாக வேண்டும் என்பதற்காக நாங்கள் அங்கு வந்தோம். ஆனால் எனக்கு அங்கு வேறு வேலை இல்லாததால், நான் வீட்டுலேயே ஒரு நூலகத்தை உருவாக்கினேன். எங்கள் வாழ்க்கை நன்றாக ஓடிக் கொண்டிருந்தது.

நான் என் நேரம் முழுவதையும் பையனுடனேயே செலவழித்தேன். அவனக்கு நீச்சல் அடித்தல், துப்பாக்கிச் சுடுதல், கால்பந்து மற்றும் ரஃபி விளையாட்டு விளையாடுதல் ஆகியவைகளை கற்றுக் கொடுத்தேன். கோடையில் அவன் மூன்று மணி நேரமாவது நீச்சல் குளத்தில் இருந்து மார்புத் தசைகளுக்கு உடற்பயிற்சி செய்யுமாறு பார்த்துக் கொண்டேன்" என்று கூறுகிறார் அவரது தந்தை.

சேயின் இளம் பருவத்து நண்பர் ஒருவர் நினைவு கூர்கிறார்: "அல்டா கிரேசியா மேல்பகுதி, கீழ்பகுதி என்ற இரு பகுதிகளைக் கொண்டது. மேல்பகுதியில் ஆங்கில இருப்புப்பாதை நிறுவனம் ஒன்று தனது அதிகாரிகளுக்காக கட்டியிருந்த வரிசை வீடுகள் இடம் பெற்றிந்தன. குவாராக்கள் வில்லா நிடியா என்று அழைக்கப்படும் முகப்பு அவின்யூவில் உள்ள எல்லாம் ஒரே மாதிரி தோற்றமளிக்கும் ஒரு வீட்டில் வசித்து வந்தார்கள்". சேயின் வீட்டின் பின்புறம், கோல்ப் மைதானம் இருந்தது. அதில் சே கோல்ப்பும் துப்பாக்கி சுடுதலும் கற்றுக் கொண்டார்.

அல்லா கிரேசியாவிலும் அதற்கேயுரிய சமூக வாழ்வு இருந்தது. "எங்கள் வீடு சிறுவர்களுக்கு திறந்து இருந்தத" என்று நினைவு கூர்கிறார் சேயின் தந்தை. "நான் எர்னஸ்டோவிற்கு அவனது நண்பர்களின் தந்தை யார் என்பது குறித்து கவலைப்படாமல் இருக்க, கற்றுக் கொடுத்தேன். கசாப்புக் கடைக்காரனும், ரொட்டி சுடுபவனும் எங்கள் வீட்டிற்கு வந்தனர். ஏழைகளும் பணக்காரர்களும் ஒரேமாதிரி அங்கு வரவேற்கப்பட்டனர்"

அல்டா கிரேசியாவிலிருந்து வருடங்கள் எர்னஸ்டோவை வெகுவாக மாற்றின. இன்றுகூட அவர் தந்தை அச்சமயத்தில் எடுத்த இரு புகைப்படங்களை காட்டுவதில் ஆவலாக இருக்கிறார். ஒரு படத்தில் நான்கு வயது சே தீக்குச்சி போன்ற கால்களுடனும் கைகளுடனும் இருப்பார். மற்றொரு படத்தில், பதினான்கு வயது சே, திடமான வளமான நம்பிக்கை மிளிரும் இளைஞனாகக் காட்சியளிப்பார். அவரது தந்தை "அவனது உடலைப் பாருங்கள். கொர்டோபா காற்றும், நான் அவனுக்காக செலவழித்த நேரங்களும் சேர்ந்து, அவனை இப்படி ஆக்கியுள்ளது. புறாவை சுடுவதற்காக நாங்கள் போகும் போது, அவன் தனது கவண்கல்லுடன் வருவான். அதைக் கொண்டு குறிபார்த்து அடிப்பான்" என்று கூறுகிறார்.

இதற்கிடையே, சே தனது மோசமான உடல்நிலையைச் சரிகட்ட மனஉறுதியையும் கூர்மையான அறிவையும் வளர்த்துக் கொண்டார். போக்கிரிப் பயல்களுடன் சேர்ந்து கொண்டு நகரைச் சுற்றினார். அவரது பூஞ்சை உடம்பையும் மீறி, அவர் சிறுவர்கள் அவரது தலைமையை ஏற்றுக் கொண்டனர். அவரது தந்தையும், திராட்சை அறுவடையில் உதவி செய்வது போன்ற சிறு வேலைகளை செய்யுமாறு சேவை ஊக்குவித்தார். இது பணத்திற்காக இல்லை. அர்ஜென்டைனாவில் உள்ள வறிய மக்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதை நேரடியாக அறியவும், விவசாயிகளுடன் கலந்து பழகவும், அது வாய்ப்பளிக்கும்ள என்பதால் அவ்வாறு செய்தார்.சமயங்களில் இது பிரச்சினையை உருவாக்கும். ஒருசமயம் அவர் ஒரு குழந்தைகயின் பிறந்தநாள் விழாவிற்காக சியாரா ஓட்டலுக்கு அழைக்கப்பட்ட போது, அங்கு அழுக்கான ஆடைகளுடன் போயிருந்தார். அங்குள்ள ஒரு பெண் "ஏன் காலணித் துடைக்கும் பையன்களை எல்லாம் உள்ளே விடுகிறீர்கள்?" என்று கேட்க, சே இங்கும் அங்கும் ஆடத் துவங்கினார். இந்த களேபரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க, அவரது தந்தையை அழைத்தனர். அவரது தந்தையோ,மகனுடன் சேர்ந்து கொண்டு, தனது மகனைக் சூழ்ந்து கொண்ட பணத்திமிர் பிடித்தவர்களை கெட்ட வார்த்தைகளால் திட்ட ஆரம்பிக்க, இருவருமே ஓட்டலை விட்டு வெளியே தூக்கி எறியப்பட்டனர்.

சே மரம் ஏறிக் கொண்டும், ஏதாவது வேறு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டும் இல்லாத சமயங்களில், தனது தந்தையுடன் வயல்வெளிகளில் அலைந்தார். ஆஸ்துமா தாக்கி படுக்கையில் இருக்கும் போது, அவர் இந்த வயதான மனிதருடன் அரசியல் சமுதாயப் பிச்சினைகளைப் பேசிக் கொண்டோ, எதையாவது படித்துக் கொண்டோ பொழுதைப் போக்கினார். குவாராவின் வீட்டில் மூவாயிரம் புத்தகங்கள் இருந்தன. சேக்கு சமுதாயவியலில் இருந்து, தத்துவம் வரை, கணிதத்தில் இருந்து பொறியியல் வரை எல்லாவற்றிலும் ஈடுபாடு இருந்தது. ஆனால் அண்டாமல் இருந்தது கிறிஸ்துவ மதம் மற்றும் இராணுவம் தொடர்பான புத்தகங்கள்தான். அவரது தந்தையைப் போலவே அவரும் ஒரு கத்தோலிக்கானாகப் பிறந்து, புனித நீராட்டுச் செய்து வைக்கப் பட்டவராக இருந்தாலும், ஒரு போதும் தேவாலயத்திற்கு அவர் போனதுமில்லை; கத்தோலிக்க மதத்தில் ஈடுபாடு காட்டியதுமில்லை. அவருடைய தந்தை கத்தோலிக்க தேவலாயம் குறித்தும், அதனுடைய சுரண்டும் தன்மை குறித்தும், உறுதியான கருத்துகளைக் கொண்டிருந்தார். அவர் அடிக்கடி, "இயேசு கிறிஸ்து பூவுலகிலேயே சிறந்த மனிதர்; ஆனால் தேவாலயம் அவரது போதனைகளை கெடுத்து விட்டது. யூதர்களால் கண்டுபிடிக்கப்பட்டு, இத்தாலியர்களால் நடத்தப் படும் மாபெரும் தொழில்தான் தேவாலயத் தொழில்" என்று கூறுவதுண்டு.

சேயின் நெருங்கிய நண்பனான ஜோஸ் அகுலியர் நினைவுக் கூர்கிறார்: “நாங்கள் அக்காலக் கட்டத்தில் எராளமாகப் படித்தோம். எனக்குப் பிடித்த எழுத்தாளர்கள் ஜுலியஸ் வெனே மற்றும் அலெக்சாண்டர் டூமாஸ் ஆவார்கள். மருத்துவரான என் தந்தை, சே பனிரெண்டு வயதிலேயே பிராய்டு படித்துக் கொண்டிருந்ததைப் பார்த்து அதிர்ச்சியடைந்து விட்டார். பிரெஞ்ச் பேசத் தெரிந்த அவரது தாயாரிடம் இருந்து, அவர் பிரெஞ்ச் கற்றுக் கொண்டார். அவர் பிரெஞ்ச் ஆசிரியர் மூலம் பிரெஞ்ச் கற்றுக் கொண்டாரா என்பது இப்போது எனக்கு நினைவில் இல்லை என்றாலும், அவர் பிரெஞ்சில் கவிதை வாசிக்கும் அளவிற்கு தேர்ச்சி பெற்றிருந்தார் என்பது உண்மை. அவர் பிரெஞ்ச் கவிதைகளை நாள் முழுவதும் மனப்பாடம் செய்து கொண்டு திரிவார்”. சே தனது வாழ்நாள் முழுவதும் கவிதையை நேசித்து வந்தார். தனது வாழ்வின் ஒரு கட்டத்தில் கவிஞராகி விடலாமா என்று கூட தீவிரமாக யோசித்து இருக்கிறார். ஆனால் அவரது கவிதை முயற்சிகளில் ஒன்றான “பிடலுக்கு ஒரு கவிதை” அவ்வளவு சிறப்பாக அமையயவில்லை. சே, பாப்லோ நெருடாவை மிகவும் நேசித்ததையும் நெருடாவின் ஸ்பானிய சுதந்திர போராட்டம் பற்றிய ஒரு குறிப்பிட்ட கவிதை அவரது நினைவில் அழியா இடம் பெற்றிருந்ததையும் அகுலியர் நினைவுப் படுத்துகிறார். அகுலியரின் தோராயமான மொழிப்பெயர்ப்பில் அவ்வரிகள் இப்படி இருக்கும்: “அது ஒரு பொய். வருந்ததக்க உண்மையால் ஆனப் பொய். இனியும் நிமிர்ந்து நிற்காத மாட்ரிட்டில் அதன் காலடி ஓசைகள் கேட்கின்றன”.

அவரது ஆஸ்துமா காரணமாக, சே தனது எழாவது வயதுவரை பள்ளிப் படிப்பை துவங்கவில்லை. ஒருமுறை சிலியா குவாராவிற்கு கல்வி அமைச்சகத்தின் உள்ளூர் அலுவலகத்தில் இருந்து, அவர்களது முதல்குழந்தை பள்ளிக்கு அனுப்பப்படாதது குறித்துக் கண்டித்து ஒரு கடிதம் வந்திருந்தது. “அவர்களின் அக்கறையைக் குறித்து எனக்கு மகிழ்ச்சியே ஏற்பட்டது. ஆனால் ஆஸ்துமா காரணமாகதான் அவனால் பள்ளிக்குச் செல்ல இயலவில்லை. இரண்டாவது, மூன்றாவது வகுப்புகளை அவன் ஒழுங்காகதான் படித்தான். ஐந்தாவது ஆறாவது வகுப்புகளை விட்டு விட்டு படித்தான். அவனுக்கு ஆனா, ஆவன்னாவை நான்தான் கற்றுக் கொடுத்தேன். பின்னர் அவளது தம்பிகளும் தங்கைகளும் பாடம் படிப்பதில் அவனுக்கு உதவினார்கள்” என்று அது குறித்து கூறுகிறார் அவரது அன்னை. இருந்தாலும், ஒவ்வொரு வருடமும் சே வகுப்பில் முதலாவதாக வரத் தவறியதில்லை.

ஒரு சிறந்த மாணவனாக விளங்கியதோடு மட்டுமல்லாமல், அவர் ஒரு செயல்வீரராகவும் விளங்கினார். மின்வாரியத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இருந்தனர். அதை உடைக்க நிர்வாகம், வேறு தொழிலாளர்களை வாடகைக்கு அமர்த்தியது. அப்பொழுது தனது பதினோராவது வயதில் சே தனது கவண்கல் படையினருடன் சேர்ந்து, ஒரே இரவில் அந்நகரில் உள்ள அனைத்து தெரு விளக்குகளையும் உடைத்து எறிந்தார்.

சேயின் தனித்தன்மையின் மற்றொரு முகம் அவரது உணர்ச்சிப் பெருக்கு. உதாரணத்திற்கு, ஒரு நிகழ்ச்சியைப் பார்ப்போம். அவரது வளர்ப்பு நாய் வயதாகிச் செத்துப் போன போது, அவர் நடுத்தர வர்க்க அமெரிக்கச் சிறுவனைப் போல் அழுதார். பின்னர் தனது கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டு, அவரே தயாரித்த சவப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு, சவ ஊர்வலத்தை நகரத்தின் தெருக்களினூடே நடத்திச் சென்று, ஒரு காலியிடத்தை அடைந்தார். அங்கு அந்த நாய்க்குச் சோகத்துடன் அவர் புகழஞ்சலி செலுத்தியவுடன், நாய் புதைக்கப்பட்டது.

வளர்ந்த பிறகும், அவருக்கு விலங்குகளிடம் இருந்த நேசம் குறையவில்லை. ஒருமுறை அவர் மருத்துவக்கல்லூரியில் கடைசி வருடத்தில் படித்துக் கொண்டிருந்த போது, ஒரு குருவி மிக உயரத்தில் கூரையில் மாட்டிக் கொண்டு விட்டது. நண்பர்கள் தடுத்தும கேளாமல், ஆபத்தை இலட்சியம் செய்யாமல், ஒரு குழாயைப் பிடித்துக் கொண்டு, மேலேறிச் சென்று சே அதை விடுவித்தார்.

1941-ல் குவாராக்கள் கோர்டோபாவிற்கு வந்தனர். எப்போதும் முடியை ஒட்ட வெட்டிக் கொண்டும், தனது உடைகளைப் பற்றி கவலையற்றும் திரிந்து கொண்டிருக்கும் சே, அங்குள்ள உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தார். கோடை விடுமுறையில் அவர் தனது தந்தையிடம் சென்று, “நான் வெளிஉலகைப் பார்க்க விரும்புகிறேன். நான் அர்ஜென்டைனாவெங்கும் சுற்றுப்பயணம் செய்யப் போகிறேன். பள்ளி திறக்கும் முன்பு வந்துவிடுவேன்” என்று கூறி அனுமதிக் கேட்டார். “அவனுக்கு அப்பாழுது பதிமூன்று வயதுதான் ஆகியிருந்த போதிலும், நான் அதற்கு தடை விதிக்கவில்லை. அவனே தேடி அலைந்து விஷயங்களைக் கற்றுக் கொண்டு ஒரு வளர்ந்த மனிதனாகட்டும் என்று விட்டு விட்டேன்” என்று கூறுகிறார் அவரது தந்தை. தனது பல பயணங்களில், முதலாவதை அப்போதுதான் துவங்கினார் சே. அவரது மிதிவண்டியில் சிறு மோட்டாரைப் பொருத்திக் கொண்டு, எதிர்காற்றைத் தடுக்கும் பழைய உடை ஒன்றைச் சரி செய்து போட்டுக் கொண்டு, முதுகுப்பையில்

ஒரு கெட்டிலையும் மேட் கோப்பையும் திணித்துக் கொண்டு, 75 பெசோக்களுடன் (அந்தக் காலத்தில் சுமார் 50 ரூபாயுக்கு சமம்) தனது 'ஆய்வு'ப் பயணத்தை துவக்கினார்.

ஆஸ்துமா தாக்கும் போதெல்லாம் சாலையோரம் நிறுத்தி ஓய்வெடுப்பார். பயணத்தின் போது, மரத்தடியில் படுத்து உறங்கினார். பணம் இல்லாத போதெல்லாம், தானியங்களைப் பறிக்கும் வேலை செய்து சம்பாதித்து பயணத்தைத் தொடர்ந்தார். சமயங்களில் சில நாட்களுக்குப் பட்டினியும் கிடப்பார். அர்ஜென்டைனாவின் வடபகுதி முழுவதையும் சுற்றிப் பார்த்துவிட்டு, வகுப்புகள் துவங்கும் நேரத்தில் வீடு திரும்பினார்.

அவரது ஆசிரியர்கள் இன்றும் அவரை நினைவில் வைத்துள்ளனர். அவர்களின் ஒருவரான டயஸ் விடால், “கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கத்தோலிக்கத் தேவாலயயத்தை எதிர்க்கத் தவறாத மாணவன் அவன்; மார்க்சியக் கருத்துகளை கொண்டிருந்தான்; பிரத்தியேகமானவனாக அவனில்லை; வகுப்புத்தோழர்களுக்கு மத்தியில் அவன் ஒரு இடதுசாரித் தலைவனாக விளங்கினான்” என்று கூறுகிறார்.

மற்றொரு ஆசிரியரான ஆல்பெரெடோ புய்ரடான், “அவன் ஒரு சிறந்த மாணவன். அவன் வயதிற்கு மீறிய செயல்களைச் செய்ததோடு, பார்வைக்கும் அவ்வாறே காணப்பட்டான். அவன் ஏற்கனவே, யோசனையுடனும் கட்டுபாடற்று இருக்கும் தனித்தரமான ஒரு குணத்துடன் வளர்ந்து விட்டிருந்தான். ஆனால் முழுமையான வளர்ச்சியைப் பெற்றிருந்தான்” என்கிறார்.

அச்சமயத்தில் குவாராக்களுக்கு போதாத காலம் வந்தது. குடும்பத்தில் ஒரு நல்ல வாழ்க்கையைத் தொடர முடியயவில்லை. சிறிய வீட்டுக்கு மாறினர். சேக்கு கைச்செலவுக்குக் கூட பணம் கிடைக்கவில்லை. ஆகையால் அவரது சொந்தச் செலவுக்கு, தனது உயர்நிலைப்பள்ளி வாழ்க்கை முழுவதும் அவர் வேறு வேலை செய்து சம்பாதிக்க வேண்டியிருந்தது. அப்படி அவர் ஒரு வேலையயப் பார்த்து வந்த போது, ஒரு சுவையான நிகழ்ச்சி நடந்தது. அதை அவரது நண்பர், அகுலியர் பின்வருமாறு விவரிக்கிறார்: “அவர் அப்போது தனது சொந்த உபயோகத்திற்காக, ஒரு தத்துவ அகராதியைத் தொகுத்து வந்தார். அவர் வேலை செய்து வந்த அலவலகத்தில், அலுவலக நேரத்தை இதற்குப் பயன்படுத்திக் கொண்டார். ஒருநாள் முதலாளி வருமபோது, அங்கு வேலைச் செய்து கொண்டு இருந்தது சே மட்டும்தான். மனசாட்சிக்கு புறம்பில்லாமல் அவர் வேலை செய்து வந்ததைப் பாராட்டி, அவருக்கு பதவி உயர்வு அளித்தார் அவரது முதலாளி. ஆனால் சே உண்மயில் அபபோது ஈடுபட்டிருந்த வேலை, அகராதித் தொகுப்பதுதான்”

படிக்கும் போது வேலைப் பார்த்து வந்தாலும், சே தனது பள்ளிப்படிப்பை விரைவாகவும், சிறப்பாகவும் முடித்து விட்டார். இச்சமயத்தில் பெரிய எர்னஸ்டோ, ஸ்பானிய சுதந்திரப் போரில் இருந்து வந்த ஸ்பானிய அகதிகளுக்கு உதவும் பணியில் ஈடுபட்டு, அரசியலில் மூழ்கிப் போனார். அவரது மகனும் வேறு ஒரு அரசிலில் குதித்தார். தேசிய இளைஞர் அணியில் சேர்ந்து, சர்வாதிகாரி ஜான் பெரானை அரசியல் விவாதங்களில் அல்லாது, தெருச்சண்டைகள் மூலம் எதிர்த்தார். இதற்கிடையே நேரம் கிடைக்கும் போதெல்லாம், பயணம் செய்தார். விளையாட்டுகளில் புதிய ஆர்வத்தை வளர்த்துக் கொண்டார்; அவரது பலவீனமான உடம்பை மீறி அவரால் செயல் பட முடியும் என்பதை எடுத்துக் காட்டுவதாக அது அமைந்தது.

1947-ல் தனது பத்தொன்பாவது வயதில் அவர் போனஸ் அயர்சில் உள்ள மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் கற்க நுழைந்தார். அவரது தந்தை அவர் ஒரு பொறியாளராய் வருவார் என்று நினைத்திருந்தார். உண்மையில் புதிய போனஸ் அயர்ஸ் கட்டிடக்கலை தொழிலில் தன்னுடன் இணைந்து வேலை செய்ய அவர் வருவார் என்று எதிர்பார்த்திருந்தார். ஆனால் சே ஒரு ஒவ்வாமை மருத்துவ நிபுணராக விரும்பினார்; அவரது சொந்த ஒவ்வாமையைப் புரிந்து கொண்டு அதற்கு தீர்வு காண அவர் விரும்பியதும் அதற்கு ஒரு காரணம். ஆனால் உண்மயில், அவரது பாட்டி புற்றுநோயால் இறந்தது அவரை வெகுவாகப் பாதித்திருந்தது; அவர் அதற்கு தன்னால் ஒரு தீர்வு காணமுடியும் என்று நம்பினார். இரவுக் காவலாளி, அதிதேசிய வாராந்திரியான ஆக்சன் அர்ஜென்டைனாவின் நிருபர், கட்டிட நிறுவனத்தில் எழுத்தர் (அவரது தந்தையினுடையது அல்ல) போன்ற பல வேலைகளைச் செய்து கொண்டே, அவர் படிப்பையும் தொடர்ந்தார்.

அச்சமயத்தில்தான் அவரது பெற்றோர்கள் பிரிந்தனர். அவர் தனது தாயுடன் தங்கிக் கொண்டார். அவரது தாயாரின் மூலம், பல அர்ஜென்டைன மார்க்சிய அறிவுஜீவிகளைப் பற்றி அறிந்து கொண்டார். அவர் ஒரு தேசியயவாதியாகவே அப்போது இருந்தார். பெரான் எதிர்ப்பு வீதி மோதல்களில் ஈடுபட்டார். பல்கலக்கழக மாணவர் அமைப்பில் சேர்ந்து இயங்கினார். சான் யசிட்ரோ ரஃபி குழுவில் சேர்ந்து விளையாடினார். மைதானங்களில் அவர் வேகமாக ஓடிச் கொண்டிருக்கும் போது மருந்துக்குப்பியுடன் ஓடுவதை அருகில் ஓடும் சக ஆட்டக்காரர்கள் அடிக்கடி பார்க்கக் கூடிய காட்சியாகும். கட்டுடலுடன்,

உறுதியாக இருந்த அவரது தோற்றத்தைக் கண்டு அவரது தந்தைக்கு பெருமையாக இருந்தது. “அவன் எப்போதுமே சோர்ந்து போனது கிடையாது. ஆஸ்துமா தாக்குதல்கள் அவனை தளர்வடைய வைக்க முடியவில்லை” என்று கூறுகிறார் அவரது தந்தை.

ஏழு வருடப் படிப்பில், ஆறு வருடங்களை மூன்று வருடங்களிலேயே சே முடித்து விட்டார். ஆறுமாத காலத்திற்கு பதினாறு முக்கியத் தேர்வுகளில் அவர் வெற்றிப் பெற்றிருந்தார். அச்சமயத்தில் குறைந்தது 45 முறையாவது கடுமையான ஆஸ்துமா தாக்குதல்கள் ஏற்பட்டிருக்கும். இது குறித்து அவரது சித்தி நினைவு கூறுகிறார்: “நான் என் சகோதரியை பார்க்கச் சென்ற போது, அவன் மூச்சை இழுத்துவிட்டுக் கொண்டு, தரையில் படுத்தவாறே படித்துக் கொண்டிருந்தான். ஆனால் வியாதி பற்றி, அவன் முணுமுணுத்தது கூட கிடையாது. அவனுக்கு அது ஒரு சவால்”

பல்கலைக்கழகத்தில் கோடை விடுமுறையில் ஒரு சரக்குக் கப்பலில் ஆண் செவிலியர் வேலையில் சேர்ந்து, அர்ஜென்டைனாவில் உள்ள அனைத்து துறைமுகங்களுக்கும் அவர் விஜயம் செய்தார். 1950-ல் அவர் தனது சொந்தத் தொழிலைத் துவங்க முயற்சித்தார் பொதுவான பூச்சிகொல்லியாக உபயோகிக்கக் கூடிய ஒரு மருந்தைக் கண்டுபிடித்தார். அதை ‘வெண்டாவில்’ என்று அழைத்து, பதிவும் செய்துக் கொண்டார். அவரது தந்தையிடம் இருந்தோ, அவரது நண்பர்களிடம் இருந்தோ, பணஉதவி பெற அவர் விரும்பாததால், கிட்டதட்ட மூலதனமே இல்லாமல் தொழிலைத் துவங்கி, உற்பத்தி செய்யவும் முயற்சித்தார். நான் உங்களது கொழுத்த பன்றி முதலாளிகளுக்கு பணம் சம்பாதித்துக் கொடுக்க முயலவில்லை என்று அப்போது கூறிக் கொள்வார். இருந்தாலும், சே அந்த முயற்சியில் திவாலானதுதான் மிச்சம்.

தொழில் முயற்சியின் தோல்விக்கு பிறகு, சே தனது கண்டத்தைப் பற்றி மேலும் அறிந்துக் கொள்ளத் தீர்மானித்தார். தனது மருத்துவப்படிப்பை தற்காலிகமாக துண்டித்துக் கொண்டு, சக மருததுவ மாணவரான அல்பட்டோ கிரனாடோஸுடன் (இப்போது பெயர் பெற்ற தொழுநோய் நிபுணர் மற்றும் உயிர்வேதியல் நிபுணர்) மோட்டார் சைக்கிளில் சென்றார். இப்பொழுது கியூபாவில் வசிக்கும் கிரனாடோஸ் அதை நினைவுக் கூர்கிறார்: “நான் 1941-ல் சேயை முதன்முதலில் உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் போது சந்தித்தேன். நாங்கள் கோர்டோபன் மாணவர்கள், மற்ற பள்ளி மாணவர்களுடன் இணைந்து, பள்ளி வளாகத்தினுள் நடைபெறும் அநியாயங்களைக் கண்டித்து வேலை நிறுத்தப் பேராட்டம் நடத்தினோம். நான் கைது செய்யப்பட்டு, மத்திய போலிஸ் ஆணையர் அலுவலகத்திற்கு கொண்டு செல்லப் பட்டேன். அதைக் கைது என்று கூற இயாது; கடத்திக் கொண்டு போகப் பட்டேன் என்றுதான் அதை கூற வேண்டும்; ஏனெனில் நாங்கள் விசாரிக்கப் படவேயில்லை. சிறையில் உண்ண எதுவும் கொடுக்காததால், எனது சகோதரன் தாமசை எனக்கு உணவு கொண்ணடு வரக் கேட்டிருந்தேன். தாமஸ் வரும்போது, அவனது நண்பன் குவாராவையும் அழைத்து வந்தான். நான் அவர்களிடம், உயர்நிலைப்பள்ளி மாணவர்கள், பள்ளிகளைத் துறந்து, தெருவில் இறங்கிப் போராட வந்தால், மக்களுக்கு நாங்கள் வழக்குத் தொடரப் படாமல், அடைத்து வைக்கப் பட்டிருப்பது தெரியும் என்று விவரித்தேன். அதற்கு இளம் குவாரா சொன்ன பதில் என்னைத் தூக்கி வாரிப் போட வைத்தது. குவாரா கூறினார்: “அதெல்லாம் முடியாது. அல்பட்டோ. தெருவில் இறங்கியதும், போலிஸ் லத்தியைக் கொண்டு எங்களை அடித்து விரட்டவா? நீ ஒரு துப்பாக்கியைக் கொடுத்தால் ஒழிய நான் தெருவில் இறங்க மாட்டேன்”

கிரனாடோஸ் தொடர்கிறார்: “பின்னர் 1945-குப் பிறகு, போனஸ் அயர்சில் இருந்து 1000 கி.மீ. தூரத்தில் இருந்த ஒரு தொழுநோய் மருத்துவமனையில் உயிர்வேதியல் நிபுணராக நான் வேலைப் பார்த்து வந்தேன். அங்கு எர்னஸ்டோ பலமுறை என்னைச் சந்திக்க வந்துள்ளார். டிசம்பர் தேர்வுகளுக்குப் பிறகு, மார்ச் தேர்வுக்கு தலைநகரில் உட்கார்ந்துக் கொண்டு தேர்வுக்கு தயார் செய்யாமல், முதுகில் பையை மாட்டிக் கொண்டு, சமயங்களில் மோட்டார் சைக்கிளிலும், சமயங்களில் கால்நடையாகவும் நாட்டின் பல பகுதிகளுக்கும் அவர் கிளம்பிவிடுவார். அந்தப் பக்கம் வரும் போதெல்லாம் ,நான் வேலைச் செய்யும் மருத்துமனைக்கு வர அவர் தவறியதே இல்லை. அவர் தனது சகமாணவர்களிடம், ‘நீங்கள் மூன்று மாதங்களும் இங்கேயே உட்கார்ந்து படித்துக் கொண்டிருங்கள். நான் சாண்டா வளைகுடா, கோர்டோபா, கிழக்கு மெண்டோசா பிராந்தியங்களைச் சுற்றிப் பார்த்து விட்டு, வழியிலேயே படித்துக் கொண்டும் வருகிறேன். உங்களுடன் சேர்ந்து நானும் தேர்வு எழுதி, வெற்றியும் பெற்று விடுவேன்’ என்று கூறுவார். அதன்படியே செய்தும் காட்டி விடுவார்”

1952-ல் அந்த இரணடு நண்பர்களும், தங்களது மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு, லத்தீன் அமெரிக்கா முழுவதும் சுற்றினர். அண்டஸ் மலைத் தொடரைக் கடந்தவுடன், அவர்கள் மோட்டார் சைக்கிள் பழுதாகி விட்டதால், செம்புங்கசுரங்கங்களில் வேலைச் செய்து, லாரி ஓட்டிகளாக, கூலியாட்களாக, மாலுமிகளாக, மருத்துவர்களாக, சர்வர்களாக வேலை செய்து பணம் சம்பாதிதுக்

கொண்டு, பயணத்தைத் தொடர்ந்தனர். “கையில் எந்த பைசாவும் இல்லாமல் பயணம் செய்த நாங்கள், ஒருநாள் சுகிக மட்டாவிலுள்ள பிராடன் கம்பெனி சுரங்கத்தின் வாயிற்கதவுகளை அடைந்தோம். 1952-ல் அவர்களது கம்பெனி வாசலில் உள்ள காவல் கூண்டில் கால்களைத் தூக்கி உயரே போட்டுக் கொண்டு தூங்கி கொண்டிருந்தது, எர்னஸ்டோ சே குவாராவைத் தவிர வேறு யாருமல்ல என்பதை அவர்கள் ஒரு போதும் அறிந்திருக்க முடியாது. போகும் வழியெல்லாம் பல வேலைகளைச் செய்து கொண்டு சென்ற நாங்கள், போலிஸ்காரர்கள் வேலையையும் விட்டு வைக்கவில்லை”

சிலியில் இருந்து, அவர்கள் பழைய இன்கா தலைநகரான மாச்சு பிச்சுவை அடைந்தனர். அங்குள்ள இந்தியர்களும், வறியவர்களும் பெரிய நிறுவனங்களாலும், நிலப்பிரபுக்களாலும் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள் என்பதை அவர்கள் நேரில் கண்டனர். அவர்களது போலிஸுக்கு கொக்கோ தொடர்ந்து உணவாகக் கொடுக்கப்பட்டதால், அவர்கள் மிருகத்தனமாக ஆக்கப்பட்டுள்ளதையும் கண்டனர். கிரனாடோஸ் கூறுகிறார்: “அப்போது ஒருநாள், சேயிடம் நான் அன்டேசில் ஒரு தொழிலாளர் கட்டமைப்பு அமைத்து அரசாங்கத்தை வெற்றிக் கொண்டு, இந்த ஏழை மக்களுக்காக புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்று கூறினேன். எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. அதற்கு சே, புன்னகை புரிந்தவாறு, ‘ஒரு குண்டு கூட இங்குச் சுடாது. அப்படி இருக்க ஒரு புரட்சியா? உனக்கு என்ன பைத்தியம் பிடித்துள்ளதா?’ என்று கேட்டார்”

அந்த இரண்டு அர்ஜென்டைனர்களும், கடைசியாக இருயடா என்ற இடத்தை அடைந்தனர். அமேசான் நதிக்கரையோரம் இருந்த ஒரு தொழுநோய் முகாம் ஒன்றை அடைந்த போது, கையில் காசில்லாமல் அவர்கள் இருவரும் பசியால் வாடி வதங்கிப் போயிருந்தனர். அங்கு மூன்று மாதங்களுக்கு ஆண்செவிலியயக்ளாக லைச் செய்தனர். அங்குள்ள தொழுநோயாளிகள், ஒரு மரமிதவையை அவர்களுக்கு அன்பளிப்பாக அளித்ததும், அதன் மூலம் அமேசான் நதியில் பயணம் செய்து வெட்டிசியாவை அடைந்தனர். அங்குதான் அந்த மாபெரும் நதி, பெரு பிரேசில் மற்றும் கொலம்பியா எல்லைகளைச் சந்திக்கிறது. அங்கு அந்த மிதவையை உடைத்து விட்டு, கால்பந்து குழுவிற்கு விளையாடிக் கொடுத்து சிறிது பணம் சம்பாதித்து, இரண்டு விமானப் பயணச் சீட்டுகளை வாங்கி பொகேட்டோ(பெரு) வந்து சேர்ந்தனர். சட்டத்திற்கு புறம்பாக உள்ளே நுழைந்ததற்காக, அவர்கள் அங்கு சிறையில் இடப்பட்டனர். பின்னர் அங்கிருந்து தப்பித்து, எல்லையைக் கடந்து, வெனிசுலா நாட்டை அடைந்து காரகஸ் நகரை நோக்கி பயணமாயினர்.

சே, காரகஸ்ஸில் பந்தயக் குதிரைகளை இடமாற்றம் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்த குடும்ப நண்பர் ஒருவரைச் சந்தித்தார். கிரனாடோஸ் ஒரு மருத்துவராக விரும்பி அங்குள்ள ஒரு தொழுநோய் மருத்துவக்கல்லூரியில் தங்கி விட்டார். சே, குதிரைகளுடன் மியாமி சென்றார். ஆனால் அமெரிக்க சுங்க அதிகாரிகள், அவரை தங்க அனுமதிக்கவில்லை. ஒரு வருடம் படிப்பை விட்டு விட்டதால், அதைத் தொடருவதற்காக, போனஸ் அயர்சிற்கு திரும்ப சே முடிவு செய்தார். குதிரைகளோடு பறந்து வந்து, போனஸ் அயர்ஸை அடைந்த அவர் படிப்பில் மூழ்கிப் போனார். அனைத்து மருத்துவப் புத்தகங்களையும் படித்து முடித்தார். அடுத்த சில மாதங்களில் பன்னிரெண்டு பாடங்களில் தேர்வு பெற்று, தனது எம்.டி. பட்டத்தை 1953-ல் பெற்றார். “பின்னர் அவன் தனது பட்டம் பெற்ற பட்டயத்தை தூக்கி எறிந்து விட்டான்” என்று கூறுகிறார் அவரது தந்தை. சே ஜுலையில் மீண்டும் சாலைகளில் இறங்கி பயணத்தை தொடர்ந்து துவங்கினான்.

சே இம்முறை புகைவண்டியில் பயணத்தை துவங்கினார். முதலில் பொலியா வரை சென்றார். அங்கு ஜுலையில் கையில் பைசா ஏதும் இல்லாது அலைந்து கொண்டிருந்த இளம் அர்ஜென்டைன வழக்குரைஞர் ரிகார்டோ ரோஜோவைச் சந்தித்தார். ரோஜோ கூறுகிறார்: “அரைகுறை ஜனரஞ்சக ஆதரவுடன் அரசு நடந்துக் கொண்டிருந்த அர்ஜென்டைனாவின் பெரானின் ஆட்சி மந்தமாக இருந்ததால், பரபரப்பு தேடி தென் அமெரிக்காவில் அலைந்து கொண்டிருந்த பல இளம் அர்ஜென்டைனர்களில் நானும் ஒருவன். ஒரு நாள் லா பாஸில் வசிக்கும் பணக்கார அர்ஜென்டைனர் ஒருவர் காக்டெயில் விருந்திற்கு என்னை அழைத்திருந்தார். என்னிடம் இருந்த கடைசி சிறந்த ஆடையை அணிந்து சென்றிருந்த நான், அங்கு ஐந்தடி ஆறு அங்குல உயரமே இருந்த, முகம் வெளுத்திருந்த ஒரு இளைஞனைக் கண்டேன். அந்த இளைஞர் மிக மோசமான மேலுடையுடன், கிழிந்துப்போன சட்டையுடன் வந்திருப்பதைக் கண்டதும் வாயடைத்துப் போய் விட்டேன். அந்த தாடியில்லாத இளைஞரிடம் என்னை அறிமுகம் செய்து வைத்தனர். முதலில் என்னைக் கவர்ந்தது, அந்த இளைஞரின் கூர்மையான பழுப்பு நிறக் கண்கள்தான். அவர்தான் சே குவாரா. அவர் பேசும் போது, கைகளை ஆட்டிக் கொண்டும், நாடியை நீவி விட்டுக் கொண்டும், தனது நிண்ட தலைமுடியை அடிக்கடி கோதிவிட்டுக் கொண்டும் பேசினார். அவர் ஆஸ்துமாவால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தது நன்றாகவே தெரிந்தது. பேசும்போது, இருமிக் கொண்டும், மூச்சுவிட சிரமப்பட்டுக் கொண்டும்

இருந்தார். அவர் ஒரு மருத்துவர் என்றும், வெனிசுலாவில் உள்ள ஒரு தொழுநோயகத்திற்குச் செல்வதாகவும் என்னிடம் கூறினார். (அச்சமயத்தில் கிரனாடோ இன்னும் அங்குதான் வேலை செய்துக் கொண்டு இருந்தார்). அவருக்கு அரசியலில் அறிவோ, ஈடுபாடோ இல்லாமல் இருந்தது. ஆனால் லத்தீன் அமெரிக்காவெங்கும் நடக்கும் கொடுமைகளைப் பற்றி பேசுவோரிடம் பேச, அவரிடம் நிறைய விஷயம் இருந்தது. அதைக் கேட்கத் தயாராக இருந்தவர்களிடமும் அவர் ஆவலாக விவாதித்தார்"

ரோஜோ, குவாரா மற்றும் வேறு நான்கு அர்ஜென்டைனர்களும் சேர்ந்து ஒரே இடத்தில் தங்கிக் கொண்டனர். அதற்குப் பின் பல நாட்கள், அங்குள்ள காப்பிக் கடைகளில் உட்கார்நது கொண்டு, லத்தீன் அமெரிக்க நிலைப் பற்றியும், அதற்காக என்ன செய்யலாம் என்பது பற்றியும் பேசினார்கள். ஆனால் கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அப்பேச்சு சுவாரசியமற்று போய் விட்டது. நடந்தும், வாகனங்களில் ஏறியும் பெருவிற்கு போக அந்த ஆறு பேரும் தீர்மானித்தார்கள். கடைசியாக 1953 ஆகஸ்டில் ஈகுட்டாரிலுள்ள கயாகுயிலை வந்தடைந்தனர். ரோஜோ நினைவு கூர்கிறார்: "சரண்டல், ஏழ்மை போன்றவற்றை பார்க்க பார்க்க, குவாரா இந்த அமைப்பை மாற்றுவதை விட்டு விட்டு, அதை உடைத்தெறிவதைப் பற்றி அதிகம் பேசத் துவங்கினார்". ரோஜோ அவரிடம், "நீ திரும்பத்திரும்ப புரட்சி பற்றியே பேசுகிறாய், வேறு ஒன்றும் பேசுவதில்லை" என்று கூறினார்.

அதற்கு குவாரா, "சரி, பின்னர் பார்ப்போம்" என்று பதிலளித்தார்.

கயாகுயிலின் துறைமுகத்தில் உள்ள ஒரு ஓட்டலில் இருந்துக் கொண்டு, அவர்கள் வேலை தேடினர். மாறாக ஒருநாள், யுனைட்டட் ஃப்ரூட் கம்பெனியின் சரக்குக் கப்பலில் அங்கிருந்து பயணம் செய்து வெளியேற பயணச்சீட்டுக் கிடைத்தது. ரோஜோவும் மற்றவர்களும், பனாமாவுக்குச் சென்று குவாராவுக்கக காத்திருந்தனர். மூன்று மாதம் கழித்தும் அவர் வராததால், அவர்கள் கவுதமாலாவை வந்தடைந்தனர். கவுதமாலாவில் இருந்து ரோஜோ, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஆசிரியராக வேலை பார்த்தார். பின்னர், நாடு திரும்பும் நோக்குடன் வால்டர் பீவெரசி அலன்டே என்ற பொருளாதார நிபுணருடனும், அவரது சகோதரர் டொமிங்கோவுடனும் காரில் அர்ஜென்டைனா திரும்ப முடிவு செய்தார். அலன்டே நினைவு கூர்கிறார்: "நாங்கள் கவுதமாலாவிலிருந்த கோஸ்டா ரீகாவிற்கு பான் அமெரிக்கன் நெடுஞ்சாலையில் விரைந்து கொண்டிருந்த போது, சாலை ஓரிடத்தில் மூடப்பட்டிருந்த காரணத்தால், சிறிய எல்லை நகரமான பியயட்ராஸ் ப்ளான்காவில் நிறுத்த வேண்டி வந்தது. அப்போது திடீரென்று இரண்டு ஊர்சுற்றிகள் அங்கு வந்தனர். அழுக்கான கிழிந்துப்போன உடைகளுடனும், முதுகில் பைகளுடனும் அவர்கள் காணப்பட்டனர். அதில் ஒருவர் சே. மற்றொருவர் ப்ளாட்டாவிலிருந்து வந்திருந்த மாணவர் எடுவார்டோ கார்சியா. அவர்கள் இருவரும் பனாமாவில் இருந்து நடந்தே வந்திருக்கின்றனர். எங்கள் ஐந்து பேருக்குமே அது ஒருவகையில் மறுதொடர்பு. பெரான் ஆட்சியினால் பாதிக்கப்பட்ட நாங்கள் அனைவரும் திடீரென்று நடுக்காட்டில் சந்தித்துக் கொண்டது, சற்று விநோதமானதுதான். சே அதில் வித்தியாசமாக இருந்ததால், என்னைக் கடந்தார். அவர் அமைதியாக இருந்தாலும், தனது இருப்பை உணரச் செய்தார். அவருடைய முகம் கவர்ச்சிகரமாக இருந்தது. அவர் மத்திய அமெரிக்காவில் தான் சந்தித்த, வறுமையினால் மிகவும் நிலைக் குலைந்துப் போயிருந்தார். அவர் மிகவும் ஏழ்மையாகக் காட்சியளித்தார். ஆனால் உள்ளே இருந்து ஒலித்துக் கொண்டிருந்த ஒரு குரலுக்கு அவர் செவி சாய்த்துக் கொண்டிருந்தவராகவும், போராட்டக் குணமுடையவராகவும் காணப்பட்டார். உலகத்தில் நடக்கும் அநீதிகளுக்கெல்லாம் தான் பொறுப்பு ஏற்றுக் கொள்வது போல அவர் தோன்றினார். நான் அவருக்காக மிகவும் வருத்தப்பட்டேன். என்னிடம் இருந்த சில ஆடைகளை, நான் அவருக்கு அளித்தேன். அவரிடம் கிட்டத்தட்ட எதுவுமே இல்லை. அவருடைய கையில் இருந்த அனைத்தும் கத்தல்களே. நாங்கள் அந்த இளைஞர்களை எங்களுடைய காரில் ஏற்றிக் கொண்டு மனாகுவா (நிகரகுவா) சென்றடைந்தோம். அப்பயணம் இரண்டு நாட்களை எடுத்துக் கொண்டது. அச்சமயத்தில் சே பலமுறை ஆஸ்துமாவால் தாக்கப் பட்டார். நானும் ரோஜோவும், கார் விற்பதற்காக தங்கி விட, சே எனது சகோதரர் டொமிங்கோ மற்றும் கார்சியா ஆகிய மூவரும் நடந்தே கவுதமாலாவிற்கு புறப்பட்டார்கள். என்னுடைய மத்திய அமெரிக்க பயணங்களின் போது, நான் சேயை பலமுறை சந்தித்து இருக்கிறேன். ஒரு சமயம் நாங்கள், குறைஉணவு உட்கொண்டிருந்த, வயிறு வீங்கிப்போன குழந்தைகளைக் காண நேர்ந்தது. அது யுனைட்டட் ஃப்ரூட் கம்பெனியின் இடம். அதைக் கண்டதும் சேயுக்கு கடும் சீற்றம் ஏற்பட்டது. அவர் கடவுளில் இருந்து, வடஅமெரிக்க சுரண்டல் பிசாசு வரை அனைவரையும் இரண்டு மணிநேரம் திட்டித் தீர்த்தார். அது கடைசியில் கடுமையான ஆஸ்துமாவில் அவரைக் கொண்டு போய் விட்டது."

இதற்கிடையில் கவுதமாலாவில் என்ன நடக்கிறது என்று ரோஜோ சே குவாராவிடம் கூறினார். அங்குள்ள ஜாக்கபோ அர்பென்ஸ் அரசு, யுனைட்டட் ஃப்ரூட் நிலத்தை அரசுடமையாக்கி சமூகப்புரட்சியை துவக்கி வைத்திருந்தது. சே அதைக் கேட்டு, உற்சாகம் அடைந்தவராய் அங்கு

செல்லத் தீர்மானித்து விட்டார். 1953-ம் ஆண்டு, கிறிஸ்துமஸ் தினத்தன்று, அவர் கவுதமாலா நகரத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கு கவுதமாலாவின் முன்னாள் ஜனாதிபதி ஜான் ஜோஸ் அரவாஹோவின் நண்பரும் அர்ஜென்டைனப் பெண் ஒருவரை மணந்து கொண்டவருமான, ஹோண்டுராஸ் நாட்டைச் சேர்ந்த ஜான் ஏஞ்சல் முனோஸ் அகுலியரின் வீட்டை அடைந்தார். அங்கு அவருக்கு கலைக்களஞ்சியம் ஒன்றை அலைந்து திரிந்து விற்பனை செய்யும் வேலைக் கிடைத்தது. அதனால், அவர் மூன்றாவது நிழற்சாலையில் இருக்கும் ஈக்கள் நிறைந்த ஒரு ஒட்டலுக்கு மாறினார். அதற்கு ஒரு நாளைக்கு 50 செண்ட் வாடகை அளித்து வந்தார். ஆஸ்துமாவை அடக்கி வைக்க வேண்டும் என்றால், ஆப்பிள் திராட்சை போன்ற பழங்களைச் சாப்பிட வேண்டும் என்பது அவருக்கு தெரியும். ஆனால் இந்தப் பழவகைகள் கவுதமாலாவில் அபூர்வம் என்பதால் அவர் மிகவும் மெலிந்துப் போனார். சேகுவாரா முதுகுப்புறத்தில் படுத்தபடி, மருந்து குப்பியை கைக்கெட்டும் தூரத்தில் வைத்துக் கொண்டு படித்துக் கொண்டே பல நாட்களை கழித்ததை ஜூலியர் டி கோகோஸ் என்ற கவுதமாலா நண்பர் நினைவு கூர்கிறார்.

1954-ன் முற்பகுதியில் அகுலியர் மூலமாக, சே குவாராவிற்க ஹில்டா காடியா என்ற பெரு நாட்டுப் பெண் ஒருவரின் அறிமுகம் கிடைத்தது. அவர் பெருவின் அப்ரின்டா இளைஞர் இயக்கத்தின் உறுப்பினர். முன்பு புரட்சிகரமான கொள்கைகளைக் கொண்டிருந்த அந்த இயக்கம், தற்போது பழைமைவாத இயக்கமாகி விட்டிருந்தது. அவர் மூலமாக, சே கியூபாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட, 'ஜூலை 26 இயக்கம்' என்று அழைக்கப்பட்ட விநோதமான குழுவின் உறுப்பினர்களைச் சந்தித்தார். அந்த இயக்கம் தனது முதல் தாக்குதலை 1953-ல் கியூபாவிலுள்ள மான்கடா இராணுவ முகாம் மீது நடத்தியிருந்தது. அதன் உறுப்பினர்கள் அன்று சிறையில் இருந்தனர்; அல்லது நாடு கடத்தப் பட்டிருந்தார்கள். ஹில்டா கூறுகிறார்: "நான் ஃபிடல் பற்றி, அவரது வீரச்செயல்கள் பற்றி, சேயிடம் அடிக்கடி பேசுவதுண்டு. சே, ஃபிடலின் அபிமானியாகிப் போனார்"

ஜூலை 26 இயக்கத்தைச் சார்ந்த நாடு கடத்தப்பட்ட கியூபவாசிகளை அவர் சந்திப்பது, அது முதல் தடவையல்ல. சேயை கோஸ்டா ரீகாவில் உள்ள சான் ஜோஸ் என்ற இடத்தில் வைத்து சந்தித்த, டொமினிக்கன் குடியரசின் முன்னாள் ஜனாதிபதி, "அங்குதான், சே மான்கடா தாக்குதலின் பங்கு பெற்றிருந்த நாடு கடத்தப்பட்ட கியூபாவாசிகளை முதன்முறையாக சந்தித்தார். அச்சமயத்தில் குவாரா மிகவும் குறைவாகப் பேசினார். கேட்ட கேள்விகளுக்கு மட்டும் பதிலளித்தார். தானாக எந்த விஷயத்தையும் வெளியிடவில்லை. அருகே உட்கார்ந்து பேசுவதைக் கவனமாக கேட்டுக் கொண்டிருப்பார். அவரின் பொருளாதார நிலை மிகவும் மோசமாக இருந்தது. நான் உதவியளிக்க முன்வந்த போது, அதை அவர் ஒரேயடியாக மறுத்து விட்டார். அவர் நேரில் பார்த்த விஷயங்களால் பாதிக்கப்பட்டு, அதிலேயே மூழ்கியிருந்தார். பிரச்சினைகளுக்கு அச்சமயம் வரை வழங்கப்பட்ட தீர்வுகள் அனைத்தோடும் அவர் ஒத்துப் போகவில்லை. நேரடியான கேள்விகளைக் கேட்ட போது, அவர் அனைத்து கட்சிகளையும் விளாசினார். அவர் தனது நிலைப்பாட்டை ஒருபோதும் வெளியிடவில்லை. ஆனால் எனது கேள்விகளுக்கு பதிலளித்த விதத்தில் இருந்தே, அவர் அப்பொழுது ஒரு கம்யூனிஸ்டாக இல்லை என்பதை தெரிந்துக் கொண்டேன்" என்றார்.

சே கவுதமாலாவில் இருந்த போது, அரசுக்காக வேலை செய்யவில்லை. அவர் டோடோகாபனிலுள்ள மருத்துவமனை ஒன்றில் சேர சுகாதார அமைச்சகத்தை அணுகியப் போது, கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தால்தான் வேலை என்று கூறப்பட்டது. அவர் கோபமாக, "நாசமாகப் போக" என்று கத்திவிட்டு வெளியேறி விட்டார்.

அதனால், சே அப்ரிட்ஸ்டாஸ் மற்றும் இதர லத்தீன் அமெரிக்க நாடு கடத்தப் பட்டவர்களிடம் பேசிப் பொழுதை ஓட்டினார். அதில ஒருவர் 1958 புரட்சிக்குப் பிறகு, வெனிசுலாவிற்கு சென்று விட்ட மருத்துவர் லூயிஸ் மானுவல் பெனாலூர். அவர், சே மிகவும் மோசமான நிலையில் கவுதமாலாவில் வாழ்க்கை நடத்தியதைப் பற்றி கூறுகிறார்: "முதலில் அவரிடம் பணம் இல்லை. இரண்டாவது ஆஸ்துமா அவரை பெரும் வேதனைக்குள் ஆழ்த்தியிருந்தது. நான் பலமுறை சென்று அவருக்கு மருத்துவ உதவி அளித்து வந்தேன். ஒருமுறை ஒருவார காலத்திற்கு மருத்துவ மனையில் அவர் அனுமதிக்கப் பட்டார்"

சி.ஐ.ஏ. உளவு அமைப்பினால் நிதியுதவியும் பயிற்சியும் அளிக்கப் பட்டிருந்த, காஸ்டில்லோ அர்மாஸின் கூலிப்படைகள், அர்பென்ஸ் அரசைத் தாக்கத் துவங்கியதும், அவர் உடனே அதன் உதவிக்கு விரைந்தார். இதை ஹில்டர் நினைவு கூர்கிறார்: "கவுதமாலாவாசிகளை சே, முடியும் மட்டும் உற்சாகப்படுத்தினார். நீங்கள் போராட வேண்டும் என்று மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டே இருந்தார், ஒருஇரவு சில இளைஞர்கள் எதிரியுடம் இருந்து தப்பி வந்தபோது, அவர்களை ஒரு தூதரகத்திற்கு பாதுகாப்பாக அழைத்துச் சென்றார். ஆயுதங்களையும் ஓரிடத்தில் இருந்து மறு

இடங்களுக்கு முடிந்த அளவுக்கு கொண்டு செல்ல உதவினார். தொடர்ந்து அதைச் செய்ய மடியாது என்று தெரிந்ததும், நான் செய்தது போலவே, அவரும் ஒரு அகதியாக அர்ஜென்டைனா தூதரகத்திற்குள் அடைக்கலம் புகுந்தார்"

சேயே கூறியிருக்கிறார்: "நான் அர்பென்ஸ் அரசின் அபிமானியாக இருந்தேன்; இன்னும் இருக்கிறேன், நான் அதில் பதவி வகிக்காவிட்டாலும் கூட. அமெரிக்கா அதை வீழ்த்த தலையிட்டப் போது, நான் என்னைப் போன்ற இளைஞர்களை கொண்ட ஒரு குழுவை இணைத்துக் கொண்டு, யுனைட்டட் ஃப்ரூட் கம்பெனிக்கு எதிராக போராட முயன்றேன். கவுதமாலாவில் அப்படிப்பட்ட ஒரு போராட்டத்திற்கான அனைத்து அவசியங்களும் இருந்தன. ஆனாலும் ஒருவரும் போராடவில்லை. தற்காத்துக் கொள்ள வேண்டிய ஒரு தேவை இருந்தும், ஒருவரும் அதைச் செய்ய முன்வரவில்லை"

அரசியல் அகதியாக அவரது தூதரகத்தில் நுழைந்த சே, ஒரு தீண்டத்தகாதவனாக நடத்தப் பட்டிருக்கிறார். சமையலறைக்கு உள்ளேயே விழுந்து கிடக்குமாறும், ஏவலாள் வேலை செய்யுமாறும் அவருக்கு உத்தர விடப்பட்டது. எப்படியிருந்த போதிலும், அவர் அங்கு இரண்டு மாதகாலம் தங்க நேரிட்டது. கவுதமாலா தோல்வி ஏன் ஏற்பட்டது என்பது குறித்து பல கேள்விகள் குறித்து ஆராய அவருக்கு நேரம் கிடைத்தது. கவுதமாலா அரசு மக்களிடம் தேவையான நம்பிக்கையை வைக்காமல் இருந்ததும், அவர்களை ஆயுதப்படுத்தியோ, அரசியல் கட்டுமானத்திற்குள் அரவணைத்துக் கொண்டோ, அவர்களின் நம்பிக்கையை பெறக் தவறியதும் இந்த தோல்விக்கு முக்கியமான காரணங்கள் என்று சே கருதினார்.

சே பின்னர் தூதரகத்தில் இருந்து வெளியேற உத்தரவிடப் பட்டார். ஹில்டா ஏற்கனவே வெளியேறி இருந்தார். வெளியே வந்த ஹில்டா சிறைக்குள் அடைக்கப்பட்டு, அங்கு உண்ணணாவிரதம் இருந்ததால் விடுவிக்கப்பட்டார். பின்னர் அவர் ஒரு சிறிய ஆற்றை நீந்திக் கடந்து மெச்சிகோவை அடைந்தார். சேயும் பின்னர் அதையேச் செய்து, 1954-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மெச்சிகோவை அடைந்தார்.

மெச்சிகோவிற்கு போகும் வழியில், சே ராபர்ட்டோ காசெரஸ் என்ற இளம் கவுதமாலா புரட்சியாளரைச் சந்தித்தார். அவர் கியூபாவாசிகளிடம் 'எல் படோஜோ' என்ற பெயரில் பிரபலமானார். மெச்சிகோவில் அவர்கள் இருவரும் ஒரு சிறிய வீட்டில் ஒன்றாய் தங்கினர். பழைய புகைப்படக்கருவி ஒன்றை வாங்கி வைத்துக் கொண்டு, சுற்றுலா புகைப்படக்காரர்களாக வாழ்க்கை நடத்தினர். ஒருமுறை சேயை, 'தொந்தரவு செய்யாமல் இடத்தைவிட்டு போ" என்று கூறிய அமெரிக்க சுற்றுலாப்பயணி ஒருவரிடம், சே "இப்போது உங்களுக்கு சிரிப்பாக இருக்கலாம். எங்களுக்கும் ஒரு காலம் வரும்" என்றுச் சொல்லிக் கத்தினார். ஒரு இதயநோய் நிபுணரின் சோதனைச் சாலையிலும், அவர் வேலை செய்தார். மருத்துவர் கோர்னெலியோ மோயானோ நினைவு கூர்கிறார்: "அவர் பலமுறை பல்கலைக்கழகத்தில் நாய், பூனை இவைகளை வைத்துக் கொண்டு ஏதாவது சோதனைகளை நடத்திக் கொண்டு இருந்தார். எப்போதும் சுறுசுறுப்பாக வருவதும் போவதுமாக, கைக்கடிகாரத்தை அடிக்கடி பார்த்துக் கொண்டு, இதைச் செய்வது அதைச் செய்வதுமாக அவர் இருந்தார்"

எல் படோஜோ மூலம் சே கியூபாவில் இருந்த கடத்தப்பட்டவர்களோடு தனது தொடர்பை, சே மீண்டும் புதுபித்துக் கொண்டார். அவரே கூறுகிறார்: "ராகுல் காஸ்ட்ரோயும் நானும் நண்பர்களானோம். அவர்கள் கியூபாவில் நடத்த திட்டமிட்டிருந்த புரட்சிக்கு அவர்தான் தலைமையேற்க திட்டமிடப் பட்டிருந்தது. நான் ஒருநாள் இரவு முழுவதும் ஃபிடல் காஸ்ட்ரோவுடன் பேசினேன். விடியும் போது, அவர்களுடைய சாகசப் பயணத்தின் மருத்துவராக மாறி விட்டேன். உண்மையில் லத்தீன் அமெரிககா எங்கும் எனக்கு கிடைத்த அனுபவங்கள், கவுதமாலாவில் நடந்த அயோக்கியத்தனமான ஆட்சிக்கவிழ்ப்பு ஆகியவற்றிற்குப் பிறகு, கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்துப் போராடும் எந்தப் புரட்சியோடும் என்னை இணைத்துக் கொள்வதற்கு, எனக்கு அதிக அவகாசம் தேவைப்படவில்லை. ஆனால் ஃபிடல் குறித்த என்னுடைய ஒட்டு மொத்த அபிப்ராயம், அவர் ஒரு அசாதரணமான மனிதர் என்பதுதான். அவர் பல பிரச்சினைகளை எதிர்கொண்டு அதைத் தீர்த்தும் உள்ளார். அவர் தான் மெச்சிகோவை விட்டு, கியூபாவை அடைந்ததும், அங்கு போராடி, அதில் வெற்றியும் பெறுவோம் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கைக் கொண்டிருந்தார். நானும் அவரது நம்பிக்கைகளைப் பகிர்ந்து கொண்டேன். போராட, சாதிக்க, செயலில் செய்துக் காட்ட வேண்டும் என்ற வேகம் இருந்தது. அழுது கண்ணீர் வடிப்பதை நிறுத்தி போராட்டத்தைத் துவக்குவது தவிர்க்க இயலாததாக இருந்தது."

1955 கோடையில் முதன்முதலில் சந்தித்ததில் இருந்தே, சேயும் ஃபிடலும் மிக நெருக்கமானார்கள். வீரப்பயணத்திற்கு ஒரு குழுவை காஸ்ட்ரோ ஏற்கனவே தயாரித்து வைத்திருந்தார். அதில் ஒரு பேராடும் மருத்துவராக சே இணைத்துக் கொள்ளப் பட்டார். அவர்கள் எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டும், பயிற்சி எடுத்துக் கொண்டும், ஆயுதங்களைச் சேகரித்துக் கொண்டும் இருந்தனர்.

ஸ்பானிய ஆதரவுள்ள ஜெனரல் அல்பர்டோ பாயோவின் வழிகாட்டுதலுடன், அவர்கள் ஒரு தரமான கொரில்லாக் குழுவாக உருவாயினர்.

இதற்கிடையில் 1955 மேயில் சேயும், ஹில்டாவும் மணம் புரிந்து கொண்டனர். அவர்களுக்கு நெருக்கமான நண்பனான ராகுல் விளங்கினார். ஆனால் ஹில்டா கூறுகிறார்: "எப்போதும் சேயும், ஃபிடலும் பேசுவதும் திட்டமிடுவதுமாக இருந்தனர். கியூபப்புரட்சிக்கு நான் எனது கணவரைக் கொடுத்து விட்டேன்"

அப்போதுதான் குவாராவிற்கு 'சே' பட்டம் கிடைத்தது. அவர் தனது நண்பர்களை எப்போதும் 'உடன்பிறப்பே!' என்று பொருள்படும் 'சே' என்று அழைத்து வந்தது, கியூபவாசிகளுக்குப் பிடித்துப் போனது.

கடைசியாக 1955-ல் அக்குழுவில் சிலர், சதித் குற்றத்திற்காக, கைது செய்யப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப் பட்டதைத் தொடர்ந்து, 82 பேர் அடங்கிய அக்குழு, பழைய பந்தயப்படகு ஒன்றில் ஏறி, கியூபா நோக்கிப் பயணப்பட்டது.

அப்போது ஹில்டா கர்ப்பமாய் இருந்ததால், மெக்சிகோவிலேயே தங்கி விட்டார். சியரா மாஸ்ட்ரா மலைகளில் சே பேராடிக் கொண்டிருந்த போது, சேயின் முதல் குழந்தை ஹில்டா பீட்டிரிஸ் பிறந்தாள்.

62 அடி நீளமுள்ள அந்த பழைய படகில் அவர்கள் ஆறு நாட்களைக் கழித்தனர். வழியில் ஒரு புயலைச் சந்தித்தனர். படகில் இருந்தவர்களில் கடல்காய்ச்சலால் பாதிக்கப் படாமல் இருந்தது சே ஒருவர்தான். ஏனெனில் அவர் மற்றவர்களைக் கவனித்துக் கொள்வதிலேயே மூழ்கிப் போயிருந்தார். 1956-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ம் தேதி இரவு அவர்கள், கியூபக் கடற்கரையை தொட்டவுடன் எதிரிகளால் கண்டுப் பிடிக்கப்பட்டு, பாடிஸ்டாவின் விமானப்படையால் தாக்கப்பட்டனர். அதில் தப்பிப் பிழைத்தவர்கள், சியரா மாஸ்ட்ராவை அடைய முயன்றனர். அவர்களின் வழிகாட்டி ஒருவர் காட்டிக் கொடுத்தால், அவர்கள் மீண்டும் தாக்கப்பட்டனர். முதல் தாக்குதலுக்குப் பின்பு, ஏழுபேர் மட்டும்தான் சியரா மாஸ்டாவின் பாதுகாப்பான பகுதியைஅடைந்தனர். பின்னர் 12 பேர் பிழைத்து இருந்தது கண்டுப்பிடிக்கப்பட்டது. அதைதான் வரலாற்றியலாளர்கள் 'முதல் பன்னிரெண்டு' என்று அழைத்தனர். ஆனால் உண்மையில் 20 பேர் பிழைத்து இருந்தனர். அவர்கள் அனைவரும் சியரா மாஸ்ட்ராவை அடைந்தனர்.

முதலில் இருந்தே படையில் இருந்த அனைவருக்கும் சேயைப் பிடித்திருந்தது. தான் டாக்டர் என்று அழைக்கப்படுவதை அவர் எதிர்த்தார். "நாம் எல்லோரும் போராளிகள்!" என்று கூறுவார். அவரிடம் இயல்பாகவே இருந்த தலைமைத் தாங்கும் பண்பை அவர் அங்கு நிருபித்தார். தனது மனிதர்களிடம் நம்பிக்கை உருவாக்குவதில் அவர் திறமையானவராக இருந்தார். அவர் மற்ற எல்லோரையும் காட்டிலும துணிச்சல்மிக்கவராக இருந்ததால், மற்றவர்கள் அவரை இன்னும் அதிமாக மதித்தனர். ஆனால் 1967 அக்டோபர் 18-ம் தேதி ஃபிடல் தனது உரையின் போது, அத்தகைய வீரம் சமயங்களில் ஒரு பலவீனமாகவும் போய்விடும் என்றார். அவர் அப்போது கூறினார்: "மிகவும் அபாயகரமான பணிகளில் ஈடுபட, உடனடியாக தானாகவே முன்வந்து விருப்பம் தெரிவிப்பது, அவரது தலையாய குணங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. ஆகையால் இயயல்பாகவே அவர் பலரின் மதிப்பையும், உடனே பெற்று விட்டார். அவர் கியூபாவில் பிறக்காமலிருந்தும், எங்களுடன் இணைந்து போராடியதாலும், மிகவும் அறிவார்ந்த கருத்துகளைக் கொண்டிருந்த ஒரு மனிதராக விளங்கியதாலும், இக்கண்டத்தின் இதர பகுதிகளிலும், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்கள் வெடிக்கும் என்ற கனவுகளால், அவர் அலைக்கழிக்கப்பட்டு கொண்டிந்ததாலும், பிறர்க்கென வாழும் கொள்கையுடையவராக அவர் திழ்ந்ததாலும், சிறிதும் தன்னலமற்றவராக அவர் எப்போதும் விளங்கியதாலும், எல்லாவற்றிற்கும் மேலாக, மிகவும் கடினமான பணிகளில் தன் வாழ்க்கையையே பணயம் வைத்து, ஈடுபட விருப்பம் கொண்டிருந்ததாலும், சக போராளிகளுக்கு அவர் மேல் இருந்த நேசமும் மதிப்பும் பல மடங்கானது.. சே ஒப்பிட முடியாத அளவு பிரமாதமான போர் வீரர். சே ஒப்பிட முடியாத சிறந்த தலைவர், இராணுவக் கண்ணோணாட்டத்தில் சே அசாதாரணமான திறமைகளைக் கொண்டிருந்த வீரர், அசாதாரணமான தைரியத்தைக் கொண்டிருந்த மனிதர்; அசாதாரணமான மூர்க்கததனத்தைக் கொண்டிருந்த துணிச்சல்காரர்."

விமானத் தாக்குதல்களின் போது, சே ஒரு போதும் பயப்பட்டதே கிடையாது. எப்போதாவதுதான் மறைவிடத்தை தேடுவார். பொதுவாக, கடந்து போன விமானங்களை வெறித்தவாறு, தாக்குதல் முடியும் வரை, வாயில் இருக்கும் சுருட்டை ஊதிக்கொண்டு, அவர் இருப்பார். பெரும்பாலான சமயங்களில் அத்தகைய விமானத் தாக்குதல்களை முற்றிலும் அசட்டை செய்துவிட்டு, தான் செய்து கொண்டிருக்கும் காரியங்களைத் தொடர்வார். மிக விரைவில் அவர் படையின் கமாண்டர், அதாவது லெட்டினன்ட் பதவியினை அடைந்தார். தனது படைவீரர்களுக்கு தந்திரோபாயங்களைக் கற்றுக்

கொடுத்து, தொடர்ந்து அவர்களுக்கு பயிற்சி அளித்து, முன்னுதாரணமாக இருந்து ஒழுக்கத்தை ஏற்படுத்தினார். ஒழுக்கத்தைப் பொறுத்த வரை அவர் மிகவும் கண்டிப்பானவராக விளங்கினார். ஒருமுறை காவல் பணியின் போது, தூங்கிய காவல் வீரரைச் சுட்டார். அதே சமயம், தனது வீரர்களுக்கு, சண்டையிடாத மாலை நேரங்களில் செர்வாண்டிஸ், ராபர்ட் லூயிஸ் ஸ்டீவன்சன், அல்போன்ஸ் டாடர், ராமுலோ காலகோஸ் போன்றவர்களின் படைப்புகளையும், பாப்லோ நெருடாவின் கவிதைகளையும் வாசித்துக் காட்டுவார்.

அவரது ஆஸ்துமா அவரை மிகவும் தொல்லைப் படுத்தி, சியரா மலைப் பகுதிகளில் நடக்க முடியாமல் செய்த போது, சே கோவேரி கழுதை ஒன்றின் மேலேறி சவாரி செய்தார். அந்த கழுதையை மார்ட்டின் பியரொ என்று அழைத்தார் (அர்ஜென்டைனா கவிதை ஒன்றில் வரும பாத்திரம்). சே முதன் முதலில் கரையிறங்கியவுடன் கழுத்தில் சுடப்பட்டது, பின்னர் 1957 டிசம்பர் 9ம் தேதி அல்ட்டோ டி கோன்ராடோப் போரில் பாதத்தில் சுடப்பட்டது என பலமுறை காயப்பட்டுள்ளார். அவர் ஃபிடலுக்கு எழுதிய கடிதத்தில், “எம் 1 ரக துப்பாக்கி குண்டு என் காலில் புகுந்து அங்கேயே தங்கி உள்ளது. தற்சமயத்தில் நான் நடக்க இயலாத நிலையில் உள்ளேன். ராமிரோ படைக்கு தலைமை தாங்கி, பெரும்பாலோனவர்களுடன் ஒரு இடத்திற்குப் போயிருக்கிறார். எந்த இடம் என்பதை இதைக் கொண்டுவரும் வழிகாட்டி தெரிவிப்பார். எங்களுக்கு உடனடியாக 30.06 மற்றும் 45 தானியங்கிகளும் தேவைப்படுகிறது. நான் இங்கு அதிரடித் தாக்குதல் ஒன்றைத் தயாரித்து விட்டு பாதுகாப்பாக இருக்கிறேன். உங்களது அறிவுரையை அலட்சியம் செய்ததற்கு வருந்துகிறேன். ஆனால் கடுமையான களைப்பின் காரணமாக, நமது படையினரின் தன்னம்பிக்கை மிகவும் குறைவாக இருந்ததால், நான் முன்னணியில் இருக்க வேண்டியது அவசியமெனக் கருதுகிறேன். நான் தேவையான அளவு எச்சரிக்கையாயிருந்தும், காயம் எற்பட்டது ஒரு விபத்தே” என்று குறிப்பிடுகிறார். அதற்குப் பின், அவரே கட்டுப்போட்டுக் கொண்டு நீண்ட காலத்திற்கு நொண்டிக் கொண்டே அலைந்தார்.

1958 கோடையில் மேஜராகி விட்ட (கியூப புரட்சிப் படையில் மிக உயர்ந்த பதவி) சே, சியரா மாஸ்ட்ரோவில் இருந்து மத்திய கியூபாவில் உள்ள எஸ்கம்ப்ரே மலைகளுக்கு கியூபாவை இரண்டாக வெட்ட வேண்டும என்ற நோக்கில் ஒரு சாகச அணிவகுப்பை நடத்திச் சென்றார். இந்த அணிவகுப்பின் போதும், லாஸ் வில்லாஸ் போர்களின் போதும் முதலில் ஜூலை 26 இயக்கத்தின் செய்தி பரிமாறுபவராக இருந்து தற்போது போரிடும் வீராங்கனையாக வளர்ந்துள்ள ஒரு கியூபப் பெண்ணுடன் சேக்கு நெருக்கம் ஏற்பட்டது. அவரது பெயர் அலய்டா மார்ச். பின்னர் சே, அவரது பெரு நாட்டு மனைவி ஹில்டாவை விவாகரத்து செய்து விட்டு, 1959 ஜுன் 3 அன்று (புரட்சிக்கு பின்), அலய்டாவை திருமணம் புரிந்து கொண்டார். அதற்கு பின்னரும் ஹில்டாவும் சேயும் தொடர்ந்து நண்பர்களாக இருந்தனர். புரட்சிக்கு பின்னர் சே, ஹில்டாவை கியூபாவிற்கு அழைத்துக் கொண்டார். இப்போது கியூப வேளாண்மை சீர்திருத்த நிறுவனத்தில் அவர் வேலை பார்த்து வருகிறார். வளர்ந்து பெண்ணாக இருக்கும் சேயின் மகள் ஹில்டா பீட்டிரிஸ், ஒரு கியூப குடிமகளாகவே வளர்க்கப் பட்டுள்ளார்.

புரட்சியின் காலக்கட்டத்தின் போதிலிருந்து அலய்டா, சேயின் செயலாளராக குறிப்பிடப் பட்டுள்ளார். அலய்டா கூறுகிறார்: “என் புரட்சிகர நடவடிக்கை காரணமாக, சான்டா கிளாராவில் என்னால் தொடர்ந்து இருக்க முடியாததால், இவர்களுடன் இணைந்து ஆயுதம் ஏந்திப் போராடத் தீர்மானித்தேன். நான் சே குவாராவின் முகாமை வந்தடைந்து, ஏற்றுக் கொள்ளப் பட்டேன். அங்கு பெண்கள் பெரும்பாலும செவிலியராக பணியாற்றி வந்தபோதிலும், நான் ஆயுதங்களை உபயோகிக்க விரைவிலேயே கற்றுக் கொண்டேன். படைவீரராக ஆவதென்றும் தீர்மானித்துக் கொண்டேன். முதலில் அது மிகவும் கடினமாக இருந்ததென்பதை ஒப்புக் கொள்கிறேன். பின்னர் அது பழகிவிட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக, எதிரியுடன் முதலில் மோதிய பிறகு, அது பிடித்து விட்டது. லாஸ்விலாஸ் நடவடிக்கையில், நான் சேயுடன் இணைந்து அங்கு நடைபெற்ற அனைத்து போர்களிலும் கலந்து கொண்டேன்”

பாடிஸ்டா தனது சக்தியனைத்தையும் செலவிட நிர்ப்பந்தப் படுத்தப்பட்ட லாஸ்விலாஸ் நடவடிக்கைக்கு பிறகு, போராளிகள் ஹவனாவிற்குள் நுழைந்தனர். 1959 ஜனவரி 2ம் தேதி, சே ஹவனாவின் லா கபானா கோட்டையின் பொறுப்பை ஏற்றார். இரண்டு நாட்களுக்குப் பிறகு கியூப மக்களுக்கு அவர் வெற்றி வணக்கம் செலுத்தினார். அப்போது அவர், “சிறந்த நம்பிக்கையும் உயர்ந்த ஒழுக்கமும் கட்டுபாடும் உடைய சுதந்திரத்தின் மீது, அன்பின் மீது அசைக்க முடியாத நம்பிக்கையுடைய மனிதன்தான் விவசாயி. சியரா மாஸ்ட்ராவின் ஆண்களும் பெண்களும், கியூபாவின் விவசாயிகளும்தான் இப்போராட்டத்தில் தலையாய போராளிகள் ஆவார்கள். இப்போது போராட்டம் முடிவடைந்து விட்டது. கியூப விவசாயிகளுக்கு நியாயமாக அளிக்கப்பட வேண்டியதை செய்வதே, இனி அடிப்படை நடவடிக்கையாக இருக்கும்”

1959 ஜனவரி 9ம் தேதி, கியூப அமைச்சர்கள் குழு, சே குவாராவிற்கு கியூப குடிமகன் அந்தஸ்தை அளித்தது. அச்சமயத்தில் அவர் தனது 'சே' என்ற பெயரை சட்டப்பூர்வமாகப் பதிவு செய்துக் கொண்டார்.

அயலுறவுக் கொள்கையில் அவர் முக்கியமாக அக்கறை செலுத்தினார். 1959 ஜுனில் அவர் ஆப்ரிக்கா, ஆசியா (ஹிரோசிமா உட்பட) மற்றும் ஐரோப்பாவுக்கும் விரிவான சுற்றுப்பயணத்தை மேற்கொண்ளடார். 1959 செப்டம்பர் 8-ம் தேதியன்று நாடு திரும்பிய அவர், உடனடியாக வேளாண்ணமைச் சீர்திருத்தப் பணியில் மூழ்கிவிட்டார். அக்டோபர் 7 அன்று ஃபிடிலின் தலைமையில் நடைபெற்ற வேளாண்ணமை சீர்திருத்த தேசிய நிறுவனத்தின் கூட்டம் ஒன்றில், அவர் தொழிற்துறையின் தலைவராக அறிவிக்கப்பட்டார். அதன் வெற்றிக்கு அவர் பெரும் பங்காற்றினார்.

அதே வருடம் நவம்பர் 26 அன்று தேசிய வங்கியின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, கியூபாவின் புதிய நோட்டுகளின் 'சே' என்று வெறுமனே கையெழுத்திட்டு, அதைப் பிரபலப் படுத்தினார். அவர் தேசிய வங்கியின் பொறுப்பை ஏற்றுக் கொண்டதும் தனது உதவியாளர்களிடம் கேட்ட முதல் கேள்வி, "கியூபாவின் தங்கம் மற்றும் டாலர் சேமிப்புகள் எங்கே வைக்கப் பட்டுள்ளன?" என்பதுதான். "போர்ட் நாக்ஸ்" (அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நிதி சேமிப்பிடம்) என்ற பதில் வந்தது. அவர் உடனடியாக தங்கச் சேமிப்பையும், டாலர்களையும் விற்று வேறு நாணயமாக மாற்றி, அவற்றை கனடா மற்றும் சுவிஸ் நாட்டு வங்கிகளுக்கு ஏற்றுமதி செய்து விட்டார். அவருடைய தீர்க்கதரிசனத்தின் காரணமாக, அமெரிக்க ஐக்கிய நாடுகள் அங்குள்ள கியூபாவின் சொத்துகள் அனைத்தையும் பறிமுதல் செய்தபோது, கியூபா பேராபத்தில் - உண்மையில் திவாலாகி இருக்கும் - சிக்காமல் தப்பித்தது.

தேசிய வேளாண்மை சீர்திருத்த நிறுவனத்திலும் தேசிய வங்கியிலும் அவர் இருந்தபோது, அவரது தினசரி வேலைகளை மிகவும் கடுமையானதாக இருக்கும். குறிப்பாக அயல்நாட்டு வங்கிகளுக்கு அவர் சிம்மச் சொப்பனமாக திகழ்ந்தார். அவர் சமயங்களில் தொடர்ச்சியாக 36 மணி நேரங்கள் கூட, உணவு எல்லாவற்றையும் தனது மேசைக்கே வரவழைத்து உண்டு விட்டு வேலை செய்வார். தொழில் ரீதியாக அவரைச் சந்திக்க முனைபவர்களுக்கு அவர் ஒதுக்கும் நேரம் அதிகாலை 2 மணியாக கூட இருக்கும். தொழில் விருந்து என்ற கருத்து அவருக்கு அறவே பிடிக்காது. அவர், "அவைகள் காலத்தை விரயமாக்குன்றன. நீங்கள் வாயில் உணவை வைத்துக் கொண்டே பேச முடியாது" என்று கூறுவதுண்டு.

எப்போதாவது ஓய்வு எடுத்துக் கொண்டு, அவர் வீட்டுக்கு வந்தால், கியூபப் பெண்கள் ஆணையத்தில் பணிபுரிந்து வந்த மனைவி அல்யடாவுடன் சேர்ந்து, பாரம்பரியமான இசையை, குறிப்பாக பீத்தோவனை அவர் ரசிப்பதுண்டு. அதே சமயத்தில் எப்போதும் போல ஏராளமாகப் படித்தும் வந்தார். அவரது உணவு வகைகளும் எளிமையாகத்தான் இருக்கும், ஆனால் குடிக்க கண்டிப்பாய் அவருக்கு 'மேட்' இருக்க வேண்டும். அவர் எளிய ஆடைகளையே அணிந்து வந்தார். சாயம் போன சீருடை, பேண்ட்டுக்கு வெளியே தொங்கும் சட்டை, கறுப்பு இராணுவ காலணிகள், ஒரு தொப்பி ஆகியவையே அவரது உடைகள். தொப்பியை அவர் கழட்டுவதே அபூர்வம். எப்பொழுதும் நிமிர்ந்து நிற்கும் அவர், வழக்கமாக பிரகாசத்தில் இருந்து ஒதுங்கி இருக்கவே முயற்சித்தார். மேடைகளில் பேசுமாறு ஃபிடல்தான் அவரை வற்புறுத்துவார். அவர் ஃபிடலைப் பார்த்து, அவரைப் போலவே நடிக்க ஒருபோதும் முனையவில்லை. மாறாக, அவர் மென்மையாக, ஏதோ விரிவுரை நிகழ்த்துவது போல, ஆள்காட்டி விரலை ஆட்டி பேசுவார். அவருடைய முந்தையப் பேச்சுகள் தொலைந்து விட்டாலும், 1962-க்குப் பிறகு அவர் பேசியவைகள் பதிவு செய்யப்பட்டு எழுத்து வடிவில் பாதுகாக்கப் படுகின்றன.

அமைச்சக கூட்டங்களிலே, சே ஃபிடலுடன் விவாதிக்கவோ, அவருடைய கருத்துகளுடன் முரண்படவோ, ஒரு போதும் தயங்கியதில்லை. புரட்சியில் தலைவர்களுக்கு இடையில் துவக்கத்தில் இருந்தே நடைமுறையில் இருந்துவந்த இநத விவாத முறையை, அவர் மற்ற அனைவரைக் காட்டிலும் அதிகமாக பின்பற்றி வந்தார். அது இன்றளவும் தொடர்கிறது.

முதலில் இருந்தே சேயின் முதன்மையான கருத்தாக, கியூபாவின் சோசலிச மனிதனை உருவாக்குவது என்பதாக இருந்து வந்தது. இதற்காக அவர் திறனை விட்டுக் கொடுக்கக் கூட தயாராக இருந்தார். அவர் தானே மிகத் திறமையானவராக இருந்தப் போதிலும், இது கம்யூனிஸ்ட் கட்சியின் மரபு சிந்தனையாளர்களோடு, அவரை மோத வைத்தது. இத்தகைய கம்யூனிஸ்ட்கள் எப்போதும், அனைத்து இடங்களிலும், இன்றும் கூட இருக்கிறார்கள். மனிதனை மாற்றும் முன்பு சோசலிச பொருளாதாரத்தை தட்டி எழுப்புவது அவசியம் என்று அவர்கள் வலியுறுத்துகிறார்கள். ஆனால் சே ஒரு சோசலிசப் பொருளாதாரம், சமுதாயத்தில் பேராசையை தோற்றுவிப்பதிலும் கூட்டு உத்வேகத்தின் குளிர்காய்வில் தனிப்பட்டவர்களின் குறிகோள்கள் ஈடேறுவதிலும் போய் முடிவடையுமானால், அதை அடைய செய்யப்பட்ட முயற்சிகள், தியாகங்கள், அழிவுக்கான ஆபத்துகள் ஆகியவைகளுக்கு அர்த்தம்

இல்லாமல் போய் விடும் என்று உறுதியாக நம்பினார். இம்மாதிரி சமயங்களில் நடக்கும் அனல் பறக்கும் விவாதங்களின் போது, சே எப்போதும் தன் நிலையை சரியாய்எடுத்து உரைப்பதில் சிறந்து விளங்கினார்.

முதல் கட்டங்களில், அமெரிக்கா கியூபாவும் எப்படி தொடர்பு வைத்துக் கொள்ளலாம் என்று முயற்சி செய்துக் கொண்டிருந்த போது, அமெரிக்க கருவூலத் துறையைச் சேர்ந்த, ஏற்றுமதி-இறக்குமதி வங்கியின் நிர்வாக உதவித்தலைவர் வால்டர் சாயர், ஒருமுறை சேயுடன் நிதி குறித்து பேச்சுவார்த்தை நடத்த நேர்ந்தது. அவர் பின்னர் கூறினார்: “குவாராவிற்கு அந்நிய வர்த்தகம், ஏற்றுமதி-இறக்குமதி போன்ற சகல விஷயங்களும் தெரிந்திருந்தது. உண்மையில் அவரால் பொருளாதாரம் குறித்தும், நிதி குறித்தும் சரியாகப் புரிந்து கொள்ள முடிந்திருந்தது. அவர் எங்கே போய்க் கொண்டிக்கிறார் என்பதைத் துல்லியமாக அறிந்திருந்தார். நான் வேறொரு வங்கியாளருடன் பேசியது போலத்தான் உணர்ந்தேன்”

தேசிய வங்கியின் இயக்குனர் என்ற முறையில் இறக்குமதி உரிமம் வழங்கும் பொறுப்பும் சேயிடம்தான் இருந்தது. முதலில் இருந்தே அவர், கியூபாவின் சேமிப்பை அதிகரிக்கச் செய்யவும், தட்டுபாடு அபாயம் ஏற்பட்டாலும பரவாயில்லை, கியூபா தன்னிறைவு அடையவேண்டும் என்ற நோக்கத்தோடும், நாட்டின் இறக்குமதியைக் குறைக்க முயன்றார். ஒருநாள் கியூபாவின் பிரபல பல்பொருள் அங்காடியான எல் என்கன்டாவில் வேலை செய்யும் பெண்கள் சேயைச் சந்திதது, “இறக்குமதியைக் கூட்டுங்கள். இல்லையெனில் நாங்கள் எங்கள் வேலையை இழக்க நேரிடும்” என்று முறையிட்டார்கள். அதில் ஒரு பெண், “எங்களில் பலருக்கு திருமணமாகி குழந்தைகளும் இருக்கின்றன; நாங்கள் தெருவில் நிற்கிறோம்” என்று கூறினார். “நாளைக்கு இப்பிரச்சினையைத் தீர்க்கிறேன்” என்று பதிலளித்து அவர்களை அனுப்பினார். மறுநாள் அப்பெண்கள் சேயின் அலுவலகத்திற்கு வந்தனர். ஒரு பெரிய புன்னகையுடன் அவர்களை வரவேற்ற சே, “உங்கள் பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டது” என்று துவங்கியதும், அப்பெண்கள் கைத்தட்டி ஆரவாரித்தனர். ஆரவாரம் அடங்கியதும், தொடர்ந்து சே, “கியூபா இந்தப் பருவத்தில் ஏராளமான தக்காளிகளை விளைய வைத்துள்ளது. நீங்கள் அனைவரும் வயல்களுக்குச் சென்று தக்காளிகளைப் பறியுங்கள். இந்தக் கடையில் வேலைப் பார்ப்பதை விட, உயர்ந்த தரத்துடன் வாழ்க்கை நடத்தலாம்” என்று முடித்தார். அவர் எல் என்கன்டாவிற்கு இறக்குமதி உரிமம் அளிக்கவே இல்லை.

1960-ல் சே மீண்டும் ஒரு விரிவான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். இம்முறை செக்கோஸ்லோவாகியா ரஷ்யா சீனா மற்றும் கொரியாவிற்கு விஜயம் செய்தார். ஒவ்வொரு நாட்டிலிருந்தும், கியூபாவின் வளர்ச்சிக்கு உதவும் பல நல்ல வியாபார ஒப்பந்தங்களைப் பெற்று வந்தார். 1961-ல் அவர் தொழில்துறை அமைச்சரானார். அவர் அப்போது தனது நேரத்தில் பெரும்பகுதியை, தொழிலாளர்களின் கடமையும், சொந்த திருப்தியும், சமுதாயத்திற்காக கூட்டு வாழ்விற்காக உழைப்பதில்தான் இருக்கிறது, தனிப்பட்ட பொருளாசைக்கு உழைப்பதில் அல்ல என்பதை தொழிலாளர்களுக்கு பதிய வைக்க முனைவதில் செலவழித்தார்.

அவ்வருடம் ஏப்ரல் மாதத்தில், மீண்டும் இராணுவப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, பிக் விரிகுடாப் போரில், ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போரிட்டார். ஆகஸ்டில் அவர் கியூபக் குழுவிற்கு தலைமைத் தாங்கி, புன்டா டெல் எஸ்டே மாநாட்டுக்கு (உருகுவே) சென்றார். அந்த மாநாட்டில்தான் ‘முன்னேற்றத்திற்கான கூட்டு’ துவக்கப் பட்டது. அங்குதான் நான் சேயை முதலில் சந்தித்தேன்.

1961 ஆகஸ்ட் 10 அன்று, நான் ‘நியுயார்க் டைம்ஸ்’ பத்திரிக்கைக்கு அந்த நிகழ்ச்சிகளை நேரில் பார்த்து எழுதுவதற்காக, மாண்டிவீடியோவின் காரஸ்கோ சர்வதேச விமான நிலையத்திற்கு வந்திருந்தேன். அங்கு சுமார் 2000 ஃபிடல் ஆதரவாளர்கள் பொறுமையாக ஆனால் கொடியை ஆட்டிக் கொண்டு ஆர்ப்பாட்டமாக காத்திருந்தனர். அந்த அருமையான மாலைப் பொழுதில், முதலில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் கருவூலச் செயலாளர் டோகிலாஸ் டில்லான் வந்து சேர்ந்தார். அவர் வந்தவுடன் பத்திரிக்கையாளர்களாகிய நாங்கள், புகைப்படக் காரர்கள், பாதுகாவலர்கள் போன்றவர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டோம். ஆனால் மக்கள் எவரும் அருகில் வரவில்லை. டில்லானின் கறுப்பு சொகுசுக்கார் காத்துக் கொண்டிருந்த போதிலும், அவர் ஒரு சிறிய உரையைப் பேசிவிடுவது என்ற முடிவுடன் ஏற்கனவே எழுதி வைத்திருந்ததை காகிதத்தை எடுத்தார்.

அவர் பேசத் துவங்கியதும், அவரைச் பேச விடாமல், கூச்சல் எழுந்தது. தொடர்ந்து அவர் பேச முயற்சி செய்தபோது, மக்கள் கூட்டத்தில் இருந்து காட்டுக்கத்தல் எழுந்தது. என்னவென்று பார்த்தால், கியூப விமானம் ஒன்று தரையிறங்கி கொண்டிருந்தது. டில்லான் அப்படியும் விடாமல் வாசிக்க முயன்றார். எவரும் அதைச் சட்டை செய்யவில்லை. போலிஸ் வரிசைக்கு பின்னால் நின்றருந்த இளைஞர்கள் போட்ட சப்தத்தில், அவர் குரல் சிறிது தொலைவு கூட கேட்கவில்லை. சேயின் விமானம் ஒரு நிறுத்தத்திற்கு வந்தபோது, டில்லான் தனியாக நின்று கொண்டிந்தார். அமெரிக்க ஐக்கிய நாட்டு

பத்திரிக்கையாளர் கூட அவரை விட்டு விட்டு, சேயைக் காண ஓடிப் போயிருந்தனர். டில்லான் தனது உரையை மடித்து செருகிக் கொண்டு, காரில் ஏறி மறைந்தார்.

ஆலிவ் நிற சீருடையுடனும், தொப்பியுடனும் வந்த சேகுவாராவை மக்கள் கூட்டம் உற்சாகமாக கைத்தட்டி கரகோஷம் எழுப்பி ஆரவாரமாக வரவேற்றது. வழியெங்கும் அவர் கட்டித் தழுவப்பட்டார்; அவர் தனது சிறிய காருக்குப் போகும் வழியை விலக்கிக் கொண்டு போன போது, சிலர் அவரை முத்தமிட்டனர். மாநாட்டிற்கு சில நாட்களுக்கு முன் கியூப அதிகாரிகள் வழக்கமான அரசாங்கப் பணிகளுக்கு பயன் படுத்தப்படும் சொகுசுக் கார்களை வாடகைக்குப் பெற முயன்ற போது, அனைத்துமே முன்பதிவு செய்யப்பட்டு இருந்தன. அதைக் கேள்விப்பட்ட உருகுவே மக்கள் தங்களுடை வாகனங்களை கியூப விருந்தினர்களின் உபயோகத்திற்காக அளிக்க முன்வந்தனர். அப்படிப்பட்ட ஒரு காரை நோக்கிதான் சே வட்டத்தைப் பிளந்துக் கொண்டு, தன் அபிமானிகளுக்க கைகளை ஆட்டியவாறே சென்றார். இரண்டு கேள்விகள் கேட்ட என் முதுகிலும் இலேசாக தட்டியவாறு சென்று, அந்தக் காரில் ஏறி, மாநாடு நடக்கும் புன்டா டெல் எஸ்டேட்டுக்குச் சென்றார். நானும் பின் தொடர்ந்தேன். அதற்கு பிறகு ஆறு நாட்கள் கழித்து மாபெரும் 'காஸ்ட்ரோ ஆதரவு கூட்டம்' ஒன்றைப் பார்த்தேன். அதன் பிறகு, எழுதவரும் வரை என் பணி சே குவாராவைச் சுற்றி அலைந்து அவரைப் பற்றி செய்தி சேகரிப்பதாகதான் இருந்தது.

கியூப மாநாட்டு பிரதிநிதிகள் சுமாரான ஒரு ஓட்டலில் இரண்டு தளங்களில் ஆக்கிரமித்து இருந்தனர். மாநாட்டிற்கு வந்திருந்த அனைவரும் ஒருசேர அங்கேயே சாப்பிட்டனர்.

அவருக்கு தெரிந்தவர்களிடம் சே அவ்வளவு நெருக்கமாக இருந்தார் என்று கூற முடியாது. ஆனால் அவருக்கு வாழ்த்து தெரிவித்த அனைவருக்கும் அவர் இன்முகத்துடன் தன் வாழ்த்தை தெரிவித்தார். ஒட்டலை ஒட்டி இருந்த பூங்கா ஒன்றில் சேயும் அவரது தோழர்களும் நடந்து திரிந்தனர். ஒருசமயம் ஒரு முகச்சவரம் செய்து கொள்ளாத, முரடான உள்ளூர் மீனவர் ஒருவர் நேராக தன் மிதிவண்டியை சேயை நோக்கி செலுத்தி வந்தார். அப்பகுதியில் காஸ்ட்ரோ எதிர்ப்பு இயக்கத்தினர் இருப்பதை அறிந்திருந்த அவரது மெய்க்காப்பாளர்களில் ஒருவர், தனது துப்பாக்கியை எடுத்தார். ஆனால் வந்த மீனவர், "கமாஸ்டர்" என்று கத்தி, சேயை இரு கைகளாலும் கட்டித்தழுவி, "எங்களது அரசாங்கம் உங்களுக்கு எதிராக இருக்கலாம்; இந்தப் பிராந்தியத்திலுள்ள அரசாங்கங்கள் உங்களுக்கு எதிராக இருக்கலாம்; ஆனால் மக்களாகிய நாங்கள் உங்களுடன்தான் இருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு, மிகவும் நிலைகுலைந்து போயிருந்த சே நன்றி தெரிவிப்பதற்குள், வேகமாக மறைந்து விட்டார். சே தனது வாழ்க்கையிலேயே தயங்கிய ஒரு கணம் அது ஒன்றுதான்.

மாநாட்டின் நேரம் தவிர மற்ற நேரங்களில், சே பலரிடம் பேசிக் கொண்டிருந்தார். ஒருநாள் இரவு, மூன்ற அர்ஜென்டைனா பத்திரிக்கையாளர்களும், நானும் அதிகாலை 5 மணி வரை அவருடன் பேசிக் கொண்டிருந்தோம். அவர் சியாரா மாஸ்ட்ரா சாகசங்கள் பற்றி கூறிக் கொண்டிருந்தார். நான் அதற்குப் பிறகு(1962-ல்), அவரைப் பற்றி எழுதும் போது, "அவரது இராணுவ அனுபவம் பற்றி அவர் பேசும் போது, அவரது பேச்சிலிருந்து அவர் கூர்மையான நோக்குடையவர் என்பதையும், மிகவும் ஆழமானவர் என்பதையும், ஏதோ அவசரத்தில் இருந்தவரைப் போலவும் அவர் பேசுகிறார் என்பதைக் கண்டுப் பிடித்தோம். அவர் விரைவில் தான் இறந்து போய் விடுவோம் என்பதை கண்டிப்பாக நம்பியவர் போலவும், அதற்குள் அவரால் முடிந்தவற்றை வேகமாக சாதிக்க வேண்டும என்பது போலவும் செயல் படுவதைப் போல், எங்களுக்குத் தோன்றினார்" என்று குறிப்பிட்டிருந்தேன். அந்த இரவு கியூபாவில் அளிக்கப்படும் மரணத் தண்டனை பற்றியும், ரஷ்யாவுடனான உறவு பற்றியும், அமெரிக்காவிடமிருந்து விலகியது குறித்தும் கேள்வி கேட்டேன். அதற்கும் அவர் பதிலளித்தார்:

> "ரஷ்யாவின் உதவி இல்லாவிட்டால், நாங்கள் பட்டினி கிடக்க நேரிடும். ஒவ்வொரு சோசலிசப் புரட்சியும் அதற்கே உரிய ஒரு ஸ்டாலினிசக் கட்டத்தைக் கொண்டிருக்கும். அது குறைந்த காலமே நீடித்து இருக்கும் என்று நம்புவோம். நாங்கள் அமெரிக்காவின் தொழிற்சாலைகளை அரசு உடைமையாக்க வேண்டியிருந்தது. அதைச் செய்ததும், அந்த அரசு எங்களை வெட்டி விட்டது. நாங்கள் உண்மையிலேயே வெறும் கம்யூனிஸ்ட்களாக மட்டும் இருந்திருந்தால், ரஷ்யாவும் அமெரிக்காவும் சுற்றுலா வர்த்தகம் மாணவர் பரிமாற்றம் இன்னும் பல விஷயங்களில் ஒத்துழைப்பது போல, நாங்களும் ஒத்துப் போயிருக்கலாம். உண்மையில் இது மோசமானது என்றாலும்... எங்களுக்கு இதனால் பல பற்றாக்குறைகள் வரும். நாங்கள் உணவு இல்லாமல் இருக்க நேரிடும். எங்களுடைய பேருந்துகள் நின்றுவிடும். எங்களுடைய உணவை நாங்களே தயாரித்துக் கொள்ளும்வரை, எங்களது பேருந்துகளை நாங்களே கட்டும் வரை, எல்லாமே இறங்குமுகமாய்தான் இருக்கும். அதுவரை நாங்கள் தாக்குப்பிடிக்க முடிந்தால், அமெரிக்காவுக்கு அது மாபெரும் தோல்வியாக முடிந்துவிடும். ஏனெனில் எங்களது

பொருளாதாரம் உயர்ந்து வருவதை, லத்தீன் அமெரிக்கா அறிந்தால், இன்னும் பல புரட்சிகள் வெடிக்கும். அதனால்தான் எங்களை நசுக்குவது என்பது - நாங்கள் முழுமையாக தேறிவிடும் முன்பு - அமெரிக்காவுக்கு மிகவும் முககியமானதாக விளங்குகிறது”

சே பற்றி நான் கொண்டிருந்த ஒட்டு மொத்தமான கருத்து, இப்பொழுதும் அப்படியே நினைவில் நிற்கிறது. அவர் மிகமிக நேர்மையாளராக, மிகவும் அர்பணிப்பு மிகுந்தவராக, மிகுந்த மனிதநேயம் கொண்டிருந்தவராக விளங்கினார். ஆனால் அவரிடம் இருந்த ஒரு வெட்கம், எல்லோரையும் அருகில் நெருங்க விடாமல் வைத்துக் கொண்டிருந்த ஒரு தூரம், அவரிடம் குடிக்கொண்டிருந்த உன்னதமான குணங்களை கண்டுப்பிடிப்பதற்கு சிரமத்தை அளித்தன. தனது தேசத்தை வெளிப் படுத்துவதில் கூட, அவருக்குச் சிரமம் இருந்தது. அவர் தனது பொற்றோருக்குக் கூட, தன்னை வெளிப்படுத்துவதில் சிரமம் கொண்டிருந்தார் என்பது, அவர் தனது பெற்றோருக்கு எழுதிய கடைசிக் கடிதத்தின் மூலம் தெரிகிறது. எப்படி இருந்த போதிலும், கம்யூனிஸ்ட் என்ற பதம் மரபு வழியாக பயன்படுத்தப்படும் அர்த்தத்தில், அவர் ஒரு கம்யூனிஸ்ட் அல்ல என்பதில், நான் உறுதியாக உள்ளேன். அவர் சோசலிச மனிதனிடம் நம்பிக்கை வைத்திருந்தார். அவர் இந்த இரண்டு குறிக்கோள்களையும் மனிதன் சாதித்து விடுவான் என மனப்பூர்வமாய் நம்பினார். எந்த அந்நிய சக்திகளிடம் இருந்தும் உத்தரவுகளைப் பெறாமல், இவைகளை உண்மையாக்கும் முயற்சியில் தன்னை அவர் அர்பணித்திருந்தார். அத்தகைய உத்தரவுகளைப் பெற்று பணியாற்றுபவர்களை வெறுத்து ஒதுக்கினார். ஒருநாள் அவர் தங்கியிருந்த ஓட்டலுக்கு இரு அர்ஜென்டைன கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் வந்து, எங்களுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களை நோக்கி சே, “ஹேய், என்ன இங்கு எதிர்புரட்சியை தொடங்க வந்திருக்கிறீர்களா?” என்று கிண்டல் செய்தார். நான் அவரின் அந்த வார்த்தைகளை எனது லத்தீன் அமெரிக்க புத்தகத்தில் உபயோகித்தப் போது(1963), சேயை ஒரு மரபுவழி கம்யூனிஸ்டாக பார்த்து வந்த விமர்சகர்கள் அதை ஏளனம் செய்தனர். இப்போது கட்சிக்காரர்களுடன் அவர் போடும் சண்டை பிரபலமாகி விட்டபடியால், அதை எவரும் நம்ப மறுக்க மாட்டார்கள்.

1961-ல் புன்டா டெல் எஸ்டேக்கில் சேயை சந்தித்த பிறகு, 1964 கோடையில் நான் மீண்டும் அவரை சந்திததற்கும் இடைப்பட்டக் காலத்தில், சே தொடர்ந்து தனது சக்தியை எல்லாம் கியூப சோசலிச மனிதனை உருவாக்குவதிலும், கியூப சோசலிசப் பொருளாதாரத்தை அமைத்தெடுக்கும் பணியிலும் முழுமையாக செலவிட்டுக் கொண்டிருந்தார். 1961-ல் சோவியத் யூனியனுக்கும் 1963-ல் சுவிட்சர்லாந்திற்கும், 1964-ல் இருமுறை அல்ஜீயாவிற்கும் பயணம் செய்தார். இக்காலக்கட்டம் முழுவதும் அவர் அதிகார வர்க்க மனப்பான்மையை எதிர்த்து, கட்சியின் இறுகிய தன்மையை எதிர்த்து, சாதிகளை பிரிவினைகளை எதிர்த்து சோர்வடையாத ஒரு பெரும் போரையே நடத்திக் கொண்டிருந்தார்.

1964 ஜுலையில் நான் ‘நியூஸ் விக்’ பத்திரிக்கையாளராக கியூபாவிற்கு விஜயம் செய்து, சேயுடனான எனது உறவை புதுபித்துக் கொண்டேன். தனது புரட்சி தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்த அல்ஜீரியா நாட்டு தூதரகத்தில் நான் சேயை இரவு சந்தித்தேன். நாங்கள் அனைத்து புரட்சிகளின் போதும் ஏற்படும் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து குறிப்பாக கியூபாவின் சந்திக்க நேர்ந்தவை பற்றி பேசிக் கொண்டிருந்தோம். திடீரென்ற பேச்சை நிறுத்திவிட்ட அவர், “ஆமாம், நீங்கள் எந்த பத்திரிக்கைக்காக வந்திருக்கிறீர்கள்” என்று கேட்டார்.

நான், “நியூஸ் வீக்” என்றேன்.

“ஓ அப்படியானால் அந்த முறையில் நான் உங்களிடம் பேச மாட்டேன்” என்று கூறிவிட்டு என்னிடம் இருந்து எழுந்து போவதாக பாசாங்கு காட்டினார். சிறிது தூரம் போய் விட்டு, திரும்பி வந்து, “ஆனால் நீங்கள் என்னோடு பேச விரும்பினால், அது நம்மோடு மட்டுமே இருக்குமானால், நாம் நமதுப் பேச்சைத் தொடரலாம்” என்று கூறினார். இதன் மூலம் அவர் இந்தப் பேச்சு, பத்திரிக்கையில் வரக்கூடாது என்பதை உணர்த்தினார். இதன் மூலம் நாங்கள் இருவரும் பேச்சின் போது, சகஜமாக விட்டுக் கொடுத்து, பேச வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டினார். இதன் மூலம் நான் அவரிடம் இருந்து அதிகமாக உண்மைகளைப் பிடுங்க முயற்சிப்பதோ, அல்லது அவர் என்னைக் கவர வேண்டும என்ற நோக்கில் பேசுவதோ இல்லாமல் இருக்க வேண்டும் என்பதை கோடிட்டு காட்டினார். உடனே நான் அதற்கு ஒப்புக்கொண்டேன். அடுத்த மூன்று வாரங்களுக்கு, தொடர்ந்தார் போல், நீண்ட நேரம் அவரிடம் பேசும் சில வாய்ப்புகள் கிடைத்தன; நான் குறிப்புகள் எடுத்துக் கொள்ளவில்லை. அவற்றை மூன்று வருடங்களுக்குப் பிறகு, எனது ஞாபகத்தில் இருந்து, தோண்டி எடுத்து தொகுத்துள்ளேன். ஆனால் அந்த தொகுப்பில் அவரைக் குறித்த எனது அவதானிப்பும், அவரது அக்கறைப்பூர்வமான கருத்துகளையும் தெளிவாக நினைவுக் கூர்ந்திருந்தேன்.

அவர் சில அசைக்க முடியாத நம்பிக்கைளுக்கு வந்திருந்தார்: அமெரிக்கா தனது ஏகாதிபத்திய கனவுகளை மாற்றிக் கொள்ளவோ அல்லது கைவிடவோ போவது இல்லை; ஆகவே எந்த வளர்ச்சியடையாத நாட்டினால் ஐக்கிய அமெரிக்காவுக்கு ஆதாயம் இருக்குமானால், அந்த நாடுகளை அதன் சொந்தப் போக்கில் வளர அமெரிக்கா அனுமதிக்காது. எந்த வளர்ச்சியடையாத நாடுகளிலாவது, அமெரிக்காவுடன் தொழிற் போட்டியிடும் அளவுக்கு தொழிற்சாலைகள் ஏற்படுவதாய் இருந்தால் அதை அமெரிக்கா அனுமதிக்காது. எந்த வளர்ச்சியடையாத நாடாவது, சிறிதும் ஊழலற்ற ஒரு நிர்வாக அமைப்பை பெற்று, அதன் மூலம் நன்மைகளை அனுபவிப்பதையோ, அல்லது தனது சமூகத்தில் கடைநிலையில் உள்ளவர்களை தட்டி எழுப்பி உயர்நிலைக்கு கொண்டு வருவதையோ அமெரிக்கா அனுமதிக்காது. உலகில் உள்ள அனைத்து வளர்ச்சியடையாத நாடுகளின் உள்ளினைந்த ஒரு புரட்சிகர வளர்ச்சியோடு சேர்ந்து பிணைக்கப்படாத வரை, ஒரு தனிப்பட்ட புரட்சி வெற்றி பெறாது என்பதை அவர் உறுதியாக நம்பினார் என்றே நான் எண்ணுகிறேன். அவரைப் பொறுத்த வரை, வழக்கமான வாஷிங்டன்-மாஸ்கோ 'சமதான சகவாழ்வு'ப் பாதை ஒரு சமதான விட்டுக்கொடுப்புதான். புரட்சிகர கொள்கைகளில் ஒவ்வொரு சமாதான விட்டுக் கொடுத்தலும் புரட்சியையே அழித்துவிடும் என்று அவர் உறுதியாக இருந்தார்.

லெனின் பற்றிய எங்களது விவாதத்தின் போது, அந்த மாபெரும் புரட்சியாளரை கொஞ்சம் பரிதாபகரமானவராக பார்த்தார் என்பது புரிந்தது. பொருள் ஆதாயங்களின் மீது கட்டப்படும் எந்த ஒரு சமுதாயமும், ஒழுக்கரீதியாக உடைந்து நொறுங்கும் என்பதை நன்கு அறிந்த போதிலும், லெனின் புதிய பொருளாதார கொள்கையை நிறுவ வேண்டியவராக இருந்தார் என்று கருதினார். ரஷ்யாவில் அந்தப் புதிய பொளாதாரக் கொள்கை வெற்றிப் பெற்று இருந்த போதிலும், அது பெரும் ஒழுக்கக்கேட்டை விலையாகக் கொடுத்து, மக்களுக்கு பெரும் பொருள் ஆதாயத்தைப் பெற்றுத் தந்துள்ளது. அத்துடன் அது புதிய சோசலிச மனிதனை உவாக்குவதற்குப் பதிலாய், பெரும் அதிகாரமுடைய அரசைக் கட்டி எழுப்பியது. சே, இதைச் சொல்லும் போது, ஒரு போதும் லெனினை குற்றம் சாட்டவில்லை. ஆனால் அவரது புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவு குறித்து வருந்தினார். பெரும் அதிகாரமுடைய ஒரு அரசைக் கட்டி எழுப்புவதில் அவர் விருப்பம் இல்லாதவராக இருந்தார் என்றே எனக்குப் பட்டது. தங்களுடைய தனிப்பட்ட உத்வேகங்களின் மூலமாக, அனைத்து மக்களும் கூட்டு ஊக்கத்தை பகிர்ந்துக் கொள்ளும் ஒரு சமுதாயத்தை கட்டி எழுபுவதில்தான் அவர் விருப்பம் கொண்டிருந்தார். கூட்டுமுயற்சிக்கு தன்னை முழுமையாக ஒப்படைப்பதுதான் தனிநபர்களின் மிகச் சிறந்த வெளிப்பாடாக இருக்க முடியும் என்ற வகையில், அவர் ஒரு தூய தனிநபர்வாதி; ஒரு மார்க்சிய-லெனினிய சிந்தனாவாதியின் இப்படிப்பட்ட விவாதம் அவருடைய 'புரட்சிகர மருந்து' உரையில் வெளிப்படுகிறது.

அனைத்து அமைப்புகளும் சமுதாயக் குறிக்கோள் நோக்கி வேலை செய்ய வேண்டும் என்பதை 1964களில் சே புரிந்துக் கொண்டார். தேசிய வங்கி கூட வெறும் நிதி வளர்ச்சிக்கான ஒரு கருவியாக மட்டும் இருக்க முடியாது என்றும், ஒரு புரட்சிகர நிறுவனம் என்ற முறையில் புதிய சமுதாயத்திற்கான சமுதாயத் தேவைகளுக்காக அது உழைக்க வேண்டும் எனவும் அவர் கருதினார். அது ஒரு புரட்சிகர நிறுவனம் என்ற முறையில், புதிய சமூகத்தின் சமூகத்தேவைகளுக்காக அது உழைக்க வேண்டும். இது சம்பந்தமாக அவர் மரபான மார்க்சிய பொருளாதார நிபுணர்களுடன் நடத்திய விவாதம், சோசலிச சமுதாயமற்ற உலகில் உற்று நோக்கப்படாமல் போய்விட்டது. ஆனால் கியூபாவில் கோட்பாட்டு ரீதியான விவாதங்களிலேயே மிகவும் முக்கியமானதாக அம்சமாக இதுதான் விளங்குகிறது. இதில் ஃபிடல் சேயுடன் முழுமையாக ஒத்துப் போனார்.

சேக்கு அந்த விவாதம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. ஏனெனில் கியூப சோசலிச பொருளாதாரக் கட்டமைப்பின், அதன் முழுப்போக்கையும் இந்த புரிதல் பாதிக்கும். சோசலிச மனிதனை உருவாக்க, நமது முயற்சிகள் அனைத்தும் செலுத்தப்படும் பட்சத்தில் 'மதிப்புக் கோட்பாடு' (தேவையையும் கிடைப்பையும் சார்ந்துள்ள) தவறானதாகும்; ஒரு பொருளின் மதிப்பு என்பது அதன் சந்தை மதிப்பைப் பொறுத்தல்லாது, அதன் சமுதாய மற்றும் ஒழுக்க மதிப்பைப் பொறுத்து இருக்க வேண்டும். அதே போல் சோசலிச தரத்தைக் காட்டிலும், சோசலிச மனிதன் முக்கியமானவனாக இருக்கும் பட்சத்தில், ஒருநிறுவனத்தின் மதிப்பு அதனுடைய நிதி வெற்றியைப் பொறுத்தாக இல்லாமல், அதன் செயல்திட்பத்தை மற்றும் சமுதாயக் கடப்பாடையும் பொறுத்து அமைய வேண்டும் என்று அவர் வாதாடினார். தேசிய வங்கி நாட்டிலுள்ள நிறுவனங்களின் வரவு- செலவு மதிப்பீடுகளை கணக்கிடும் போது, அதன் சமூக மதிப்பை எடுத்துக் கொண்டே தீர்மானிக்க வேண்டும் என சே கருதினார். சே தான் கியூபாவில் வங்கியை அப்படித்தான் நடத்தினார். அவர் அரசு நிறுவனங்களுக்கு வட்டி வாங்கிக் கொண்டு, கடன் கொடுக்கவில்லை. அப்படி செய்தால்(ரஷ்யாவில் உள்ளது போல),

வங்கியின் மேலாளர்கள் நிதி வருமானத்தை கொண்டு வருவதில் ஆர்வமாய் உழைக்க ஆரம்பித்து விடுவார்கள். விலைவாசிகள், தியாகங்கள், இறக்குமதிக் கட்டுபாடுகள், புதுத் தொழிற்சாலைகள், மின்மயப்படுத்துதல், செய்தித் தொடர்புகள் போன்றவற்றில் சேயின் மனப்பான்மை அவரது அடிப்படையான கொள்கையான - நீங்கள் எவ்வளவுதான் புணர்நிர்மானம் செய்தாலும், ஒரு புதிய சோசலிச மனிதனை உருவாக்காத வரை, அவனது மனப்பான்மையை மாற்றாத வரை, அவையெல்லாம் பேராசை இச்சை தனிமனித குறிக்கோளை அடைதல் என்பவற்றின் மீதுதான் அமையும் - என்பதின் மீதுதான் அமைந்திருந்தது.

ஆகவே சேயைப் பொறுத்த வரை, புரட்சி மற்றும் ஆயுதப்போட்டத்தை அடுத்து செய்ய வேண்டிய செயல்பாடுகள் எல்லாம், தூய்மையான 'அன்புமயமான தலைமுறை'யை (புதிய இடதுசாரிகளின் சொல்லை உபயோகிப்போமானால்) உருவாக்கி முன்னேற்றிக் கொண்டு செல்வதின் மூலம்தான் நியாயம் பெறுகிறது.

எஜமானனுக்கும் அடிமைக்கும் இடையே அன்பு நிலவவே முடியாது என்பதை நான் சந்தித்த எவரையும் விட, சே தெளிவாகப் புரிந்து வைத்திருந்தார். முதலில் அத்தகைய உறவுகள் அழித்தொழிக்கப்பட வேண்டும் என்பதை அவர் அறிந்திருந்தார். அப்படி அழிக்கப்பட்ட பிறகு, உடனே அன்பு என்ற புதிய உறவு தானே பொத்துக் கொண்டு அதுவாக வராது. அன்பு மேலேயுள்ள நிறுவனங்களில் இருந்து, கீழே வழிந்து வராது. அது வேரிலிருந்து, மக்களிடமிருந்து, கீழேயிருப்பவர்களிடம் இருந்து வர வேண்டும். சே கூறுவார், அன்பு என்பது ஏதோ க்ஷணத்தில் அதிசயமாக நடக்கும் ஒரு மின்னல் வெட்டு அல்ல. அது ஒரு முயற்சி. யாராவது அதற்காக படிபடியாக உழைத்து உருவாக்கப்பட வேண்டிய முயற்சிதான் அன்பு ஆகும்.

மக்கள் தங்கள் அன்பை தட்டி எழுப்ப பணிபுரியத் துவங்கும் முன், மற்றவர்கள் சந்தோசத்தைக் கண்டு தாங்கள் சந்தோசம் அடையும் முன், மற்றவர்களை திருப்தி அடைய வைத்து தாங்கள் திருப்தி அடையும் முன், அவர்கள் தங்களுக்குள் கருத்து பரிமாற்றம் செய்துக் கொள்பவர்களாய் இருக்க வேண்டும். இந்தப் பரிமாற்றம் நடைபெற வேண்டுமென்றால், அவர்கள் சமமானவர்களாக இருக்க வேண்டும். ஏழை மனிதனிடம் அன்பு செலுத்தும் பணக்காரன் உண்மையில் அளிப்பது அன்பல்ல; பிச்சை. ஆகவே அன்புமயமான தலைமுறையை ஏற்படுத்த விரும்புபவர்கள், தற்போதுள்ள நமக்குத் தெரிந்த ஏஜமானர்களின் பேராசையால் வழிநடத்தப்படும், வெறுப்புமயமான தலைமுறையை அழித்தொழிக்க வேண்டும். அதனால்தான் இந்தப் பேராசை எஜமானர்களை அழிப்பதற்கு தனது உதவியை அளிக்க, சே கியூபாவை விட்டு வெளியேறி எங்கோ சென்றுள்ளார் என்று நான் கேள்விப்பட்டதும், என்னால் அதைப் புரிந்துக் கொள்ள முடிந்தது. 1965களில், ஏற்கனவே உருவாகி இருந்த புதிய மனிதனால், இன்னும் பல புதிய மனிதர்கள் உருவாக்கப்பட்டுக் கொண்டே இருந்தது. ஆகவே அங்கு புதிய சமுதாயத்திற்கான கடப்பாடு முழுமையாக இருந்தது.

முப்பது வயதிற்கு மேற்பட்ட கியூப மக்கள் கியூபப் புரட்சிக்கு ஏற்ப தங்களை தகவமைத்துக் கொள்ள சற்று சிரமப்பட்டார்கள் அல்லது இன்னும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மைதான். அதை யாரும் இன்னும் மறுக்க முடியாது. ஆனால் புதிய தலைமுறையினருக்கு அந்த கஷ்டம் இல்லை. புதிய தலைமுறையினர் நேரடியாக போய், புதிய சோசலிச மனிதனாக அமைந்து, நம்மை வழிநடத்தி செல்வார்கள். சே எதிர்பார்த்தது போல புதிய தலைமுறையினர் தங்களை அதில் அவர்களே மூழ்கடித்துக் கொள்வார்கள். நிச்சயமான, திரும்பவே முடியாத அளவுக்கு சோசலிச மனிதன் உருவாக்கப்படுதல் அங்கு நடந்து வருகிறது. ஆகவே ஒரு ஆழமான மனநிறைவுடனும் திருப்தியுடனும், புதிய உலகத்தைப் படைக்க அவர் கியூபாவை விட்டு வெளியேறினார்.

1965-ல் அவர் கியூபாவை விட்டு வெளியேறி, முதலில் வியட்நாம் காங்கோ பின்னர் லத்தீன் அமெரிக்காவிலுள்ள பல இடங்களுக்குச் சென்றார். ஒருசமயம் கவுதமாலாவிலும் இன்னொரு சமயம் பொலியாவிலும் அவர் இருந்திருக்கிறார். அவர் கண்டிப்பாக பெருவிற்கும் போயிருந்திருக்கிறார். கொலமபியாவுக்கும் கூட அவர் போய் இருந்திருக்கலாம். 1966 பிப்ரவரி முதல் தேதி அன்று, அவரது மகளின் பத்தாவது பிறந்த நாளுக்கு லத்தின் அமெரிக்காவில் எங்கோ ஓரிடத்தில் இருந்து எழுதுவதாக குறிப்பிட்டு, சே ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர், "நான் உன்னை விட்டு வெகுதூரத்தில் இருக்கிறேன் என்பதை நீ உணர வேண்டும். நமது எதிரிகளுடனான போராட்டத்தில் என்னால் முடிந்தவற்றை எல்லாம் செய்துக் கொண்டு, இன்னும் நீண்ட காலத்திற்கு உன்னை விட்டு பிரிந்துதான் இருப்பேன் என்பதையும் நீ உணர வேண்டும். நான் செய்துக் கொண்டிருப்பது ஒன்றும் பெரிய விஷயம் இல்லையென்றாலும், நான் உன்னைக் குறித்து பெருயையாய் இருப்பது போல நீயும் என்னைக் குறித்து பெருமைப் பட வேண்டும். இன்னும் பல வருடப் போராட்டம் முன்னால் இருப்பதை நீ ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். நீ வளர்ந்து பெரிய பெண்ணானவுடன், நீயும் இதில் பங்கேற்க

www.padippakam.com

வேண்டும். அதுவரை நீ உன்னை நன்றாக தயார் செய்துக் கொள்ள வேண்டும். ஒரு சிறந்த புரட்சிவாதியாக இரு. உன் வயதில் அதற்கு அர்த்தம், நிறைய விஷயங்களைக் கற்றுக் கொள்வதும், எப்போதும் நியாயமான காரணங்களுக்காக ஆதரவு தரத் தயாராக இருப்பதும்தான்..."

1967 ஆகஸ்டில் அவர் அர்ஜென்டைனாவில் இருந்திருக்கிறார். எனக்கு 1960-ல் இருந்தே தெரிந்த அவரது நண்பர்கள், அங்கு 1967-ல் அவரைப் பார்த்ததாகக் கூறினார்கள். பின்னர் அவர் பொலியாவிற்குச் சென்றார், அல்லது பொலியாவில் இருந்து திரும்பி வந்தார். அங்கு போராட்டத்தை அவர் அடிமட்டத்தில் இருந்து துவங்கினார். அவரது பொலிவியன் நாட்குறிப்பில் இருந்தும், நான் தொடர்பு கொண்ட அவரது நண்பர்களிடம் இருந்தும், சே பொலிவியாவில் புரட்சி மிக மெதுவாக முன்னேறுவதைக் கண்டு ஓரளவு எமாற்றம் அடைந்தவராக காணப்பட்டார் என்பது தெளிவாகத் தெரிகிறது. சே அவசரகதியான மனிதர் ஆனதாலும், தான் சீக்கிரம் இறந்து போவோம் என்பதை 1961-லேயே அறிந்து வைத்திருந்ததாலும, அவசர அவசரமாய் பணியாற்றினார்.

ஃபிடல் சுட்டிக் காட்டியது போல, சே எப்போதுமே தனது சொந்தப் பாதுகாப்பு குறித்து அக்கறையற்று இருந்தது உண்மைதான். ஆனால் அவருக்கு தனிப்பட்ட சில தடைக்கற்களும் இருந்தன. அவரது ஆஸ்துமா மட்டுமல்ல; கொசுக்கடியும் அவருக்கு ஒத்துக்கொள்ளாமல் இருந்தது. கடித்த இடங்களில் பெரிய கொட்டைப் பாக்கு அளவிற்கு வீங்கி விடும். மேலும் ஃபிடல் குறிப்பிட்டுள்ளது போல, தான் ஒன்றும் வீழ்த்தவே முடியாதவனல்ல, தனக்கும் இறப்பு வரும், ஆனால் போராட்டத்திற்கான நியாயங்கள் தொடரும் என்பதில் சே முழுநம்பிக்கை கொண்டிருந்தார் என்பதும் உண்மைதான். மேலும் ஃபிடல் கூறியது போல், அவரை ஒத்த அனுபவம் வாய்ந்தவரகள், தகுதிப்படைத்தவர்கள், அவரையொத்த தனித்தன்மை படைத்தவர்கள் ரொம்ப ஆபூர்வம். அத்தகைய மனிதர்கள் இதைப் போன்ற சிறிய அவ்வளவு முக்கியத்துவமில்லாத மோதல்களில் இறங்கக் கூடாது என்பதுவும் உண்மை. ஆனால் சே இறுதிவரை, வரலாறு என்பது தனிமனிதர்களால் இல்லாமல், பலரால் உருவாக்கப்படுகிறது என்பதை உறுதியாக நம்பி வந்தார்.

ஆனால் சே பொலியாவில் ஒரு சிறு மோதலில் காயம் ஏற்பட்டு, உயிருடன் பிடிக்கப் பட்டார். அதற்கு மறுநாள் நெஞ்சில் துப்பாக்கி குண்டைச் செலுத்தி அவர் கொலைச் செய்யப்பட்டார் என்றும், அவர் வழியில் இறந்தார் என்ற வேறொரு செய்தி முரண்பட்டும் வருகிறது. எப்படியோ இந்த உண்மை நமக்கு கடைசிவரை தெரியப் போவதில்லை. ஆனால் ஒன்று மட்டும் தெளிவு, அவர் உயிருடன் இருக்கும் போது இருந்ததை விட, அதிகமாக இன்று அவர் வாழ்ந்து வருகிறார். ஏனெனில் அவர் சமுதாயப்புரட்சி வரலாற்றிலேயே உச்சிக்கு படிப்படியாக உயர்ந்து சென்று, அதைத் தானாகவே துச்சமாக மதித்து உதறி எறிந்துவிட்டு மீண்டும் அடித்தளத்திலிருந்து அனைத்தையும் துவக்கிய ஒரே மனிதர் அவர்தான். அதனால் அவர் சமுதாயப்புரட்சியின் கரிபால்டியாக விளங்குகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, தோல்வி என்பது எப்போதும் இறுதியானதல்ல என்பதையும், மக்களுக்காக ஒருவன் போராடும் போது, அவன் சென்ற பிறகும், அப்போராட்டத்தை வேறு ஒருவன் தொடருவான் என்பதையும் உலகிற்கு அவர் காட்டிச் சொன்றுள்ளார்.

அவர் கொல்லப்பட்ட போது, நியுயார்க் டைம்ஸ் பொலிவியா கொரில்லா யுத்தம் முற்றுப் பெற்று விட்டது என்றும், இன்னும் அழித்தொழிக்கப்பட வேண்டியது, பிரிந்து ஓடிவிட்ட ஆறுபேர் மட்டும்தான் என்றும் செய்தி வெளியிட்டிருந்தது. அதையடுத்த ஒரு மாதத்தில் மட்டும், பொலிவிய கொரில்லாக்களுடன் குறைந்தது முப்பது மோதல்கள் ஏற்பட்டதாக, பெரும்பாலும் ராய்ட்டர் செய்தி நிறுவனத்தால் செய்தி வெளியிடப் பட்டிருந்தது. முன்னுதாணங்கள் முன்னேற்றத்தை உருவாக்கும் அது தானாகவே வேகமெடுக்க உதவும் என்று விளக்கும் எந்தக் கோட்பாட்டைக் காட்டிலும், சே அதிகமாக தனது செயல்கள் மூலம் விளக்கிவிட்டார். இன்று ஹனாயில், காங்கோவில், அல்ஜீரியாவில், தான்சேனியாவில், லத்தீன் அமெரிக்காவிலுள்ள அனைத்து நாடுகளிலும், அமெரிக்காவின் சேரிகளில், அவர் ஒரு காவியத்தலைவர். மாணவ சாத்வீக இணைப்புக்குழுவைச் சார்ந்து ஜீலியஸ் லென்டர் குறிப்பிடுவது போல, "சே இறந்து விட்டார் என்பது முக்கியமல்ல. அவர் நம்முடன் வாழ்ந்தார் என்பதுதான் முக்கியம். அதுதான் நம் ஒவ்வொருவருக்கும் முக்கியமாக உள்ளது. சேயை அழிப்பதற்கு, அவர்கள் நம் அனைவரையும் - இழப்பதற்கு இனி வேறு எதுவும் இல்லாத நம் அனைவரையும் - அழிக்க வேண்டும். அது இயலாத காரியம்"

வரலாற்று பாடப்புத்தகங்களில், காலப்போக்கில் மார்க்சிய - லெனினிசத்திற்கு பெரும் பங்களிப்பு செய்தவர்களில் சிறந்தவர்களில் ஒருவராக சே பொறிக்கப்படுவார். நான் 'காலப்போக்கில்' என்று ஏன் கூறுகிறேன் என்றால், இப்புத்தகத்திலுள்ள எழுத்துகளுக்கும் பேச்சுகளுக்கும் ஒரு முக்கியமான வரலாற்று மதிப்பு இருக்கிறது. இதன் மூலம், மார்க்சிய-லெனினிய சிந்தனையாளர்கள் குறித்த வரலாற்றில், இன்னும் இருபது வருடங்களில், சே ஒரு சிறந்த தத்துவ ஆசானாய் நோக்கப்படுவார் என

படிப்பகம்

நம்புகிறேன். இன்றைய பிரச்சினைகளை சே சந்தித்தது போல நேர்மையாகவும் முழுமையாகவும் சந்திக்க இப்புத்தகம் மனிதநேய ஆர்வலர்களுக்கு உதவும் என்றும் நம்புகிறேன்.

சே எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு செயல்வீரனாக விளங்கினார்; ஆழமாகச் சிந்தித்தார். அவருக்கு கிடைத்த அனைத்தையும் படித்தார்; ஒவ்வொரு பிரச்சினையையும் ஆழமாக அணுகினார். ஃபிடல் குறிப்பிட்டது போல, “அவர் ஒரு புரட்சிகர கம்யூனிஸ்ட்; உண்மையான கம்யூனிஸ்ட்; ஒழுக்கத்திலும் கட்டுப்பாட்டிலும் அவருக்கு கரை கடந்த நம்பிக்கை இருந்தது. மனிதன் மனசாட்சியில் அவர் அளவற்ற நம்பிக்கை வைத்திருந்தார். அவர் மனித சமுதாயத்தில் கம்யூனிசம் கட்டி எழுப்பப் படுவதற்கான அடிப்படை விசையாக, மனிதனின் நல்லொழுக்கம் விளங்கும் என்பதை முழுமையான தெளிவுடன் கண்டார் என்று நாம் கூற வேண்டும்” ஆமாம், சே ஒரு முதன்மையாக செயல்வீரர்; புரட்சிகர நடவடிக்கையாளர்.

அதுதான் அவரை கவுதமாலாவிற்கு, கியூபாவிற்கு, பொலியாவிற்கு இட்டுச் சென்றது. இன்றைய புதிய சேக்களை, இந்த நம்பிக்கைகளும் செயல்பாடுகளும்தான் உருவாக்கும்; மனிதன் மேல் நம்பிக்கை வைத்திருக்கும் மனிதனை, ஒருவரை மற்றவர் மதிக்கும் நாகரிகமாக சமூகத்தை, முழுவதும் வளர்ந்த சமமான மனிதர்கள் தங்களுக்குள் கருத்துப் பரிமாற்றம் செய்துக் கொள்ளும் சமூகத்தை உருவாக்க முடியும் என்பதை இந்த நம்பிக்கைகளும், செயல்பாடுகளும்தான் உருவாக்குகின்றன. மனிதர்கள் ‘இதை நாம் செய்ய முடியும்’ என்ற நம்பிக்கையுடன்தான் எப்போதும் இருக்கிறார்கள். வெற்றி நமதே!!

# புரட்சிகரமான மருந்து

*[புரட்சிக்கரமான மனிதாபிமானம் குறித்து மிகவும் நெகிழ்வுடன் சே ஆற்றிய உரையாகும் இது. மருத்துவப்பயிற்சி பெற்ற ஒருவரை உதாரணமாக எடுத்துக் கொண்டு, ஒரு கூட்டுச்சமூகத்தில் தனிமனிதனின் பாத்திரத்தை இச்சொற்பொழிவில் விளக்குகிறார் சே. மனித சமூகத்தின் மேல் சே கொண்டுள்ள அளவு கடந்த கடப்பாட்டுக்கு உதாரணமாய் இவ்வுரை திகழ்கிறது]*

கியூபமக்கள் தாங்கள் சுதந்திரம் அடைந்ததோடு, புரட்சிகரமான சட்டங்களை இயற்றி, முன்னேற்றத்தை ஏற்படுத்தி கொண்டு, புரட்சிப்பாதையில் பீடுநடைப் போட்டு முன்னேறி செல்கின்றார்கள். இந்த முன்னேற்றத்தை மக்கள் தினசரி கொண்டாடியும் மகிழ்கிறார்கள். அந்த கொண்டாட்டத்தின் பகுதியாய் இந்தச் சிறிய விழாவும் இருப்பதால், நான் இந்த விழாவை முக்கியமான ஒன்றாகக் கருதுகிறேன்.

நான் எனது வாழ்க்கையை ஒரு மருத்துவராகத் துவங்கினேன் என்பது, அநேகமாக எல்லோருக்கும் தெரிந்திருக்கும். நான் ஒரு மருத்துவராக மருத்துவக்கல்வியை கற்கத் துவங்கிய போது, இன்று புரட்சியாளன் என்ற முறையில் என்னிடமுள்ள பல கருத்துகள், அன்று இல்லாமலிருந்தது. எல்லோரையும் போல நானும் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும், பிரபலமான மருத்துவ ஆராய்ச்சி அறிவியலாளனாக வரவேண்டும் எனக் கனவு கண்டேன். இரவு பகலாய் உழைத்து மனித சமுதாயத்திற்கு உபயோகமாக இருக்கும் எதாவது ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டும் எனவும், அதேசமயம் எனக்கும் தனிப்பட்ட முறையில் வெற்றியும் புகழும் கிடைக்க வேண்டும் எனவும் விரும்பினேன். நானும் நம் எல்லோரையும் போல, புறச்சூழலின் குழந்தையாய்தான் இருந்தேன்.

பட்டம் பெற்றவுடன், சில குறிப்பிட்ட சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாகவும், என்னுடைய இயற்கையான இயல்பு காரணமாயும், அமெரிக்கா முழுவதும் சுற்றினேன்; இந்த ஊர்சுற்றலின் மூலம், தென்அமெரிக்க நாடுகள் குறித்து எனக்குள் பரிச்சயப் படுத்திக் கொண்டேன். ஹாய்ட்டி மற்றும் சான்டாடோமிங்கோ தவிர, ஓரளவிற்கு எல்லா லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் நான் சென்றிருந்தேன்.

முதலில் மாணவனாகவும், பின்னர் மருத்துவராகவும், நான் மேற்கொண்ட பயணங்கள், எனக்கு ஏழ்மையை, பசியை, வியாதியை மிக நெருக்கமான கோணத்தில் பார்க்கும் வாய்ப்பை ஏற்படுத்தி தந்தது. பணம் இல்லாததால், தனது குழந்தையின் வியாதியைக் குணப்படுத்த முடியாத பெற்றோரின் நிலையைக் கண்டேன்; தொடர்ச்சியான பசியாலும் தண்டனையாலும் மருண்ட நிலையில் உள்ள ஒரு தந்தை, தன் மகனின் இழப்பை ஒரு முக்கியத்துவமற்ற விபத்தாக கருதும் அளவிற்கு போய் விட்ட நிலையைக் கூட நேரில் பார்த்தேன்; நம் தென்அமெரிக்க தாயகத்தில் உள்ள கீழ்மட்ட வர்க்கம் சீரழிவுகளை இப்படி அடிக்கடி சந்திப்பதை, அருகில் இருந்து பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அச்சமயத்தில்தான், ஒரு பிரபல அறிவியலறிஞராக வருவதைப் போன்றே, அறிவியலுக்கு ஒரு முக்கிய பங்களிப்பை ஆற்றுவதைப் போன்றே, அதே அளவு முக்கியத்துவம் வாய்ந்த வேறு பல விஷயங்களும் இந்த உலகத்தில் இருக்கிறது என்பதை நான் உணர துவங்கினேன். நான் இந்த மக்களுக்காக ஏதாவது செய்ய வேண்டுமென நினைத்தேன்.

இருந்தாலும், நம் எல்லோரையும் போலவே, நானும் புறச்சூழலின் குழந்தையாய்தான் தொடர்ந்து இருந்து வந்தேன். என் சொந்த முயற்சியிலேயே அவர்களுக்கு உதவ விரும்பினேன். ஏற்கனவே ஏராளமாக பயணம் செய்த நான், அச்சமயத்தில் அர்பென்ஸ் அரசாட்சி செய்து வந்த கவுதமாலாவிற்கு சென்று இருந்தேன். அப்போது ஒரு புரட்சிகர மருத்துவரின் நடத்தை எப்படி இருக்க வேண்டும் என்ற வழிக்காட்டு குறிப்புகளை நான் உருவாக்கி கொண்டிருந்தேன். ஒரு புரட்சிகர மருத்துவராக இருப்பதற்கு என்னென்ன தேவை என்பதை நான் ஆராய்ந்து கொண்டிருந்தேன்.

ஆனால் அப்போது கவுதமாலாவில் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது; யுனைடட் ஃப்ரூட் கம்பெனியாலும், அரசுத்துறையாலும், பாஸ்டர் டல்லஸாலும், அரசின் கைக்கூலியான காஸ்டிலோ அர்மாஸாலாலும் அடக்குமுறை ஏவப்பட்டது. கடைசியாய் அந்த அடக்குமுறை அங்கு வென்று விட்டது. அதற்கு அன்றைய கவுதமாலா மக்கள் இன்றைய கியூப மக்கள் அளவுக்கு மனமுதிர்ச்சியை அடைந்திருக்கவில்லை என்பதுதான் காரணம். கடைசியாய் வழக்கம் போல் விடிந்த ஒரு நல்நாளில், நான் அந்நாட்டைவிட்டு வெளியேறி விட்டேன். சொல்லப் போனால், அது நமது (தொழிலாள சார்பு) நாடில்லை என்று உணர்ந்த போதுதான், கவுதமாலாவை விட்டு நான் வெளியேறி வந்தேன் என்று சொல்ல வேண்டும்.

பின்னர்தான் அடிப்படையான விஷயம் ஒன்றை நான் உணர்ந்து கொண்டேன். ஒரு புரட்சிகர மருத்துவராக அல்லது குறைந்தபட்சம் வெறும் புரட்சியாளனாக ஒருவன் விளங்க வேண்டும் என்றாலும், முதலில் அங்கு ஒரு புரட்சி நடந்திருக்க வேண்டும் என்ற உண்மை எனக்குப் புரிந்தது.

ஒருவன் எவ்வளவுதான் தூய கருத்துகளை கொண்டிருந்தாலும், தனிமனித முயற்சிகளால் ஒரு பயனும் விளையப் போவதில்லை. முன்னேற்றத்தை தடுக்கும் மோசமான அரசாங்கங்களையும், சமுதாய நிலைமைகளையும் எதிர்த்து, தென்அமெரிக்காவில் ஏதோ ஒரு மூலையில் இருந்து கொண்டு, ஒருவன் மிக மேன்மையான நோக்கங்களுடன், தன் வாழ்நாளையே அர்ப்பணித்து போராட தயாராய் இருந்தாலும், அது எந்தப் பயனையும் தராது. ஒரு புரட்சியை உருவாக்க கியூபாவில் இருந்தது போல, அனைத்து மக்களையும் அணி திரட்ட வேண்டும்; ஆயுதத்தின் பலத்தையும், ஒற்றுமையின் மதிப்பையும் புரிந்து கொள்ளும் விதத்திலும், ஆயுதப்பலத்தை சரியாக புரிந்து உபயோகிக்கவும், இராணுவ ஒற்றுமையை வெளிபடுத்தும் விதத்திலும், நாம் செய்தது போல் செய்ய அவர்கள் தெரிந்து இருந்திருக்க வேண்டும்.

நாம் இப்பொழுது நம் முன்னுள்ள மையப் பிரச்சினைக்கு வருவோம். இன்று ஒவ்வொருவரும் இறுதியில் புரட்சிகரமான மருத்துவராக விளங்குவதற்கான உரிமையையும், கடமையையும் பெற்றுள்ளார்கள். அதாவது ஒருவர் தனது தொழிலில் உள்ள சிறப்பறிவை உபயோகித்து, புரட்சிக்கும் மக்களுக்கும் ஒருங்கே சேவை செய்ய வேண்டியுள்ளது. ஆனால் இப்பொழுது பழைய கேள்வியே மீண்டும் எழுகிறது; சமுதாய நலனுக்கான வேலையை ஒருவன் எப்படிச் செய்ய வேண்டும்? சமுதாயத்தின் தேவைகளையும், தனிப்பட்ட முயற்சிகளையும் ஒருவன் எவ்வாறு ஒருங்கிணைக்க வேண்டும்?

நாம் ஒவ்வொருவரும் மருத்துவர் என்ற முறையில், நம்முடைய வாழ்க்கையை மீண்டும் பரிசீலனை செய்துப் பார்க்க வேண்டும். புரட்சிக்கு முன்பு, மருத்துவர் என்ற முறையில் பொது சுகாதரத்துறையில் என்ன செய்தோம் அல்லது என்ன செய்ய நினைத்தோம் என்பதை மீண்டும் நினைவுக் கூர வேண்டும்; இதனையும் நாம் முழுமையான விமர்சனக் கண்ணோட்டத்தோடு செய்ய வேண்டும். இப்படி நாம் முன்பு நினைத்ததை அல்லது செய்ய விரும்பியதை ஆவணக்காப்பகத்தில் வைக்கக் கூடிய அளவுக்கு சிறப்பாக செய்து, ஒரு புது மனிதனை உருவாக்கி இருந்திருக்க வேண்டும். இந்தப் புதிய மனிதத்தை உருவாக்குவதில் ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த அளவுக்கு முயற்சியை அளித்தால், ஒட்டு மொத்த மக்களுக்கும் இந்த உருவாக்கத்திற்கான பணி எளிதாக இருக்கும். அப்படி உருவாகும் மனிதனும், புதிய கியூபாவின் உதாரண புருஷனாய் திகழ்வான்.

ஹவனாவாசிகளே, உங்களுக்கு ஒன்றை அடிக்கோடிட்டு சொல்வது சிறப்பாயிருக்கும் என்று நினைக்கிறேன். கியூபாவின் அந்த புதிய மனிதன் உருவாகத் தொடங்கி விட்டான். தலைநகரில் இருக்கும் நம்மால் அதை முழுவதும் புரிந்து பாராட்ட இயலாது. அந்த புதிய மனிதன் நமது நாட்டில் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் காணப் படுகிறான். ஜூலை 26ம் அன்று சியரா மாஸ்ட்ராவிற்கு சென்றிருந்தவர்கள், இதற்கு முன்பு நமது நாட்டில் காணப்படாத, இரண்டு விநோதமான விஷயங்களைப் பார்த்திருப்பார்கள். ஒன்று, மண்வெட்டியுடனும், கடப்பாறையுடனும் ஒரியண்டே தேசப்பக்தி விழாகளில் அணிவகுத்துச் செல்லக்கூடிய ஒரு பட்டாளம் எழுப்பப் பட்டுள்ளது. இராணுவ வீரர்கள் கூட அவர்களுக்குப் பின்னால்தான் துப்பாக்கியுடன் அணிவகுத்து சென்றார்கள். மற்றொரு முக்கியமான விஷயமும் உங்கள் கண்களில் இருந்து தப்பித்திருக்காது. அதுதான் அங்கு இருந்து வந்த எட்டு அல்லது ஒன்பது வயது மதிக்க தக்க சிறுவ சிறுமியர்கள். உண்மையில் அவர்களுக்கு பதிமூன்று பதினான்கு வயது ஆகியிருந்தது. அவர்கள்தான் சியரா மாஸ்ட்ராவின் அதிகாரப்பூர்வமான சிறுவ சிறுமியர்; பசியின், வறுமையின் அதிகாரப்பூர்வமான வாரிசுகள் அவர்கள்; ஊட்ட சத்தற்ற உணவை உண்டு, நடமாடும் சதைப்பிண்டங்கள் அவர்கள். இச்சிறிய கியூபாவில், நான்கைந்து தொலைக்காட்சி நிலையங்களும், நூற்றுக்கணக்கான வானொலி நிலையங்களும், நவீன அறிவியலின் அனைத்து முன்னேற்றங்களும் பெருகியிருக்கும் இந்த வேளையில், அந்தக் குழந்தைகள் முதல்முதலாக இரவு நேரப் பள்ளிக்கு வந்த போது, மின்விளக்குகளைக் கண்டவுடன், அன்று இரவு, விண்மீன்கள் வெகு கீழே இறங்கி வந்து விட்டதாக, ஆச்சரியத்தால் துள்ளிக் குதித்தனர். கூட்டுப்பள்ளிகளின் வாசிப்பில் இருந்து கடினமான அறிவியலையும் அக்குழந்தைகள் இன்று கற்று வருகின்றனர் என்பது உங்களில் பலருக்குத் தற்போது தெரிந்திருக்கும்..

இவர்கள்தாம் கியூபாவில் அவதரித்துள்ள புதிய மனிதர்கள். அவர்கள் தொடர்பற்ற இடங்களில், சியரா மாஸ்டராவின் பல இடங்களில், கூட்டுப்பண்ணைகளில், வேலை மையங்களில் பிறந்தவர்கள். நாம் இன்று பேச வேண்டியிருப்பதற்கும், இதற்கும் நிறைய தொடர்பு இருக்கிறது. அதாவது மருத்துவரையும் இதர மருத்துவப் பணியாளரைகளையும் புரட்சிகர இயக்கத்திற்குள் ஒருங்கிணைப்பதுடன் இது சம்பந்தப் பட்டுள்ளது. சிறுவர்களுக்கு கல்வியளிப்பது, உணவளிப்பது என்ற பணி, இராணுவத்திற்கு கல்வியளிப்பது என்ற பணி, நிலத்திலேயே அல்லும் பகலும் உழைத்து அதிலிருந்து எந்தப் பயனும் பெறாமல் இருந்து வரும் விவசாயிகளுக்கு நிலத்தின் பக்கமே வராத

நிலச்சுவான்தாரிடம் இருந்து நிலத்தைப் பெற்றுப் பிரித்துக் கொடுக்கும் பணி போன்றவைகள் கியூபாவில் நடந்திருப்பது, பெரும் சமூக மருத்துவத்தை நாம் பண்ணி முடித்திருக்கிறோம் என்றுதான் அர்த்தம்.

வியாதிக்கு எதிரான போராட்டம், உறுதியான கட்டுடலை உருவாக்கும் அடிப்படையில் மருத்துவம் அமைய வேண்டும். ஒரு பலவீனமான உடலின் மீது மருத்துவர் தன் தொழிற்திறமையும் கலைத்திறமையும் காட்டி, கட்டுடலை கட்டி எழுப்புவதாக மருத்துவம் இருக்கக் கூடாது. மாறாக ஒட்டுமொத்தமான சமூக கட்டமைப்பால், கூட்டாக சிறந்த ஆரோக்கிய உடல் படைத்தவர்கள் உருவாக்கப்பட வேண்டும்.

சீக்கிரம் மருத்துவம் தன்னை நோய் வராமல் தடுப்பதை விளக்கும் அறிவியலாக மாற்றிக்ள கொண்டு, மக்களே தங்கள் மருத்துவக் கடமைகளை தாங்களே செய்யுமாறு வளர்த்தெடுக்கப் படவேண்டும். நாம் கட்டி எழுப்பி கொண்டிருக்கும், மருத்துவம் என்பது மிகவும் அவசியமான சமயங்களான அறுவைச் சிகிச்சை தேவைப் படும் போது, அல்லது நாம் உருவாக்கும் புதியசமூகத்தின் மக்களின் சக்திக்கு மேற்பட்ட மருத்துவ நிலைகளை எதிர்கொள்ள நேரும் போதுதான் தலையிட வேண்டும்.

எவ்வளவு பேருக்கு முடியுமோ, அவ்வளவு பேருக்கு ஆரோக்கிய நலசேவையை அளிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள சுகாதார அமைச்சகமும் அதையொத்த அமைப்புகளும், நோய் தடுப்பு மருத்துவமுறையை உருவாக்கும் திட்டத்தை அமுல் படுத்த முடிவு செய்து, ஒட்டு மொத்த பொதுமக்களையே சுகாதார நடைமுறைகளை நடைமுறைப் படுத்தும் படி பழக்கிக் கொண்டிருக்கிறது.

மற்ற புரட்சிகர வேலைத்திட்டங்களைப் போலவே இம்மாதிரியான வேலைத் திட்டத்திற்கும் திறமையான தனிநபர்கள் தேவைப் படுகிறார்கள். சிலர் கூறி கொள்வது போல, புரட்சி என்பது கூட்டு உத்வேகத்தில், கூட்டு விருப்பப்படி வரையறுக்கப் அதற்கு மாறாக மனிதனின் தனிப்பட்ட திறமைகளை புரட்சி வெளிவரச் செய்கிறது. புரட்சி சாதித்ததெல்லாம், அந்தத் திறமையை சரியாய் ஒருமுகப் படுத்தியதுதான். இப்பொழுது நமது முன்னுள்ள பணி என்னவென்றால், நம் தேசத்தின் சமூக மருத்துவப்பணி நோக்கி நமது மருத்துவர்கள் அனைவரின் படைபாற்றல் திறமையையும் வரப்புக் கட்டி, பாயச் செய்வதுதான்.

ஒரு சகாப்தத்தின் இறுதியில் நாம் உள்ளோம். இங்கு கியூபாவில் மட்டுமல்ல; உலகம் முழுவதிலும், நமக்கு தெரிந்த முதலாளித்துவம், நம்மை துயரத்தில் தள்ளிய முதலாளித்துவம், தோற்கடிக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்கு மாறாக யார் எது கூறினாலும் அல்லது நம்பினாலும், இதுதான் நடந்துக் கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை. ஏகபோக உரிமைகள் தூக்கி எறியப்பட்டு வருகின்றன; பலருக்கு பயன்படும் கூட்டு அறிவியல் பல புதிய முக்கியமான வெற்றிகளை தினமும் ஈட்டி வருகிறது; அடிமைப் படுத்தப்பட்ட ஆப்பிரிக்க, ஆசிய கண்டத்தில் வெகுகாலத்திற்கு முன்பே துவக்கப்பட்ட விடுதலை போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் வகையில், அமெரிக்காவில் நாம் முன்னணிப்படையினராய் இருக்கிறோம் என்பதில் நாம் பெருமை படுவதுடன், நாம் இன்னும் அர்பணிப்புடன் செய்ய வேண்டிய கடமையும் உள்ளது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இப்படிபட்ட தடங்காண முடியாத ஆழமான சமுதாய மாற்றங்கள் தேவைப் படும்போது, மக்களின் மனக்கட்டமைபிலும் அதை எதிர்கொள்ள ஆழமான மாறுதல்கள் தேவைப் படுகிறது.

சமூகத்திலிருந்து தனித்து இயங்கும் தனிநபர்களது நடவடிக்கைகளைக் கொண்ட தனிநபர்வாதம், கியூபாவிலிருந்து மறைந்து விட வேண்டும். வருங்காலத்தில் சமுதாயம் முழுமைக்கான நன்மைக்காக தனிநபரின் திறமைகள் அனைத்தையும் பயன்படுத்தப் பட வேண்டும். இந்தக் கருத்துகள் இன்றைக்கு மட்டுமானதாக மட்டும் புரிந்துக் கொண்டால் போதாது. நான் சொல்வதை நீங்கள் கவனமாகக் கேட்டு, அதன் மூலம் கடந்த மற்றும் நிகழ்காலத்தை அலசிப் பார்த்து, எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும் என்று சிந்திக்க வேண்டும். சிந்திக்கும் வழிமுறையை மாற்ற, உங்களுக்குள் ஆழமான உள்மன மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும், கூடவே அதன் மூலமாக நமது சமூகக் கடமை மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றும் போது நமக்குள் தெரியும் வெளிப்படையான மாற்றங்களையும் நாமே அவதானிக்க வேண்டும்.

வெளிப்படையான மாற்றங்கள், கியூபாவிலும் தினசரி நடைபெற்று வருகின்றன. புரட்சியை சரியாகப் புரிந்து கொள்வதற்கும், நம் மக்களிடையே பல்லாண்டு காலமாக உறங்கி கிடந்த சக்தியை அறிந்து கொள்வதற்கும் ஒரே வழி, கியூபா முழுவதும் பயணம் செய்து, புதிதாக எழுப்பப்பட்டு வரும் வேலை மையங்களையும் மற்றும் கூட்டுறவுகளையும் பார்வையிடுவதாகும். மேலும் மருத்துவ மற்றும் சுகாதார சம்பந்தமான பிரச்சினைகளின் இதயத்திற்குள் நுழைந்து அறிந்து கொள்வதற்கான ஒரே வழி, அங்கு சென்று கூட்டுறவுகளையும் வேலை மையங்களையும உருவாக்கியவர்களைப் பார்வையிடுவது

மட்டுமல்ல; மக்களுக்கு என்ன வியாதிகள் இருந்தன? அவர்களுக்கு இருந்த துன்பங்கள் யாவை? பலவருடங்களாக அவர்களைத் துளைத்தெடுத்த துயரங்கள் எவை? பல நூற்றாண்டுகளாக இருந்து வந்த முழு அடக்குமுறை மற்றும் ஒடுக்குமுறை அவர்களுக்கு அளித்துள்ள மரபுச் செல்வங்கள் எவையெவை? போன்றவற்றைக் கண்டுப்பிடிப்பதுவும், மருத்துவ மற்றும் சுகாதார பிரச்சினைகளின் ஆழத்தைக் காண்பதுதான். மருத்துவரும், மருந்துவப் பணியாளர்களும், இப்படி இப்புதிய வேலையின் அடியாழத்திற்குள் செல்ல வேண்டும். அதாவது மக்களோடு மனிதனாக நிற்க வேண்டும், கூட்டு முயற்சியில் மக்களாக இருக்க வேண்டும்.

உலகில் என்னதான் நடந்து கொண்டிருந்தாலும், எப்பொழுதும் ஒரு மருத்துவர் தனது நோயாளியுடன் மிகவும் நெருக்கமாக இருக்கிறார். அந்நோயாளியின் உள்மனம் அவருக்கு தெரிந்திருக்கும். அவர் மனிதர்களின் வலியைப் போக்குவதால், சமுதாயத்தின் மிகவும் மதிப்புள்ள ஒரு பொறுப்பைச் செய்து வருகிறார்.

சில மாதங்களுக்கு முன்பு, ஹவனாவில் புதிதாக பட்டம் பெற்ற இளம் மருத்துவர்கள் சிலர், நாட்டின் கிராமப்பகுதிக்கு செல்ல மறுப்புத் தெரிவித்தனர். அங்கு போவதற்கு ஒப்புக் கொள்வதற்கு முன்பே ஊதியத்தைக் கேட்டனர். கடந்த காலத்தில் இருந்து, நமது புதிய சமூகத்திற்கு கொண்டு வரப்பட்ட கருத்தாக்கம்தான் இது என்பதில் வியப்பில்லை. அல்லது குறைந்த பட்சம் நான் அதை அப்படிதான் புரிந்துக் கொண்டேன். இச்சூழ்நிலை கடந்த காலத்தில் நான் எப்படி இருநதேன், எப்படிச் சிந்தித்தேன் போன்ற ஞாபகங்களைக் கிளறி விடுகிறது. ஒரு கலகக்கார படைவீரனாக, சிறந்த எதிர்காலத்தை நல்ல நிலைமையை உத்திரவாதம் செய்து கொள்ளவும், மக்களுக்கு எனது தேவை எப்பொழுதும் இருக்கும்படி உறுதிச் செய்து கொள்ளவும், தன்னந்தனிப் போராளியாக நான் விளங்கியதாகதான் தெரிகிறது. .

பல வருடக் கல்விக்குச் செலவழிக்கும் அளவு வசதி படைத்த குடும்பங்களில் இருந்து வந்துள்ள இவர்களுக்குப் பதிலாக, தங்களது பள்ளிப்படிப்பை முடித்து விட்டு வேலை தேடிக் கொள்ளும் நிர்பந்தத்தில் உள்ளவர்கள் இங்கு இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? அந்தப் பல்கலைக்கழக கூடங்களில் இருந்து, மாயாஜாலம் போல இருநூறு முன்னூறு விவசாயிகள் வெளி வந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? என்ன நடந்திருக்கும்? அந்நந்த விவசாயிகள் தங்களின் சகோதரர்களுக்கு உதவ கட்டுப்பாடற்ற உற்சாகத்துடன் உடனே ஓடியிருப்பார்கள். தங்களுக்கு அளிக்கப்பட்ட பல வருடக்கல்வி வீணாக போய் விடவில்லை என்பதை நிரூபித்து காட்ட மிகவும் சிரமமான, பொறுப்புள்ள பணிகளைத் தங்களுக்கு அளிக்குமாறு கேட்டிருப்பார்கள். இன்னும் ஆறு ஏழு வருடங்கள் கழித்து, தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் குழந்தைகள் பல்வேறு தொழிற்கல்விப் பட்டங்களையும் பெறும் போதும் இது போன்றே நிகழும்.

ஆனால் நாம் வருங்காலத்தை இவ்வளவு நம்பிக்கையயற்றுப் பார்க்கக் கூடாது. இளைஞர்களை நாம் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் குழந்தைகள் என்றோ எதிர்புரட்சியாளர்களின் குழந்தைகள் என்றோ பிரிக்கக் கூடாது. ஏனெனில் அப்படி பிரித்துப் பார்ப்பது ரொம்ப சாதாரணமானது; அது உள்ளுறையற்றது; புரட்சியின் ஊடாக வாழ்க்கை நடத்துவதைப் போல வேறு எதுவும் ஒரு நேர்மையாளனுக்கு எதையும் கற்றுத்தர முடியாது. கிரானமாவில் வந்திறங்கி, சியாரா மாஸ்டராவில் குடியேறி, அங்கிருந்த விவசாயிகளையும் அவனுடன் வேலைச் செய்யும் தொழிலாளிகளையும் மதிக்கக் கற்றுக் கொண்ட நாங்கள் எவருமே, விவசாய தொழிலாள வர்க்கப் பின்னணியில் இருந்து வநதவர்கள் அல்லர். குழந்தைப் பருவத்தில் வறுமையை அனுபவித்தவர்களும், வேலைச் செய்து சம்பாதித்துதான் வாழ்க்கையை நடத்த வேண்டிய நிலையில் இருந்தவர்களும் எங்களுடன் இருந்தது உண்மைதான். ஆனால் பசியை, உண்மையான பசியை, வயிற்றைச் சுண்டியிழுக்கம் பசியை, எங்களில் ஒவருமே அனபவித்தது கிடையாது. ஆனால் சியாராவில் தங்யிருந்த நீண்ட இரண்டு வருடங்களில், பசியென்றால் என்ன என்பதை இலேசாக நாஙகள் புரிந்துக் கொள்ளத் துவங்கினோம். அதன் பிறகே அனேக செய்திகள் தெளிவாகப் புரிய துவங்கி விட்டன.

முதலில் ஒரு பண்ணையார் அல்லது கொழுத்த விவசாயியின் சொத்தை தொட்டவர்களைக் கூட கடுமையாகத் தண்டித்த நாங்கள், ஒருநாள் சியாராவிற்கு பத்தாயிரம் கால்நடைகளை ஓட்டி வந்து, விவசாயிகளிடம் வெறுமனே கூறினோம்: “இதைச் சாப்பிடுங்கள்”. அந்த விவசாயிகளில் பலர், பல வருடஙகளுக்குப் பிறகு, அப்போதுதான் முதல்முதலாக மாட்டிறைச்சியையே உண்டனர்.

அந்த ஆயிரம் கால்நடைகளுக்கு சொந்தமானவர்கள் அந்தச் சொத்தின் மீது கொண்டிருந்த உரிமையின் மீது நாங்கள் வைத்திருந்த மதிப்பு, ஆயுதப் போராட்டத்தின் ஊடாக காணாமல் போனது, ஒரே ஒரு மனிதனின் உயிர், உலகிலேயே உயர்ந்த பணக்காரன் ஒருவனின் அனைத்துச் செல்வங்களைக் காட்டிலும் கோடி மடங்கு உயர்ந்தது என்பதை நாங்கள் அப்போது பூரணமாகப் புரிந்து

கொண்டோம். ஆம்.. நாங்கள் புரிந்துக் கொண்டோம். உழைக்கும் வர்க்கத்தையோ, விவசாய வர்க்கத்தையோ சாராத நாங்கள் புரிந்து கொண்டோம். இப்பொழுது, நாங்கள்தான் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள்! நாங்களே இதை கற்றுக் கொள்ளும்போது, இதை ஏன் கியூபாவிலுள்ள மற்றவர்கள் கற்றுக் கொள்ளக்கூடாது என்ற நான்கு திசைகளையும் பார்த்துக் கேட்க வேண்டும் போலிருந்தது! அவர்களாலும் கற்றுக் கொள்ள முடியும், அது தவிர புரட்சியும் இன்று அவர்கள் நிறைய கற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறது; மற்றவர்களுக்குச் சேவை செய்வதில் உள்ள பெருமையே நல்ல ஊதியம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்ற புரட்சி எதிர்பார்க்கிறது; மக்களின் நன்றி என்பது ஒருவன் சேர்க்கும் அனைத்து செல்வங்களையும் விட மேலானது, நிலையானது என்பதையும் அவர்கள் அறிந்துக் கொள்ள வேண்டும என்று புரட்சி எதிர்பார்க்கிறது. ஒவ்வொரு மருந்துவரும், அவரது நடவடிக்கை வட்டத்தின் ஊடாக இந்த விலை மதிப்பற்ற பொக்கிஷத்தை, மக்களின் நன்றியைப் பெற முயல வேண்டும்.

பின்னர் நாம் நமது பழைய சிந்தனைகளைத் தூக்கி தூர எறிய வேண்டும். மக்களுடன் மேலும் மேலும் நெருக்கமாக வேண்டும். அதைப் புரிந்து கொள்ளவும் வேண்டும். முன்புபோலவே அவர்களை நாம் அணுகக்கூடாது. உடனே நீங்கள் எல்லோரும், "இல்லை. நான் தொழிலாளிளையை நேசிக்கிறேன். நான் தொழிலாளர்களுடனும், விவசாயிகளுடனும பேசுவதை விரும்புகிறேன். நான் ஞாயியற்றுக்கிழமைகளில் இன்னாரைப் பார்க்க இன்ன இடத்திற்குப் போகிறேன்", என்று கூறப் போகிறீர்கள் இல்லையா? அனைவரும் அதைத்தான் செய்துள்ளனர். ஆனால் நாம் இப்படிச் செய்வது பிச்சைப் போடுவதற்கு ஒப்பானது. உண்மையில் தேவையானது ஒருமைப்பாடாகும். நாம் மக்களிடம போய், "இதோ பார். நாங்கள் வந்துள்ளோம். எங்களை உங்கள் முன் நிறுத்தி உங்களுக்கு எங்கள் அறிவியலைக் கற்பிக்க வந்துள்ளோம். உங்கள் தவறுகளை, உங்கள் அறியாமையை, உங்களுக்கு சுட்டிக் காட்ட வந்துள்ளோம்" என்று பேசக்கூடாது. மாறாக நாம் திறந்த மனதுடனும், எளிமையான அணுகுதலுடனும், அந்த மக்களிடம் இருக்கும் விசாலமான அறிவைக் கற்றுக் கொள்ள அங்குப் போக வேண்டும்.

பின்னர், நமக்குப் பழக்கமான நம்மோடு ஒன்றிப்போன, நம்முடைய சிந்தனை ஓட்டத்தடத்தில் படிந்துப் போன பல கருத்துகள் எவ்வளவு தவறானவை என்பதை நாம் புரிந்துக் கொள்ள முடியும். அதன்பின் அடிக்கடி, நமது கருத்துகளை, பொதுக் கருத்துக்களை மட்டும் அல்லாது, சமுதாய தத்துவக் கருத்துகளையும், ஏன் சமயயங்களில், மருத்துவக் கருத்துகளையும் கூட மாற்றிக் கொள்ள நேரிடும்.

நகரங்களிலுள்ள பெரிய மருத்துவமனைகளில் வியாதிகள் குணப்படுத்தப் படுவது போலவே எப்பொழுதும் நடக்க வேண்டும் என்றில்லை என்பதை நாம் புரிந்து கொள்வோம். ஒரு மருத்துவர் ஒரு விவசாயியாகவும் இருக்க வேண்டும் என்பதை புரிந்து கொள்வோம். வேளாண்மையை பொறுத்த வரை, வளத்தைப் பொறுத்த வரை, உலகிலேயே செழிப்பான நாடுகளில் ஒன்றான கியூபாவில், சத்துணவு மிகவும் குறைவாக இருப்பதால், அதை விரிவுப்படுத்த புதிய உணவு வகைககளை மருத்துவரே விதைக்க வேண்டும் என்பதைப் புரிந்துக் கொள்வோம். சமயங்களில் நாம் ஒரு அரசியல்வாதியாகவும் இருக்க வேண்டும். நாம் செய்ய வேண்டிய முதல் வேலை மக்களிடம் நமது விவேகத்தை எடுத்துச் செல்லாமல் இருப்பது. மாறாக மக்களிடம் சேர்ந்து நானும் கற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதை, அவர்களுடன் இணைந்து நாம் ஒரு மாபெரும் அழகிய பரிசோதனையில் - புதிய கியூபாவை நிர்மாணிக்கும் பணியில் ஈடுபடப் போகிறோம் என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

பல நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டு விட்டன. 1959-ம் ஆண்டு ஜனவரி முதல் தேதியிலிருந்து இன்று வரை நாம் எவ்வளவு தூரத்தைக் கடந்துள்ளோம் என்பதை வழக்கமான அளவு முறைகளினால் அளக்க முடியாது. சிறிது காலத்திற்கு முன்பு இங்கு ஒரு சர்வாதிகாரி மட்டும் வீழ்த்தப்படவில்லை. ஒரு அமைப்பே வேரோடு பிடுங்கி எறியப்பட்டு விட்டது என்பதை பெருவாரியான மக்கள் புரிந்து வைத்துள்ளனர். சிதைந்துப் போன அந்தப் பழைய அமைப்பின் இடிபாடுகளின் மீது, நம் மக்களுக்கு முழுமையான மகிழ்ச்சியைக் கொண்டு வரக்கூடிய புதிய அமைப்பு ஒன்றை நாம் கட்டி எழுப்ப வேண்டும் என்பதை அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

கடந்த வருடத்தின் துவக்கத்தில், அர்ஜென்டைனாவில் இருந்து தோழர் கில்லன் வந்திருந்தது நினைவுக்கு வருகிறது. இப்பொழுது போலவே அப்பொழுதும் அவர் பிரபலமான கவிஞராய்தான் திகழ்ந்தார். அவருக்கு வாசகர்கள் உலகம் முழுவதும் பெருகிக் கொண்டிருக்கிறார்கள். வேண்டுமானால் அப்போது அவரது புத்தகங்கள் தற்போது உள்ளளதைக் காட்டிலும், ஓரிரண்டு மொழிகளில் கம்மியாக மொழிபெயர்க்கப் பட்டிருந்திருக்கலாம், ஆனால் அவர் இன்று உள்ளது போலவேதான் அன்றும் கவிஞராய் திகழ்ந்தார். ஆனாலும் கில்லனுக்கு அவரது கவிதைகளை, பிரபலமான கவிதைகளை, மக்களின் கவிதைகளை இங்கு வாசிக்க சிரமமிருந்தது. ஏனெனில் அவரது கவிதைக்களம் புரட்சிக்கு

முந்திய காலத்தைச் சார்ந்தது. அது தப்பெண்ணங்கள் நிறைந்திருந்த காலக்கட்டம். கவிஞர் கில்லன் தன்னுடைய அசாத்தியமான புலமையை மக்களின் சேவைக்காக, அவர் நம்பிக்கை வைத்திருந்த செயல் நோக்கிற்காக, சமர்ப்பித்திருந்ததை, மாறாத எண்ணத்துடன் அதை நம்பி அவை வந்திருந்ததை, நம் மக்கள் மறக்கவில்லை. ஆனால் மக்கள் அவரை கியூபாவின் தீபமாக பார்க்காமல், இன்னொரு நாட்டின் தடைச்செய்யப் பட்ட அரசியல் கட்சியின் பிரதிநிதியாக கண்டனர்.

இப்பொழுது அவையெல்லாம் பழங்கதையாகி விட்டது. நமக்கு பொதுவான ஒரு குறிக்கோளும், ஒரு பொதுவான எதிரியும் இருக்கும் பட்சத்தில், நமது நாட்டின் உள் நிர்மாணிப்பு குறித்து இருக்கும் பல்வேறு பார்வைகள் காரணமாக நமக்குள் பிளவுகள் ஏற்படாது என்பதை நாம் கற்றுக் கொண்டு விட்டோம். நாம் ஒப்புக் கொள்ள வேண்டியதெல்லாம், நமக்கு பொது எதிரி இருக்கிறானா, இல்லையா, நமக்கு பொதுவான குறிக்கோள் இருக்கிறதா இல்லையா என்பது குறித்துதான்.

நமக்கு பொது எதிரி உள்ளான் என்பதும், இப்பொழுது உறுதியாகி விட்டது. ஏகபோக நிறுவனங்களுக்கு எதிரான கருத்துகளை உதிர்க்கும் முன்பு, "நமது எதிரி, அமெரிக்கக் கண்ட முழுமைக்கும் எதிரியான அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அரசை நடத்தும் ஏகாதிபத்தியவாதிகளே!" என்று தெளிவாக கூறும் முன்பு, வேறு எவரும் இதை ஒட்டுக் கேட்கிறார்களோ என்று தோளுக்கு மேல் எட்டிப் பார்க்க வேண்டியதில்லை (தூதரகத்திற்குள் இருக்கும் உளவாளி யாராவது தகவலை வெளியே அனுப்புவான், அவ்வளவுதான்). இப்பொழுது எல்லோருக்கும் எதிரி யாரென்பது தெளிவானவுடன், அந்த எதிரியுடன் மோதும் எவருக்கும் நமக்கும் பொதுவான ஒற்றுமை ஒன்றுள்ளது என்பது புரிந்தவுடன், நான் இரண்டாவது பகுதிக்கு வருகிறோம். இபபொழுது இங்கே, கியூபாவில் நமது குறிக்கோள்கள் எவை? நமக்கு என்ன வேண்டும்? நமக்கு நம் மக்களின் மகிழ்ச்சி வேண்டுமா, வேண்டாமா? கியூபாவின் மழுமையான பொருளாதார விடுதலைக்காக நாம் போராடப் போகிறோமா இல்லையா?

உலகில் வல்லரசுகள் தனித்தனியாக அமைத்துள்ள எந்த இராணுவப் பிரிவிலும் சேராமல், இங்கு நம் நாட்டுக்குச் சம்பந்தமான ஏதாவது ஒரு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நடவடிக்கைகளை எடுக்கும் முன்பு, ஏதாவது ஒரு வல்லரசின் தூதரகம் ஒன்றைக் கலந்தாலோசிக்கும் நிர்பந்தம் இல்லாமல், உலகில் உள்ள சுதந்திர நாடுகளின் நடுவே, நாமும் ஒரு சுதந்திர நாடாய் விளங்க, போராடப் போகிறோமா இல்லையா? மிகவும் அதிகமாக சொத்து வைத்திருப்பவர்களிடம் இருந்து எடுத்து, ஒன்றும் இல்லாதவர்களுக்கு பிரித்துக் கொடுக்க நாம் திட்டமிடுகிறோம் என்றால், நமது மகிழ்ச்சிக்கு ஆதாரமாக படைப்பாற்றல் மிக்க வேலைகளை செய்ய விரும்புகிறோம் என்றால், நாம் நமது குறிக்கோள் நோக்கி பணிபுரிய வேண்டும. அதே குறிக்கோளைக் கொண்டிருக்கும் எவரும் நமது நண்பர்கள்தான். அக்குறிக்கோள் தவிர அவர்களுக்கு வேறு கொள்கைகளும் இருந்தாலோ, அல்லது அவர்கள் வேறு அமைப்புகளைச் சார்ந்திருந்தாலோ, அவைகள் முக்கியமற்றதுதான்.

மாபெரும் அபாயங்களின் போது, மாபெரும் பதட்டங்களின் போது, மாபெரும் படைப்புகளின் போது, எது தேவையென்றால், மாபெரும் எதிரிகளும், மாபெரும் குறிக்கோள்களும்தான. நாம் ஏற்கனவே ஒப்புக் கொண்டிருக்கும் பட்சத்தில், நாம் எங்கு செல்கிறோம் என்பது நமக்கு புரிந்து இருக்கும் பட்சத்தில் - இதனால் யார் துயரப் படுவார்களோ அவர்கள் துயரப்படட்டும் - நாம் நம் செயற்பாட்டை உடனே துவங்க வேண்டும்.

ஒரு புரட்சிவாதியாக இருப்பதற்கு, ஒரு புரட்சி தேவைப்படுகிறதென்று நான் முன்பே கூறியுள்ளேன். நம்மிடம் இது ஏற்கனவே இருக்கிறது. அடுத்து எந்த மக்களுடன் இணைந்து வேலை செய்யப் போகிறீர்கள் என்பது தெரிந்து இருக்க வேண்டும். நாம் இதை சரியாகப் பழக்கப்படுத்திக் கொள்ளவில்லை: இந்தப் பாதையில் நாம் இன்னும் கொஞ்ச தூரம் போக வேண்டும் என்று நினைக்கிறேன். நாட்டின் உட்பகுதியில் உள்ள மக்கள் வேலைச் செய்யும் கூட்டுறவுகளைப் பார்வையிட, அக்கூட்டுறவுகளில் வசிக்க, அதில் வேலைச் செய்ய இட்டுச் செல்லும் வாகனத்தைத் தவிர, அவர்களைப் புரிந்து கொள்ள அழைத்துச் செல்லும் வாகனம் ஏதாவது இருக்கிறதா என்ற நீங்கள் என்னைக் கேட்கலாம். எல்லோராலும் இதைச் செய்ய முடியாது. ஆனால் பல இடங்களில் மருந்துவப் பணியாளர்கள் இருக்க வேண்டியது, மிகவும் முக்கியமானதாக விளங்குகிறது. கியூப மக்களின் ஒருமைப்பாட்டின் மாபெரும் சின்னமாக விளங்குவது புரட்சிகர போராளிகள் என்று நான் கூறுவேன், அப்போராளிகள் இப்பொழுது மருத்துவருக்கு புதியப் பொறுப்புகள் சிலவற்றை அளிப்பார்கள். ஒரு மாபெரும் ஆயுதத் தாக்குதலை சமாளிக்கப் போகிறோம் என்ற வேதனையான, கிட்டத்தட்ட உண்மையான நடைமுறையை எதிர்கொள்ள சிலகாலம் முன்புவரை இருந்தாவது, வேலை ஒன்றிற்கு அவர்கள் அவர்களைத் தயார் செய்வார்கள்.

நான் உங்களை எச்சரிக்கை விரும்புகிறேன். மருத்துவர் என்பவர், ஒரு போர்வீரன், புரட்சியாளன் என்ற பொறுப்புகளை வகிக்கும் போதும் ஒரு மருத்துவராகவும் இருக்க வேண்டும். சியாராவில் நாங்கள் செய்த அதே தவறை நீங்களும் செய்யக்கூடாது. அது அந்த நேரத்தைப் பொறுத்தவரை, தவறாக இல்லாமலும் இருக்கலாம். ஆனால் அச்சமயத்தில் இருந்த மருத்துவத் தோழர்கள் அனைவரும் இது பற்றி அறிவார்கள். காயயமடைந்த அல்லது நோயுற்ற மனிதன் ஒருவனது பக்கத்தில் இருப்பதை கேவலமான விஷயமாக அச்சமயத்தில் நாங்கள் கருதினோம். கிடைத்த சிறு சந்தரப்பத்திலும், ஒரு துப்பாக்கியை பிடுங்கிக் கொண்டு, போர்க்களத்தில் குதிக்க வேண்டும் என்பதிலேயே நாங்கள் குறியாக இருந்தோம்.

இப்போழுது நிலைமைகள் மாறி விட்டன. நமது நாட்டைக் காத்திட அமைக்கப் பட்டுள்ள புதிய இராணுவம் வேறுபட்ட உபாயங்களுடன் இயங்க வேண்டும். புதிய இராணுவத்தின் திட்டத்தில் மருத்துவர்களும் மிகவும் முக்கியத்துவம் பெறுவார்கள். அவர்கள் மருத்துவராகவே தொடர்ந்து பணிபுரிய வேண்டும். அது மிகவும் அழகான பணி; போரின் போது, அது மிகவும் முக்கியமான பணியும் கூட. மருத்துவர்கள் மட்டுமல்ல, மிகவும் மனிதாபிமானத்துடன் இப்பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள செவிலியர், சோதனைச்சாலை நிபுணர்கள் போன்றவர்களும் கூட மிக முக்கியமானவர்கள்தான்.

மறைந்திருக்கும் அபாயத்தை நாம் அறிந்திருக்கும் போதிலும், விழுங்கக் காத்திருக்கும் அடக்குமுறையைத் தூரத்தியயடிக்க நாம் தயாராகிக் கொண்டிருக்கும் போதிலும், நாம் அதைப் பற்றி சிந்திப்பதை நிறுத்த வேண்டும். நமது சிந்தனையோட்டத்தின் மையக் கருத்தாக போருக்கு ஆயத்தமாவதையே கொண்டிருந்தால், படைப்பாற்றல் மிக்க வேலைகளில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள முடியாமல் போய்விடும். இராணுவத் தயாரிப்பிற்குச் செலவிடப்படும் உழைப்பு வீணான உழைப்பு; அதில் கொட்டப்படும் மூலதனம் வீணான மூலதனம். துரதிர்ஷ்ட வசமாக நாம் அதை செய்தாக வேண்டி உள்ளது. ஏனெனில் வேறு சிலா் தங்களைத் தயார் படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் ஒரு படைவீரன் என்ற முறையில் மிக நேர்மையயாகச் சொல்கிறேன், தேசிய வங்கியின் பெட்டகத்தில் இருந்து வெளியே செல்லும பணத்தில் என்னை மிகவும் வேதனைப்படுத்தும் பணம், ஏதாவது ஒரு ஆயுதம் வாங்கப் பயன்படுத்தப்படும் பணம்தான்.

எப்படி இருந்த போதிலும், சமாதானக் காலத்திலும் இராணுவத்தினருக்கு வேலை உண்டு. மக்கள்தொகை மிகுந்த மையங்களில், மக்களை ஐக்கியப்படுத்தும் சக்தியாக அவர்கள் இயங்கலாம். மிக உயர்ந்த ஒருமைப்பாடு செயல்படுத்தப்பட வேண்டும். இராணுவ மருத்துவர்களிடையே அவ்வாறு இருப்பதாக கேள்விப்பட்டிருக்கிறேன். அபாயகரமான வேளைகளில், கியூபாவின் எளிய மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அவர்கள் விரைய வேண்டும். அதே சமயம் கியூபாவின் பல்வேறுபட்ட வர்க்கத்தை சேர்ந்தவர்கள், ஒரே சீருடையில இணைந்து வாழ்வதற்கான சந்தர்ப்பதையும் இராணுவம் வழங்குகிறது.

மருத்துவப் பணியாளர்களாகிய நாம் - நான் மறந்து வெகு காலமாகிவிட்ட இச்சொல்லை உபயோகிக்க என்னை நீங்கள் அனுமதிக்க வேண்டும். - வெற்றிகரமாக இயங்குகிறோம் என்றால், ஒருமைப்பாடு என்ற இந்த புதிய ஆயுதங்களின் உபயோகத்தை அறிந்திருக்கிறோம் என்றால், எதிரியை அறிந்து வைத்துள்ளோம் என்றால், எந்தத் திசையை நோக்கி நடை போட வேண்டும் என்பதைப் புரிந்து வைத்திருக்கிறோம் என்றால், நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஒவ்வொரு நாளும் அந்த வழியில் எவ்வளவு தூரத்தை கடக்க முடியும் என்பதை நிச்சயிப்பதுதான். அதை வேறு ஒருவர் நமக்குக் காட்ட முடியாது. அது ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட யாத்திரை. அவன் ஒவ்வொரு நாளும் செய்யும் செயல், அவனது வேலையில் இருந்து அவன் பெறும் அனுபவம்,. வேலைக்கு தன்னையே அர்ப்பணித்துவிடும் பண்பு ஆகியவை மக்களின் நலனுக்காக இருக்க வேண்டும்.

இப்பொழுது வருங்காலம் நோக்கிய நமது அணிவகுப்பிற்குத் தேவையான அனைத்து காரணிகளும் நம்மிடம் உள்ளன. நாம் ‘ஜோஸ் மார்ட்டி’யின் அறிவுரையை நினைவில் கொள்வோம். இத்தருணத்தில நான் அதை அலட்சியப்படுத்திக் கொண்டு இருந்தாலும், அதைத் தொடர்ச்சியாக நாம் பின்பற்ற வேண்டும். “சொல்வதற்கான மிகச் சிறந்த வழி, செய்துக் காட்டுவதே”.

நாம் கியூபாவின் வருங்காலம் நோக்கி பீடுநடை போடுவோம்.

[ராணுவ வீரர்களுக்கு ஆற்றிய சொற்பொழிவு - 19 ஆகஸ்டு 1960]

# நாம் நடைமுறைப் போராளிகள்

*[புரட்சிப் போராட்டங்கள் குறித்த தெளிவாக அம்சங்களை, சில கூர்மையான விமர்சனத்துடன் சொல்லி நிற்கிறது இந்தக் கட்டுரை. யாருக்காக போராடுவதற்கான போராட்டத்தை ஆரம்பித்தானோ, அவர்களையே மதிக்க, மெச்ச மற்றும் அவர்களை ஒற்றுமைப்படுத்த, எப்படி எதன் மூலம் ஒரு கொரில்லாப் போராளி கற்றுக் கொண்டான் என்பதை இந்தக் கட்டுரை விளக்குகிறது. இந்த கட்டுரையில், ஒரு சோசலிச மனிதனை உருவாக்குவதின் அவசியத்தை அனுபவத்தின் மூலம் சே விளக்குகிறார்]*

கியூபாவின் புரட்சி தனித்துவமான புரட்சி. இது 'புரட்சிகரக் கோட்பாடு இல்லாமல் புரட்சிகர இயக்கம் இல்லை' என்ற லெனினின் பிரபாலமான கூற்றுடன் முரண்படுவதாக பலர் குறிப்பிடுகின்றனர். ஒரு சமுதாய உண்மையின் வெளிப்பாடாக விளங்குவதுதான் அனைத்துப் புரட்சிகரக் கோட்பாடுகளும் ஆகும். இருப்பினும் சில நேரங்களில் புரட்சி இப்படி பிரகடனப்படுத்தப் படும் கோட்பாடுகளையும் மீறிச் செல்கிறது என்று சொல்வதுதான் இதற்கு பொருத்தமான பதிலாகும். வேறு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், புரட்சிகரக் கோட்பாட்டை அறியாது இருந்தாலும், வரலாற்று யதார்த்தத்தை செம்மையாகப் புரிந்து கொள்ளப் பட்டும், அதில் இறங்கியுள்ள சக்திகள் முழுமையாக உபயோகப் படுத்தப்பட்டும் இருக்கும் பட்சத்தில் புரட்சி வெற்றி பெற்றுவிடும் என்றே கூறலாம். ஒவ்வொரு புரட்சியும் எப்போதும் பல்வேறுபட்ட போக்குகளை உள்ளடக்கி இருக்கும்; இருந்தாலும், அதன் நடவடிக்கைகள் எப்போதுமே ஒன்றுபோல் துல்லியமாக இருப்பதுடன், புரட்சியின் உடனடிக் குறிக்கோள்களுடனும் சரியாகப் பொருந்தி நிற்கும்.

புரட்சி செயல்பாட்டில் இறங்கும் முன்பு, தலைவர்கள் போதுமான கோட்பாட்டு அறிவுடன் இருந்து, அது நடைமுறை யதார்த்துடன் சிறப்பாக பொருந்தும் பட்சத்தில், எதையாவது உத்தேசமாக செய்து அதனால் ஏற்படும் தவறுகளை அத்தலைவர்கள் தவிர்க்கலாம் என்பது உண்மைதான். இப்புரட்சியில் ஈடுபட்டிருந்த தலைவர்களுக்கு அப்போது கோர்வையான கோட்பாட்டுப் பின்புலம் இல்லாமல் இருந்தது உண்மைதான்; ஆனாலும் அவர்கள் இன்றைய உலகில் விவாதிக்கப்படும் வரலாறு, சமுதாயம், பொருளாதாரம் மற்றும் புரட்சி குறித்த பல்வேறு கருத்துகளை அறியாதவர்களாக இருந்தனர் என்று கூற முடியாது. நடைமுறை உண்மை குறித்த அபரிதமான அறிவு, மக்களுடனான நெருக்கமான உறவு, விடுதலைப் போராளிகளுக்கு குறிக்கோளில் இருந்த உறுதி, நடைமுறைப் புரட்சி அனுபவம் ஆகியவை எல்லாம் சேர்ந்து அத்தலைவர்களுக்கு ஒரு முழுமையான கோட்பாட்டுக் கருத்தை உருவாக்கிக் கொள்ள வாய்ப்பளித்தன.

அனைத்துலகத்தின் ஆவலைத் தூண்டிய 'கியூபப் புரட்சி' குறித்து, மேலேச் சொன்னவைகளை ஒரு முன்னுரையாக எடுத்துக் கொண்டு மேலும் தொடர வேண்டும். தங்களை விட ஆயுதங்களிலும், உத்தியிலும் மேம்பட்ட ஒரு இராணுவத்தால் அடித்து நொறுக்கப்பட்ட ஒரு சிறு குழு. முதலில் எப்படி தப்பிக்க முடிந்தது? உடனே எப்படி அது தன்னை வலுவாக்கிக் கொள்ள முடிந்தது? பின்னர் போர்க்களங்களில் எதிரியை விட அதிக எப்படி வலுவாக மாறியது? அதற்குப் பின்னர் புதிய களங்களுக்கு எப்படிப் புலம் பெயர்ந்தது? கடைசியாக இராணுவத்தை விட குறைவான எண்ணிக்கையுடைய துருப்புகளை வைத்துக் கொண்ட எதிரியை எப்படி வீழ்த்தியது? இன்றைய வரலாற்றில் கற்றுக்கொள்ள வேண்டிய பயன்தரும் அம்சம் இதுவாகும்.

கியூப புரட்சியின் தலைவர்களான நாங்கள் அநேக சமயங்களில் கோட்பாட்டு விஷயங்களில் போதுமான கவனம் செலுத்தவில்லை என்றாலும், அந்தப் புரட்சியின் மூலம் உண்மைகளை கற்றுக் கொள்ள நாங்கள் தவறவில்லை. இந்த உண்மைகள் எந்த அடித்தளங்களில் இருந்து புரிந்து கொள்ளப் பட்டன என்பதை நாங்கள் விவரிக்குகிறோம். உண்மையில் கியூபப் புரட்சி இரண்டு வேறுபட்ட பகுதிகளாக பிரிக்கப்பட வேண்டும். அதாவது 1959 ஜனவரி முதல் தேதிக்கு முற்பட்ட ஆயுதம் தாங்கிய போராட்டம். அதற்குப்பிறகு நடந்த அரசியல், பொருளாதார, சமுதாய துறைகளில் நடத்த மாற்றங்கள்.

இந்த இரண்டு பகுதிகளும் கூட மேலும் பல சிறுப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட வேண்டும். ஆனால் நாங்கள் இதை, வெறும் வரலாற்று வெளிப்பாடு என்ற பார்வையில் மட்டும் நோக்கப் போவதில்லை. அதை இந்த புரட்சித்தலைவர்கள் மக்களுடன் கொண்டிருந்த தொடர்பு மூலம், எவ்வாறு அவர்களின் புரட்சிகர சிந்தனை பரிணாம வளர்ச்சிப்பெற்றது என்ற கண்ணோட்டத்தில் காணப் போகிறோம். நவீன உலகின் மிகவும் சர்ச்சைக்குரிய விஷயமான மார்க்சியம் குறித்து, எங்களின் பொதுவான நோக்கை இப்போதே அறிமுகப் படுத்தி விடுவது நல்லது என்று கருதுகிறேன். எங்களைப் பார்த்து நீங்கள் மார்க்சியவாதிகளாக இல்லையா என்று கேட்டால், ஒரு இயற்பியல்வாதியிடம் நீங்கள் நியுட்டானியனா இல்லையா என்று கேட்கும் போது அவர் எப்படி உணர்வாரோ, அல்லது ஒரு உயிரியல்வாதிடம் நீ பாஸ்டரியனா இல்லையா என்று கேட்பது போது அவர் எப்படி உணர்வாரோ, அப்படிதான் நாங்களம் உணர்கிறோம்.

மக்களுடைய அறிவின் ஒரு பகுதியாக, பல உண்மைகள் வெளிப்படையாக தெரிகின்றன. அவைகளை இப்போது விவாதிப்பது உபயோகமற்றது. இயற்பியலில் நியுட்டனியனான ஒருவன் இருப்பது எவ்வளவு இயல்பானதோ, உயிரியலில் பாஸ்டரியனாக ஒருவன் இருப்பது எவ்வளவு இயல்பானதோ, அதே இயல்போடு ஒரு மார்க்சியவாதியாகவும் இருக்க முடியும். உண்மைகள்தாம் புதிய கருத்துகளை உருவாக்குகிறது என்பதை கவனத்தில் எடுத்துக் கொண்டோமானால், இப்புதிய கருத்துகள், அவைகள் துரத்தியடித்த பழைய கருத்துகள் உடைமயாக்கி வைத்திருந்த உண்மைகளின் பகுதிகளில் இருந்து, ஒருபோதும் தங்களை விடுவித்துக் கொண்டிருந்திருக்காது. உதாரணமாக நியுட்டனின் கண்டுபிடிப்புகளை ஒட்டி, ஐன்ஸ்டனின் சார்புக் கொள்கையையும் அல்லது ப்ளாங்கின் குவாண்டம் கொள்கையையும் வைக்க வேண்டும். அந்தப் அறிவார்ந்த ஆங்கிலேயனின் பெருமைகளில் இருந்து, அவர்கள் எதையும் பிடுங்கி எடுத்து விடவில்லை. விண்ணியல் குறித்த புதிய கருத்துகள் வரும்வரை, இயற்பியல் பெரும் தூரம் முன்னேற முடிந்ததற்கு நாம் நியுட்டனுக்கு நன்றிக்கடமைப் பட்டுள்ளோம். இந்த வளர்ச்சிக்குத் தேவையான படிக்கட்டுகளை இந்த ஆங்கிலேயன்தான் உருவாக்கி விட்டு போயிருந்தான்.

மற்றத் துறைகளைப் போலவே அரசியல் மற்றும் சமூக அறிவியல்களின் முன்னேற்றமும் நீண்ட வரலாற்று ரீதியான வழிமுறைகளைச் சார்ந்துள்ளது. அதனுடைய கண்ணிகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. அவைகளின் தொடர்பு ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. அவைகள் தொடர்பு கொள்வதாலும், உருப்பெவதாலும், இணைவதாலும், தங்களைத் தொடர்ந்து பூரணத்துவப்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆரம்ப காலத்தில், சீன அராபிய இந்துக் கணக்கியல்கள் இருந்ததாக சொல்லப்படுகிறது. ஆனால் இன்றைய கணக்கியல் எல்லையே தெரியாத அளவுக்கு வளர்ந்துள்ளது. வரலாற்றின் வழித்தடத்தில், ஒரு கிரேக்க பித்தகோரஸ், இத்தாலிய கலிலியோ, ஆங்கிலேய நியுட்டன், ஜெர்மானிய காஸ், ரஷ்ய லாபெட்செவஸ்கி, ஒரு ஐன்ஸ்டைன் ஆகியோர் இருந்திருக்கிறார்கள். சமூக அரசியல் அறிவியல்களிலும் டெமாக்ரடிஸில் இருந்து மார்க்ஸ் வரை, ஒரு நீண்ட வரிசையான பல சிந்தனையாளர்கள், தங்களுடைய சொந்த கண்டுப்பிடிப்புகளை அளித்து, பல அனுபவங்களையும், கொள்கை நியதிகளையும் உருவாக்கியுள்ளனர்.

மார்க்சின் சிறப்பு என்னவென்றால், சமுதாய எண்ண ஓட்டத்தின் வரலாற்றில், திடீரென்ற பண்பு அடிப்படையிலான மாற்றம் ஒன்றை உருவாக்கியதுதான். அவர் வரலாற்றை அலசிப் புரிந்து கொள்கிறார்; அதன் இயக்கவியலை அறிந்து கொள்கிறார்; வருங்காலத்தைக் கணிக்கிறார்; அதைக் கணிப்பதுடன் (அது அவரது அறிவியல் கடப்பாட்டை திருப்தி செய்யும்) ஒரு புரட்சிகர கருத்து ஒன்றையும் வெளி விடுகிறார்; உலகம் புரிந்து கொள்ளப்படுவது மட்டுமல்லாமல், மாற்றப்படவும் வேண்டும் என்றார்; மனிதன் புறச்சூழலின் அடிமையாயும் கருவியாயும் இனியும் இருக்க மாட்டான் என்றார்; தனது விதியைத் தானே நிர்ணயித்துக் கொள்ளும் சிற்பியாகவும் அவன் தன்னை மாற்றிக் கொள்வான் என்றார். இத்தருணத்தில் மார்க்ஸ், பழைமைகளை தூக்கி நிறுத்துவதில் தனி அக்கறை கொண்டுள்ளவர்களின் குறியாகி விடுகிறார். அவருக்கு முன் டெமாக்கரடிஸிக்கு இதேப் போல நிகழ்ந்துள்ளது. கிரேக்க அடிமைச் சமுதாயத்தின் பாதுகாவலான பிளாட்டோவாலும், அவனது சீடர்களாலும் அவரது படைப்புகள் கொளுத்தப்பட்டன. புரட்சிகர மார்க்ஸில் தொடங்கி, தொடர்ந்து உறுதியான கருத்துகளைக் கொண்டிருந்த ஒரு அரசியல் குழு, தங்களை நிலை நிறுத்திக் கொண்டது. மாபெரும் மனிதர்களான மார்க்ஸ், எங்கல்ஸ் ஆகியோரை அடித்தளமாகக் கொண்டு, படிப்படியாக லெனின் ஸ்டாலின் மாசேதுங் மற்றம் புதிய சோவியத் மற்றும் சீன ஆட்சியாளர்களின் ஊடாக அது ஒரு கோட்பாட்டு நியதியாக தன்னை நிலை நிறுத்திக் கொண்டது. பின்னால் வரவிருக்கும் பலவற்றிற்கு அது முன் உதாரணமாய் திகழ்ந்தது.

மார்க்ஸ் எந்த முனையில் தனது அறிவியலைத் துறந்து, புரட்சித்துப்பாக்கியை தோளில் எந்தினாரோ அந்த முனையில் இருந்து, கியூபப்புரட்சி அவரை வரித்துக் கொண்டது. திரிபுவாத நோக்கில் அல்லாமல், அந்த முனையில் கியூபப்புரட்சி மார்க்ஸை பற்றிக் கொண்டு, மார்க்ஸை தொடர்ந்து செல்வதற்கு தடையிடும் சக்திகளுக்கு எதிராக போராடி, தூய மார்க்ஸை மீண்டும் நிறுவ முயல்கிறது. ஏனெனில் அந்த முனையில் மார்க்ஸ் என்கிற அறிவியலறிஞர், தான் கற்று அதன் மூலம் கணித்த வரலாற்றின் வெளிப்புறம் தன்னை நிறுத்திக் கொள்கிறார். அதற்குப் பின்பு, மார்க்ஸ் என்கிற புரட்சியாளர் வரலாற்றிற்குள் போராடத் துவங்கினார். நடைமுறைப் போராளிகளான நாங்கள், எங்களது போராட்டத்தை முன்னெடுத்து சென்ற போது, மார்க்ஸ் என்கிற அறிவியலறிஞரின் முன்னோக்கு விதிமுறைகளின் படி ஒழுகியுள்ளோம், அவ்வளவுதான். கலகப்பாதையின் ஊடே நாங்கள் நடந்து சென்ற போது, பழைய அதிகாரத்துவ நிர்மாணிப்பிற்கு எதிரான எங்கள் போராட்டத்தில், அதை நிர்மூலமாக்குவதற்காக மக்களின் அதரவைப் பற்றிக் கொண்டு, அம்மக்களின் மகிழ்ச்சியை எமது

போராட்டத்தின் அடித்தளமாகக் கொண்டு இயங்கிய போது, அறிவியலறிஞர் மார்க்சின் வருங்கால கணிப்புகளுக்கு எங்களை உட்படுத்திக் கொண்டோம். கியூபப்புரட்சியின் தலைவர்கள் மார்க்சிய விதிமுறைகளை, கோட்பாட்டுக் கண்ணோட்டத்தில் எப்படி அறிந்திருந்தாலும், கியூபப் புரட்சியின் நிகழ்ச்சிப் போக்குகளின் ஊடாக மார்க்சிய விதிமுறைகள், இடம் பெற்று இருந்தன என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறலாம். அந்த நிகழ்ச்சிகள் கிரன்மாவில் வந்திறங்கும் முன்பு துவங்கின; இறங்கியதில் இருந்து அவை முன்னேறி, இரண்டாவது கொரில்லாத்தனம் அமைத்து, மூன்றாவது நான்காவதற்குத் தாவி சியார டி கிரிஸ்டல் படையெடுப்பில் நிலை நிறுத்திக் கொள்ளப் பட்டு, ஏப்ரல் பொது வேலை நிறுத்தத்தில், அதன் தோல்வியில் இறங்கி, மாபெரும் தாக்குதலில் அடிபட்டு, லாஸ் விலாஸ் படையெடுப்பில் முடியும் வரை தொடர்ந்தன.

கொரில்லாப் போராட்டத்தின் ஊடாக வந்த சிறிய வரலாற்றுக் கணங்கள் ஒவ்வொன்றும், தனித்துவமான சமுதாயக் கருத்துகளையும், கியூப நடைமுறை யதார்த்தத்தின் தனித்துவமான மதிப்பீடுகளையும் படம் பிடித்துக் காட்டின. அவை பிற்காலத்தில் அரசியல் களத்தில் பதவி ஏற்கப் போகும் அந்த புரட்சியின் இராணுவத் தலைவர்களின் எண்ணங்களை கோடிட்டு காட்டின.

கிரன்மா போய் இறங்கும் முன்பு காணப்பட்ட மனநிலையை ஒரளவிற்கு ‘அகநிலை வாய்மைக் கோட்பாடு’ என்ற வர்ணிக்கலாம். அதாவது சரமாரியாக மக்கள் கொதித்தெழுந்து விடுவார்கள் என்று கண்மூடித்தனமான நம்பிக்கை; பாடிஸ்டா ஆட்சியை கண்மூடித் திறப்பதற்குள், நிர்மூலமாக்கி விடமுடியும் என்ற நம்பிக்கையுடன் கூடிய உற்சாகம்; புரட்சிகரமான வேலைநிறுத்தங்களுடன் இணைந்த ஆயுதக் கிளர்ச்சில் உள்ள அபரிமான நம்பிக்கை; கடைசியாக சர்வாதிகாரியின் வீழ்ச்சி; இப்படி பல அகநிலைரீதியான நம்பிக்கைகள். இது பழமைவாத கட்சியின் நேரடியான புதிய வாரிசாக இருந்தது மட்டுமல்லாது, அதன் முதன்மையான முழக்கம் ‘பேராசை பணத்திற்கு எதிராக வெட்கப் படுவோம்’ என்பதாய் இருந்தது. அதாவது புதிய கியூப அரசின் முக்கிய அக்கறை, நிர்வாகத்தில் நேர்மை என்று இருந்ததாக கூறலாம்.

ஆனால் ‘வரலாறு என்னை விடுதலைச் செய்யும்’ என்ற உரையில் ஃபிடல் காஸ்ட்ரோ, இந்த கியூபப் புரட்சி தன்னைக் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டியதின் அடிப்படைகளைப் பற்றி குறிப்பிடுகிறார். ஆனால் உண்மையான புரட்சி அதையும் கடந்துவிட்டது. பொருளாதாரத்தை புரட்சி மேலும் மேலும் பாதிக்கத் துவங்கிய போது, அரசியல் களத்தில் புரட்சிகர வளர்ச்சியை, அது மேலும் வர்மைப்படுத்தத் தொடங்கியது. அதனால் தேசிய சர்வதேச விளைவுகள் அது ஏற்படுத்தியது என்பது வெளிப்படை.

கரை இறங்கியதுடன் தோல்வி. கிட்டத்தட்ட ஒட்டு மொத்தவமான அழிவு. பின்னர் மீண்டும் பொறுக்கி எடுத்துச் சேர்க்கப்பட்ட குழு, கொரில்லாப் படையாக மாறியது. போராட்ட உணர்ச்சியில் ஊறிய அந்தத் தப்பிப் பிழைத்தவர்களின் தனிஇயல்பு, தீவு முழுவதும் தானாகவே கிளர்ச்சிகள் வெடிக்கும் என்பதை நம்புவது ஒரு ஏமாற்று, ஒரு மாயை என்பதைப் புரிந்து கொண்டதுதான். போராட்டம் மிக நீண்டதால் இருக்கும் என்பதையும், அதற்கு விவசாயிகளின் பங்கேற்பு தேவை என்பதையும் அவர்கள் புரிந்து கொண்டனர். இக்கட்டத்தில்தான் விவசாயிகள் முதன் முதலாக கொரில்லாப் போரில் நுழைகின்றனர். அவர்களின் வருகையால் எண்ணிக்கை கூடுவது முக்கியமல்ல; அதன் உளவியல் மதிப்புதான் இங்கு முக்கியம். பின் இரண்டு விஷயங்கள் சீர் செய்யப்பட்டன. முதலாவது, கொரில்லாக் குழுவின் மையமாகச் செயல்பட்ட நகரத்தவர்களிடம், விவசாயிகள் குறித்து இருந்து வந்த பகை மனப்பான்மை களையப்பட்டது. இரண்டாவது விவசாயிகள் அக்குழுவின் மீது வைத்திருந்த அவநம்பிக்கை. எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் அரசின் காட்டுமிராண்டித்தனமான பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு அஞ்சினர். இரண்டு உண்மைகள் இக்கட்டத்தில் தங்களை வெளிப்படுத்திக் கொண்டன. இரண்டும் அவற்றின் இடையே உள்ள தொடர்பால் முக்கியமானவையாக இருந்தன. விவசாயியைப் பொறுத்தவரை, அவனது வீடு வாசல் பயிர்கள், குடும்பம் ஆகியவற்றை நிர்மூலமாக்கும் அளவிற்கு இாணுவம் பலம் பொருந்தியிருந்தாலும, அதன் மிருகத்தனத்தாலும், அடக்குமுறையாலும் கொரில்லாப் போருக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க இயலாது என்ற உண்மையை புரிந்து வைத்திருந்தான். ஒளிந்திருப்பவர்களுடன் போய்ச் சேர்ந்து கொள்வது கூட நல்ல தீர்வாகத்தான் பட்டது அவனக்கு. கொரில்லாப் போராளிகளைப் பொறுத்தவரை, தங்கள் பங்காக, விவசாய மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க வேண்டியதின் அவசியத்தை, ஒவ்வொரு முறையும் முன்பை விட தெளிவாகப் புரிந்து கொணடனர். விவசாயிகள் வெகுவாக விரும்பும் ஒன்றை அவர்களுக்கு கொடுப்பது அதற்கு தேவைப்பட்டது. விவசாயி நிலத்தைத் தவிர, வேறு எதையும் முக்கியமானதாகக் கருதவில்லை.

அதற்குப் பின் நாடோயாய் அலையும் கட்டம் வந்தது. அப்போது புரட்சி இராணுவம் ஒவ்வொரு பகுதியாக தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. அதை நீண்டகாலம் தனது

கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாது என்றாலும், அது எதிரிக்கும் பொருந்தும் என்பதுதான் உண்மை. மொத்தத்தில் பல தொடர்ச்சியான மோதல்களின் விளைவால் நெகிழ்வான முன்னணி ஒன்றைக் கட்டத் திட்டமிடப் பட்டது. பின் 1957-ம் ஆண்டு மே 28 அன்று, உபரோ என்ற இடத்தில், கடலுக்கும் விமானநிலையத்திற்கும் அருகில் அமைந்திருந்த காரணத்தால், உதவிப்படைகளை உடனே வருவித்துக் கொள்கிற வசதி இருந்த இடத்தில் அமைந்திருந்த, நன்றாக அமைக்கப்பட்டுருந்த போர் அரண் மீது நாங்கள் தாக்குதல் நடத்தினோம். அதில் புரட்சிப் படையில் உள்ளவர்களின் 30 சதவீதம் பேர் காயமுற்றனர் அல்லது கொல்லப்பட்டனர். ஆனால் எதிரியைத் தொடந்து வந்து, அவர்கள் தாக்கட்டும் என்ற காத்திருப்பதை விட, மலைச்சரிவுகளில் வேகமாக இறங்கி வந்து எதிரியுடன் மோதினால் சுலபமாக வெற்றிக் கொள்ள முடியும் என்பது புலனாகிறது.

அதற்குப்பின் புரட்சிப்படை முதன் முதலாகப் பிரிக்கப்பட்டு, இரண்டாவது அணி அமைக்கப்பட்டது. அது உடனே தாக்குதலுக்கும் சென்றது. ஜுலை 26 அன்று ஒரு அணி எஸ்ட்ராண்டா பால்மாவை தாக்கியது. அதிலிருந்து ஐந்து நாட்கள் கழித்து, மற்றொரு அணி, அங்கிருந்து 30 கி.மீ. தூரத்தில் உள்ள புய் சிட்டோவை தாக்கின. அதற்கு பிறகு போர்க்களங்கள் முக்கியத்துவம் பெற்றன. எதிரியின் எதிர்தாக்குதலை நாங்கள் உறுதியாக எதிர்த்தோம். சியராவிற்குள் எதிரி புக முயன்ற அனைத்து முயற்சிகளும் தரை மட்டமாக்கப்பட்டன. மிகப் பெரிய முன்தளமொன்றையும் நாங்கள் பாதுகாத்து வந்தோம்.

இந்தப் போக்கினால், உள்ளூர் விவசாயிகளின் நம்பிக்கையை கொரில்லாக்கள் பெற்று வந்தனர். நகரங்களில் இருந்தும் சிலர் சேர்ந்துக் கொள்ளப்பட்டனர். இதனால் இன்னுமொரு புதிய அணி துவக்கப்பட்டது. 1958 பிப்ரவரிக்குப் பின்னர், இந்த அணிகள் முன்னேறித் தாக்கும் பணியில் ஈடுபட்டன. அல்மெய்மா தலைமை ஏற்று நடத்திய மூன்றாவது அணி சாண்டியகோவிற்கு அருகில் வந்து விட்டது. சில மாதங்களுக்கு முன்பு இறந்த பிராங் பயஸின் நினைவைப் போற்றும் வகையில் பெயர் இடப்பட்டிருந்த ஆறாவது அணி, ராகுல் காஸ்ட்ரோவின் தலைமையில், மார்ச் முதல் வாரத்தில் முக்கியமான நெடுஞ்சாலையைக் கடந்து சென்று மாயாரியைச் சுற்றியுள்ள குன்றுகளில் தன்னை நிறுவிக் கொண்டது. அங்குதான் இரண்டாவது ஓரியண்டல் படைப்பிரிவான ‘பிராங் பயஸ்’ உருவாக்கப்பட்டது.

அரசுத் தணிக்கையையும் மீறி எங்களது வெற்றிச் செய்திகள் மக்களிடம் பரவத் துவங்கின. கியூப மக்கள் முதல் முதலாக ஒரு கலகப்படையின் வெற்றியை எதிர் பார்க்கத் துவங்கினர். பிறகுதான் ஹவனாவில் இருந்து, ஒரு தேசிய அளவிலான வேலைநிறுத்தத்திற்கான, குறிப்பாக புரட்சிகரமான பொது வேலை நிறுத்தத்திற்கான கருத்து விவாதிக்கப் பட்டது.

மொத்தப் போராட்டத்தில் கிளர்ச்சிப் படையின் பணி என்பது ஒரு ‘எரிச்சல் ஊட்டும் முள்’ அல்லது கிரியாஊக்கி என்ற அளவில் மட்டுப்பட்டு போய் இருந்திருக்கும். அந்நாட்களில்தான் எங்களது கொரில்லாக்கள் மிகவும் அஞ்சாநெஞ்சத்துடனும், வெற்றியுடனும் இயங்கி வந்தனர், அச்சமயத்தில்தான் எங்களது காமிலோ சியன்புகோஸின் வீரகாதை பிறந்தது. அவரது தலைமையில் உள்ள படை, மத்திய உத்தரவின் படி, ஓரியண்டே சமவெளிகளில் கடுமையான மோதல்களுக்குப் பின் வெற்றிகரமாக முதல்முறையாக நுழைந்திருந்தது.

எப்படி இருந்தபோதிலும், பொது வேலை நிறுத்தம் மிகவும் மோசமாக திட்டமிடப் பட்டு நடத்தப்பட்டது. அது தொழிலாளர்களின் போராட்டம், அவர்களின் ஐக்கியம், புரட்சிகர நடவடிக்கைகள் குறித்த அவர்களின் கருத்து ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ளத் தவறிவிட்டது. இரகசிய வானொலி ஒன்றின் மூலம், பொது வேலை நிறுத்தத்திற்கான அறைக்கூவல் விடப்பட்டது. ஆனால் சரியாக எந்தநாளில் அதைச் செய்ய வேண்டும் என்பது, கடைசி வரை இரகசியாக வைக்கப்பட்டு வாய்வழிச் செய்தியாக மக்களுக்கு தெரிவிக்கப்படும் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் இந்த முறை மக்களுக்கு தகவலைச் சரியாகக் கொண்டு போய் சேர்க்கத் தவறி விட்டது. வேலைநிறுத்தம் தோற்றதுடன் மட்டும் அல்லாமல், பல துடிப்புள்ள அர்பணிப்பான புரட்சிகரத் தலைவர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டனர்.

தவறு எப்படியெல்லாம் ஏற்பட்டிருந்தது என்பதற்கு ஒரு உதாரணம் கூறுகிறேன். இதை யாராவது ஒருநாள் விசாரணை செய்ய வேண்டும். வடஅமெரிக்க ஏகபோக அமைப்புகளின் பேச்சாளராக இருந்த ஜுலஸ் டுபாய்ஸ் வேலைநிறுத்தம் சரியாக எந்த நாளில் எத்தனை மணிக்கு நடைபெறும் என்பதை தெரிந்து வைத்திருந்தான்.

எப்படியோ வேலைநிறுத்தத்தின் தோல்வி, ஆயுதப் போராட்டத்தின் மூலமாகதான் அரசைத் தூக்கியெறிய முடியும் என்பதைத் தெளிவாக்கியது. அதனால் ஆயுதப் போராட்டம் முடுக்கி விடப்பட்டு, கூர்மையாக்கப்பட்டு கடைசியாக அரசுப்படைகளை வீழ்த்துவது துரிதப்படுத்தப் பட்டது.

அச்சமயத்தில் நாங்கள் விவசாயிகளுடன் ஆன உறவை இன்னும் நெருக்கமாக்கிக் கொண்டோம். விடுவிக்கப்பட்ட பகுதிகளில் சட்ட ஒழுங்கு மற்றும் குற்றவியல் விதிகளுடன் கூடிய புரட்சி நிர்வாகம் ஒன்றை நாங்கள் நிறுவினோம். அங்கு நாங்கள் நீதி நிர்வாகத்தை உருவாக்கினோம். உணவு வகைகளை விநியோகித்தோம்; வரிகளை விதித்தோம். அடுத்துள்ள பகுதிகளும் எங்களுடைய இருப்பை உண்ர்ந்தன. அடுத்த இரண்டு மாதங்களில் மூன்று பெரிய அதிரடித் தாக்குதலை நாங்கள் நடத்தினோம். அதில் எதிரிகள் ஆயிரம் பேர் சாகடிக்கப்பட்டதால், அவர்களின் ஒழுங்கும், கட்டுப்பாடும் அடியோடு சீர்குலைந்து விட்டது; அதே சமயம் எங்களின் பலம் புதிய அறுநூறு போராளிகளின் வரவால் கூடிப்போனது.

எங்களை தோற்கடிக்க முடியாது என்பது தெளிவாகி விட்டது. ஒரியண்ட்டேயில் உள்ள ஒவ்வொரு வழியும் எதிரி சாவைச் சந்திக்கும் முனையாக மாறிவிட்டது. அணி எண் இரண்டைத் தலைமை ஏற்று நடத்தி வந்த கமிலோ சியன்பு கோஸிக்கும்,  புரட்சியின் மற்றொரு வீரனான அன்ட்டனியோ மாசியோவின் நினைவைப் போற்றும் வகையில் பெயரிடப்பட்டிருந்த அணி எண் எட்டாவதின் தலைமைப் பொறுப்பில் இருந்த எனக்கும், கமகுவே பிராந்தியத்தைக் கடந்து சென்ற, எதிரியின் தகவல் தொடர்புச் சாதனங்களைத் துண்டிக்கும் விதத்தில் லாஸ் வில்லாஸில் தளத்தை நிறுவுமாறு உத்தரவிடப்பட்டது.

இந்த நடவடிக்கை எங்கள் படைபலத்திற்கும் இராணுவத்திற்கும் இடையே இருந்த இடைவெளியை மாற்றிவிட்டது. தலா 80 பேரும் 140 பேருமாக இருந்த, எங்களது இரு சிறு அணிகள், ஒன்றரை மாதத்திற்குள், ஆயிரம் பேர் அடங்கிய எதிரி இராணுவம் சுற்றி வளைத்துத் தாக்கியதையும் மீறி அதனுடன் பொருதி, கமாகுவே பள்ளத்தாக்கை கடந்துவிட்டன. அதை தாங்கள் சாதித்து விட்டோம். தீவு இரண்டாக பிளக்கப்பட்டது.

தகவல் தொடர்பு சாதனங்கள் இல்லாமல், எளிதில் இடம் பெயரும் தன்மை இல்லாமல், நவீனப் போர்களத்தின் அடிப்படை ஆயுதங்கள் கூட இல்லாமல், இரு சிறிய அணிகள் வெகுவாகப் பயிற்சி எடுத்துள்ள, கணிசமான ஆயுதங்கள் வைத்துள்ள இராணுவத்தை எதிர்த்துப் போரிட முடியும் என்பது விநோதமாக புரிந்து கொள்ள முடியாததாக,  நம்ப முடியாததாகத் தென்படும். இதற்கு அடிப்படை இரண்டு பிரிவினரின் வேறுபட்ட குணாம்சம்தான். கொரில்லாப் போராளி எவ்வளவுக்கு எவ்வளவு அசௌகரியமாக இருக்கிறாளோ, எவ்வளவுக்கு எவ்வளவு இயற்கையின் கடுமையை அனுபவித்து வருகிறானோ, அவ்வளவுக்கு அவ்வளவு வீட்டில் இருப்பதாக உணர்கிறான்; அவனது கட்டுப்பாடும் மனஉறுதியும் மிக உயர்ந்து காணப்படுகிறது; அவனது பாதுகாப்பு உணர்வு உச்சத்தில் இருக்கிறது. அதே சமயம் அவன் சந்திக்கும் ஒவ்வொரு போராட்ட கணத்தின் போதும், ஒரு நாணயத்தை சுண்டிப் போட்டு அதிர்ஷ்டத்தை நம்புவது போல், அபாயத்தை எதிர் கொள்கிறான். அதனால் ஒரு கொரில்லாப் போராளிக்கு மோதலைத் தொடர்ந்து அவன் உயிர் பிழைத்து இருக்கிறானா இல்லையா என்பது முக்கியமில்லாமல் போய் விடுகிறது.

இப்போது எங்கள் எதிரி இராணுவ வீரர்களாக இருந்தவர்களையும் நாங்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டோம்; அவர் தற்போதை சர்வாதிகாரியின் இளநிலை பங்காளியாய் இருக்கலாம்; நமது கவனத்தை ஈர்த்துள்ள கியூப உதாரணத்திலுள்ள எதிரி இராணுவ வீரன், சர்வாதிகாரியின் இளநிலைப் பங்காளி; வால் ஸ்டிரிட்டில் துவங்கி அவனுடன் முடிவடையும் ஒரு நீண்ட வரிசையில் நிற்கும் பகல் கொள்ளைக்காரர்களிடமிருந்து பெறும் கடைசித் துணுக்கைப் பெற துடித்துக் கொண்டிருப்பவன்தான் இவன். அவன் தனது பல சலுகைகளைப் பாதுகாக்க நியமிக்கப்பட்டவன். ஆனால் அவனுக்கு அவைகள் முக்கியமானவைகளாக இருக்கும் வரை மட்டுமே அவன் அவற்றைப் பாதுகாப்பான். அவனது ஊதியமும் ஓய்வூதியமும், அவன் எதிர்நோக்கும் சில அபாயங்களுளக்கு ஈடானாலும் அவை எப்பொழுதுமே அவனது உயிருக்கு ஈடாகாது. அச்சலுகைகளை பாதுகாக்க அவன் உயிரைக் கொடுக்க வேண்டியிருக்கும் பட்சத்தில், அவன் அதை விட்டு விட்டு ஓடிவிடத் தயங்குவதில்லை. அதாவது, கொரில்லா அபாயத்தை எதிர்கொள்வதில் இருந்து அவன் விலகி விடுவான். இந்த இரண்டு கருத்துகளிலிருந்தும் இரண்டு அறவியலில் இருந்தும், 1958 டிசம்பர் 31 நெருக்கடி முளைவிட்டு, பாடிஸ்டாவின் வீழ்ச்சிக்கு கட்டயம் கூறியது. .

இதற்கிடையே புரட்சிபடையின் மேம்பட்ட நிலை, நாங்கள் லாஸ் விலாஸில் நுழைந்தவுடன் தெளிவாகப் புலப்பட்டது. ஜூலை 26 இயக்கத்தின் பிரபலம், அனைவரிடமும் அனைத்து இடங்களிலும் பெருகியது; புரட்சிகர செயலகத்தில், லாஸ் விலாஸில் உள்ள இரண்டாவது முன்னணியில் மக்கள் சோசலிச கட்சியில், வேறு அதிகாபூர்வ அமைப்புகளின் உள்ள சிறிய கொரில்லாக் குழுக்களிடம் எல்லாம் அதன் பிரபலம் பெருகியது. இதற்கு பெருமளவு காரணம், காந்தமென கவர்ந்திழுக்கும்

தன்மையுடைய எங்கள் தலைவர் ஃபிடல் காஸ்ட்ரோ என்றாலும், எங்கள்புரட்சிகர நோக்கில் இருந்த நியாயமும் மற்றொரு காரணம்.

இத்துடன் புரட்சி முடிவடைந்தது. ஆனால் காடுகளிலும் ஒரியன்டே சமவெளிகளிலும் கமாகுவே பள்ளத்தாக்குகளிலும், லாஸ் விலாஸின் மலைகள், சமவெளிகள் மற்றும் நகரங்களிலும், மிகக் கடுமையான இரண்டு வருடப் போராட்டத்திற்கு பின்னர் ஹவானா வந்தடைந்த மனிதர்கள், சித்தாந்த ரீதியாக, லாஸ் கொலடாராஸ் கடற்கரையில் இறங்கிய அல்லது போராட்டத்தின் முதல் கட்டத்தில் பங்கெடுத்துக் கொண்ட அதே மனிதர்கள் அல்லர். போராளிகள் விவசாயிகளிடம் கொண்டிருந்த அவநம்பிக்கை, அவர்கள் மீதான நேசமாகவும், அவர்களது நன்னடத்தை மீது ஏற்பட்ட மதிப்பாகவும் மாறி விட்டது. கிராமப்புற வாழ்க்கை குறித்த அவர்களின் அறியாமை, கிராமவாசிகளின் தேவைகள் என்ன என்பது குறித்த அறிவாக மாறிவிட்டது. புள்ளியியலுடனும் கோட்பாட்டுடனும் அவர்கள் கொண்டிருந்த விளையாட்டுக் காதல், நடைமுறை என்னும் சாந்துப் பூசி உறுதியாக்கப்பட்டு விட்டது.

சியரா மாஸ்ட்ராவில் நடைமுறைப்படுத்த படுவதில் துவங்கிய வேளாண்மைச் சீர்திருத்தக்கொடியை உயர்த்தி, இம்மனிதர்கள் ஏகாதிபத்தியத்துடன் மோதினார்கள். வேளாண்மைச் சீர்திருத்தத்தின் அடிப்படையில்தான புதிய கியூபாவை கட்டி எழுப்ப முடியும் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். வேளாண்மைச் சீர்திருத்தம், பறிக்கப் பட்டவர்களின் நிலத்தை மீண்டும் அவர்களுக்கே வழங்கும் என்பதையும், அநியாயமாக நிலத்தை பறித்து வைத்திருப்பவர்களிடம் இருந்து நிலத்தை பறிக்கும் என்பதையும் அவர்கள் அறிந்து வைத்திருந்தனர். மேலும் மிக அதிக அளவில் அநியாயமாக நிலத்தைச் சேர்த்து வைத்திருந்தவர்கள், அரசின் உள்துறையிலோ, அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசாங்கத்திலோ செல்வாக்கான மனிதர்களாக இருப்பவர்கள் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர். அதற்கும் மேல், அவர்கள் பிரச்சினைகளை தைரியத்துடனும், துணிச்சலுடனும், எல்லாவற்றிற்கும் மேலாக மக்களின் ஒத்துழைப்புடனும் வெற்றி கொள்ள கற்று வைத்திருந்தனர். எங்களது துன்பங்களின் மறுபக்கத்தில் காத்திருந்த சுதந்திரத்தின் வருங்காலத்தை, அவர்கள் இப்போதே தரிசிக்கின்றனர்.

இம்முடிவுகளை அடைவதற்கு நாங்கள் வெகுதூரம் பயணப்பட வேண்டி இருந்தது; வெகுவாக எங்களை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. உண்மையான போராட்டங்களின் ஊடாக எங்களது ஆயுதப் போராட்டம் பண்பு ரீதியாக வெகுவாக மாற்றம் அடைந்தபோது, கொரில்லாக்களின் சமூகக் கலவையும், எங்கள் தலைவர்களின் சித்தாந்த புரிதல்களும் மாறதல் அடைந்திருந்தன. இது தவிர்க்க முடியாமல் நடந்தது. ஏனெனில் ஒவ்வொரு மோதலும், ஒவ்வொரு போரும், அவர்களை விசாலப்படுத்தியது; விரிவாக்கியது. அதனால் அதில் பங்கேற்றவர்களிடம் மாறுதல் ஏற்பட்டது. இதுதான் புரட்சியின் வளர்ச்சியின் பாதை; ஒவ்வொரு நடப்பிலிருந்தும் கற்று உயர்வது, விவசாயி அவனது சொந்த வலிமை மீது நம்பிக்கை வைக்க கற்றுக் கொண்டான். அவன் புரட்சிப்படைக்கு அவனது நிலப்பகுதி குறித்த அறிவை, நிலத்தின் மீது அவன் வைத்திருந்த அன்பை துயரத்தை தாங்கக்கூடிய அவனது திடத்தை வேளாண்மைச் சீர்தித்தம் குறித்த அவனது தாகத்தை அளித்தான். அனைத்து வகையான அறிவுஜீவிகளும், அவர்களது சிறு பங்களிப்பை அளித்து, அறிவின் கோட்பாட்டு நியதி அமைப்பை உருவாக்கத் துவங்கினர். தெழிலாளி அமைப்புடனான அவனது ஐக்கிய உணர்வை அளித்தான். எல்லாவற்றிற்கும் மேலாக, புரட்சிப்படை வெறும் 'எரிச்சலூட்டும் முள்'ளாக மட்டும் இருக்கவில்லை; மாறாக அது, முக்கியமான அனைத்து மனிதர்களும் தங்களது வேதனைப் பயத்திலிருந்து மீண்டுவிடலாம் என்ற படிப்பினைக்கு பெரும் பங்களிப்பை ஆற்றியது.

இணைந்து செயல்படும் கருத்து முன்பு எப்போதைத் காட்டிலும் இப்பொழுது எங்களுக்கு தெளிவாகியது. இந்தக் கருத்து எவ்வாறு கூர்மைப்பட்டு எங்களுள் ஒன்றாகிக் கலந்தது என்பதை எங்களால் எலும்பின் குருத்து வரை உணர முடிந்தது. இது எங்களுக்கு ஆயுதப் புரட்சியின் பெருமதிப்பு குறித்து கற்றுக் கொடுத்தது. எந்த மனிதனும் கையில் ஆயுதங்களையும் நெஞ்சில் உறுதியையும் பெற்றிருக்கும் போது, அவனை அழிக்கவரும் எதிரியை நிர்மூலமாக்கும் பலத்தை பெற்று விடுகிறான் என்பதைக் கற்றுக் கொடுத்தது. மக்களின் விடிவிற்காக நாம் போராடிக் கொண்டு இருக்கும்போது, நமது முயற்சிகளுக்கும் நமது தியாகங்களுக்கும் அளவே இருக்க முடியாது என்பதை விவசாயிகளிடம் இருந்து நாங்கள் கற்றுக் கொண்டோம்.

மலைகளும் மேகங்களும் தொடுவானமாய் வீற்றிருக்க கியூப சூரியனின் தகதகப்பின் கீழ், விவசாயிகளின் வியர்வையில் குளிந்து, புரட்சியின் தலைவரும், அவரது கொரில்லாக்களும் ஹவனாவில் நுழைந்து போது, குளிர்கால தோட்டத்தில் இருந்து, மக்களின் பாதஅடிகளுடன், புதிய வரலாறும் மேலெழும்பியது.

**(வெர்தே ஒலிவோ அக்டோபர் 8, 1960 )**

www.padippakam.com

# கட்சி உறுப்பினர்கள் புரட்சியின் முதுகெலும்பு

*[புரட்சியின் படைவீரனாக இருக்கத் தேவைப்படும் தனிஇயல்புகள் குறித்து ஒட்டுமொத்தமான உயிரோட்டமான ஒரு சித்திரத்தை, சே இங்கு தருகிறார்]*

நமது புரட்சியின் குணாம்சம் குறித்து வலியுறுத்துவது, தற்போது தேவை இல்லாத ஒன்று; அடிப்படையில், ஓரளவு தன்னிச்சையுடன் ஏற்பட்ட இந்தப் புரட்சி, முதலில் ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் துவங்கி, இறுதியாக சோசலிசத்திற்கு மாறி விட்டது. மன்சுடாரில் தனது முதல் புரட்சி நடவடிக்கையில் ஈடுபட்டு, பின்னர் அது கிரான்மாரில் கூடாக வளர்ந்து, பின்னர் சோசலிசத்தை பிரகடனப் படுத்தி அது முடிவடைந்த போது, நமது புரட்சியை வழிநடத்தி சென்றவர்களில் முக்கியமானவர்கள், இந்த வளர்ச்சிப் பாதையின் ஊடாக பல கட்டங்களில் வேகமாக அடைந்த அனுபவங்களின் குணாம்சங்களை தற்போது வலியுறுத்துவதும் தேவையில்லாததுதான். இயக்கம் துவங்கிய போது இருந்த அதன் நமது புரட்சிகர பல பலவீனமான அமைப்பில் புதிய ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் அமைப்புகள் சேர்த்துக் கொள்ளப்பட்டு, அது நமது புரட்சியின் ஜனரஞ்சகமான அடிப்படையாக மாற்றப்பட்டது.

பின்னர் ஒரு புதிய சமுதாய வர்க்கம் கியூபாவின் அதிகாரத்தை தனது கையில் எடுத்துக் கொண்டது. அரசு அதிகாரத்தை செலுத்துவதில், அது பெரும் கட்டுப் பாட்டுடன் இருப்பது புலனாகி விட்டது. நாங்கள் அரசை கைப்பற்றியபோது இருந்த நிலைமையின் காரணமாக இது ஏற்பட்டது. அரசு இயந்திரத்தில் உள்ள அரசியல் அமைப்புகளிலும் மற்றும் அனைத்து பொருளாதார முகப்புகளிலும் செயல்படுத்தப் படவேண்டிய எண்ணற்ற பொறுப்புகளை நிர்வகிக்க போதுமான உறுப்பினர்கள் இல்லாது அப்போது நாங்கள் தவித்தோம். . .

அதிகாரத்தை கையில் எடுத்துக் கொண்டவுடன் அதிகார பீட அலுவலகங்கள் ஒரேயடியாய் குளறுபடியாகி விட்டன. பெரிய பிரச்சினைகள் ஏதும் ஏற்பட்டு விடவில்லைதான். ஏனெனில் பழைய கட்டமைப்பு இன்னும் உடைத்து எறியப்படாமல் இருந்தது. அந்த இயந்திரம் வயதான, உயிரற்ற மிருகம் போல மிக மெதுவாக இயங்கியது. ஆனால் அதற்கென்று ஒரு அமைப்பு இருந்தது. பொருளாதார கட்டுமானத்தில் மாறுதல்கள் கொண்டுவருவதற்கு முன்பு, புகுத்தப்பட்ட அரசியல் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளாமல், சட்டத்துவமான அதிகாரத்தின் ஊடாக, அது தன்னைக் காத்துக் கொள்ளத் தேவையான ஒருங்கிணைப்புகளை, மேற் கொண்டிருந்தது.

ஜுலை 26 இயக்கம், அதனுடைய இடது வலது பிரிவுகளுக்கு இடையேயான உட்தகராறு காரணமாக, கடுமையாக அடிபட்டு இருந்ததால், புணர் நிர்மாண முயற்சிகளில், அதனால் இறங்க முடியவில்லை. ‘பாப்புலர் சோசலிஸ்ட் கட்சி’ (பழைய கம்யூனிஸ்ட் கட்சி) கடுமையான தாக்குதல்களால் காயம்பட்டு இருந்ததாலும், பல வருடங்களுக்கு தடை செய்யப்பட்டு இருந்த காரணத்தாலும், இப்போது எதிர் கொண்டிருக்கும் புதிய பொறுப்புகளைக் அதனால் ஏற்க முடியவில்லை.

பொருளாதாரத்தில் முதன்முதலில் அரசின் தலையீடு ஏற்பட்டபோது, உறுப்பினர்களுக்கான தேடல் சிக்கல் நிறைந்ததாக இருக்கவில்லை. தலைமை ஏற்று நடத்தத் தேவையான குறைந்தபட்ச தகுதியுடைய மக்களிடம் இருந்தே அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ஆனால் இப்போக்கு வேகமெடுக்கத் தொடங்கிய போது, முதலில் வடஅமெரிக்க நிறுவனங்களும், பின்னர் மிகப்பெரிய கியூப நிறுவனங்களும் தேசியமயமாக்கப் பட்டதைத் தொடர்ந்து, நிர்வாக வல்லுனர்களுக்கான தேவை உண்மையிலேயே அதிகம் ஏற்பட்டு விட்டதாக தோன்றியது. மேலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலோ அல்லது அமெரிக்காவின் வேறு பகுதியிலோ உள்ள ஏகாதிபத்திய நிறுவனங்கள் உயர்வான சம்பளத்துடன் கூடிய மேலான பணிகளை அளிக்க முன்வந்த போது, அதனால் கவரப்பட்டு, தொழில்வல்லுனர்கள் வெளியேறி விட்டனர்; ஆகவே அவர்களுக்கான தேவையும் ஏற்பட்டது. ஒரு கட்டமைப்பை நிர்மாணிக்கும் பணிக்கு இடையே, புரட்சியோடு தொடர்பு கொண்டு, கற்றுக் கொள்ள வெகு ஆவலாக இருக்கும் மக்களுக்கு, சித்தாந்த கருத்துகளை அறிமுகப்படுத்த, அரசியல் இயந்திரம் முழுமுனைப்பான முயற்சியில், இறங்க வேண்டியிருந்தது.

நாங்கள், எங்களால் எவ்வளவு சிறப்பாக செயல்பட முடியுமோ, அவ்வளவு சிறப்பாக செயல்பட்டோம். ஆனாலும் அதிலும் சிரமங்கள் இருந்தன. நிர்வாக அமைப்பின் செயற்பகுதியில பல தவறுகள் இழைக்கப்பட்டன. மாபெரும் பொறுப்புகள் மிகுந்த புதிய தொழில் வல்லுனர்களால் பூதாகரமான தவறுகள் செய்யப்பட்டன. சிறிது சிறிதாக அமைதியான சொகுசான அதிகார பீடமாக மாறத் துவங்கிய அரசியல் இயந்திரத்திலும், நாங்கள் பெரிய விலை மதிப்பான தவறுகளைச் செய்தோம். அடுத்தக் கட்டத்திற்கான, முக்கியத்துவம் வாய்ந்த அதிகாரப்பீட பொறுப்பிற்கான

படிப்பகம்

படிக்கட்டாக கட்சி நோக்கப்பட்டது. அது பொது மக்களிடம் இருந்து, முழுவதுமாக அந்நியப்பட்டு விட்டது.

அக்குறிப்பிட்ட கணத்தில் நடைமுறையைச் சரியாக உணர நாங்கள் தவறி விட்டதுதான், இத்தவறுகள் எற்பட முக்கியக் காரணம். எங்களுக்கு தேவையான கருவிகளான, இடைநிலை உறுப்பினர்கள் கிடைக்காமை, எங்கள் நோக்கை பலவீனப்படுத்திக் கொணடிருந்தது; நிர்வாகம் மற்றும் உற்பத்தியை அபாயத்தில் ஆழ்த்தும் விதத்தில், கட்சி ஒரு அதிகாரபீட அமைப்பாக மாறிக் கொண்டு இருந்தது. பொதுஜன கொள்கையுடன் கட்சி உறுப்பினரை தேர்ந்தெடுக்கும் கொள்கையுடன் ஒத்துப்போகும் விதத்தில், உறுப்பினர் கொள்கை தீட்டப்பட்டிருந்தது. மக்களுடன் மீண்டும் தொடர்பு கொள்வது என்பதுதான் கண்டிப்பான குறிக்கோளாக இருந்தது. புரட்சியின் முதற்கட்டங்களின் அத்தொடர்பு மிகவும் நெருக்கமாக இருந்து வந்தது. இந்தத் தொடர்பை மீண்டும் ஏற்படுத்த ஒருபொருத்தமான அமைப்பு எங்களுக்கு தேவையாக இருந்தது. அரசியல் சார்ந்த வளர்ச்சிக்கு ஏற்ப, பொதுமக்களின் தேவையை எதிர்கொள்ளும் வகையில் கட்சியில் உறுப்பினர்களை சேர்த்தல் பொருத்தமானதாக இருக்க வேண்டும். பல சமயங்களில் அரசியல் கருத்துகளை, பிரதம மந்திரியான ஃபிடல் காஸ்ட்ரோ மூலமோ அல்லது ஏதாவது புரட்சியின் தலைவர்கள் நேரில் தோன்றியோ, அவர்கள் மூலம்தான் ஊடகங்களின் மூலமாக பரப்ப வேண்டி இருந்தது.

இச்சமயத்தில் நாம் நம்மிடம் கட்சியின் உறுப்பினர் என்பவர் யார்? என்ற கேள்வியைக் கேட்டுக் கொள்ள வேண்டி இருந்தது. உறுப்பினர் என்பவர் மத்திய அதிகார அமைப்பு வழங்கும் தீர்மானங்களை, அலசிப் புரிந்துக் கொண்டு, அதை மக்களிடம் கருத்துகளாக கொண்டு சேர்க்கும் அளவு, தேவையான அரசியல் வளர்ச்சியை அடைந்துள்ள ஒரு தனிமனிதனாக இருக்க வேண்டும் என நாம் இதற்கு பதிலளிக்கலாம். இது தவிர, மக்களின் அபிலாசைகளையும், ஆழமான செயல்நோக்கையும், துல்லியமாக புரிந்து கொள்ளக் கூடியவராகவும் அவர் இருத்தல் வேண்டும். சித்தாந்தம் மற்றும் நிர்வாக கோட்பாடுகளின் படி நடப்பவராய் அவர் இருக்க வேண்டும். பலதரப்பட்ட உண்மைகளில் இருந்து அதிகபட்ச பலன்களைப் பெறும் விதத்தில், வழிமுறையில் ஒழுங்குக்கு உட்படுத்தப் பட்ட முரண்பாடுகளை எப்படி மதிப்பீடு செய்ய வேண்டும் என்பதை அறிந்தவராய் அவர் இருக்க வேண்டும். உற்பத்தியில் கூட்டுத் தீர்மானம், தனிநபர் தீர்மானம் மற்றும் பொறுப்புகள் ஆகிய கொள்கைகளை எப்படி நடைமுறையில் செயல்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிந்திருக்க வேண்டும். புரட்சிக்கான அவரது விசுவாசம் நிரூபிக்கப் பட்டதாய் இருக்க வேண்டும். அவரது உடல் மற்றும் அறவியல் தைரியம் அவரது சித்தாந்த வளர்ச்சிக்கு தகுந்தார் போல் இருக்க வேண்டும். அவர் எந்த போராட்டத்தைச் சந்திப்பதற்கும், புரட்சிக்காக உயிரை அர்பணிப்பதற்கும் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். மேலும சுயவிமர்சனம் செய்யும் திறமையுடன், ஒழுக்கத்தை கடைபிடித்துக் கொண்டே, தேவையான தீர்மானங்களை எடுக்கவும், படைப்பாற்றல் மிக்க புதுமுயற்சிகளை மேற்கொள்ளவும் திறமையுடன் இருக்க வேண்டும.

ஆகவே கட்சிஉறுப்பினர் என்பவர் ஒரு படைப்பாளி; உயர்ந்த தலைவர்; உயர் வளர்ச்சியடைந்த அரசியல் வல்லுனர். அவரது பகுப்பாய்வு திறமையினால், அவரால் உற்பத்திப் பிரிவை தலைமையேற்று நடத்தவும், முன்னணியில் இருக்கும் அவருடைய நிலையினால் பொதுமக்களுக்கு கற்பிக்கவும் முடியும்.

கடினமாக உழைத்துப் பெற்றுள்ள நன்னடத்தையால் உருவாக்கப் பட்டுள்ள இச்சிறப்பான மனிதர், கியூப மக்களிடையே உள்ளார்; நாம் அவரைத் தினமும் சந்திக்கிறோம். இப்பொழுதிருக்கும் அனைத்து சந்தர்ப்பத்தின் நன்மைகளைப் பயன்படுத்தி, அவரை அதிகபட்சமாக வளர்ச்சியுறச் செய்து, அவருக்கு கற்பித்து, அவரது தனித்துவத்தில் இருந்து பெருவாரியான பயன்களைப் பெற்று, தேசத்திற்கு மிக உபயோகமானவனாக, மதிப்பு மிக்கவனாக அவரை மாற்றி விடுவதுதான் தற்போதைய தேவையான செயலாகும்.

ஒரு உறுப்பினன், தனது தினசரி செயல்கள் மூலமாக வளர்ச்சியடைகிறான். ஆனால் அந்த செயல்கள் ஒரு முறைப்படி அமையவேண்டும். உறுப்பினர்கள் விசேச பள்ளிகளில், மாணவர்களுக்கு முன்னுதாரணமாக விளக்கக்கூடிய ஆசிரியர்களால் கற்பிக்கப்பட்டு, அவர்கள் சித்தாந்தரீதியான் பெரும் முன்னேற்றம் அடையும் படி செய்ய வேண்டும. சோசலிசத்தைக் கட்டி எழுப்பத் துவங்கியுள்ள இந்தத் தருணத்தில், மிக உயர்ந்த அரசியல் விழிப்புணர்ச்சி இல்லாதிருக்கும் உறுப்பினர்களை நம்மால் வைத்துக் கொள்ள இயலாது. அரசியல் விழிப்புணர்ச்சி என்பது மார்க்சிய கொள்கையை கற்பதை விட முக்கியமானது. ஒரு தனிப்பட்ட மனிதன் தன் செயல்களுக்கு பொறுப்பு ஏற்றுக் கொள்வதும், உயர்மட்ட உத்வேகத்துடன் பலவீனங்களை குறைத்து, நல்லொழுக்கத்தை கொண்டிருப்பதும் கண்டிப்பாகத் தேவைப் படுகிறது. புரட்சியின் அனைத்துப் பிரச்சினைகளிலும் அவர் தொடர்ந்து மூழ்கிக் கொண்டிருப்பதும் அவசியம். உறுப்பினர்களை வளர்ச்சியடையச் செய்ய முதலில் மக்களிடம்

தேர்ந்தெடுத்த சிறப்பான கொள்கைகளை எடுத்துச் சென்று, உறுப்பினர்களிடம் பதிய வைக்க வேண்டுமு. பொது மக்களிடம் இருந்துதான், தியாகத்தில் புடம் போடப்பட்ட வருங்காலத் தலைவர்களை தேட வேண்டும். வளரத் துவங்கி இருக்கும் மக்களை சிறப்புப் பள்ளிகளுக்கு அழைத்து வரவேண்டும். அதுவும் இல்லையெனில் அவர்களுக்கு பொறுப்பான கடமைகளை கொடுத்து, அதன் மூலம் நடைமுறைப்பாணியில் அவர்களின் திறமையை உயர்த்த வேண்டும்.

கடந்த வருடங்கள் நாம் ஏராளமான புதிய உறுப்பினர்களை கண்டு பிடித்துள்ளோம். ஆனால் போதுமான கட்சி வழிகாட்டுதல் இல்லாமல், நமது இளம் உறுப்பினர்கள் புரட்சிகர உருவாக்கத்தில் யதார்த்தத்தை சந்திக்க வேண்டி இருப்பதால், அவர்கள் அனைவரின் வளர்ச்சியும் சமமாக இருப்பதில்லை. ஒருசிலர் வெற்றி பெற்று விடுகின்றனர். ஆனால் பலர் அதை முழுமையாகச் செய்ய முடியாத நிலையில், பாதி வழியிலேயே விலகி விடுகின்றனர். அல்லது அதிகாரத்துவச் சிக்கல்களிலும், பதவிக்கான ஆசைகளிலும் மாட்டிக் கொண்டு காணாமல் போய் விடுகின்றனர்.

வெற்றிக்கான உத்திரவாதம் அளிக்கவும், புரட்சியை பேணிக் காக்கவும் நமக்கு பலவிதமான கட்சி உறுப்பினர்கள் தேவைப் படுகிறார்கள். முதலில் மக்களை ஒருங்கிணைக்கவும் சோசலிச ஐக்கிய புரட்சி கட்சியின் செயல்பாடுகளை மக்களிடம் கற்பிக்கவும், உறுப்பினர்களே அடித்தளமாக விளங்குவார்கள். அவர்களுக்கு தேசிய வகுப்புகளிலும், புரட்சிக் கல்விக்கான பிராந்திய பள்ளிகளிலும் கற்பிக்கும் வேலையை ஏற்கனவே துவங்கியாகி விட்டது. மேலும் இராணுவ உறுப்பினர்களும் தேவைப்படுகிறார்கள். நமது போரில் தப்பிப் பிழைத்த இளம் போராளிகள் இருப்பதால், அவர்களில் இருந்த இவர்களைத் தேர்ந்தெடுக்கலாம். இவர்களுக்கும் கோட்பாடுகளில் பலமான அறிவு இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர்கள் நெருப்பில் புடம் போடப் பட்டவர்கள். மிகவும் மோசமான நிலைமைகளில் போரிட்டு தங்களை நிரூபித்துக் கொண்டவர்கள். புரட்சிகர அரசின் மீது முழுமையான நமபிக்கைக் கொண்டவர்கள். சியராவில் முதன்முதலில் நடந்த கொரில்லா மோதலைத் தொடர்ந்து புரட்சிகர அரசுடன் நெருக்கமாக பிணைக்கப் பட்டு வளர்ந்தவர்கள்.

அரும்பிக் கொண்டிருக்கும் புதிய சோசலிச அரசின் சிரமமான நிர்வாகத்திலும் திட்டத்திலும், தங்களை அர்பணித்துக் கொள்ளக்கூடிய பொருளாதார உறுப்பினர்களை நாம் வளர்த்தெடுக்க வேண்டும். வல்லுனர்களுடன் இளைஞர்கள் இணைந்து, முக்கியமான தொழில்நுட்ப வேலைகளை கையில் எடுத்துக் கொண்டு, அறிவியலுக்கு ஒரு சிந்தாந்த ஊக்குவிப்பை கொடுத்து பணிபுரிவது ரொம்ப அவசியமாகும். அப்படி செய்தால்தான் சீக்கிரமான வளர்ச்சி ஏற்படும். மற்றவர்களது குறிப்பிட்ட தொழில்நுட்ப அறிவை எப்படி நாம் சிறப்பாக பயன்படுத்திக் கொள்வது, மற்றவர்களது மற்றும் அரசு அமைப்புகளின் வினைதிட்பத்தை புரட்சியின் தாளத்திற்கு ஏற்ப எப்படி முறைப்படுத்துவது என்பதை ஒழுங்கு செய்ய ஒரு அமைப்பை நிர்மாணிப்பது அவசியமாகும்.

எல்லாவற்றிற்கும் அடிப்படைத் தேவை அரசியல் விழிப்புணர்ச்சியாகும். புரட்சியின் கொள்கைகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவு என்பது இதற்கு பொருளல்ல. அறிவுபூர்வமான ஒத்துழைப்பு மற்றும் தியாகம் செய்வதற்கான சக்தி, பகுப்பாயும் திறமை ஆகியவைதான் இதற்குத் தேவை. இத்திறமைகளை புரட்சியின் கொள்கை மற்றும் நடைமுறைக்கு ஒவ்வொரு தளத்திலும் மக்கள் பங்களிப்புகளை அளிக்கக் கோரும் இத்தோழர்கள், மக்களிடம் இருந்தே தேர்ந்தெடுத்து பெறவேண்டும். சிறப்பானவர்களே காலப்போக்கில் கட்சியில் தங்குவார்கள், சிறப்பானவர்களுக்கு வளர்ச்சியடை அதிக சந்தர்ப்பங்கள் வழங்கப்படும் என்ற கொள்கையின் அடிப்படையில் இந்த உறுப்பினர் சேர்க்கை கொள்கை அமைய வேண்டும்.

இவ்வனைத்துப் பகுதியிலும் பல்வேறுபட்ட நிலைகளில் உறுப்பினர்கள் பணி புரிந்து வந்தாலும், உறுப்பினர்களின் பணி என்னவோ ஒன்றேதான். சோசலிசப் புரட்சியின் ஐக்கியக் கட்சி என்ற சித்தாந்த இஞ்சினுக்கு, உறுப்பினர்கள்தான் உந்துச்சக்தி. அவர்களை நாம் இந்த இஞ்சினை ஆற்றல் மிக்க உந்தித் தளளுகிற கருவி என்று அழைக்கலாம், ஏனெனில் அதுதான் செம்மையான இயக்கத்தை உறுதி செய்யும் பாகமாக இருக்கிறது. அது ஆற்றல் மிக்க ஒன்று என்று ஏன் கூறுகிறோம் என்றால், அது கோரிக்கைகளையோ முழக்கங்களையோ மட்டும் பரப்பும் சாதனமல்ல; மாறாக தலைவர்கள் தகவல்கள் பெறவும் மக்கள் வளர்ச்சியடையவும் உதவி அவர்களுக்கு இடையே ஒரு பாலமாக விளங்கும் ஒரு கருவி. இதன் குறிக்கோள் கண்காணித்தல் புரட்சியின் தாக்கம் மறைந்து விடாமலும் தன்னாடாமலும், தொய்ந்து விடாமலும் இருப்பதைக் கண்காணித்தல் ஆகும். இது ஒரு உணர்வுமயமான பொறுப்பு; மக்களிடம் உருவாவதை கட்சிக்கு தெரியப் பத்துவதும், கட்சி கொடுப்பதை மக்களிடம் கொண்டு செல்வதும் என்ற முக்கியமானது இதன் பொறுப்பாகும். .

இயக்கத்தின் முதன்மையான வேலை உறுப்பினர்களை வளர்த்தெடுப்பதாகும். உறுப்பினர்களை வளர்தெடுப்பதை புரட்சிகர அரசாங்கம் மிகுந்த உத்வேகத்துடன் துவக்கி வைத்துள்ளது. அதன்

தேர்ந்தெடுக்கும் கொள்கையுடன் கூடிய உதவித் தொகை திட்டம், தொழில் நுட்ப பயிற்சிக்கு பலவித சந்தர்ப்பங்கள் அளிக்கும் தொழிலாளர் கல்வித் திட்டம், சிறப்பான தொழிற்கல்விப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகள் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றை நிறுவுதல், கடைசியாக தேசிய அளவில் கல்வி வேலை புரட்சி கண்காணிப்பு ஆகியவையே தாரக மந்திரமாக இருக்கச் செய்தல் போன்ற இவைகள் இளம் கம்யூனிஸ்ட் லீக்கை அடிப்படையாகக் கொண்டுள்ள வளர்ச்சி ஆகும். அதிலிருந்து வருங்காலத்தில் புரட்சியை முன்னெடுத்துச் செல்லும் உறுப்பினர்கள் உட்பட பல்வேறு வகையான உறுப்பினர்களும் உதித்தெழுவார்கள்.

உறுப்பினர் என்ற தத்துவத்தோடு, தியாகம் செய்யும் மனப்பான்மை புரட்சியின் முழுப் பரிமாணமாயும், அதற்கு உண்மையாய் தானே விளங்கிக் காட்டும் உணர்வும் பின்னிப் பிணைந்துள்ளன. உறுப்பினர், ஒரு அரசியல தலைவரைப் போல் நன்மதிப்பை வென்றிட வேண்டும். புரட்சியின் முன்னணிப் பாதையில் தான் வழி நடத்திச் செல்ல வேண்டிய தோழர்களின் நேசத்தையும் மதிப்பையும் அவர் பெறுவது மிகவும் இன்றியமையாததாகும்.

தொழிலாளர்கள் தேர்வு வைத்து தேர்ந்து எடுக்கப்படும் பழைய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களுடன், தற்போது கட்சியுடன் இணைந்து கரைந்து போன சிறப்பான பாட்டாளிகளும் சேர்ந்து உருவாகும் பொதுக்குழுவில், பெரும்பான்மையானவர்களை கவரும் படி யாரால் பேச முடிகிறதோ, அவர் நிச்சயம் சிறந்த உறுப்பினர் ஆவார். முதலில் ஒரு சிறு குழுவாக அவர்கள் இருந்தாலும், அவர்கள் தொழிலாளிகளின் பால் சிறந்த பாதிப்பை ஏற்படுத்துபவர்களாய் இருக்க வேண்டும். சோசலிச பூரண உணர்வு அதிகரித்ததும் மக்களுக்காக முழு அர்பணிப்புடன் பணிபுரிந்தால், இந்த எண்ணிக்கை உயரும். இத்திறமையுடன் கூடிய, அடுத்த கட்டத் தலைவர்களால் நாம் எதிர் கொள்ளும் கடுமையான வேலைச் சுமைகள் முடித்து வைக்கப்படும். ஒழுங்கற்ற தவறான முறைகள் அனைத்தும் சிறிது காலத்தில் மறைந்துவிடும். சரியான கொள்கைகள் எப்போதும் நிலைத்து நிற்கும். அது ஒருபோதும் அவைக;ள கை விடப்படாது. வருங்கால கம்யூனிஸ்ட் கட்சியின் பொறுப்புமிக்க நிலைகளை, அது இட்டு நிரப்பும், உழைக்கும் வர்க்கம் புதிய உத்வேகத்துடனும் கட்சியின் வழிக்காட்டுதலுடனும் நமது புரட்சியின் வேகமான வளர்ச்சிக்கு உத்திரவாதம் அளிக்கும் உறுப்பினர்களை உருவாக்கும் பணியை உற்சாகமாகத் தொடங்கும். இதில் தோல்வி என்ற பேச்சிற்கே இடம் இல்லை.

(‘கியூபா சோசலிஸ்ட்’ எண்:13, 1962 செப்டம்பர்)

# கட்சியின் போர்க்குணம்

*[இவ்வுரை சோசலிச சமூகத்தில் புரட்சிக்காரன் இன்னும் பெண்களை பாரபட்சமாய் நடத்துவதற்காக, அவனைக் கடுமையாக நிந்திக்கிறது; மேலும் உற்பத்தித்திறனும், உள்மன விழிப்புணர்வும் எங்ஙனம் எங்ஙனம் அறவியல் செயலூக்கத்திற்கு அழைத்துச் செல்கிறது என்பதை விளக்குகிறது. அறவியல் செயலூக்கத்திற்கு பதிலாக பொருளாதார செயலூக்கம் என்பது முதலாளித்துவ சமூகத்தின் அடிப்படைதான் என்பதை எடுத்துக் காட்டுவதுடன், அதை அழித்து ஒழிப்பதுதான் சோசலிசத்தின் வேலை என்பதையும் உறுதியாய் எடுத்துச் சொல்கிறது. கியூபாவை பொறுத்தவரை, அது முழுவதுமாய் இன்னும் (அதாவது சே இவ்வுரையை நிகழ்த்தும் போது) நிறைவேற்றப் பட்டது என்றுக் கொள்ள முடியாது. எனினும் இவ்வுரை போர்க்குணம் மிக்க மார்க்சியர்களின் படைப்புத்திறன் மிக்க மார்க்சியத்தைப் பற்றிப் பலவானப் பேசி நிற்கிறது]*

நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த நூற்பாலையாக உங்கள் அரிகுவானாபோ ஆலை விளங்குவதால், உங்களது கூட்டத்தில் பங்கேற்க, நாங்களும் இந்தப் பிராந்தியத்தையும் நமது கட்சியையும் நிர்வகிக்கும் தோழர்களும் முடிவு செய்தோம். தற்போது நாட்டில் உள்ள தொழிற்சாலைகளிலேயே இதுதான், அதிகத் தொழிலாளர்களைக் கொண்டுள்ளது. அதாவது, நமது நாட்டிலுள்ள மிகப் பெரிய தொழில் மையமாக இது விளங்குகிறது. மேலும் மக்களின் நலனுக்கு பெரும் பங்கை ஆற்ற அர்ப்பணிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் இது முக்கியப் பங்காற்றுகிறது. நமது நிலை எவ்வளவு மோசமாக இருந்தாலும், புரட்சி நமது மக்களுக்கு அளிக்க கடமைப் பட்டுள்ள மிக அடிப்படையான விஷயமான உடுக்க உடையளிப்பதை இந்த நூற்பாலை நிறைவேற்றுகிறது.

அது மட்டமல்லாது, நமது கட்சி அமைப்பில் பல தொடர்ச்சியான மாற்றங்களை விளைவித்துள்ள, புதிய நடைமுறை வளர்ச்சியை ஆராய்ந்து பார்க்கும் பொருட்டும், நாங்கள் இங்கு வந்துள்ளோம். ஆகவே இந்தப் புள்ளியில் இருந்து, மக்களிடையே திரும்பி போவது என்பது ஆரம்பிக்கிறது.

நீங்கள் அங்கீகரித்து அனுப்பும் புரட்சிகர சோசலிச ஐக்கியச் கட்சியின் உறுப்பினர்கள், பிற தொழிலாளர்களின் ஒட்டுமொத்த ஆதரவைக் பெற்றிருப்பவர்கள் ஆவார்கள்; நமது ஆளும் கட்சிக்கு முன்பு செய்து வந்த தலைமறைவு வாழ்க்கையும், இரகசியத்திட்டங்களை தீட்டி நிறைவேற்றும் பொறுப்புகளையும் கைவிட வேண்டிய கட்டத்திற்கு, நாம் வந்தவிட்டது. தற்போது கட்சியின் மையமான கட்சி அமைப்புகளை ஏற்படுத்தி அதற்கான பின்புல ஆதரவை ஏற்படுத்த வேண்டிய வேலையில் இறங்க வேண்டியுள்ளது.

இரகசிய அறைகளின் இருண்டபகுதிகளில் இருந்து கொண்டு, தோழர்களின் குணநலன்களை போதுமான அளவு ஆய்வு செய்யாமல், உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்கள் ஆகியவை தற்போது மாற்றப்பட்டு, புதிய கட்டமைப்பு உருவாக்கப்பட்டு வருகிறது. இதில் கட்சி ஏணியின் கடைசிப் படிக்கட்டில் இருக்கும் மக்கள்தான், எந்த மாதிரியான முன்னுதாரண தொழிலாளிகளை, கட்சி உறுப்பினராக்கத் தேர்ந்தெடுக்க முன்மொழிய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கிறார்கள்.

அதானல்தான் இந்தப் பெரு வித்தியாசம். ஆளும்கட்சி ஏராளமான மக்கள் பலத்தைப் பெறப் போவதும் அதனால்தான். கட்சியின் கட்டமைப்பில், ஒட்டுமொத்த கருத்தாக்கத் திட்டத்தில் ஏற்பட்டு வரும் ஏராளமான மாற்றங்களை ஒட்டி, கட்சி பாட்டாளி வர்க்க அரசின் தலைவனாக தன்னை உறதியாக நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. தனது முன்னுதாரணத்தின் மூலமாக, தனது செய்கையில் காட்டும் தைரியத்தின் மூலமாக, கட்சி நமது புரட்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் வழி நடத்திச் செல்லப் படுகிறது. ஆனாலும் இன்னும் அனைத்தும் சரியாகி விடவில்லை; நாம் இன்னும் ரொம்ப தூரம் போக ண்டேியுள்ளது. இன்னும் பல விஷயங்கள் சீர் செய்யப்பட வேண்டியுள்ளது.

நாம் இப்போது திரட்டியுள்ள புள்ளிவிபரங்கள் மட்டும் போதாது. மேலும் நாம் பல விபரங்களை பெற வேண்டியுள்ளது. 3000 பேர் வேலை செய்யும் இத்தொழில் மையத்தில் 197 தோழர்கள் மட்டுமே, புரட்சிகர சோசலிச ஐக்கியக் கட்சியில் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்பட தேவையான அனைத்து தகுதிகளும் கொண்டுள்ளனர் என இங்குள்ளவர்களால் அடையாளம் காணப் பட்டுள்ளார்கள். அதில் ஐந்து பேர் மட்டும்தான் பெண்கள். அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் இரண்டரை சதவீதத்தினர்தான் கட்சி உறுப்பினராய் தகுதிப்பெற தகுதியுடையப் பெண்கள். இங்கு அரிகுவானாபோவில் வேலை செய்யும் பெண்களின் சதவீதம், நமது புள்ளியல் காட்டும் இந்த இரண்டரை சதவீதத்தை காட்டிலும் அதிகம். சோசலிச சமுதாயத்தை கட்டி எழுப்புவது தொடர்பான பணியில், ஆணுக்கும் பெண்ணுக்கும் சமஉரிமை சமநிலைமை என்ற அடிப்படையில்

பெண்களை இணைக்கத் தவறிவிட்டதைதான் இது காட்டுகிறது. இப்படி ஏன் ஒவ்வொரு இடத்திலும் ஏற்படுகிறது என்பதற்கான காரணத்தை கண்டு பிடிக்க முயல்வது நமக்கு அவசியம்.

இதற்கு இரண்டு காரணங்கள் இருப்பது தெளிவாகவும், உறுதியாகவும் தெரிகிறது. பெண்கள் பரம்பரை பரம்பரையாக தாங்கள் பிணைக்கப் பட்டிருந்த தொடர்ச்சியான தளைகளில் இருந்து உண்மையிலேயே, தங்களை இன்னும் விடுவித்துக் கொள்ளவில்லை என்பது ஒன்று. இக்காரணத்தினால் அவர்கள் புரட்சிகர தொழிலாளர்களின் செயல்பாடு மிக்க வாழ்வில் தங்களை இணைத்துக் கொள்ள முடியவில்லை. அது தவிர்த்து இன்னொரு காரணம், பலமான பாலினமாக உள்ள ஆண், பெண்கள் இன்னும் போதுமான அளவு வளர்ச்சி பெறவில்லை என்று நினைத்துக் கொண்டு, அதை தங்களுக்கு சாதாமாக்கி கொள்கிறார்கள். இம்மாதிரியான இடங்களில் ஆண்களின் இருப்புதான் வெளிப்படையாகத் தெரிகிறது. அவர்கள்தான் கவனத்தை கவர்கின்றனர். ஆகையால், பெண்களின் பங்கு பற்றி வெளிப்படையாக விவாதிப்பது, இங்கு கொஞ்சம் மறக்கப்பட்டு விடுகிறது.

சில காலத்திற்கு முன்பு, ஒரு திறமையான பெண் அதிகாரியை தொழில்துறை அமைச்சகத்தில் வேலை மாற்றம் செய்ய நேரிட்டது. ஏன் தெரியுமா? அவர் வகித்த பதவியின் காணமாக, கண்காணிப்பாளர்களுடனோ அல்லது தலைமை அதிகாரியுடனோ சேர்ந்து பிராந்தியப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டி இருந்தது. இந்தத் தோழர் மணமானவர் (அவரது கணவர் புரட்சிப்படையைச் சார்ந்தவர் என்ற நினைக்கிறேன்), அதனால் அவரால் தனியாகப் போக முடியவில்லை. அதாவது அவரது கணவர் அதற்கு அனுமதித் தரவில்லை. அவரது கணவர், தனது வேலையில் இருந்து விடுப்பு எடுத்துக் கொண்டு, மனைவி எங்கெல்லாம் போகிறாரோ அங்கெல்லாம் கூட வர எப்பொழுதெல்லாம் சௌகரியப் படுகிறதோ, அதற்கு ஏற்றவாறு அவர் தனது பயணங்களை திட்டமிட வேண்டியிருந்தது.

பெண்கள் மீது செலுத்தப்படுகிற அடக்குமுறையின் அருவருப்பான உதாரணம் இது. ஒரு கணவன் அலுவலக நிமித்தம் வேறு இடங்களுக்குச் செல்கிற போது ஒவ்வொரு முறையும் அவருடன் சென்று, அவன் சபலத்திற்கோ வேறுவித பலவீனங்களுக்கோ ஆளாகிறானா என்று ஒரு மனைவி கவனிக்க ஆரம்பித்தால் என்ன ஆகும்? இது எதைச் சுட்டிக் காட்டுகிறது? இன்னும் பழமை நம் முதுகில் ஏறி உட்கார்ந்திருக்கிறது என்பதைத்தான் இது காட்டுகிறது. பெண்கள் விடுதலை அடைய வேண்டும் என்றால், அவர்கள் முழுச்சுதந்திரம் பெற வேண்டும்; அவர்களுக்குள் ஒரு சுதந்திரம் மலர வேண்டும். அவர்களைச் சில நடவடிக்கைகளில் ஈடுபட விடாமல் தடுப்பது, உடல்ரீதியான காரணம் மட்டும் அல்ல, இன்னும் அப்படியே இருக்கும் பழைய மரபின் மிச்ச சொச்சங்களும்தான்.

நாம் ஒரு புதிய சகாப்தத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதாவது ஒரு சோசலிச சமுதாயம் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சகாப்தத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். இங்கு அனைத்து விதமான பாகுபாடுகளும் களையப் பட்டுக் கொண்டிருக்கின்றன. இங்கு இன்னும் மீதமிருக்கும் ஒரே சர்வாதிகாரம், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் மட்டும்தான். தோற்கடிக்கப்பட்ட வர்க்கங்களுக்கு மேலாக, இன்று உழைக்கும் வர்க்கம் உள்ளது. நம் முன் அது நீண்டு படுத்திருக்கிறது. இருந்தாலும், நாம் கடக்க வேண்டியது நீண்ட நெடும்பாதை நெடிந்துள்ளது. வர்க்கங்களற்ற ஒரு சமுதாயத்தை, எந்தவித ஏற்றத்தாழ்வுகளும் இல்லாதிருக்கும் ஒரு சமுதாயத்தை, ஒரு முழுமையான சமுதாயத்தை, நாம் அடையும் வரை, நமது பாதை, போராட்டங்களும் சிரமங்களும் நிறைந்ததாகவே இருக்கும். இப்போது இருக்கும் காலக்கட்டத்தில், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தவிர, வேறு எந்த சர்வாதிகாரத்தையும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. பாட்டாளி வர்க்கத்திற்கு ஆண் பெண் என்ற பேதம் எல்லாம் கிடையாது. அது பொதுக் குறிக்கோளை அடையும் வரை, நாட்டின் அனைத்து வேலையிடங்களிலும் தொடர்ந்து இடைவிடாமல் இணைந்து போராடும், ஆணும் பெண்ணும் அடங்கிய வர்க்கம்.

நாம் செய்ய வேண்டிய எல்லா காரியங்களுக்கும் இப்படி உதாரணங்கள் கொடுத்துக் கொண்டே போகலாம். அவைகளில் மேலே சொல்லப் பட்டது, ஒரு உதாரணம், அவ்வளவுதான். இப்படி பல விஷயங்கள் இன்னும் செய்யப்படாமல் இருக்கிறது. புரட்சியின் வெற்றிக்கு முன்னர் உள்ள காலக்கட்டத்திற்கு மீண்டும் நாம் போகாமல், புரட்சிக்கு முந்தைய வரலாற்றிற்குச் சொந்தமான பழைய மரபுகள் இன்னும் உடைக்கப் படாமல் பலவைகள் இருக்கின்றன.

ஒரு தவைனாக வரவேண்டும் என்று யாரெல்லாம் விரும்புகிறார்களோ, அவர்களெல்லாம் இவைகளை எதிர்கொண்டு, தங்களை மக்களது தீர்ப்புக்கு ஆட்டபடுத்திக் கொள்ள வேண்டும். தனது செயல்கள் காரணமாக தனது தியாக உணர்ச்சி காரணமாக ஒரு சோசலிச சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியில் குதித்துள்ள பாட்டாளி வர்க்கம் தினமும் நடத்தும் போராட்டங்களின் முன்னணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட உணர்வு காரணமாக, மக்களின் நடுவே கட்சி உறுப்பினர் சிறந்து

விளங்கியதால்தான் அவர் ஒரு தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டார் என்ற நம்பிக்கை அவருக்கு வேண்டும்.

இந்த நம்பிக்கையை பெறுவதுதான் நம்மை இன்னும் கீழே பிடித்து இழுக்கிறது. நமது இளம் புரட்சிகர மரபுகளின் ஒரு பகுதியாக, தீய விளைவுகளையும் ஏற்படுத்த தொடங்கிவிட்ட இந்தச் சாபத்திலிருந்து, கேட்டில் இருந்து, நமது அமைப்பு இன்னும் விலகி விடவில்லை. மக்கள் அமைப்பு ஒன்றின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப் பட்டதாலோ அல்லது புரட்சியின் போது பல்வேறு பணிகளில் ஒன்றின் தலைவனாக தேர்ந்தெடுக்கப் பட்டிருந்ததாலோ, ஒருவன் இதர மக்களை விட தான் அதிகமாகப் பெறத் தகுதியுடையயவனாகிறான் என்ற எண்ணத்தை நாம் அடித்து நொறுக்கி விட வேண்டும. மற்றவர்களை காட்டிலும் அதிகமான தியாக உணர்வும், கடமை உணர்ச்சியும் ஒருவன் காட்டியதால், அவருக்கு பொருளாதார அன்பளிப்பை தரும் திட்டத்தை இங்கே நாம் குறிப்பிடுகிறோம்.

சோசலிச சமுதாயத்தை உருவாக்கும் நடைமுறையில் இயக்கவியல் ரீதியாகவும் எப்போதும் முரண்பட்டவையாகவும் இரு விஷயங்கள் திகழ்கின்றன. ஒருபுறம் பொருள் சலுகைகளையே நினைத்து வரும் ஒரு சமுதாயத்தில் இருந்து நாம் வந்துள்ளதால், பொருள் ரீதியான ஊக்குவிப்பு தேவைப்படுகிறது. நாம் அந்த பழைய சமுதாயத்தை அடிப்படையாக வைத்து ஒரு புதிய சமுதாயத்தை கட்டி எழுப்பி படிப்படியாக மக்களின் பழைய சமுதாய மனநிலையை மாற்ற முயல்கிறோம். மறுபுறம் அனைத்து மக்களின் தேவையையும் பூர்த்தி செய்யத் தேவையானவைகள் நம்மிடம் இல்லை. இக்காரணங்களினால் சோசலிச சமுதாயத்தை கட்டி எழுப்பும் நடைமுறையில் சிறிது காலத்திற்கு பொருட்களின் மீதான விருப்பம் நம்முடன் இருந்தே தீரும்.

மிகச் சரியாக இந்தக் காரணத்திற்காகதான், முன்னணிப்படையான நமது கட்சி, இதற்கு எதிரான தனது கொடியை உயர்த்திப் பிடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டி உள்ளது. பொருட்களில் ஆசை காட்டாமல் இருப்பது, பொருள் சலுகைகளை நிராகரிப்பது, தனது தியாகங்களுக்குப் பிரதியாய் தனது தோழர்களின் மதிப்பைத் தவிர, வேறு எதையும் எதிர்பாராமல் இருப்பது ஆகிய கொடிகளைதான் நமது உறுப்பினர்கள் தூக்கிப் பிடிக்கவேண்டும். புரட்சிகர சோசலிச ஐக்கியக் கட்சியின் அப்படிப்பட்ட உறுப்பினர்களை நீங்கள் தேர்ந்தெடுத்து அனுப்புவது, அந்த மாதிரியான கொள்கையை நீங்கள் அங்கீரித்திப்பதாகவே சரியாக காட்டி நிற்கிறது.

பொருள் சலுகைகள் தந்து ஊக்குவிப்பது என்பது கடந்த காலத்தின் எச்சம். அது நம் மக்களின் எண்ணத்தில் ஊறிப்போய் இருப்பதை நாம் ஒப்புக் கொள்ளதான் வேண்டும். புரட்சிகர வளர்ச்சி முன்னேற்றம் அடையும் போது, அதைப் படிப்படியாய் நாம் உடைத்து விடலாம். வேறு வகையான புதுவித சலுகை தற்போது அதிகரித்து வருகிறது; வேறுவிதமான பழையகாலத்தில் செய்வது போல், பொருளாதார சலுகை கொடுத்து ஊக்குவிப்பது போன்ற நடவடிக்கைகள், கண்டிப்பாக கல்லறைக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது, தற்போது உருவாகிக் கொண்டு வரும் நமது புதிய சமுதாயத்தில் பொருள் சலுகைகள் அதிகப் பங்கு வகிக்காது; நாம் இன்னும் முன்னேறும் போது, அவைகளின் மிச்சச் சொச்சங்களும் உதிர்ந்துவிடும். இன்று நடைமுறையிலுள்ள உத்வேகங்கள், பொருளாதார சலுகையின் முக்கியத்துவத்தை இழக்கச் செய்து, அந்த இடத்தில் கடமை உணர்வும் புதிய புரட்சிகர எண்ணங்களும் உருவாகக் கூடிய சூழ்நிலையை நாம் ஏற்படுத்த வேண்டும்.

தோழர்களே, நாம் முதல் படியில் காலெடுத்து வைத்து விட்டோம். புரட்சிகர சோசலிச ஐக்கியக் கட்சி அதிகாரபூர்வமாக இந்த வேலை மையத்தில்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்று நாம் கூறலாம். இன்று, ஒரு துவக்கமாக 197 பேர் இதில் இருக்கிறார்கள். அவர்களிடம் என்ன குணங்கள் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது? உங்களுக்குத் தெரியும், அவைகள் எவையெவை என்று; ஏனெனில் அத்தோழர்களைத் தேர்ந்தெடுத்தது நீங்கள்தான். தியாக உணர்வு, தோழமை, நாட்டுப்பற்று, போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் முன்னணியில் இருக்கும் குணநலம், மேன்மையுடன் வழிநடத்திச் செல்லும் முன்னுதாரணத் தலைமைப் பண்பு ஆகியவற்றை அந்தக் கட்சி உறுப்பினர் கொண்டிருக்க வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் அந்தப் புதிய கட்சி உறுப்பினர், புதிய உண்மைகளை தனது எலும்பின் குருத்து வரை உணர்ந்திருக்கும் ஒரு மனிதராயும் இருக்க வேண்டும். சாதாரண மக்களுக்கு ஒரு தியாகமாகத் தெரிவது, அவருக்கு இயல்பான ஒன்றாக, தினசரி நடைமுறையாகத் தெரியவேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், தனது தினசரி வாழ்வில் உள்ள கடமைகளை, ஏகாதிபத்தியத்தின் முற்றுகைக்குள் இருந்துக் கொண்டே வளர்ந்து வரும் ஒரு புரட்சிகர போக்கிற்கு ஆற்ற வேண்டிய கடமைகள் ஆகியவற்றின் அர்த்தத்தையே முழுவதுமாக மாற்றக் கூடியவனாக, அவர் இருக்க வேண்டும்.

எங்களால் இனியும் தடுக்க இயலாமல், துரதிர்ஷ்டவசமாக அடிக்கடி நடக்கும் கூட்டங்களில் ஒன்றில், சில தினங்களுக்கு முன்பு, கட்சியின் அமைப்பு குறித்த சமீபத்தில் நகைச்சுவை (அல்லது

எங்களுக்கு எட்டியவற்றில் கடைசியான) ஒன்றை ஒரு தோழர் கூறினார். கட்சியில் புதிதாக சேரப் போகிற ஒருவரைக் குறித்த நகைச்சுவை அது. அவரிடம் கட்சித் தலைவர்கள், அவர் ஒரு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும், வேலை நேரத்திற்கு பின்னரும் உழைக்க வேண்டும், மேலும் மேலும் கற்றுக் கொள்ள நேரம் ஒதுக்க வேண்டும், ஞாயிற்றுக்கிழமைகளில் தானாகவே முன்வந்து மற்ற வேலைகளில் ஈடுபட வேண்டும், தினசரியும் தானாகவே முன்வந்து வேறு பணிகள் இருந்தால் செய்ய வேண்டும், உல்லாசப் பொழுதுபோக்குகளை மறந்துவிட வேண்டும், வேலை வேலை என்பதையே குறிக்கோளாக கொள்ள வேண்டும், தற்போது இருக்கும் அனைத்து மக்கள் அமைப்புகளிலும் பங்கு பெற வேண்டும் என்றெல்லாம் கூறிவிட்டு, கடைசியாகக் கூறினார்கள்: “இவை போக, புரட்சிக்காக உனது வாழ்க்கையையே அர்பணிக்க நீங்க எப்போதும் தயாராக இருக்க வேண்டும். என்ன சம்மதமா?”

அதற்கு அந்த மனிதர் பதிலளித்தாராம்: “எல்லாம் சரிதான். ஆனால் நீங்கள் சொல்லும் விதத்தில் எல்லாம் வாழ்க்கை நடத்தும் அளவிற்கு என் பைத்தியம் இன்னும் முற்றவில்லை. முற்றியதும் வருகிறேன்”

இந்த நகைச்சுவை ஏன் இவ்வாறு உள்ளது? பழமைவாத கருத்துகளின் மறுஉருவம்தான் இந்த நகைச்சுவை வடிவம். இது புரட்சிகரமானதா? எதிர் புரட்சிகரமனாதா? இதை நான் அறியேன். ஆனால் இது உறுதியான எதிர்புரட்சி உணர்வை கொண்டுள்ளது என்று மட்டும என்னால் சொல்ல முடியும். ஏனெனில் புரட்சிக் கட்சியின் ஆளும்கட்சி உறுப்பினர் மற்றும் அதன் முன்னணி செயல்வீரன் என்ற முறையில் இத்தகைய துன்பங்களை (தியாகங்கள் என்று அவைகள் அழைக்கப் படுகின்றன) ஒரு புதிய ஆர்வத்தோடு, அந்த புதிய அமைப்பின் சொந்தக்காரன் என்ற முறையில் அவரே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற உணர்வுக்குப் பதில், ஏதோ அவருக்கு சம்பந்தம் இல்லாத வேலையை அவரது தலையில் கட்டுவது போல், அந்த நகைச்சுவை சித்தரிக்கிறது.

மிகவும் சாதாரணமான, உற்சாகமற்ற வேலைகள் கூட, தனிப்பட்ட நபர்களின் உற்சாகமான ஆர்வத்தின் காரணமாய், உள்ளார்ந்த சக்தியுடன் உத்வேகத்துடன் எடுக்கும் முயற்சியின் காரணமாய், முக்கியமான விஷயங்களில் உள்ள ஆழமான புரிதல் காரணமாய், தவிர்க்கவே முடியாதபடி மோசம் என்று நினைக்காமல், தியாகப்பூர்வமாய் செய்ய வேண்டிய பணியாக மாறிவிடும். இந்த மாதிரி தியாகம் செய்யாமல் இருப்பது கூட, புரட்சிக்காரனுக்குப் பெரும் தியாகமாக போய் விடக் கூடும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், கருத்துகளும், வடிவமைப்புகளும் இப்போது மாறுகின்றன.

ஒரு பழுத்த புரட்சியாளர், ஆளும் கட்சியின் உறுப்பினர். நமக்கு முன்னே இருக்கும் மிகக் கடினமான இப்போராட்டக் காலக்கட்டத்தில், ஒவ்வொரு மணித்துளியிலும், ஒவ்வொரு நிமிடத்திலும் உழைக்க வேண்டும். அவர் தொடர்ந்து தன்னை புதுப்பித்துக் கொண்டும், வளர்ந்துக் கொண்டும், ஆர்வத்தோடும் உழைக்க வேண்டும். இது அடிப்படையானது.

புரட்சி என்பதன் அர்த்தமே இதுதான். ஒரு மனிதன் தனக்குள் ஒரு புரட்சியாளனாக விளக்கி, அதை தனக்குள் உணரவும் வேண்டும் என்பதுதான் அதன் பொருள். அதை அவன் அனுபவிக்கும் போது, தியாகம் குறித்த கருத்துகள் புதிய வடிவைப் பெறுகின்றன.

புரட்சிகர சோசலிச ஐக்கியக் கட்சியில் இருக்கும் போராளி உறுப்பினர், ஒரு மார்க்சியவாதி. அவர் தனது மார்க்சியத்தை அறிந்திருக்க வேண்டும். இந்த உலகைச் சரியாகப் புரிந்து கொள்வதற்காக, இயக்கவியல் பொருள்முதல்வாதத்தை அவர் தனது பகுப்பாய்வில் தொடர்ந்து உபயோகித்து வரவேண்டும்.

ஆனால் இந்த உலகம் பெரியது; பரந்தது. அது பல கட்டுமானங்களைக் கொண்டிருக்கிறது. அது வேறுபட்ட பல நாகரிகங்களைக் கடந்துள்ளது. உலகில் பல பகுதிகளில் இப்போதும் சமுதாய வகுப்பு படிநிலைகள் உள்ளன; மனிதன் அறிந்ததிலேயே புராதனமான சமுதாயமான - புராதன கம்யூனிசச் சமுதாயத்தில் - இன்றும் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். துரதிஷ்டவசமாக அடிமை முறை கூட இருந்து வருகிறது; இன்னும் நிலப்பிரபுத்துவ முறை, உதாரணமாக லத்தீன் அமெரிக்காவில், இருந்து வருகிறது. முதலாளித்துவத்தின் கடைசிக் கட்டமான ஏகாதிபத்தியமும் இருக்கிறது. அது போலவே, சமத்துவச் சமுதாயத்தை உருவாக்க முனையும் மக்களும், சோவியத் யூனியனைப் போல கம்யூனிசத்தை உருவாக்க முனைபவர்களும் இருக்கிறார்கள்.

ஆனால் ஒரே சமுதாய அமைப்பைச் சேர்ந்த வேறுபட்ட மக்கள், அது முதலாளித்துவமோ, மிகவும் ஆரம்ப நிலையில் இருக்கும் சோசலிசமோ, அல்லது வேறு எந்த அமைப்போ, எதுவாக இருந்தாலும் சரி, அதில் அவர்கள் வேறுபட்ட வழிகளின் மூலமும், ஒவ்வொரு நாட்டிற்கும் உரிய தனிப்பட்ட நிலைமைகளுக்கு ஏற்பவும், இந்த வரலாற்றுக் காலகட்டத்திற்கு வந்து சேருகின்றனர்.

இக்காரணங்களால், மார்க்சியம் என்பது நடைமுறைக்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. அடிப்படையான மாபெரும் உண்மைகள் வெளிக்காட்டப் பட்டுவிட்டன. அதை ஒரு துவக்க

முனையாக வைத்து, இயக்கவியல் பொருள்முதல்வாதத்தை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி, உலகின் ஒவ்வொரு பகுதியிலும் இருக்கும் நிலைமைகளை புரிந்து கொள்ளப்பட வேண்டும். அதனால்தான் ஒரு கட்டுமானம், மற்றொன்றைப் போல இருக்க முடிவதில்லை. அவைகள் ஒவ்வொன்றின் நிர்மாணத்திற்கும் உரித்தான சிறப்பியல்புகளை அவைகள் அனைத்துமே கொண்டிருக்கின்றன.

நமது புரட்சியின் குணாதிசயமும் தனிச் சிறப்பானது. மாபெரும் உண்மைகளில் இருந்து, அவைகளைத் தனியாகப் பிரிக்க முடியாது. மார்க்சிசம் வெளிப்படுத்திய பேருண்மைகள் குறித்த அறிவு இல்லாமல், அவைகளைப் புரிந்து கொள்ள முடியாது. இவைகள் ஒரு பிடிவாதக் கொள்கையாக இருப்பதற்காகவே, கண்டுபிடிக்கப் பட்டதோ அல்லது உருவாக்கப் பட்டதோ இல்லை; அவைகள் சமுதாய வளர்ச்சியை தீர ஆராய்ந்து கண்டுபிடிக்கப் பட்டவை. ஆனால் அவைகள் விசேஷ நிலைமைகளுக்கு ஏற்ப, வித்தியாசமாக இருக்கும். அகவே புரட்சிகர சோசலிச ஐக்கியக் கட்சியின் உறுப்பினர்கள், படைப்பாற்றல் உள்ளவர்களாக இருந்து அதை விளங்கிக் கொள்வது அவசியம். அவர்கள் இந்தக் கோட்பாட்டுடன் ஒழுகி, இந்தக் கோட்பாட்டை ஒட்டியும், நாம் எல்லோரும் வாழ வேண்டிய போராட வேண்டிய இந்த நாட்டின் விசேஷநிலைமைகளை கணக்கில் எடுத்துக் கொண்டு, அதற்கு ஏற்புடையை ஒரு நடைமுறையை உருவாக்க வேண்டும்.

அதாவது கியூபாவில் ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியில் குறுக்கிடும், இயத்திரத்தனமான சித்தனையை, ஒரு கொள்ளை நோயென அடித்து விரட்ட வேண்டும். இயந்திரத்தனமான சிந்தனை ஒரே மாதிரியான வழிமுறைகளுக்கு இட்டுச் செல்லும். நமது புரட்சிகர அமைப்பிற்குள்ளாகவே பாகுபாடு காட்டுதலில் தொடங்கி, சதி அறைகள் போன்ற பல தீங்குகள் இடம் பெறுவதற்கு இது இட்டுச் சென்று விடும். மக்களின் மீது நம்பிக்கை வைத்துக் கொண்டும், அவர்களுடன் எப்போதும் தொடர்பு வைத்துக் கொண்டும், இயக்கவியல் ரீதியாக நாம் முன்னேற வேண்டும். மார்க்சிய சித்தாந்தத்தை உபயோகித்து, இயக்கவியல் பொருள்முதல் வாதத்தை உபயோகித்து, நாம் ஒரு முன்னுதாரணமாக இருந்து, அனைத்து சமயத்திலும் படைப்பாற்றலுடன் மக்களை வழி நடத்திச் செல்ல வேண்டும்.

இக்கண்ணோட்டத்தில், புரட்சிகர சோசலிச ஐக்கியக் கட்சியைச் சார்ந்த உறுப்பினரின் முக்கிய வேலைகளாக எவை விளங்க வேண்டும் என்று நாம் எப்படி தீர்மானிக்க வேண்டும்? அதற்கு இரண்டு அடிப்படையான விஷயங்கள் உள்ளன. நமது சமுதாயத்தின் வளர்ச்சியின் அடிப்படையாகவும், மீண்டும் மீண்டும் கூறப்பட்டு வந்த இரண்டு விஷயங்களே அவைகள். அதுதான் மக்களின் உபயோகத்திற்கான உற்பத்தி மற்றும் விழிப்புணர்ச்சியைக் கூர்மைப்படுத்துதல்.

உற்பத்தி ஏன் அவ்வளவு முக்கியமானது என்பது குறித்து உங்களுக்கு விளக்க முனைவது தேவைக்கு அப்பாற்பட்ட விஷயம். ஏனெனில் கட்சி உறுப்பினரின் மிக முதன்மையான ஈடுபாடாக எப்போதுமே உற்பத்தி விளங்க வேண்டும்.

சோசலிசம் மனிதன் நல்லவன் என்ற அடிப்படைக் கருத்தின் மீது அமைக்கப்பட்ட கற்பனைக் எட்டாத அமைப்பு அல்ல. வரலாற்று நடைமுறைகளின் வழியாக அடையப்பட்ட அமைப்பு சோசலிசம். சமுதாயத்திலுள்ள அனைத்துச் செல்வங்களின் சமத்துவ இயல்புடைய உற்பத்தி என்ற வடிவமைப்பிற்குள், அடிப்படை உற்பத்திச் சக்திகளை சமுதாயம் சார்ந்ததாகச் செய்து, அவற்றின் விநியோகத்தைச் சமத்துவப் படுத்துவது என்ற அடிப்படை இதற்கு உள்ளது. முதலாளித்துவம் உருவாக்கிய அதே உற்பத்திச் சக்திகள்தான், மாபெரும் தொழிற்சாலைகள், மாபெரும் முதலாளித்துவ தோட்டங்கள், மாபெரும் முதலாளித்துவ பண்ணைகள், மனிதன் குழுவாக இணைந்து வேலை செய்யும் இதர இடங்கள் ஆகியவை. ஆனால் இந்த சகாப்தத்தில், மனிதனின் உழைப்பின் பலன்கள் தனிப்பட்ட முறையில் அந்த உற்பத்திச் சக்திகளின் சட்டப் பூர்வமான சொந்தக் காரனாகத் திகழ்ந்த பெருமுதலாளிகளால், சுரண்டும் வர்க்கத்தால் அனுபவிக்கப்பட்டன.

இப்போது விஷயங்கள் மாறிவிட்டன. ஆனால் அடிப்படை அதேதான்: முன்பு இருந்த சமுதாயத்தை ஒட்டி, தற்போது ஒரு சமூக வர்க்கம், ஒரு சமூக அமைப்பு தொடர்ச்சியாய் ஏற்பட்டுள்ளதுசோசலிசத்தின் முதற்கட்டங்களில் நமது அனைத்து உற்பத்தியின் வளர்ச்சிக்கு அடிப்படையாக இதுதான் அமைந்திருந்தது.

கட்சி உறுப்பினர்களின் விழிப்புணர்ச்சியைக் கூர்மைப் படுத்துவது, ஏன் இரு முக்கியமான வேலைகளில் ரொம்ப அவசியமானதாக, கருதப்படுகிறது? ஒருவர் சரியான நிதைத்துப் பார்த்தால், உற்பத்தியை விட விழிப்புணர்ச்சி மிகவும் முக்கியமானது என்பது தெரியும். இந்த நூற்றாண்டில், சமுதாயங்களின் வளர்ச்சிக்கான நடைமுறைகள் காட்டும் புதிய குணாம்சங்களால் இது இவ்வளவு முக்கியத் துவத்தைப் பெறுகிறது.

மார்க்ஸ் பலவிதச் சமுதாயங்கள் பற்றிய அவரது பகுப்பாய்வை மேற்கொண்ட போது, அப்போது அறியப்பட்டு இருந்த சமுதாயங்கள் புராதன சமுதாயங்கள், நிலப்பிரபுத்துவ சமதாயங்கள், அதற்கு முந்தைய அடிமைச் சமுதாயங்கள்ஆகியவை முதலாளிதத்துவ சமுதாயம் மட்டுமே ஆகும். மார்க்ஸ் என்ன செய்தார் என்றால், ஒவ்வொரு சதாயத்திற்குமான காரணங்களை பகுப்பாய்வு செய்து, எல்லாமே உற்பத்தியோடு தொடர்பு கொண்டிருந்ததை எடுத்துரைத்தார். மனிதனின் எண்ண ஓட்டம், அவன் வாழும் புறச்சூழ்நிலைகளால் உருவாக்கப்படுகிறது என்றும், அச்சூழல் உற்பத்தி உறவுகளால் தீர்மானிக்கப்டுகிறது என்றும் காட்டினார். ஆனால் தனது பகுப்பாய்வில் மேலும் ஆழமாகக் குதித்த மார்க்ஸ் மேலும் முக்கியமான ஒன்றைக் காட்டுகிறார்: வரலாற்று ரீதியாக முதலாளித்துவம் மறைவதும், புதிய சமுதாயம் – சோசலிசச் சமுதாயம் – மலர அது வழியிடுவதும் நிகழும் என்று அவர் நிறுவினார்.

சிறிது காலம் சென்றவுடன், லெனின் அந்தப் பகுப்பாய்வை மேலும் எடுத்துச் சென்று, ஒரு சமுதாயத்தில் இருந்து மற்றொரு சமதாயத்திற்குச் செல்லும் மாற்றம் இயந்திரத் தனமான ஒன்றல்ல என்ற முடிவுக்கு வருகிறார். ஒரு சமுதாயத்தின் ஒரு குறிப்பிட்ட சமயத்தில் நிலவும் நிலைமைகளை கணக்கில் எடுத்துக் கொண்டு, கிரியா ஊக்கிகளின் துணைக் கொண்டு (இச்சொல் லெனினினுடையது அல்ல. என்னுடையது; ஆனால் மையக்கருத்து அதுதான்) முழுப்பயனும் பெறும் விதத்தில், வரலாற்றைத் துரிதப்படுத்த முடியும் என்று அவர் கண்டுப் பிடிக்கிறார். அதாவது, பாட்டாளிகளின் அடிப்படைத் தேவைகளை தெளிவுபட அறிந்துள்ள, எந்தத் திசை நோக்கி நகர வேண்டும் என்பது குறித்த செம்மையான அறிவுள்ள, புதிய சமுதாயத்தை அமைத்திட அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிக்கிற முன்னணிப் பாட்டாளிகள் இருப்பார்களேயானால், அவர்கள் அந்த முயற்சியில் தைரியமாக இறங்கலாம். இடைப்பட்ட நிலைகளைத் தாவி விடலாம். மேலும், மிகவும் கடுமையான ஏகாதிப்பத்திய முற்றுகைக்குள்ளும், தனிமைப்படுத்தப்பட்ட ஒரே ஒரு நாட்டில் கூட சோசலிசச் சமுதாயம் நிறுவப்படலாம். சோவியத் யூனியன் சந்தித்ததைப் போல விழிப்புணர்வு ஏன் தேவை என்பதன் அடிப்படையான காரணம் இதுதான்.

சமுதாயங்களின் வரலாற்று வளர்ச்சியின் நடைமுறை சில சமயங்களில், குறுக்கப் படலாம் என்பதை நாமும் கண்டு பிடித்துள்ளோம். முன்னணிக் கட்சி இப்படி இடைநிலைகளை குறைப்பதற்கான அடிப்படைக் கருவியாக விளங்குகிறது. சோவியத் யூனியன் 45 வருடங்களுக்கு முன்பு கற்றுக் கொடுத்த இந்தப் புரட்சி பாடத்தை, நாம் இப்போது நடைமுறைப் படுத்தியுள்ளோம். முன்னணி இயக்கத்தின் மூலம் பல கட்டங்களைக் குறைத்து, செயல்களை வேகப்படுத்த புரட்சியை வெற்றிப் பெறச் செய்து, இரு வருடங்களுக்க உள்ளாகவே புரட்சியின் சோசலிசக் குணத்தை உருவாக்குவதில் முனைந்துள்ளோம். நடைமுறையைப் பொறுத்தவரை, இதற்கு ஏற்கனவே சோசலிசக் குணம் வந்துவிட்டது. ஏனெனில் உற்பத்தி சக்திகளை நாம் ஏற்கனவே எடுத்து விட்டோம். அதை முழுவதுமாக கைப்பற்றும் குறிக்கோளுடன் உள்ளோம். மனிதனை மனிதன் சுரண்டும் சக்தியை ஒட்டு மொத்தமாக கைப்பற்றும் நோக்கில் நாங்கள் உள்ளோம். அனைத்து உற்பத்தி முறைகளும் உற்பத்திப் பொருட்களை அனைவருக்கும் சரியாகவும் சமமாகவும் போய் சேரும் விதத்தில் அமைத்திட திட்டமிட்டுள்ளோம். வேகப்படுத்தும் இந்த நடவடிக்கைகள் பல மக்களை வழியோரம் விட்டு விட்டு போய் விட்டன. இப்போது கூட பழைய சமுதாயத்தின் கருத்துகள் பொது மக்களிடம் தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. இங்குதான் சோசலிச விழிப்புணர்ச்சி கூர்மைப்படுத்தப் படுவதற்கான தேவை முக்கியத்துவம் பெறுகிறது.

நமது நாட்டிலும் வேறு பல நாடுகளிலும் இப்போது நிலவி வரும் சோசலிசச் சமுதாயங்கள், முந்தைய சமுதாய நிலைமைகள் வெடித்ததனால் ஏற்பட்டு விடவில்லை. அது தானாகவே ஏற்பட்டு விடவில்லை. அதாவது, அங்கு நிலவி வந்த புறச்சூழ்நிலைகளின் காரணத்தால், இயந்திரத்தனமாக மாற்றம் எற்பட்டு, அதனால் எல்லாம் தானாகவே மாறி விடவில்லை.

இங்கு கியூபாவில், புரட்சி முன்னணிதான் மக்களை வளர்த்தெடுத்து, வழிநடத்திச் சென்றது. புரட்சியின் முதல் நான்கு வருடங்களிலும், இதுதான் ஃபிடல் காஸ்ட்ரோவின் முதன்மையான குறிக்கோளாக இருந்தது. அவர் நமது மக்களை வழி நடத்திச் சென்று, ஒவ்வொரு திருப்பு முனைகளையும் அவர்களுக்கு காண்பித்து, முக்கியமாக ஆற்றப்ட வேண்டிய பணிகள் என்ன என்பதை சொல்லிக் கொடுத்தார். அவர் அவர்களுக்கு மேன்மையைப் பற்றி தியாக உணர்வு பற்றி முழுவுலகிற்கும் நாம் எதை தெரிவிக்க வேண்டும் என்பது பற்றி எல்லாம் கற்றுக் கொடுத்தார். இப்படியாக மக்கள், உண்ர்ச்சி வசப்பட்டு, சோசலிசத்தின் துவக்ககால வளர்ச்சியில் ஒரு அங்கமாகிப் போயினர்.

எங்குமே பின்தங்கி விடுபவர்கள் உண்டு. ஆனால் நமது வேலை அவர்களை ஒழிப்பதல்ல; ஆயுதத்தை காட்டி அவர்களை அதற்காக மண்டியிட வைப்பதல்ல; மாறாக அவர்களுக்குக் கற்றுக்

கொடுப்பது. நமது முன்னுதாரணத்தின் மூலம் அல்லது ஃபிடல் சொல்லுவது போல நன்னடத்தையின் வற்புறுத்தலால், அவர்களை நம் பின்னால் வரவழைப்பது. ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஆவல் அவர்களுக்கு இருக்காது; ஒவ்வொரு நாளும் உற்சாகத்துடன் துடிப்புடன் மகிழ்வுடன் வேலை செய்யும் தங்கள் சகத்தோழர்களைப் பின்பற்ற வேண்டும் என்ற உணர்வும் அவர்களிடம் இருக்காது.

மோசமானதைப் போலவே சிறந்த உதாரணங்களும் தொற்றிக் கொள்ளக் கூடியதே. நல்ல உதாரணங்களாகிய இந்த தொத்து வியாதிகளை நாம் பரப்ப வேண்டும். நம்மால் என்னவெல்லாம் செய்ய முடியும் என்பதை மக்கள் மனதில் சம்மட்டியால் அடித்து இறக்கி, அவர்களின் சிந்தனைப் போக்கை உருவாக்க வேண்டும். அதிகாரத்தில் இருக்கும் போது, ஒகு புரட்சிகர இயக்கத்தில் என்னவெல்லாம் சாதிக்க முடியும் என்பதை, அதன் இறுதி இலட்சியத்தில் அது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறது என்பதை, நமது மக்களைப் போல, அதுவும் சட்டரீதியான நமது உரிமைகளில் ஒன்றைக்கூட இழக்க சம்மதிக்காமல், அதற்காக போராடத் தயாராக உள்ளது என்பதையும், நாம் அவர்களுக்கு விளக்கிக் காட்ட வேண்டும்.

நாம் இவைகளை ஒன்றாக்கி கலந்துருக்கி அதை விவரித்து தாங்களாகவே இதை உணராத ஒவ்வொருவரிடமும் அளிப்போம்.

இது நீண்டதாயும், கடினமானதாயும் இருக்கும். ஆனால் அதைதான் நாம் செய்து முடிக்க வேண்டும். அந்த பயங்கரமான அதே சமயம் மனிதாபிமான வரலாற்றிலேயே அற்புதமான காலக்கட்டத்தில் சோவியத் யூனியனுக்கு ஏற்பட்டது போன்ற, முற்றுகையிடப்பட்ட ஒரு சூழலில் இன்று நாம் உள்ளோம். ஆனால் அதையும் மீறி சோவியத் யூனியன் இன்று நிமிர்ந்து நிற்கிறது. அதேபோல சோசலிச நாடுகளின் முகாமும் விளங்குகிறது. ஒரு பெரும் மக்கள் கூட்டம், தொடர்ந்து புதிய சக்திகளையும், புதிய மக்களையும் சோசலிச நோக்கங்களுக்காக அளித்த வண்ணம் இருக்கிறார்கள்.

லத்தீன் அமெரிக்காவில் நாம் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளோம். ஒருபுறம் அமெரிக்க ஐக்கிய நாடுகள். அவைகள் கவுதமாலாவிலோ அல்லது வேறு ஒரு லத்தீன் அமெரிக்க நாட்டிலோ பிரச்சினையை உருவாக்க தங்களைத் தயார் செய்து கொண்டிருக்கின்றன. நமக்கு எதிராக உள்ள நாடுடகளுக்குள் விமானங்கள், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் தென்படுகின்றன; கடிதங்களும் அறிக்கைகளும் நுழைகின்றன. கியூப மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட ஏகாதிபத்திய சதியின் அதே முகம்தான் இதுவும்.

ஏன் இது? ஏனெனில் நம்மிடம் தவறுகள் இருந்தாலும் - இருக்கின்றன என்பதை நாம் அறிவோம் - நமது நான்கு வருட வழிமுறை பெரும் வெற்றிகளை ஈட்ட முடிந்திருக்கிறது என்றால், அது லத்தீன் அமெரிக்காவிற்கே ஒரு சிறந்த படிப்பினையாக அமையும். அதானல்தான் ஏகாதிபத்தியம் நம்மைக் கண்டு பயப்படுகிறது. அவர்கள் மற்ற எந்த பலமான நாட்டைக் காட்டிலும், நம்மைக் கண்டுதான் அதிகமாக பயப்படுகின்றனர்.

ஏகாதிபத்தியத்தின் அடித்தளம் அமெரிக்காவில் இருக்கிறது. இருப்பதிலேயே பலம் வாய்ந்த அமெரிக்க ஏகாதிபத்தியம், புதிய உலகில் உள்ளது. லத்தீன் அமரிக்கா ஸ்பானிய மொழி பேசுகிறது. அது நம்மைப் புரிந்து கொள்கிறது. நம்மைப் பெருமையுடன் நோக்கும் லத்தீன் அமெரிக்கா, அதனுடைய அனைத்து மக்களின் வருங்காலம் எப்படி இருக்கப் போகறிது என்பதைக் காட்டும் காண்ணாடியாக நம்மைக் காணும் லத்தீன் அமெரிக்கா, வெற்றிக்காக தன்னை தயார் செய்து கொண்டிருக்கிறது.

லத்தீன் அமெரிக்காவில் கொரில்லாக்கள் இருப்பார்களேயானால்- நமக்கும் பென்டகனுக்கும் தெரியும். அவர்கள் இருக்கிறார்கள் என்பது - அவர்கள் நம்மால் உருவாக்கப் பட்டவர்கள் அல்ல. நம்மால் அவர்களை உருவாக்க இயலாது. ஏனெனில் அதற்கு வேண்டிய பலம் நம்மிடம் இல்லை. ஆனால் அவர்களை நாம் மகிழ்ச்சியுடன் நோக்குகிறோம். வெனிசுலா மக்களின் வெற்றி குறித்தும், வெனிசுலா புரட்சி பரவி வருவது குறித்தும் நாம் உற்சாகமாய் உள்ளோம். கொலம்பியாவிலோ, பெருவிலோ புரட்சி முளை விடுகிறது என்பதை அறியும் போது, மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். எகாதிபத்திய அதிகாரத்தின் சாரக்கட்டில் கீறல்கள் - அவை சிறியதாக இருந்தாலும் ஒரு முறைப்படி இருப்பதால் - விழும் போது, நாம் பெரும் உவகை கொள்கிறோம்.

தோழர்களே, லத்தீன் அமெரிக்காவில் வெளிப்படையாகத் தெரியக்கூடிய இந்த விளைவுகளை ஏதோ ஒன்று உருவாக்கியுள்ளது. அவர்கள் மொழியிலேயே அவர்களிடம் பேசும், மகிழ்ச்சியை உருவாக்க என்ன செய்ய வேண்டும் என்று அவர்களிடம் கூறும், அந்த எதோ ஒன்றின் பெயர்தான் கியூபப்புரட்சி. இக்காரணம்தான், நம்மை மிகவும் பயம் கொள்ள வைக்கிறது.

இது நம்முடைய தற்பெருமை அல்ல. ஒரு சிறிய நாட்டின் தவறான பெருமைகளோ அல்லது தவறான உரிமை கோரலோ அல்ல இது. இது உண்மைகளின் புறப் பகுப்பாய்வு. நம்மைக் கண்டு அவர்கள் பயப்படுவதற்கு நாம் அனைவரும் பொறுப்பு. அனைத்து ஏகாதிபத்தியவாதிகளும் நம்மை

வெறுக்கிறார்கள். நமது பெருமையின் அடிப்படையாக இவைகள்தான் இருக்க வேண்டும். அவர்கள் நம்மைக் கண்டு பயப்படுகிறார்கள்; நம்மை வெறுக்கிறார்கள். கியூபப்புரட்சி, திருவாளர் கென்னடிக்கு ஒரு கடுமையான தொந்தரவு அளிக்கும் கட்டியாக மாறி உள்ளது. அது அவரைத் தூங்க விடுவதில்லை; இங்கிருந்தவர்களுக்கு ஏற்பட்டக் கதியைப் போன்று தங்களுக்கும் வருங்காலத்தில் ஏற்படும் என்பதை அனைத்து லத்தீன் அமெரிக்க பொம்மைஅரசர்களும் உணர்ந்துள்ளனர். தங்களது அடிமைச் சங்கிலிகளை அடித்து நொறுக்கி விடுபட்டு, அதிகாரத்தை கைப்பற்றி மக்களின் நீதி நியாயம் எவ்வளவு ஆழமானதாகவும் வீச்சாகவும் இருக்கும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளட்டும்.

லத்தீன் அமெரிக்கா முழுவதற்கும் மற்றும் உலகம் முழுவதற்குமான நமது மாபெரும் பொறுப்பும் தீர்மானமான செயற்திட்டமும் இதுதான்.

கடந்த வருடத்தின் இறுதியில், அமெரிக்கர்களுக்கு, அவர்கள் கனவிலும் நினைத்துப் பார்த்திராத ஒரு பாடத்தை கற்பித்தோம். நமது நடவடிக்கைகளின் மூலம் இதை மேலும் மேலும் கற்பித்துக் கொண்டிருக்கிறோம். நமது எல்லைகளையும் கடந்த ஒன்றாக அதன் மதிப்பு உள்ளது. கியூபப்புரட்சி மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய காரணத்தால், அதன் வளர்ச்சியில், நான்கு வருடங்களில் அது சாதித்தன் விளைவாய் கியூப மக்கள் உலகெங்கும் மதிக்கப் படுகிறார்கள்; பெருமையுடன் நோக்கப் படுகிறார்கள்; நேசிக்கப் படுகிறார்கள் - சமயங்களில் வெறுக்கப் படுகிறார்கள், அஞ்சப் படுகிறார்கள் - என்ற உண்மையால் நாங்கள் பெருமிதம் அடைகிறோம்.

அதாவது தோழர்களே, நாம் நம்முடை சாதனைகளை பெருக்க வேண்டும்; குறைகளைக் களைய வேண்டும். மக்களின் விழிப்புணர்ச்சியை இன்னும் கூர்மைப் படுத்த வேண்டும்; உற்பத்தியை உயர்த்த வேண்டும். நாம் நம்முடைய முயற்சியால் மேலும் மேலும் சாதிக்க வேண்டும். மற்ற கடுமையான நேரங்களில் சமாளித்து நின்றதைப் போல, உற்பத்தியிலும், நமது சொந்தக் கால்களில் நிற்க நம்மைப் பழக்கப் டுத்திக் கொள்ள வேண்டும. நட்பு நாடுகளில் இருந்து பெறப்படும் உதவிகள் - நாம் பலமுறை பெற்றுள்ள விசாலமான சகோதரத்துவமான உதவிகள் - நமது புரட்சியைப் பாதுகாக்கவும் அதை நிலை நிறத்திக் கொள்ளவும் பயன்படும் ஒரு காரணியாக மட்டும் விளங்க வேண்டும். நம்முடை வலிமையின் அடிப்படை வேறு ஒரு நாடாக, அது எவ்வளவுதான் நட்பாகவும், எவ்வளவுதான் பரந்த மனப்பான்மயுடன் நடந்து கொண்டாலும், இருக்கக்கூடாது. தனது சொந்த வலிமை உணர்வின் மீது அமயாத எந்த பலமும் உண்மையான வலிமையாக இருக்காது.

ஒரு தேசம் வலிமை உணர்வைப் பெற்று, போராடவும் முன்னேறவும் எப்போதும் தயராகிறதோ, அப்போதுதான் உண்மையான வலிமையைப் பெறுகிறது. பின்னர் அதனால் எந்த எதிரியை வேண்டுமானாலும சந்திக்க முடியும்.

நாம் அதைச் செய்து விட்டோம். பொதுவாக அதைக் குறித்து நாம் பெருமையும் அடையலாம். ஆனாலும் நாம் இன்னும் விஷயங்களை உறுதியுடன் விருப்பு வெறுப்பற்று பகுப்பாய்வு செய்ய வேண்டும். நீங்கள் உங்கள் தோழர்களை எப்படி பகுப்பாய்வு செய்து அவர்களை விமர்சனபூர்வமாக கணித்தர்களோ, அதுபோல நமது வேலைகளையும் நாம் விருப்பு வெறுப்பற்ற செய்ய வேண்டும். அவைகள் மோசமாய் இருக்கும் போது, விமர்சிக்கவும் வேண்டும். அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப் படாமல் இருக்கும் போதும், பழமைவாதத்திற்கும் இயந்திரத்தனமான சிந்தனைக்கும் மீண்டும் நாம் பலியாகி நமது வேலைகள் முக்கியத்துவமற்றும் படைப்பாற்றலற்றும் போய்விடும் போதும், நீங்கள் அதே போல் செயல்பட வேண்டும்.

புரட்சிகர சோசலிச ஐக்கியச் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் இனியும் அதில் தங்களை இணைத்துக் கொள்ளதாவர்கள் ஆகியோரிடம் மேல் சொன்ன அனைத்தையும் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

நாங்கள் அனைத்து மக்களிடமும் நடவடிக்கைகளில் இறங்கத் தயாராக இருக்கும் படியும், மக்களின் முன்னணிப்படையை இந்தக் கஷ்டங்களுக்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்து கொண்டு, பலமான முன்னணிப் படைகளையும், மக்கள் படையையும் மிஞ்சும் மாதிரி வேகமாக கடந்து செல்ல வேண்டும், என்றும் கேட்டுக் கொள்கிறோம். இதுவே அவர்களின் பணி.

இப்போது கட்சியில் இருக்கும் தோழர்கள் முன்னனணிப்படையாக விளங்க வேண்டிய கடமை பெற்றுள்ளனர். ஃபிடல் கூறியதை அவர்கள் நினைவில் வைத்துக் கொள்ளட்டும்: “கமிலோக்கள், தன்னம்பிக்கை மிக்கவர்கள். தியாக உணர்வு உடையவர்கள், மனஉறுதி உடையவர்கள். மிகச்சிறப்பானவர்களே அங்கு இருப்பார்கள்.” ஆரம்பத்தில் ஒழுங்கமைப்படாத கொரில்லாக்கள் விமானங்களை டாங்கிகளை எதிரி போர்வீரர்களை கண்டு பயந்தவர்கள்தான். இருப்பினும் வலுவான இராணுவத்தை தூக்கி அழித்து கியூபா முழுவதும் முன்னேறினார்கள், இந்தக் கொரில்லாக்கள். நம் மக்கள் அனைவரும் கொரில்லக்களைப் போல் ஆக்க வேண்டும்.

கடைசியில் வெற்றி சாதிக்கப்பட்டது. அது ஏன் அடையப்பட்டது என்றால், முன்னணிப் படையினரின் அதிகமான தைரியத்தால் என்றாலும், மக்களின் வீரத்தை மொத்தப் புரட்சிப் படையும் பிரதிபலித்தது. ஒவ்வொரு முறையும் அதனுடைய வலிமை அதனுடைய வீரம் அதன் உறுதி அதிகரித்ததும், எதிரி வீழ்ச்சி அடைந்தான்: அவன் நிலை கொண்டிருந்த இடங்களை கைவிட்டு ஓடினான்; நம்பிக்கை இழந்தான்; திரும்பி வர முடியாத இடத்திற்கு ஓடி மறைந்தான்.

இதுதான் நமது பணி. இது கடினமானது. அதே சமயம் எளிதானதும கூட அதை நாம் எவ்வாறு எதிர் கொள்கிறோமோ அதைப் பொறுத்துதான் எல்லாம் இருக்கிறது. எல்லாமே நம் புரட்சிகர சூழலை எவ்வாறு எதிர்கொள்கிறோம் என்பதைப் பொறுத்து, நாம் எதைச் செய்ய திறனுடையவர்களாக இருக்கிறோம் என்பதைப் பொறுத்து இருக்கின்றது. இப்போது நாம் முடிந்த அளவு நம்மை மடிந்து போன பழைய சமுதாயத்தின் குறைபாடுகளிலிருந்து விடுவித்து கொண்டிருக்கிறோம்.

அன்னை பூமி அல்லது வீரமரணம்! வெற்றி நமதே!!

*(பஞ்சாலை தொழிலாளர்களுக்கு ஆற்றியச் சொற்பொழிவு - மார்ச் 24, 1963)*

www.padippakam.com

# முக்கண்டங்களுக்கும் செய்தி
# “இரண்டு, மூன்று.. பல வியட்நாம்களை உருவாக்குங்கள்”

**“இது உலைகளின் காலம்; ஜுவாலைகளுக்கு மட்டும்தான் இங்கு இடம்”**
**ஜோஸ் மார்ட்டி**

*[வியட்நாமில் என்ன நடக்கும் என்பது குறித்து ஆச்சரியப்படத்தக்க வகையில் சே கொண்டுள்ள தீர்க்கத்தரிசனத்திற்கு இவ்வுரை சாட்சியாய் திகழ்த்துகிறது. இத்தரிசனம், அவர் தேசப்பற்றுடன் கூடிய தேசிய விடுதலை இயக்கத்தின் மேல் கொண்டுள்ள புரிதலின் காரணமாயும், உலகாயுத ஏகாதிபத்தியத்தின் எதிர்விளைவாக நிகழப்போகும் சோசலிச அகிலம் குறித்தும் உள்ள புரிதலின் காரணமாயும், இப்படிப்பட்ட தீர்க்கத்தரிசனத்துடன் பேசுகிறார் ]*

மாபெரும் உலகப்போர் ஜுவாலை விட்டு எரிந்து 21 வருடங்கள் கழிந்து விட்டன. ஜப்பானின் வீழ்ச்சியைக் குறியீடாக்கி முடிந்த இந்த உலகப்போரை, உலகின் அனைத்து மொழிகளிலும், எண்ணற்ற வெளியீடுகள் மூலமாக, கொண்டாடப் பட்டு விட்டது. பலவித முகாம்களாகப் பிரிக்கப்பட்டிருந்த உலகின் பல பகுதிகளில், வெளிப்படையாக நம்பிக்கை மிகுந்த சூழல் நிலவியது.

அதிகபட்ச முரண்பாடுகளும், வன்முறையான மோதல்களும், திடீர் மாற்றங்களும் நிலவும் இக்காலக்கட்டத்தில், ஒரு உலகப்போர் இல்லாமல் 21 வருடங்கள் என்பது கொஞ்சம் அதிகம்தான். ஆனாலும் இந்த சமாதானத்தின் நடைமுறை விளைவை (வறுமை, கீழ்த்தரமான நிலை, மிகவும் அதிகமான மக்கள் சுரண்டப்படுதல்) பகுத்தாராயாமல், இது உண்மையான சமாதானம்தானா என்ற முடிவுக்கு வர முடியாது. இந்த நடைமுறை விளைவுகளுக்கு எதிராகதான், போரிட தயாராய் இருப்பதாய் நாம் அனைவரும் தெரிவித்திருந்தோம்.

ஜப்பானின் சரணுக்குப் பின்னர், உலகில் ஆங்காங்கு நடக்கும் பலவித மோதல்களைப் பற்றி விவரிப்பதோ அல்லது மேலோட்டமாக அமைதியாக இருக்கும் இவ்வருடங்களில், அதிகரித்து வரும் மக்கள் கிளர்ச்சிகள் பற்றி நினைவு கூறுவதோ இக்கட்டுரையின் நோக்கமல்ல. அதிகமான எதிர்ப்பார்ப்பிற்கு, எதிரான உதாரணங்களாக விளக்கும் வியட்நாம், கொரியப் போர்களைப் பற்றி இங்கு குறிப்பிட்டால் போதுமானதாக இருக்கும்.

கொரியாவில் பலவருட பேரழிவுப் போருக்குப் பின்னர், நாட்டின் வடக்கு பகுதி, நவீனப்போர் யுகத்திலேயே மிகவும் கொடுமையான பேரழிவால் மூடப்பட்டுள்ளது. குண்டுகளால் சல்லடையாகத் துளைக்கப்பட்டு, தொழிற்சாலைகளோ, மருத்துவ மனைகளோ, பள்ளிகளோ இல்லாமல், நாட்டின் ஒரு கோடி மக்கள் தங்க உறைவிடம் கூட இல்லாமல், நாடே கருகிப்போய் கிடக்கிறது. கறைப் படிந்த ஐக்கிய நாட்டுக் கொடியின் கீழ், அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவத் தலைமையில் ஒரு டஜன் நாடுகள், இப்போரில் ஈடுபட்டன. அதில் அமெரிக்க ஐக்கிய நாட்டுப் படைவீரர்கள் அநேகமாக தலையிட்டு, இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட தென் கொரியர்களை, பீரங்கிக் குண்டுகளாக உபயோகித்தனர். மறுபுறம் கொரிய மக்களும் இராணுவமும், சீனாவின் ஆயுத உதவியுடனும், சோவியத் இராணுவத்தின் அறிவுரையுடனும் போரிட்டனர். அணுகுண்டு தவிர்த்து, வேதியல் குண்டுகள் உட்பட பலவகையான அழிவு ஆயுதங்களை, இங்கு அமெரிக்க ஐக்கிய நாடுகள் பரிசோதித்துப் பார்த்தது.

வியட்நாமில் தேசப்பக்தி சக்திகள், தொடர்ந்து இடைவிடாமல் மூன்று ஏகாதிபத்திய சக்திகளுடன் போரிட்டு வந்தன; ஹிரோஷிமா நாகசாசி அழிவிற்குப் பிறகு, அப்படியே சரிந்து போன வலிமையுடன் ஜப்பான்; தனது இந்தோனேஷியக் காலனிகளிடம் ஏற்பட்ட தோல்விகளில் இருந்து மீண்டு, சிரமமான நேரத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்ட பிரான்ஸ்; போராட்டத்தின் கடைசிக் கட்டத்தில் களத்தில் குதித்த அமெரிக்க ஐக்கிய நாடுகள்.

ஒவ்வொரு கண்டத்திலும் சிறிய மோதல்கள் ஆங்காங்கு ஏற்பட்டு வந்த போதிலும், நமது அமெரிக்காவில் நீண்டகாலமாகவே தொடக்க நிலையில் இருந்து வந்தது, விடுதலைப் போராட்டங்களும், இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புகளும் மட்டுமே, இப்பிராந்தியத்தின் முக்கியத்துவத்தை பறைசாற்றும் விதத்தில் அமைந்த கியூபப்புரட்சி வரும் வரை, இவைகள் மட்டுமே இடம் பெற்றிருந்தன. இச்செய்கை ஏகாதிபத்தியத்தின் சீற்றத்தை கியூபாவிற்குச் சம்பாதித்துக் கொடுத்தது. கியூபா முதலில் பிளாயா கிரானிலும், பின்னர் ஏவுகணை நெருக்கடி நேரத்திலும், தனது கடற்கரைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

கியூபப்பிரச்சினை குறித்து சோவியத்-அமெரிக்க மோதல் உருவாகி இருந்தால், கற்பனைக்கெட்டாத விளைவுகளை எற்படுத்தக்கூடிய ஒரு போரை இச்சம்பவம் தூண்டி விட்டிருக்கும்.

படிப்பகம்

ஆனால் அனைத்து முரண்பாடுகளின் குவிமையமாக, இந்தோ-சீனம் மற்றும் அதையொட்டிய பகுதிகளும் விளங்குகின்றன. லாவோவிலும், வியட்நாமிலும், உள்நாட்டைச் சீரழித்துக் கொண்டிருந்த உள்நாட்டுப்போர், தனது அரக்கபலத்துடன் அமெரிக்க ஏகாதிபத்தியம் குதித்தவுடன் அடங்கிப் போய்விட்டது. ஏகாதிபத்தியத்தின் வரவு மூலம் இப்பிராந்தியம் முழுவதுமே ஒரு அபாயகரமான வெடிகுண்டாக மாறியுள்ளது. அது எந்நேரமும் வெடிக்கலாம்.

வியட்நாமில் முரண்பாடு மிகவும் கூர்மையடைந்து உள்ளது. அப்போரை அப்படியே வரிசைக்கிரமமாக எழுதுவது நமது நோக்கமல்ல. முக்கியமான மைல்கற்கள் சிலவற்றை மட்டும் இங்கு நினைவு கூறுவோம்.

1954-ல் டியன்-பியன்பூவின் ஒட்டுமொத்த தோல்விக்குப் பிறகு, ஜெனிவாவில் நாட்டை இரு பகுதிகளாக பிரிக்க ஒரு உடன்படிக்கை கையெழுத்தானது. வியட்நாமை யார் ஆள வேண்டும் என்பது குறித்தும், நாட்டை மீண்டும் எவ்வாறு இணைப்பது என்பது குறித்தும் 18 மாத அவகாசத்திற்குள் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று அதில் ஒப்புக் கொள்ளப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் இந்த உடன்படிக்கையில் கையெழுத்து இடவில்லை. அது பிரான்சின் கைப்பாவையான சக்கிரவர்த்தி போ-டாயை அகற்றிவிட்டு, தனது நோக்கங்களுக்கு ஏற்ற ஒருவரை அமர்த்த திட்டமிட்டது. எகாதிபத்தியங்களுக்கு இடையே பிழிந்து நசுக்கப்பட்ட ஒரு அரஞ்சு போல நடந்த இந்த நீகோ-டின்-டியமின்னின் முடிவு, அனைவருக்கும் தெரிந்ததே.

உடன்படிக்கைக்கு பின்வந்த மாதங்களில், ஜனரஞ்சகமான விளங்கிய சக்திகளின் முகாம்களில் மிகுந்த நம்பிக்கை நிலவியது. நாட்டின தென் பகுதியல் இருந்த பிரெஞ்சு எதிர்ப்பு இயக்கங்கள் கடைசி முகாம்களை மூட்டைக்கட்டி விட்டு, ஜெனிவா உடன்படிக்கை அமலாக்கப்படுவதை எதிர்நோக்கி இருந்தன. தேர்தல்களில், தான் நினைத்ததைச் சாதிக்க முடியும் என்ற அமெரிக்க ஐக்கிய நாடுகள் நம்பும் வரை தேர்தல்கள் நடைபெறாது என்பதை, தேசபக்தர்கள் விரைவிலேயே புரிந்து கொண்டனர். ஆனால் அது தனக்குத் தெரிந்த அனைத்து மோசடி முறைகளை பயன்படுத்தினாலும், அது சாதிக்க முடியாத நிலையில் நடைமுறை நிலைமை இருந்தது. மீண்டும் தெற்கில் மோதல் வெடித்து, முழுவீரியத்தை அடைந்தது. அச்சமயத்தில், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் படையினர் எண்ணிக்கை 5 லட்சமாக உயர்ந்தது. பொம்மை அரசுகள் பலவீனமடைந்து, எல்லாவற்றிற்கும் மேலாக தங்களது மோதல் திறனை அடியோடு இழந்து நின்றன.

சுமாராக இரண்டு வருடங்களுக்கு முன்பு, அமெரிக்க ஐக்கிய நாடுகள் போராடும் தெற்கை பணிய வைக்கவும், தன் வலிமையை அதிகரித்து, அதன்மூலம் அதை உடன்பாட்டு மேஜைக்கு வரவழைக்கும் மற்றொரு முயற்சியாய், திட்டமிட்ட முறையில் வியட்நாமிய ஜனநாயகக் குடியரசில் மீது குண்டுகள் போடத் துவங்கியது. வடக்கின் சீண்டல்களை ஒடுக்கும் முகமூடி ஒன்றை அணிந்துக் கொண்டு, அது முதலில் குண்டுகளை அங்கொன்றும், இங்கொன்றுமாய்ப் போடத் துவங்கியது. பின்னர் குண்டுவீச்சு பெரிய அளவில், அடிக்கடி நடக்கத் துவங்கியது. வடக்கில் உள்ள அனைத்து நாகரிகங்களை சுவடு கூட இல்லாமல் அழிக்கும் குறிக்கோளோடு, நாளுக்கு நாள், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் விமானப்படை மாபெரும் தாக்குதல்களை தொடர்ந்த வண்ணம் இருந்தது. ஜுரவேகம் அதிகரித்துக் கொண்டே போன கதை இதுதான்.

விமான எதிர்ப்பு பீரங்கிகாளல் எண்ணற்ற விமானங்களை சுட்டு வீழ்த்திய (1700க்கும் மேல்) வியட்நாமின் அஞ்சி பின்வாங்காத தன்மையும், அதற்கு சோசலிச நாடுகள் போர் உதவி அளித்து வருவதும் ஒருபுறம் இருந்தாலும், வங்கிகளின் லோகாயுத விருப்பங்கள் பெருமளவிற்கு நிறைவேறி விட்டன.

இங்கு ஒரு கசப்பான உண்மையும் நாம் கூற வேண்டும். உலகம் மொத்தத்தாலும் மறக்கப்பட்டு விட்ட அந்த மக்களின் நம்பிக்கையை, கனவுகளை, பிரதிநிதித்துவப் படுத்தும் வியட்நாம் தன்னந்தனியாக விடப்பட்டு விட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தொழில் நுட்பத்தின் உக்கிரமான தாக்குதல்களை, தெற்கில் கிட்டத்தட்ட எதிர்த்தாக்குதல் தொடுக்க எந்த வழியில்லாமலும், வடக்கில் ஓரளவுக்கு பாதுகாப்புடனும், எப்போதும் தனியாகவே சமாளித்து வந்தது இந்த நாடு.

வியட்நாம் மக்களுக்கு, இன்று உலகில் உள்ள அனைத்து முற்போக்கு சக்திகளும் அளித்த ஒருமைப்பாடு, ரோமாபுரி களரி அரங்கில் போரிடும் வாட்போர் வீரர்களை நோக்கி, ரோமாபுரி பொதுமக்கள் செய்யும் பாராட்டுகளை ஒத்து இருப்பது கசப்பான உண்மை. ஆக்கிரமிப்பாளனிடம் மிதிப்பட்டுக் கொண்டிருப்பவனுக்கு தேவையானது வாழ்த்துச் செய்திகள் இல்லை; தேவையானது அவனது தலைவிதியைப் பகிர்ந்து கொள்வது; அவனது வெற்றிக்கு அல்லது வீரமரணத்திற்கு அவனுடன் துணைப் போவது.

வியட்நாம் மக்களின் இந்த அனாதரவான நிலையை நாம் உற்று நோக்கும் போது, மனித இனத்தின் பொறுப்பற்ற இக்கணத்தை கண்டு, நம் மனம் கடும் வேதனையால் பிழிந்தெடுக்கப் படுகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு தனது ஆக்கிரமிப்பினால் குற்ற உணர்வு ஏற்பட்டுள்ளது. அதன் கொடூரங்கள் அளவிட முடியாதது; உலகெங்கும் அது பரவியுள்ளது. நமக்கு குற்றஉணர்வு, சரியான சமயம் வந்தபோது கூட, வியட்நாம் சோசலிச உலகோடு இணைந்த ஒருபகுதி என்று அறிவிக்கத் தவறியவர்களுக்கும் ஏற்பட்டிருக்கலாம் என்றாலும், அது ஏகாதிபத்தியத்தின் மீது ஒரு தீர்மானமான முடிவை நிர்பந்தித்திருக்கும். இதே குற்றஉணர்வு கொஞ்ச காலம் முன்பு, சூழ்ச்சியும் மோசடியும் நிறைந்த ஒரு போரை நடத்திய, சோசலிச முகாமைச் சேர்ந்த இரு மாபெரும் சக்திகளுக்கும் எற்பட்டிருக்கும்.

ஒரு நேர்மையான பதிலைத் தேடும் ஒரு கேள்வியை நாம் நம்மிடமே கேட்டுக் கொள்வோம்; வியட்நாம் அனாதரவாக விடப்பட்டதோ இல்லையா? மோதிக் கொண்டு இருக்கும் சக்திகளுக்கு இடையே ஒரு அபாயகரமான நடுநிலைமையைக் கொண்டிராமல் இருந்தது இல்லையா?

எவ்வளவு உயர்ந்த மக்கள் அவர்கள், என்ன வீரம், என்ன துணிவு, இப்போராட்டத்தின் மூலம் உலகிற்கு என்னவொரு அருமையான படிப்பினை, ஜனாதிபதி ஜான்சன், இன்னும் பலகாலத்திற்கு, அவரது மக்களுக்கு தேவைப்படும் சீர்திருத்தங்களைச் செய்ய, நாளுக்கு நாள் வெடித்து வரும் அடக்கி ஒடுக்கப்பட்ட வர்க்க முரண்பாடுகளை ஒடுக்க நினைத்துக்கூட பார்க்க மாட்டார். உண்மை என்னவென்றால், ஆரவாரமாக அறிவிக்கப்பட்ட ‘மாபெரும் சமுதாய’த்திற்கான முன்னேற்றங்கள் எல்லாம் வியட்நாம் வடிகுட்டையில் போடப்பட்டு விட்டன.

எல்லா ஏகாதிபத்தியங்களைக் காட்டிலும் பலம் பொருந்திய இந்த ஏகாதிபத்தியம், ஒரு வறிய, வளர்ச்சியடையாத நாடு கொடுத்த அடியால், தனது வயிற்றினுள் இரத்தம் ஒழுகுவதை உணர்ந்துள்ளது. அதன் கொழுத்த பொருளாதாரம் போரினால் ஏற்பட்ட சிரமத்தினால் சுருண்டுள்ளது. அதனுடைய ஏகபோகங்களின் இயல்பான விஷயமாக இருந்த கொலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. தாய்மீது, சொந்த சமுதாயத்தின் மீது, அவர்களுக்கு இருந்த தணியாக்காதல் மற்றும் விஞ்ச முடியாத வீரத்தைத் தவிர்த்து, அந்த அசாதாரணமான வியட்நாம் போராளிகளிடம் இருந்ததெல்லாம் எப்பொழுதுமே பற்றாக்குறையான ஆயுதங்கள்தான். ஆனால் ஏகாதிபத்தியம் வியட்நாமில் மாட்டிக் கொண்டு, உள்ளே அமிழ்ந்து கொண்டு இருக்கிறது. இப்போது மிகவும் அபாயகரமான ஒரு சூழ்நிலையில் மாட்டிக் கொண்டு விட்டது அது. அதில் இருந்து மரியாதை கெடாமல் மீண்டுவரும் ஒரு வழியைக் காண துடித்துக் கொண்டிருக்கிறது. மேலும் வடக்கு முன்வைக்கும் நான்கு அம்சங்கள் மற்றும் தெற்கு முன்வைக்கும் ஐந்து அம்சங்களுக்கு இடையே மாட்டிக் கொண்டு, ஏகாதிபத்தியம் விழிப்பதால் முரண்பாடு மேலும் முற்றுகிறது.

உலகில் சுரண்டப்பட்டு வரும் மக்களாகிய நாம் என்ன பாத்திரம் வகிக்க வேண்டும்? முக்கண்டங்களின் மக்களும் தங்களது கவனத்தை வியட்நாம் மீது செலுத்துகின்றனர். அவர்களது பாடத்தை தாங்கள் கற்று வருகின்றனர். போர்ப் பூச்சாண்டி மூலம் ஏகாதிபத்தியம் மனிதகுலத்தை அச்சுறுத்தி வரும்போது, போரைக் கண்டு கலங்காமல் இருப்பதே சிறந்த வழி. ஒரு தொடர்ச்சியான, உறுதியான தாக்குதலை, முரண்பாடுகள் எங்கெல்லாம் ஏற்பட்டுள்ளதோ, அந்த முனைகளில் எல்லாம் துவக்குவது, மக்களின் பொதுவான உபாயமாக இருக்க வேண்டும்.

மீதமிருக்கும் கொஞ்ச நஞ்ச சமாதானமும், சில இடங்களில் மீறப்படும் போது, நமது கடமை என்ன? எந்த விலை கொடுத்தாவது நம்மை சுதந்திரப் படுத்திக் கொள்வதுதான்.

உலகச் சூழ்நிலை பெருஞ்சிக்கலானது. சில புராதன ஐரோப்பிய நாடுகளில் கூட இன்னும் விடுதலைக்கான போராட்டம் துவங்கப் படவில்லை. அந்நாடுகள் முதலாளித்துவத்தின் முரண்பாடுகளை உணர்ந்து கொள்ளும் அளவு வளர்ச்சி பெற்றிருந்தாலும், அவைகள், ஏகாதிபத்தியத்தை பின்பற்றவோ, அல்லது தனது சொந்தப் பாதையை அமைத்துக் கொள்ளவோ, சக்தியற்ற நிலையில் பலவீனமாக உள்ளன. இனிவரும் வருடங்களில் அவைகளின் முரண்பாடுகள் வெடித்துச் சிதறும் நிலைக்குச் செல்லும், ஆனால் அவர்களின் பிரச்சினைகள், அதைத் தொடர்ந்து அவர்களின் தீர்வுகள் ஆகியவை, பொருளாதார ரீதியாக வளர்ச்சியடையாத, பிறரைச் சார்ந்துள்ள நமது நாடுகளின் பிரச்சினைகள் மற்றும் தீர்வுகளில் இருந்து மிகவும் வேறுபட்டு இருக்கும்.

ஏகாதிபத்தியச் சுரண்டல் முக்கியமாக மூன்று வளர்ச்சியடையாத கண்டங்களில் உள்ளது. அவை அமெரிக்க, ஆசியா, ஆப்ரிக்கா ஆகியவை. ஒவ்வொரு நாட்டிற்கும் தனிப்பட்ட குணாம்சங்கள் இருந்தாலும், ஒரு கண்டமாக அவைளிடம் ஒரு ஐக்கியம் நிலவுகிறது.

நமது அமெரிக்கா கிட்டத்தட்ட ஒரே இயல்புடைய பல நாடுகள் அடங்கிய ஒரு குழுவாக விளங்குகிறது. பெரும்பாலான இடங்களில், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகபோக மூலதனம், முழு

ஆதிக்கத்தைச் செலுத்துகின்றன. பலவீனமான, பயந்த உள்ளூர் ஆட்சியாளர்களும், யாங்கி எஜமானரின் உத்தரவுடன் மோதும் திறமையற்றவர்களாக உள்ளனர். அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஏற்கனவே பொருளாதார அரசியலில் மேலாதிக்கத்தின் உச்சநிலையை அடைந்து விட்டது. இதற்கு மேலும் அதனால் முன்னேற முடியாது. அச்சூழலில் ஏற்படும் எந்த மாறுதலும் அதற்கு ஒரு பின்னடைவைதான் ஏற்படுத்தும். ஏற்கனவே கைப்பற்ற பட்டவற்றை தக்க வைத்துக் கொள்வதே அவர்களின் கொள்கையாக இருக்கிறது. இப்போது எடுக்கப்படும் நடவடிக்கைகள், விடுதலை இயக்கங்களை அவை எந்தவிதமானதாக இருந்தாலும் சரி, தனது மிருகத்தனமாக சக்தியை உபயோகித்து அதை நசுக்கி விடுவதற்கு முதன்மை அளிக்கிறது.

“மற்றொரு கியூபாவை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்” என்ற கோஷத்திற்கு பின்னால், எதிர்ப்புக் குரல் பற்றிய பயமின்றி நாங்கள் ஆக்கிரமிப்புகளை தொடர்வோம் என்ற மிரட்டல் ஒளிந்திருக்கிறது. டொமினிக்கன் குடியரசிற்கு எதிராக நடவடிக்கை எடுத்தது போல், அல்லது பனாமாவில் புகுந்த படுகொலை செய்தது போல, அமெரிக்க நாடு ஏதாவது ஒன்றில் உள்ள ஆளும் வர்க்கம் அதனுடைய நலன்களுக்கு ஆபத்து விளைவிக்கும் முயற்சியில் இறங்கினால், அங்கு யாங்கிப் படைகள் தலையிடத் தயங்காது என்பதே அந்த எச்சரிக்கையின் பொருள். இந்தப் போக்கை தட்டிக் கேட்க எவரும் கிடையாது; பிரபலமாக இல்லாத போதும், அமெரிக்க நாடுகளின் ஒருமைப்பாட்டு அமைப்பு, இம்மாதிரி காரியங்களை ஆற்ற அதற்கு நல்ல முகமூடி. ஐ.நா. சபையோ பரிகாசத்திற்கும், அதேசமயம் பரிதாபத்திற்கும் ஆளாகி நிற்கிறது. குற்றம் மற்றும் நம்பிக்கைத் துரோகத்திற்கான சர்வதேச அமைப்பு உண்மையிலேயே அமைக்கப் பட்டுள்ளது. மறுபுறம் தொன்மையான பூர்ஷ்வாக்கள், ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் தங்களது திறமை - அப்படியொன்றை அவர்கள் பெற்றிருக்கும் பட்சத்தில் - அனைத்தையும் இழந்து விட்டனர். அவர்கள் கையில் உள்ள கடைசிப் சீட்டாக அது மாறிவிட்டது. ஒரு சோசலிசப்புரட்சி அல்லது ஒரு கண்துடைப்புப் புரட்சி, ஏதாவது ஒன்றுதான் இதற்கு மாற்று.

ஆசியக்கண்டம் பல்வேறுபட்ட குணாம்சியங்களை உள்ளடக்கியுள்ளது. பல ஐரோப்பிய காலனியாதிக்க சக்திகளுக்கு எதிராக நடத்தப்பட்ட விடுதலைப் போராட்டங்கள், கிட்டத்தட்ட முற்போக்கான அரசாங்கங்கள் அமையக் காரணமாகி உள்ளன. அந்த நாடுகளின் வளர்ச்சி சில நாடுகளில், தேசிய விடுதலையின் முதன்மைக் குறிக்கோள்கள் கூர்மைப்பட்டு போனதிலும், மற்றவைகளில், ஏகாதிபத்திய சார்புநிலைப்பாட்டை எடுக்கும் நிலைக்கு பின்தள்ளப் பட்டுப் போனதிலும் போய் முடிந்துள்ளன.

பொருளாதாரக் கண்ணோட்டத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆசியாவில் இழப்பதற்கு எதுவுமில்லை; பயனடைவதற்குதான் பல உள்ளன. இந்த மாற்றங்கள் அதன் நலன்களுக்குச் சாதகமாகதான் உள்ளன; பிற நவகாலனித்துவ சக்திகளைத் தூக்கி எறிவதற்கான போராட்டம், பொருளாதாரத் தளத்தில் புதிய இடுக்குகளில் சமயங்களில் நேரடியாகவும், எப்போழுதாவது ஜப்பான் மூலமாகவும் நுழைதல் ஆகியவை அதன் செயல்முறையாக இருந்தன.

ஆனால் ஆசியாவில் உள்ள சில குறிப்பிட்ட அரசியல் சூழ்நிலைகள், குறிப்பாக இந்தோ-சீனாவில், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இராணுவ போர்த்தந்திரத்தில் ஒரு தீர்மானமான பங்கு வகிக்கும் அளவுக்கு மூலதன முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பு குணாதிசயங்களை ஆசியாவிற்கு அளிக்கின்றன.

ஏகாதிபத்தியவாதிகள் தென்கொரியா, ஜப்பான், தைவான், தென் வியட்நாம் மற்றும் தாய்லாந்து மூலமாக சீனாவை சுற்றி வளைக்க முயல்கின்றனர்.

இந்த இரட்டைச் சூழ்நிலை, சீன மக்கள் குடியரசை இராணுவ ரீதியாக சுற்றி வளைப்பது போன்றே முக்கியத்துவம் வாய்ந்த போர்த்தந்திரமும், இன்னும் ஆக்கிரமிக்கப் படாத இந்த பெரிய சந்தையினுள் நுழைவதும், வியட்நாம் போர்ப்பகுதி தவிர மற்ற இடங்களில் வெளியே தெரியும் நிலையான தன்மையையும் மீறி, ஆசியாவை இன்று உலகிலேயே மிகுந்து கொந்தளிப்பான ஒரு முனையாக மாற்றியுள்ளது.

மத்திய, கிழக்கு, இக்கண்டத்தை பூகோள ரீதியாகச் சார்ந்திருந்தாலும், அது தன் முரண்பாடுகளுடனும், கொதிநிதிலையான சூழ்நிலையோடும் இருக்கிறது. ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடைய இஸ்ரேலுக்கும், அப்பகுதியில் உள்ள முற்போக்கான நாடுகளுக்கும் இடையே நடக்கும் பனிப்போர் எப்படிப் போகும் என்று தீர்மானிக்க இயலாது. இன்று உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் மற்றொரு எரிமலை இது.

நவகாலனித்துவ ஆக்கிரமிப்புக்கு ஏற்ற புதியப் பிரதேசத்தை தற்போது ஆப்பிரிக்கா அளித்துள்ளது. தாங்கள் முன்பு அனுபவித்து வந்த முழுமுதல் உரிமையை ஓரளவுக்கு விட்டுக் கொடுத்துத் தீர வேண்டிய நிலைக்கு இந்த நவகாலனிச் சக்திகளை, அங்கு ஏற்பட்ட மாற்றங்கள் தள்ளியுள்ளன. இந்த

மாறுதல்கள் தங்குத் தடையின்றி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, பொருளாதாரச் சூழ்நிலையைப் பொறுத்த வரை நவகாலனித்துவ வடிவத்தில், காலனித்துவமே அங்கு தொடர்ந்து வந்ததுள்ளது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு இப்பிராந்தியத்தின் காலனிகளே கிடையாது. ஆனால் இப்போது அது தனது பங்காளிகளின் கோட்டைக்குள் புகுவதற்கு போராடிக் கொண்டிருக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் போர்த்தந்திர திட்டங்களை நோக்கும் போது, ஆப்பிரிக்கா நீண்டகால வளப்படுகையாக அதற்கு இருக்கும் எனத் தெரிகிறது. அதனுடைய இன்றைய முதலீடுகள் தென்னப்பரிக்காவில் மட்டும் இருந்தாலும், காங்கோ, நைஜீரியா மற்றும் இதர நாடுகளிலும் அது நுழையத் துவங்கி இருக்கிறது. அங்கு இருக்கும் இதர ஏகாதிபத்தியங்களுடனான முரட்டுத்தனமான மோதல்களும் துவங்கி விட்டன. (இதுவரை இது அமைதியாகதான் நிகழ்ந்து வருகிறது)

இதுவரை அதனுடைய ஏகபோக நிறுவனங்கள் மாபெரும் இலாபங்கள் இருப்பதைக் கண்டுப்பிடித்த இடங்கள், அல்லது மாபெரும் கச்சாப் பொருட்களின் வளப்படுகை இருப்பதைக் கண்டுபிடித்த இடங்கள் ஆகியவற்றில் நுழைவதற்கு தனக்கு தானே உரிமை வழங்கிக் கொண்டு, அதைப் பாதுகாப்பது தவிர வேறு எந்த பெரிய அக்கறையும், அதற்கு இல்லாமல் இருந்தது.

இந்த கடந்தகால வரலாறு மக்கள், குறுகிய காலத்திலோ, நீண்ட காலத்திலோ, விடுதலை பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்த நமது அக்கறையை நியாயப் படுத்துகிறது.

ஆப்பிரிக்காவை பகுப்பாய்வு செய்ய நாம் சிறிது நேரம் ஒதுக்குவேமாமானால், போர்ச்சுகீசிய காலனிகளான கினியா, மொசாம்பிக் மற்றும் அங்கோலாவில் விடுதலைப் போராட்டங்கள், ஓரளவு தீவிரத்துடன், கினியாவில் உறுதியான வெற்றியுடனும் மற்ற இரண்டில் ஓரளவு வெற்றியுடனும் நடப்பதை, நம்மால் உற்று நோக்க முடியும். காங்கோவில் லுமும்பாவின் ஆதரவாளர்களுக்கும், ஷோம்பேக்கும் (இப்போது இவர் பக்கம் நிலைமை சாதகமாக இருக்கிறது) இடையே நடக்கும் மோதல்களை நாம் அவதானிக்கிறோம்; அங்கு போர் இன்னும் அமிழ்ந்த நிலையில் இருந்தாலும் தங்கள் சொந்த நலனுக்காக சிலர் நாட்டின் பெரும்பகுதிகளை அமைதிப் படுத்தியுள்ளனர்.

ரொடிசியாவில் வேறு மாதிரியான பிரச்சினை. தற்போது சட்டத்திற்குப் புறம்பாக ஆட்சிப்பீடத்தில் இருக்கும். வெள்ளைச் சிறுபான்மையினரின் நலனைக் காக்க, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தன்னால் முடிந்த அனைத்து வழியிலும் முயல்கிறது. பிரிட்டிஷ் கண்ணோட்டத்தில் அங்கு நிலவும் முரண்பாடு அதிகார பூர்வமற்றது. இந்த மேற்கத்திய அதிகார சக்தி, அதனுடைய இயல்பான புத்திசாலித்தனத்துடன் - அச்சொல்லின் சரியான அர்த்தம் வஞ்சனையான வேடதாரித்தனம் - இயான் சுமித்தின் அரசு சில நடவடிக்கைகளை எடுக்கும் போது தான் அதிருப்தியுற்றதாக காட்டிக் கொண்டது. அதைப் பின்பற்றும் காமன்வெல்த் நாடுகள் இதன் சூழ்ச்சிப் போக்கை ஆதரித்தாலும், பெரும்பாலான கருப்பு ஆப்பிரிக்க நாடுகள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பொருளாதார அடிவருடிகளாக அடிமைப்பட்டு இருக்கிறதோ இல்லையோ, எதிர்த்தன.

ரொடிஷியாவிலுள்ள தேசப்பக்தி இயக்கங்களின், கலக முயற்சிகளில் வெற்றி பெற்றிருந்தால், அருகில் உள்ள ஆப்பிரிக்க நாடுகளின் உருப்படியான ஆதரவு கிடைத்திருந்தால், அங்குள்ள நிலைமை எரிமலையாக மாறியிருக்கும். ஆனால் தற்சமயத்தில், இப்பிரச்சினைகள் எல்லாம் கையாலாகாத ஐ.நா.சபை, காமென்வெல்த், ஆப்பிரிக்க ஐக்கிய அமைப்பு போன்றவற்றில்தான் விவாதிக்கப் படுகின்றன.

ஆப்ரிக்காவில் உள்ள சமூக, அரசியல் சூழ்நிலைகளின் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, ஒரு கண்டப்புரட்சி நடக்கும் எதிர்ப்பார்ப்பிற்கு நம்மை அழைத்துச் செல்லவில்லை. போர்ச்சுக்கல்லுக்கு எதிரான விடுதலைப் போராட்டங்கள் வெற்றிப் பெறும். ஆனால் போர்ச்சுக்கல் இன்று, ஏகாதிபத்திய களத்திற்குள்ளேயே இல்லை. ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராகப் போராடும் இடங்களே புரட்சிகர முக்கியத்துவம் பெறுகின்றன. இதற்கு மூன்று போர்ச்சுக்கீசிய காலனிகளும் விடுதலைக்காகப் போராடுவதையும், புரட்சியை கூர்மைப் படுத்துவதையும் நிறுத்தி விடவேண்டும் என்று பொருளல்ல.

தென் அமெரிக்காவிலோ அல்லது ரொடிசியாவிர்ல் உள்ள கருப்பு மக்கள் தங்களின் உண்மையான புரட்சிகர போராட்டங்களைத் துவங்கும்போது, ஆப்பிரிக்காவில் ஒரு புதிய சகாப்தம் உதயமாகும் அல்லது ஏதாவது ஒரு தேசத்தில் உள்ள வறிய மக்கள், அங்குள்ள மேல்வர்க்க குழு ஆட்சிக்கு எதிராகப் போராடித் தங்களது உரிமையை மீட்டு எடுக்கும் போது இது நிகழும்.

அங்கு இப்போது வரை, இராணுவத் திடீர்புரட்சிகள் ஒன்றிற்குப் பின் ஒன்றாய் நிகழ்கின்றன. ஒரு அதிகாரிகள் குழு மற்றொரு குழுவை தூக்கியெறிகின்றன; அல்லது தங்களது வட்டார நலன்களைப் பேணாத ஆட்சியாளர்கள் துரத்தி அடிக்கப்பட்டு வேறொருவர் அங்கு அமர்த்தப்படுகிறார்; ஆனால் பெரும் மக்களெழுச்சி எதுவும் நடை பெறவில்லை. காங்கோவில் லுமும்பாவின் நினைவைக் கொண்டு

உருவாக்கப்பட்ட இத்தகைய குணாம்சங்கள், சிறிது காலத்திற்கு தோன்றி, பின்னர் வலிமை இழந்துள்ளன.

ஆசியாவில், நாம் ஏற்கனவே பார்த்தது போல, சூழ்நிலை குமுறிக் கொண்டு இருக்கிறது. இப்போது சண்டை நடந்து கொண்டு இருக்கும் லாவோசிலும், வியட்நாமிலும் மட்டும ஊசல் ஏற்பட்டிருக்கவில்லை. அப்படிப்பட்ட மற்றொரு இடம் கம்போடியா. அங்கு எந்த நேரமும் நேரடியான அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆக்கிரமிப்பு நிகழலாம், தாய்லாந்து, மலேயா போன்ற நாடுகளில் சில பிற்போக்குவாதிகள் ஆட்சியைக் கைப்பற்றி கம்யூனிஸ்ட் கட்சியையே நிர்மூலமாக்கிவிட்ட நிலையிலும் நாம் நம்பிக்கை இழந்துவிட முடியாது; இந்தோனேஷியா மற்றும் மத்திய கிழக்கு ஆசியாவும் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டிய இடங்களே.

லத்தீன் அமெரிக்காவில் கவுதமாலா, கொலம்பியா, வெனிசுலா மற்றும் பொலிவியாவில் ஆயுதப் போராட்டம் நடைபெற்று வருகிறது. பிரேசிலில் முதல் கிளர்ச்சிகள் வெடிக்கத் துவங்கி உள்ளன. வேறு சில எதிர்ப்புப் பொறிகளும் கிளம்பிப் பின்னர் அணைந்து விட்டன. இக்கண்டத்தில் உள்ள அனைத்து நாடுகளும் அப்படிப் பட்ட ஒரு போராட்டத்தை நடத்த கனிந்த நிலையிலேயே உள்ளன. வெற்றியை அடைவதற்கு, சோசலிசப் போக்கு உள்ள அரசாங்கங்களை அமைப்பதை தவிர, குறைந்தது எது அமைந்தாலும திருப்தி அடையாத நிலை ஏற்பட வேண்டும்.

இந்தக் கண்டத்தில் ஒரே மொழிதான் பேசப்படுகிறது. (ஒரே விதிவிலக்கு பிரேசில்; ஆனால் அம்மக்கள் பேசும் ஸ்பானிய மொழிக்கும், இதற்கும் உள்ள ஒற்றுமையால் அவர்களால் இதைப் புரிந்து கொள்ள முடியும்). அதே போல் அங்குள்ள வர்க்கங்களுக்கு இடையேயான ஒற்றுமை, அவர்கள் அதை தங்களுக்கு இடையில் சர்வதேச அமெரிக்க வர்க்கம் என்று அடையாளப் படத்திக் கொண்டுள்ளனர். இது மற்ற கண்டங்களில் காணப் படுவதைக் காட்டிலும் முழுமையானது, மொழி, பழக்கவழக்கங்கள், மதம் மற்றும் பொதுப்படையான அந்நிய எஜமான் ஆகியவவை அவர்களை ஐக்கியப் படுத்துகின்றன. சுரண்டும் வர்க்கத்தைப் பொறுத்த வரையும், சுரண்டப்படும் வர்க்கத்தைப் பொறுத்த வரையும், சுரண்டும் அளவும் முறையும் நமது அமெரிக்காவிலுள்ள பெரும்பான்மையான நாடுகளில் ஒன்றுப் போலவே உள்ளன. ஆகவே போராட்டத்திற்கான கிளர்ச்சிகள் மெதுவாக கனிந்து வருகின்றன.

நாம் நம்மையே சில கேள்விகள் கேட்டுக் கொள்ளலாம். இக்கிளர்ச்சிகள் வளர்ச்சியடையுமா? வளர்ச்சியடைந்தால் எந்த மாதிரியாக இருக்கும்? நமது அமெரிக்காவில் உள்ள போராட்டங்களின் குணத்திற்கு இடையேயான ஒற்றுமையின் காரணமாக, நாளடைவில் ஒரு கண்டப்போக்கு பெறும் என்பதை கொஞ்ச காலமாகவே நாம் கூறி வந்துள்ளோம். மனிதகுல விடுதலைக்காக போராடப்பட்ட பல போர்களங்களின் சாட்சியங்களாக அவை விளங்கும்.

கண்டம் அளவிலான இப்போராட்டம் என்ற கட்டுக்குள், இப்போது நடந்து வருபவை எல்லாம் அதன் அத்தியாயங்களே; ஆனால் அவைகள் ஏற்கனவே பல தியாகச் சீலர்களை உருவாக்கி விட்டது; அவர்கள், மனிதன் பூரண விடுதலையை அடைய நடத்தப் பட்டப் போராட்டத்தின் கடைசிக் கட்டத்தில் தங்களுடைய இரத்தத்தைச் சிந்தியவர்கள் என்று நமது அமெரிக்க வரலாற்றில் பொறிக்கப் படுவார்கள். இப்பெயர்களில் கமாண்டர் டுரீசியாஸ் லிமா, பாட்ரே காமிலோடோரஸ், கமாண்டர் பாப்ரிசியோ ஒஜேடோ, கமாண்டர்கள் லோபட்டன் மற்றும் லூயிஸ் டிலபுயன்டே உசிடா போன்ற பெயர்களும் இடம் பெறும். இவர்கள் அனைவருமே கவுதமாலா, கொலம்பியா, வெனிசுலா மற்றும் பெரு நாட்டின் புரட்சிகர இயக்கங்களைச் சார்ந்த பெருவீரர்கள்.

ஆனால் மக்கள் உற்சாகமாக களத்தில் குதிக்கும் போது புதியத் தலைவர்கள் உருவாக்கப் படுகிறார்கள். சீசர் சாண்டோஸ் மற்றும் யோன் சோசா கவுதமாலாவில் தங்கள் கொடிகளை உயர்த்தினார்கள்; பாபியோ வாஸ்குயகம் மாருலாண்டா கொலம்பியாவிலும் உயர்த்தினார்கள்; டோக்குவாஸ் பிரேவோ வெனிசுலாவின் மேற்குப் பகுதியிலும், அமெரிக்கோ மார்ட்டின் வெனிசுலாவின் எல் பாசில்லர் பகுதியிலும் போராட்டக் கொடிகளை விண்ணில் உயரப் பறக்க விட்டனர்.

பொலியாவில் ஏற்கனவே நடந்தது போல, நமது அமெரிக்காவில் புதிய கிளர்ச்சிகள் இந்த நாடுகளிலும் வேறு நாடுகளிலும் உதிக்கும்; ஆபத்து மிகுந்த இந்தத் தொழிலில் ஈடுபட்டு இருக்கும் நவீன புரட்சியாளன் அனைத்து துன்பங்களுக்கு இடையேயும் அதை தொடருவான். தங்கள் தவறுகளின் விளைவால் பலர் கொல்லப்படுவார்கள்; மற்றவர்கள் அவர்கள் எதிர்கொள்ளும் கடுமையான மோதல்களில் வீழ்ச்சி அடைவார்கள்; புரட்சிகரப் போராட்டத்தின் கதகதப்பில் புதியத் தலைவர்கள், புதிய போராளிகள் உருவாகுவார்கள்; மக்கள் போருக்கென்றே தங்கள் தலைவர்களையும், போர் வீரர்களையும் தேர்ந்தெடுப்பார்கள். யாங்கிக் கைக்கூலிகளின் ஒடுக்குமுறை அதிகரிக்கும். இன்று ஆயுதப் போராட்டம் நடக்கும் நாடுகள் அனைத்திற்கும் இராணுவ உதவி அளிக்கப் படுகிறது; யாங்கிகளின் பயிற்சியையும், அறிவுரைகளையும் பெற்ற பெரு இராணுவம், புரட்சியாளர்களுக்கு எதிராக

ஒரு வெற்றிகரமான நடவடிக்கையை எடுத்துள்ளது. ஆனால் போரின் நோக்கு இன்னும் அதிகமான அரசியல் மற்றும் இராணுவத் தெளியுடன் வளரும்போது, போராளிகளை வெற்றிக் கொள்ள முடியாது; யாங்கி தனது படையையே அனுப்ப வேண்டியிருக்கும், பெருவில் கூட யாருக்குமே தெரியாத புதிய தலைவர்கள், கொரில்லாக்களை அங்கீகரித்து வருகிறார்கள், சிறிது சிறிதாக, சிறிய ஆயுதக் குழுக்களை அடக்கப் போதுமானதாக இருந்த புராதன ஆயுதங்களுக்குப் பதிலாக நவீன ஆயுதங்கள் அனுப்பப்படும்; அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இராணுவ உதவிக்குப் பதிலாக, அமெரிக்க இராணுவ விரர்களே தேவைப் படுவார்கள்; அவர்களின் கைப்பாவை அரசுகள், கொரில்லாக்களின் தடுக்க முடியாத தாக்குதல்களில் வீழ்ந்து போவதைத் தடுக்க, ஒரு கட்டம் வரை, அவர்கள் தொடர்ந்து துருப்புகளை அனுப்பிக் கொண்டே இருக்க நேரிடும், இதுதான் வியட்நாமின் பாதையாக இருந்தது. இதுதான் மக்கள் பின்பற்ற வேண்டிய பாதை. இதே பாதைதான் நமது அமெரிக்காவிலுள்ள பின்பற்றப்படப் போகிறது. இங்கு இருக்கும் ஆயுதக் குழுக்கள், யாங்கி ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைப் படைகளை வெட்கி தலைகுனிய வைக்கவும், புரட்சிகர வெற்றியை முடுக்கி விடவும், சேர்ந்தியங்கும் கூட்டமைப்பை உருவாக்கவும் வாய்ப்பு இங்கு உள்ளது.

கடந்த விடுதலைப் போர்களில் மறுக்கப் பட்ட கண்டமாக இருந்த அமெரிக்கா, அதன் மக்களின் முன்னணிக் குரலாக ஒலிக்கும். கியூபப்புரட்சி மூலம், இப்போது முக்கண்டங்களிலும் தன் இருப்பை பறை சாற்றத் துவங்கியுள்ளது. இன்று அதற்கு மேலும் பொருத்தமான புதிய பொறுப்புகள் வந்துள்ளன; அதுதான் இரண்டாவது அல்லது மூன்றாவது வியட்நாமையும் உருவாக்கும் பொறுப்பு.

முதலாளித்துவத்தின் கடைசிக்கட்டமான ஏகாதிப்பத்தியம் ஒரு உலக அமைப்பு என்தையும், அதை உலக முரண்பாடுகளின் மூலமாக மட்டுமே தோற்கடிக்க முடியும் என்பதையும், நாம் நினைவில் கொள்ள வேண்டும். இப்போராட்டத்தின் போர்த்தந்திர முடிவு ஏகாதிபத்தியத்தின் அழிவில்தான் இருக்க வேண்டும். நமது பங்கு, சுரண்டப் பட்ட உலகின் வளர்ச்சியடையாத பகுதியைச் சேர்ந்த நம்முடைய பொறுப்பு, ஏகாதிபத்தியத்தின் அடிப்படைகளையே நிர்மூலாக்கி விடுவதுதான். நம்மிடம் இருந்து மூலதனத்தை, கச்சாப் பொருட்களை, தொழில் நிபுணர்களை, மற்றும் மலிவு உழைப்பைச் சுரண்டி, அதற்குப் பதிலாக அடிமை கொள்ளும் சாதனங்களாகிய புதிய மூலதனங்களை, ஆயுதங்களை மற்றும் இதர பொருட்களை நமக்கு ஏற்றுமதி செய்து, நாம் முழுவதும் அதனைச் சார்ந்து இருக்குமாறு செய்கின்றனர் ஏகாதிபத்தியவாதிகள்.

இந்தப் போர்த்தந்திர முடிவின் அடிப்படை காரணியாக நமது மக்கள் அனைவரின் உண்மையான விடுதலை பெரும்பாலான இடங்களில், ஆயுதப் போராட்டம் மூலமாகப் பெறப்படும் இந்த விடுதலை, நமது அமெரிக்காவில் அநேகமாக முறியடிக்கப்பட முடியாத ஒரு சோசலிசப் புரட்சியாக விளங்கும்.

நாம் இந்தப் பொதுவான காரியத்தை தந்திரத்துடன் அணுகி, எதிரி அவனது இயற்கையான சூழ்நிலையில் இருந்து வெளியே வந்து, அவனது பழக்கவழக்கங்களும் அவனது வாழ்க்கை முறையும், நடைமுறை யதார்த்தத்துடன் மோதும் பகுதிகளில் நம்முடன் மோதும் ஒரு சூழ்நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். நமது பகைவனை நாம் குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது. ஒரு அமெரிக்க ஐக்கிய நாட்டுப் போர்வீரன் அவனது தொழில் நுட்பத் திறமையும், அவனுக்கு வழங்கப் பட்டிருக்கும் நவீன ஆயுதங்கள் மற்றும் பிற வசதிகளின் அபரிமிதமான அளவும் சேர்ந்து, பயங்கரமானவனாக ஆக்கி விடுகிறது. இன்று அவனது எதிரிகளிலேயே மிகக் கசப்பான எதிரியான வியட்நாமிய வீரனிடம் மிகவும் உச்நிலையில் இருக்கும் சித்தாந்த ரீதியான உத்வேகம் இவனுக்கு கிடையாது. அந்த இரராணுவத்தை அதனுடைய ஒழுங்குணர்வையும், கட்டுப்பாட்டையும் சிதைப்பதின் மூலம்தான் வெற்றிக் கொள்ள முடியும். அதைத் தோற்கடித்து, மீண்டும் மீண்டும் அதற்கு துன்பங்களைக் கொடுப்பதன் மூலம் அதைச் செய்ய முடியும்.

ஆனால் இப்போது கோடிட்டுக் காட்டப்பட்ட வெற்றிகளைப் பெற, அந்த வெற்றி அதற்காக மக்களின் அளவற்ற தியாகங்களைக் காவு கேட்கும். அந்தத் தியாகங்கள் இன்றி, இப்பகல் வெளிச்சத்திலேயே யோசிக்கப்பட வேண்டும். நம் துருத்தியை வேறொருவன் வந்து ஊதுவான் என்று காத்திருந்து அதனால் போர்க்களங்களை நாம் தவிர்த்து வந்தால், நாம் சந்திக்க வேண்டியிருக்கும் கடுந்துயரங்களை விட, இவைகள் குறைவான வேதனை உடையவையாகதான் இருக்கும்.

கடைசியாக விடுதலை பெறும் ஒரு நாடு, ஒரு ஆயுதப் போராட்டம் இல்லாமல், ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஒரு நீண்ட, வேதனை மிகுந்த, குரூரமான போர் புரியாமல் விடுதலையை அடையலாம் என்பது நடக்கக் கூடும்தான். ஆனால் ஒருவேளை இந்தப் போராட்டத்தை அல்லது அது உலகப்போரின் ஊழித்தீக்கு அளிக்க இருக்கும் பங்கைத் தடுக்க முடியாமல் கூட போய்விடலாம்: அப்படியானால் மக்கள் படக்கூடிய வேதனை ஒரே அளவாகத்தான் இருக்கும். சமயங்களில் அதிகரிக்கவும் செய்யலாம். நம்மால் வருங்காலத்தை முன்பே காண முடியாதுதான். ஆனால் சுதந்திரத்திற்காக ஏங்கி, போராட்டத்தை

www.padippakam.com

முன்னெடுத்துச் செல்லும் நாடாக நாம் ஏன் இருக்கக்கூடாது என்ற கவர்ச்சியில் மயங்கி, பின்னர் போராட்டத்தை அவருக்கு ஒதுக்கி, கடைசியாக வெற்றியின் மிச்சமாக தனது சுதந்திரத்தை எதிர்பார்த்து காத்திருக்கும் நிலைக்கு ஒருபோதும் சென்று விடக்கூடாது.

தேவையற்ற தியாகங்களைத் தவிர்ப்பது நியாயமானதுதான். அமைதியான முறைகளின் மூலமாகவே தன்னை விடுதலை செய்து கொள்ளக்கூடிய சாத்தியக்கூறு அமெரிக்காவிற்கு இருக்கிறதா என்பதை நாம் தெறிவாக்கிக் கொள்ள வேண்டும். நம்மைப் பொறுத்தவரை இக்கேள்விக்கான விடை தெளிவாகவே தெரிகிறது. தற்போதைய தருணம் அத்தகைய போராட்டத்தை துவக்குவதற்கான சரியான நேரமாக இருக்கலாம் அல்லது இல்லாமலும் போகலாம்; ஆனால் சுதந்திரம் என்பது போராடமலேயே கிடைத்துவிடும் என்ற கனவை வளர்த்துக் கொள்ளக் கூடாது. அதற்கு நமக்கு உரிமையும் கிடையாது. இத்தகைய மோதல்கள் எல்லாம் தெருச் சண்டைகளாக, கண்ணீர் புகைக் குண்டுகளுக்கு எதிராக கல் எறியும் சம்பவங்களாக, அமைதியான பொதுவேலை நிறுத்தங்களாகவே இருந்து விடக்கூடாது. அல்லது ஒரு சிலராட்சியின் ஆட்சிக் கோபுரத்தை, கோபம் சொண்ட மக்கள் இரண்டு மூன்று நாட்களிலேயே, அழித்து விடுவதாயும் அமைந்து விடாது. போராட்டம் நீண்டதாக, கடுமையானதாக, நகரங்களில், போராளிகளின் வீடுகளில் - அங்கு அடக்குமுறைப் படைகள் சென்று அவர்களின் குடும்பத்தினரிடையே சுலபமான பலியாடுகளைத் தேடுவார்கள் -ஒட்டுமொத்தமாக கொலை செய்யப்படும் கிராம மக்களிடையே, கிராமங்களில், எதிரியின் விமானங்களால் தரைமட்டமாக்கப் பட்டிருக்கும் மாநகர்களில் கொரில்லாக்கள் முன்னெடுத்துச் செல்வதாக இருக்கும்.

அவர்கள்தாம் நம்மை இப்போராட்டத்தினுள் பிடித்து தள்ளுகின்றனர்; வேறு மாற்று கிடையாது; நாம் இதைத் தயார் செய்ய வேண்டும். அதை முன்னெடுத்துச் செல்ல தீர்மானிக்க வேண்டும்.

தொடக்கம் எளிதாக இராது; மிகமிகக் கடினமானதாக அவை இருக்கும். ஆளும் வர்க்கத்தின் ஒடுக்குமுறைச் சக்தி அனைத்தும், மக்களைத் தூண்டிவிடவும், மிருகத் தனமாக அடக்கவும், அவர்களுக்கு இருக்கும் திறமை அனைத்தையும், அவர்களின் குறிக்கோளை நிலைநிறுத்தச் செலவிடப்படும். முதற்கட்டங்களில் நமது போக்கு அதில் சமாளித்து நிற்பதாக அமையும்; பின்னர் கொரில்லாக்ககளில் எண்ணற்ற உதாரணங்களை நாம் பின்பற்றுவோம். அதாவது ஆயுதப் பிரச்சாரம் (வியட்நாமிய அர்த்தத்தில், துப்பாக்கி குண்டுகளின் பிரச்சாரம் - எதிரியுடனான போராட்டம், வெற்றியோ தோல்வியோ கவலையில்லை) அனைத்தும் சுரண்டப்பட்ட மக்களிடம் வேர் பிடித்து நிற்பதை கொரில்லாக்கள் கற்க வேண்டிய பெரும் பாடம். இன்னும் இரத்தம் கொட்டும் கொடூரமான அடக்குமுறையைத் தடுத்துப் போராட, கடுமையான பணிகளுக்காக தயார் செய்து கொள்ள, தேசிய உணர்ச்சி தூண்டி விடப்பட வேண்டும். போராட்டத்தின் காரணியாக வெறுப்பு அமைய வேண்டும்; எதிரியின் மீது இரக்கமற்ற வெறுப்பு; நம்முடைய இயற்கையான எல்லைகளை மீறி நம்மை உந்துவிக்கும் வெறுப்பு; மனிதனை ஆற்றல் வாய்ந்த, கோபாவேசமான, தேர்ந்தெடுத்து ஈவிரக்கமின்றிக் கொல்லும் ஒரு இயந்திரமாக மாற்றக்கூடிய வெறுப்பு. நமது வீரர்கள் இப்படிதான் இருக்க வேண்டும். மிருகத் தனமான ஒரு எதிதியை நிர்மூலமாக்க, வெறுப்பு இல்லாத மக்களால் ஒன்றும் செய்ய முடியாது.

எதிரி எந்த மூலைக்கெல்லாம் போரை எடுத்துச் செல்கிறானோ, அங்கெல்லாம் நாமும் அதை எடுத்துச் செல்ல வேண்டும்; அவனது வீடுகளுக்கு; அவன் சினிமா பார்க்கும் அரங்குகளுக்கு; முழுமையான யுத்தத்தில், ஒரு நிமிடம் கூட அவன் நிம்மதியாக இருக்க நாம் அவகாசம் தரக்கூடாது; அவனது படை எமுகாமுக்கு வெளியேயும், உள்ளேயும், அவன் எங்கிருந்தாலும் நாம் அவனைத் தாக்க வேண்டும்; அவன் எங்கு நகர்ந்து போனாலும் நாற்புறமும் சூழப்பட்ட ஒரு மிருகம் போன்ற நிலையில் இருப்பதாக அவனை எண்ண வைக்க வேண்டும். பின்னர் அவனது கட்டுப்பாட்டு நரம்புகள் தெறிக்க ஆரம்பிக்கும், அவன் மேலும் மிருகத் தனமாக ஆவான், ஆனால் அவனது வீழ்ச்சி துவங்கி விட்டதற்கான அறிகுறியை நம்மால் காண முடியும்.

ஒரு உண்மையான பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்தை நாம் வளர்த்து எடுப்போம். சர்வதேச பாட்டாளி வர்க்க படைகளுடன் மனித இனத்தை மீட்டெடுப்தற்கான புனித நோக்கோடு கூடிய கொடியின் கீழ் நாம் போராடுவோம். வியட்நாம் கொடியின் கீழ், வெனிசுலா கொடியின் கீழ், கவுதமாலா கொடியின் கீழ், கொலம்பியா கொடியின் கீழ், பொலிவியா கொடியின் கீழ், பிரேசில் கொடியின் கீழ், ராவேர்ஸ் கொடியின் கீழ், கினியா கொடியின் கீழ், பிரேசில் கொடியின் கீழ் - ஒரு அமெரிக்கன், ஏன் ஐரோப்பியன் கூட இறப்பது விரும்பத்தக்கது; புகழ்மிக்கது.

நான் பிறக்காத நாடு ஒன்றிற்காக ஒருவன் சிந்தும் இரத்தம், அப்போராட்டத்தில் தப்பிப் பிழைத்தவர்களிடம் ஒரு அனுபவமாக ஊடுருவி, பின்னர் அவனது சொந்த நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் கலக்கும் ஜோதியாகி விடும்.

படிப்பகம்

நமக்குள் இருக்கும் வேறுபாடுகளைக் களைந்து, போராட்டத்திற்காக அனைத்தையும் அர்பணிக்க வேண்டிய வேளை வந்துவிட்டது.

சுதந்திரத்திற்காக நடைபெறும் போராட்டங்களை, பெரும் முரண்பாடுகள் கிழித்துக் குதறிக் கொண்டிருப்பதை நாம் அறிவோம்; அதை யாரும் மறைக்க முடியாது. பேச்சுவார்த்தைகள் மூலம் அவற்றிற்கு இடையேயான முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளக்கூடிய சாத்தியக்கூற்றை, ஒரேயடியாக முடியாது என்றில்லா விட்டாலும் கூட, மிகக் கடினமானதாக ஆக்கியுள்ள கசப்பான, தீவிரமான நிலையை அந்த முரண்பாடுகள் அடைந்துள்ளன என்பதையும் நாம் அறிவோம். எதிரெதிரான குழுக்கள் தவிர்க்கும், நல்லிணக்கத்தை உண்டு பண்ணக்கூடிய வழிமுறையைத் தேடி அலைவது உபயோகமற்ற வேலை. எது எப்படியிருந்த போதிலும், அங்கே எதிரி இருக்கிறான். ஒவ்வொரு நாளும் அவன் தாக்குதல் நடத்துகிறான். புதிய அடிகளின் மூலம் நம்மை அச்சுறுத்துகிறான். இந்த ஒவ்வொரு அடியும் நம்மை, இன்று நாளை அல்லது அதற்கு மறுநாள் ஒற்றுமைப் படுத்த வேண்டும். இதை யார் முதலில் புரிந்து கொண்டு, தேவையான ஐக்கியத்திற்காக உழைக்கிறார்களோ அவர்கள் மக்களின் நன்றியைப் பெறுகிறார்கள்.

பகையுணர்வோடும், பிடிவாதத்தோடும், ஒவ்வொரு முரண்பாடும் முட்டுக் கொடுக்கப் படுவதால், அனைத்தும் சுரண்டப்பட்ட நாம், இவ்வேறுபாடுகளின் ஒரு வடிவத்தையோ அல்லது மற்றொன்றையோ ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுக்க முடியாது; சமயங்களில் ஒரு குழுவின் வாதத்தோடு நாம் ஒத்துப் போனாலும் அல்லது மற்ற குழுவைக் காட்டிலும் அதிகமாக ஒரு குழுவோடு ஒத்துப் போனாலும் கூ, நாம் இதைச் செய்ய முடியாது. போர் சமயங்களில், இத்தகைய வேறுபாடுகளின் வெளிப்பாடு பலவீனத்தை உருவாக்கும்; ஆனால் இக்கட்டத்தில் அவைகளை பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்ப்பது என்பது ஒரு கனவே. வரலாறு அவைகளை அரித்து விடும்; அல்லது அவைகளின் உண்மையான அர்த்தத்தை வெளிப்படுத்தும்.

நமது போராட்ட உலகில், தந்திரோபாயம் குறித்த வேறுபாடுகள், நமது குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைய கடைபிடிக்கப்படும் செயல்முறைகள் ஆகியவைகள் அடுத்த மனிதனின் கருத்துகளுக்கும் மதிப்பு கொடுத்தே பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். நமது மாபெரும் போர்த்தந்திர குறிக்கோளாகிய ஏகாதிபத்தியத்தை ஆயுதப் போராட்டம் மூலமாக அழித்தொழிப்பது குறித்து நாம் உறுதியாக இருக்க வேண்டும்.

வெற்றி குறித்த நமது நம்பிக்கைகளை நாம் தொகுத்துப் பார்ப்போம்; ஏகாதிபத்தியத்தின் கொத்தளமாக விளங்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஒடுக்கு முறைகளைக் களைந்தெடுப்பதன் மூலமாக, ஏகாதிபத்தியத்தை நிர்மூலப் படுத்துவது. இதைச் செய்ய, ஒரு தந்திரோபாயமாக, ஒவ்வொன்றாக அல்லது சிறு கட்டமாக, மெதுவாக மக்களை விடுவிப்பது; எதிரியை அவனது பூமியில் இருந்து பெயர்தெடுத்து கடமையான போராட்டத்திற்கு இழுப்பது; அவனுக்கு சாதகமான பகுதிகளை, வாழ்வாதாரமான முகாம்களை அழிப்பது ஆகியவற்றை செய்ய வேண்டும்.

இதன் அர்த்தம் நீண்ட யுத்தம். மீண்டும் நாம் நினைவுப் படுத்துகிறோம், ஒரு குரூரமான யுத்தமாக இருக்கும். மக்களுக்கு அதனால் ஏற்படும் உடனடிப் பின்விளைவுகளுக்குப் பயந்து கொண்டு, அதைத் துவங்க தயங்கிக் கொண்டோ, அல்லது துவங்காமலேயோ இருப்பதன் மூலம், ஒருவன் தன்னை ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். இங்கு முக்கியம் வெற்றி குறித்து நமது மாறாத நம்பிக்கை. இந்தக் கணத்தின் அழைப்பை நாம் உதாசீனப்படுத்த முடியாது. வியட்நாம், தனது முடிவேயற்ற வீரசாகசப் படிப்பினைகளின் மூலமாக, இறுதிவெற்றி அடைவதற்காக தினமும் நடத்தும் வேதனை மிகுந்த போராட்டங்கள், சாவுகள் மூலமாக இதைச் சுட்டிக் காட்டுகிறது.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் வாழ்வுத் தரத்தை சொகுசாக அனுபவித்து வந்த ஏகாதிபத்திய படைவீரன், அன்று அசௌகரியங்களைப் பொறுத்துக் கொண்டு, எதிரியின் பகுதிக்குள் அவனுக்குத் தெரியாமல் போக முடியாமல் இருக்கும் பாதுகாப்பின்மையுடன் – பாதுகாப்பு கோட்டையாக விளங்கும் அவனது முகாமிற்கு வெளியே ஓரடி எடுத்து வைத்தாலும் சாவு நிச்சயம் – விரோதமான பூமியில் வாழ வேண்டியுள்ளது. மேலும் அனைத்து மக்களின் தொடர்ச்சியான விரோத மனப்பான்மை வேறு இவையெல்லாம் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குள்ளேயே எதிரொலிக்கத் துவங்கி உள்ளது; அங்கே ஒரு புத்துணர்ச்சியை இது கிளர்ந்தெழச் செய்துள்ளது; அது வீரியம் மிகுந்ததாக இருந்தாலும் கூட, ஏகாதிபத்திய சக்திகள் அதை அமிழ்த்து விட்டன. ஏகாதிபத்திய எல்லைகளுக்கு உள்ளேயே வர்க்கப் போராட்டம்.

வருங்காலத்தில் இரண்டு, மூன்று, ஏன் அதற்கும் அதிகமான வியட்நாம்கள் உலகமெங்கும் கிளர்ந்தெழுந்து, அதனுடைய சாவுகளோடும், சொல்லொண்ணாத் துயரங்களோடும், தினசரி வீரசாகசங்களோடும், ஏகாதிபத்தியத்தின் முகத்தில் மேலும் மேலும் அது விடும் குத்துகளோடும்,

ஏகாதிபத்தியப் படைகளை நிலைக் குலையச் செய்யும் திடீர் தாக்குதல்களோடும், உலகமக்கள் அனைவரின் அதிகமாகியுள்ள வெறுப்போடும், முகிழ்ந்தெழும் ஒரு பிரகாசமான எதிர்காலம் நெருங்கி விட்டது.

போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு அளிக்கப்படும் அனைத்து விதமான ஆதரவுகளும் இன்னும் ஆற்றல் மிக்கவையாக மாற்றும் விதத்தில், நாம் நம்முடைய அடிகளை இன்னும் வலுவாகவும், செம்மையாகவும் கொடுக்க ஐக்கியமாக முடிந்தால், அந்த எதிர்காலம் இன்னும் சிறப்பானதாகவும் நெருக்கமானதாகவும் இருக்கும்.

நாம் உலக வரைபடத்தில் ஒரு சிறு புள்ளியாய் விளங்கும் ஒரு நிலத்தில், நமது கடமைகளைச் செய்து முடித்து, நமது வாழ்க்கை, நமது தியாகங்கள் போன்ற நம்மால் முடிந்த சிலவற்றை அளித்து, இப்போராட்டத்திற்காக நம்மையே அர்ப்பணித்தால், நமது இரத்தத்தால் அபிஷேகம் செய்யப்பட்ட, ஏற்கனவே நமதாகி விட்ட, ஏதோ ஒரு பூமியில் என்றாவது ஒரு நாள், நாம் நம்முடைய கடைசி மூச்சை விட வேண்டியிருந்தால், நாம் நம்முடைய செயல்களின் முழுப் பரிமாணத்தையும் அறிந்திந்தோம் என்பது அறியப்படட்டும். நாம் பாட்டாளி வர்க்கப் பெரும்படையின் ஒரு அங்கமாக இருப்பது மட்டுமல்ல, கியூபப்புரட்சியில் இருந்து கற்றுக் கொண்டவை குறித்து, உலகின் இந்தப் பகுதியில் தனது நடத்தையின் மூலம் மாபெரும் படிப்பினையை பெற்றுத் தந்த அதன் மாபெரும் தலைவர், “மனித இனத்தின் தலைவிதியே ஆபத்தில் இருக்கும் போது, ஒரு மனிதனுடைய அல்லது ஒரு நாட்டினுடைய அபாயங்களும் தியாகங்களும் ஒரு பொருட்டே அல்ல” என்று கூறியதைக் குறித்து, நாம் பெருமையாக இருந்தோம் என்பது தெரியப் படட்டும்.

நமது ஒவ்வொரு செயலும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போர்முரசு; மனித குலத்தின் மாபெரும் எதிரியான அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு எதிரான, மக்கள் ஒற்றுமையின் போர்ப்பரணி. எங்காவது இறப்பு நம்மை எதிர்பாராமல் எதிர் கொண்டால், நமது போர்க்குரல் அதற்குச் செவிசாய்க்கும்; ஏதவாது ஒரு காதை அது அடையும் பட்சத்தில், நமது ஆயுதங்களை எடுத்துப் போராட வேறு ஒருகரம் நீளும் பட்சத்தில், இயந்திரத் துப்பாக்கியின் படபடக்கும் உறுமலின் பின்னணியில் கல்லறை கீதங்களை இசையோடு பாட மற்றவர்கள் தயாராக இருக்கும் பட்சத்தில், போரின், வெற்றியின் புதிய போர்க்கூச்சல்கள் முழங்கப்படும் பட்சத்தில் நாம் அதை வரவேற்கிறோம்.

(ஆப்ரிக்க ஆசிய மற்றும் லத்தீன் அமெரிக்க மக்கள் ஆதரவு இயக்க அமைப்பின் [OSPAAI] ஹவானா நிர்வாக செயற்குழு ஆங்கிலத்தில் பிரசுரமாக 1967 ஏப்ரல் 16ம் தேதி வெளிட்டது)

# ஃபிடலுக்குக் கடிதம்

ஹவானா
வேளாண்மை ஆண்டு

ஃபிடல்,

இந்த நேரத்தில் எனக்கு பல விஷயங்கள் நினைவுக்கு வருகின்றன; உங்களை மரியா அந்தோனியாவின் வீட்டில் சந்தித்தது; உங்களுடன் வர என்னை நீங்கள் அழைத்தது; புறப்பட தயாரான போது நமக்கு ஏற்பட்ட பரபரப்பு.

ஒருநாள் அவர்கள் வந்து, இறந்து போனால் யாருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்ற கேட்டவுடன், நேர இருக்கும் விளைவின் தீவிரம் நமக்கு உறைத்தது. அது உண்மைதான் என்பதைப் பின்னாளில் அறிந்துக் கொண்டோம். ஒரு புரட்சியின் (அது உண்மையாக இருக்கும் பட்சத்தில்) முடிவு வெற்றி அல்லது வீரமரணம் என்பதையும் நாம் புரிந்து கொண்டோம். நமது தோழர்களின் தியாகங்களின் மீது புரட்சி தீர்மானிக்கப்பட்டது.

இன்று நாம் மேலும் வளர்ச்சி அடைந்து இருப்பதால், அன்றைய செயல்கள், அன்றிருந்த அளவு இன்று வியப்புக்குரியதாக இல்லாமல் இருக்கலாம்; ஆனால் கடந்த காலம் மீண்டும் திரும்புகிறது. கியூப மண்ணிலே நிகழ்ந்த கியூபப் புரட்சியில், எனக்களிக்கப் பட்டிருந்த கடமைகளை நான் நிறைவேற்றி விட்டேன் என்றே உணர்கிறேன். ஆகவே, நான் உங்களிடமிருந்து, நமது தோழர்களிடமிருந்து இப்போது என்னவர்களாகிவிட்ட கியூப மக்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

நான் கட்சியின் தலைமைப் பொறுப்பின் கடமைகளில் இருந்து, அமைச்சர் பதவியில் இருந்து, மேஜர் பொறுப்பில் இருந்து, கியூபக் குடிமகன் உரிமையில் இருந்து முறையாக விலகுகிறேன். இனி எனக்கு கியூபாவுடன் சட்டரீதியானஉறவு எதுவுமில்லை. ஆனால் வேறு வகையான பிணைப்புகள் பல உள்ளன. அவைகளை எல்லாம் அவ்வளவு சுலபமாக உதறி விட முடியாது.

கடந்தக்காலத்தை திருப்பிப் பார்க்கும் போது, புரட்சியின் வெற்றியை உறுதிப் படுத்த, நான் நேர்மையாகவும், அர்பணிப்போடும் செயல்பட்டு வந்தேன் என்றே நம்புகிறேன். சியாரா மாஸ்ட்ரோ மலைத் தொடரில் கழித்த முதல் சில தினங்களில் இருந்தே, உங்கள் மேல் மேலும் அதிக நம்பிக்கை வைக்காமல் இருந்ததும், ஒரு புரட்சியாளனாக, ஒரு தலைவனாக பரிணமித்த உங்களது குணாம்சங்களை உடனடியாக புரிந்துக் கொள்ள தவறியதுமே, என்னுடைய ஒரே தவறு. பொன்னான சில தினங்களின் ஊடே, நான் வாழ்ந்து விட்டேன். கரீபிய சிக்கல் கொழுந்து விட்டு எரிந்துக் கொண்டிருந்த அந்த சோகமான, ஆனால் துடிப்பு மிக்க காலக்கட்டத்தில் உங்களுடன் சேர்ந்து, நமது மக்களின் பக்கம் நின்ற பெருமையை இன்றும் நான் உணர்கிறேன். அச்சமயத்தில் நீங்கள் இயங்கியது போல் அவ்வளவு பிரமாதமாக ஒரு தலைவர் செயல்படுவது என்பது ஆபூர்வமானது; நமது கொள்கைகள் சிந்தனைப் போக்கோடு ஒத்துப்போய், உங்களைத் தயக்கமின்றி பின்பற்றியதற்காகவும் நான் மிகவும் பெருமைப் படுகிறேன்.

இந்த எளியவனின் உதவிக்கரம் தற்போது வேறு சில நாடுகளுக்கு தேவைப் படுகிறது. கியூபத்தவைர் என்ற பொறுப்பில் நீங்கள் இருப்பதால், உங்களால் செய்ய முடியாதவற்றை என்னால் செய்ய முடியும். நாம் பிரிவதற்கான நேரம் வந்து விட்டது.

ஒருபக்கம் மகிழ்ச்சியோடும், மறுபக்கம் துயரத்தோடும் நான் இதை மேற்கொள்கிறேன் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள ஆசைப் படுகிறேன்; என் அன்பான மக்கள் ஒரு சிறப்பான சமுதாயத்தை கட்டி எழுப்புவார்கள் என்ற என் தூய நம்பிக்கையை, இங்கு விட்டு விட்டே நான் பிரிகிறேன். இது என்னைப் பிழிந்தெடுக்கிறது. புதிய போராட்ட களங்களில், நீங்கள் என்னிடம் விதைத்த நம்பிக்கைக்கு பாத்திரமானவனாய் விளங்குவேன்; என் புனிதக் கடமைகளில் தலையானதான, எங்கெங்கு இருந்தாலும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடும் கடமையை நான் நிறைவேறுகிறேன் என்பதை மனதில் இருத்திக் கொள்வேன். இது என்னை இதப்படுத்துகிறது; ஏதாகிலும வருத்தம் இருப்பினும், அதையும் களையச் செய்கிறது.

கியூபா ஒரு முன்னுதாரணமாக விளங்கியதை தவிர என் செயல்களுக்கு அதற்கு எந்த பொறுப்பும் கிடையாது என்பதை மீண்டும் நான் கூறிக் கொள்கிறேன். எங்கோ கண்காணாத இடத்திர் என் முடிவு நெருங்குமானால், அக்கடைசி தருணத்தில் என் நினைவு இம்மக்களிடமும், குறிப்பாக உங்களிடமும்தான் இருக்கும். நீங்கள் எனக்குக் கற்றுக் கொடுத்ததற்கும், நீங்களே ஒரு உதாரணமாக விளங்கியதற்கும், நான் நன்றி கூறுகிறேன். என் செயல்பாடுகளின் விளைவுகள் உங்கள் நம்பிக்கைக்கு

பங்கம் விளைவிக்காதிருக்க நான் முயல்வேன். நமது புரட்சியின் அயல்நாட்டு கொள்கையோடு நான் எப்போதும் ஒத்திருந்தே வந்திருக்கிறேன்; இப்போதும் அது தொடர்கிறது. நான் எங்கு இருந்தாலும், ஒரு கியூபப் புரட்சியாளனின் பொறுப்புணர்வோடு விளங்குவேன்; அவ்வாறே செயல் படுவேன். நான் எனது மனைவி மக்களுக்கு எந்தச் சொத்தும் விட்டுச் செல்லவில்லை; அதற்காக நான் வருத்தப் படவும் இல்லை. இது இப்படி இருப்பதிலும், எனக்கு மகிழ்ச்சிதான். நான் அவர்களுக்காக எதையும் கேட்கவில்லை, அவர்களது கல்வி மற்றும் தேவைகளை அரசே கவனித்துக் கொள்ளும் என்பதால்.

நான் பல விஷயங்களை உங்களிடம், நமது மக்களிடமும் சொல்ல விரும்பப் படுகிறேன். இருந்தாலும் அவைகள் தேவையில்லை என்றே உணர்கிறேன்; நான் சொல்ல விரும்புவதை வெளிப்படுத்தும் சக்தி, எனது வார்த்தைகளுக்கு இல்லை. அதனால், காகிதங்கள் வீணாக்குவதை தவிர வேறு பயன் ஏதும் ஏற்பட்டு விடப் போவதில்லை.

நமது முன்னேற்றம் எப்போதும் வெற்றியை நோக்கியே.. வெற்றி அல்லது வீரமரணம்..

என் முழுமையான புரட்சிகரமான உணர்ச்சி வேகத்துடன் உங்களை ஆரத் தழுவிக் கொள்கிறேன்.

'சே'

(1965-ம் ஆண்டின் மத்தியில் எழுதப்பட்டது. 1965 அக்டோபர் 3-ம் தேதி ஃபிடல் தனது சொற்பொழிவில் வாசித்துக் காண்பித்தார்)

# குடும்பத்தினருக்குக் கடிதம்

என் அன்பிற்குரியவர்களே,

என் கால்களுக்கடியில் ரோசினான்டேயின்[2] விலா எலும்புகளை மீண்டும் நான் உணர்கிறேன். கேடயத்துடன் என் பயணம் மீண்டும் தொடர்கிறது.

சுமார் பத்து வருடங்களுக்கு முன்பு இதே போல விடை பெற்று, உங்களுக்கு நான் ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அதில் நான் ஒரு சிறந்த படைவீரனாகவும், சிறந்த மருத்துவராகவும் இல்லாமல் இருந்ததற்காக வருந்தி எழுதியிருந்ததை, இப்போழுது நினைவு கொள்கிறேன். பின்னர் கூறியதைப் பற்றி நான் இப்போது கவலைப் படுவதில்லை. ஆனால் இன்று, நான் அவ்வளவு மோசமான படைவீரன் அல்ல.

சுருக்கமாகக் கூறினால், எதுவும் மாறவில்லை. எனது நம்பிக்கை இன்னும் உறுதிப் பட்டுள்ளது: என்னுடைய மார்க்சியம் இன்னும் ஆழமானதாகவும் தூய்மையானதாகவும் மாறிவிட்டது என்பதைத் தவிர, சுதந்திரத்திற்காகப் போராடும் மக்களுக்கு ஆயுதப் போராட்டம் மட்டும்தான் ஒரே தீர்வு என்பதில் நான் உறுதியாய் உள்ளேன்; அந்த நம்பிக்கையின் படியே நடக்கவும் செய்கிறேன்.

என்னை ஒரு சாகசக்காரன் என்று பலர் அழைக்கலாம். நான் சாகசக்காரன்தான், ஆனால் ஒரெயொரு வித்தியாசம்; தன்னுடைய அசைக்கமுடியாத நம்பிக்கைகளை நிரூபிப்பதற்காக தன்னையே அர்ப்பணம் செய்து கொள்ளத் தயங்காத சாகசக்காரன்.

ஒருவேளை இதுவே என் கடைசிக் கடிதமாகவும் இருக்கலாம். இது என்னுடைய குறிக்கோள் அல்ல. ஆனால் நடக்க இருப்பதை தர்க்கரீதியாக ஆய்ந்துப் பார்த்தால், அப்படிதான் தோன்றுகிறது. அப்படி நடக்குமெனில், என்னுடைய கடைசித் தழுவலை ஏற்றுக் கொள்ளுங்கள்.

நான் உங்களையெல்லாம் ஆழமாக நேசிக்கிறேன்; அதை எப்படி வெளிப்படுத்துவது என்பதுதான் தெரியவில்லை. நான் என் வழியில் நடப்பது பற்றி மிகவும் தீர்மானமாக இருக்கிறேன். ஆனால் பல சமயங்களில் நீங்கள் என்னை சரிவர புரிந்து கொள்ளவில்லை என்றே எண்ணுகிறேன். என்னைப் புரிந்து கொள்வது சுலபமாக இல்லாதிருக்கலாம்; ஆனால் இப்போது என்மீது நம்பிக்கை வையுங்கள். அது மட்டும் போதும்.

தொய்ந்துப்போன எனது கால்களையும், ஓய்ந்து போன எனது நுரையீரல்களையும் எனது மனஉறுதியை நான் ஒரு கலைஞனின் நுட்பத்தோடு செதுக்கி முழுமையாக்கி உள்ளேன்.

இருபதாம் நூற்றாண்டின் இந்த சிறிய போராளியை அவ்வப்போது நினத்துக் கொள்ளுங்கள். சீலியா, ராபர்ட்டோ, ஜான் மார்டின், போட்டாடின், பீட்ரிஸ் மற்றும் அனைவருக்கும் எனது அன்பு முத்தங்கள்.

அன்புப் பெற்றோர்களே, உங்களுக்கு கீழ்ப்படிந்து நடக்காத, இந்தத் தறுதலைப் பிள்ளையின் தழுவலை ஏற்றுக் கொள்ளுங்கள்.

- எர்னஸ்டோ -

*(1965-ம் ஆண்டின் மத்தியில் எழுதப்பட்டுள்ளது. ஜுவென்டெட் ரிபெல்டி அவர்கள் இக்கடிதத்தை ஜுன் 24, 1967-ம் நாள் மறுபடியும் வெளியிட்டார் )*

[2] ரோசினான்டே - டான் குயிக்சாட்டின் குதிரையின் பெயர்

www.padippakam.com

# எப்போதும் வெற்றி நோக்கியே முன்னேறுவோம்

## 'சே'க்கு ஃபிடல் காஸ்ட்ரோவின் புகழாரம்

புரட்சிகரமான தோழர்களே!

சே குவாராவை நான் முதன் முதலில் 1955-ம் ஆண்டு ஜுலையிலோ அல்லது ஆகஸ்டிலோ சந்தித்தேன். ஒரே இரவில், வருங்கால சிரண்மாவின் சாகசப் பயணத்திற்குச் செல்ல, அச்சமயத்தில் அப்பயணத்திற்குத் தேவையான கப்பலோ, ஆயுதங்களோ, போராளிகளோ இல்லாதிருந்த நிலையிலும் கூட, தன்னையும் ஒருவராக இணைத்துக் கொண்டார்.

ராகுலையும் சேர்த்து, சிரண்மா பயணத்தில் இணைந்த முதல் இருவரில் சேயும் ஒருவர். இப்போது பன்னிரண்டு வருடங்கள் கடந்துவிட்டன. போராட்டங்களும், வரலாற்று முக்கியத்துவங்களும் நிறைந்த பன்னிரண்டு வருடங்கள் இவை. இக்காலக் கட்டத்தில் தைரியமிக்க, இழக்கற்கரிய அநேக தோழர்களை, இறப்பு நம்மிடமிருந்து பிரித்துள்ளது. அதே நேரத்தில் இந்தப் புரட்சியின் காலக்கட்டம் முழுவதும், புரட்சியில் வார்த்தெடுக்கப்பட்ட சிறப்பான தோழர்கள் பலர் தோன்றியுள்ளார்கள். இந்தத் தோழர்களுக்கும் மக்களுக்கும் இடையே வார்த்தைகளால் விவரிக்க முடியாத பிணைப்பும், நேசமும், நட்பும் உருவாகி உள்ளது.

நமக்கு மிகவும் நெருக்கமான, பெரிதும் மதிக்கப்பட்ட, மிகவும் நேசிக்கப்பட்ட, சந்தேகத்திற்குப் புறம்பில்லாமல் நமது புரட்சியாளர்களிலேயே மிகவும் சிறப்பான இத்தோழரைக் குறித்து, நமது உணர்ச்சிகளை வெளியிட நாம் இங்கு கூடியுள்ளோம்; அவரோடு தோளோடு தோள் நின்று போராடி, அவருடனே வீழ்ந்த வீரர்கள் குறித்தும், அவரைக் குறித்தும், நமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ள நாம் இங்கு குழுமியுள்ளோம். வரலாற்றின் ஏட்டில் ஒருபோதும் அழிக்க முடியாத பொன் எழுத்துக்களை பொரித்துள்ள, சேயின் சர்வ தேசப் படைக்கு நமது வணக்கங்களைத் தெரிவிக்கவும் நாம் இங்கு இணைந்துள்ளோம்.

எங்குமே சேயுடன் நெருங்கிப் பழகி, அவரது தனித்துவமான சிறப்பியல்புகளை அறிந்து கொள்ளும் முன்னரே, ஒருவர் அவரது எளிமை, அவரது குணநலம், அவரது தனித்திறமை, அவரது இயல்பான தன்மை, அவரது தோழமையுணர்வு, அவரது ஆளுமை போன்றவற்றால் உடனடியாக ஈர்க்கப்படுவது நிச்சயம்.

அந்த முதல் சில நாட்களுக்கு அவர்தான் எங்கள் குழுவுக்கு மருத்துவராக இருந்தார். அதிலிருந்து அவர் மீது எங்களுக்கு இருந்த நேச உணர்வும் நட்பும் பிணைப்பும் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

ஏகாதிபத்தியத்தின் மீது அளவிட முடியாத வெறுப்பும், சகிக்க முடியாத பகையுணர்வும் அவரிடம் எப்போதும் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டு இருந்தது. இதற்கு அச்சமயத்திலேயே அவரிடம் அரும்பியிருந்த சிறப்பான அரசியல் விழிப்புணர்ச்சி மட்டும் காரணமல்ல; அதற்கு சிறிது காலம் முன்பு, கவுதமாலா நாட்டில் தோன்றிய புரட்சியை ஏகாதிபத்தியம் தலையிட்டு கொடூரமான நசுக்கியதின் நேரடியான சாட்சியாக அவர் விளங்கியதும் முக்கியமான காரணம். சேயைப் பொறுத்தவரை எப்போதுமே அவருக்கு விரிவான விவாதங்கள் தேவைப்பட்டது கிடையாது. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையை எதிர்த்துப் போராட, கையில் ஆயுதங்களுடனும், நெஞ்சில் உரத்துடனும் பல மனிதர்கள் போராடத் தயாராக இருந்திருக்கிறார்கள் என்ற தகவல் மட்டுமே போதும்; அந்த மனிதர்கள் உண்மையான புரட்சி மற்றும் தேசபக்தி கொள்கைகளால் கவரப்பட்டு போராட முனைந்துள்ளனர் என்பது குறித்து, அவர் தெளிவு பட்டு விட்டால், அவருக்கு இதுவே அதிகம். ஆகவே அவர், எங்களுடன் சேர்ந்து, 1955-ஆம் ஆண்டு, நவம்பர் மாதக் கடைசியில் கியூபாவை நோக்கி பயணப் பட்டார். நாங்கள் புறப்பட்ட சந்தர்ப்பச் சூழ்நிலை காரணமாக, அவருக்கு தேவையான அத்தியாவசியமான மருந்துகளைக் கூட, அவரால் எடுத்துக் கொள்ள முடியாமல் போய் விட்டதால், அப்பயணம் முழுவதும் அவர் மிகவும் தொல்லையுற்றது, எனக்கு இன்னும் நன்றாக நினைவில் இருக்கிறது. அப்போது அவர் தீவிர ஆஸ்துமா நோயினால் அவதிப்பட்டு வந்தார். அதைத் தணிக்க மருந்துகள் இல்லாத நிலையிலும் கூட, அவர் அதைப் பற்றி சிறு முணுமுணுப்புக் கூட இன்றி, தன் வேலையைச் செய்து வந்தார். நாங்கள் வந்து இறங்கினோம்; முதல் அணிவகுப்பை நடத்தினோம்; முதல் பின்னடைவை எதிர்கொண்டோம்; சில வாரங்களின் முடிவில் 'சிரண்மா' பயணத்தின் தப்பிப் பிழைத்த அனைவரும் மீண்டும் ஒன்று கூடியது போன்ற விஷயங்கள் உங்களுக்கு தெரிந்து இருக்கும். இக்காலக் கட்டத்தில், சே எங்கள் குழுவின் மருத்துவராக தொடர்ந்து செயல்பட்டு வந்தார்.

நாங்கள் எங்கள் முதல் மோதலில் வெற்றி பெற்ற போது, சே எங்களுடைய குழுவின் மருத்துவராய் மட்டும் அல்லாது, ஒரு போர்வீரராகவும் மாறியிருந்தார். இரண்டாவது வெற்றிகரமான சண்டையின்

படிப்பகம்

முடிவில், அவர் சாதாரணமான போர்வீரராய் மட்டும் அல்லாது அச்சண்டையிலேயே சிறப்பான போர்வீரராயும் உருவெடுத்து இருந்தார். அனைத்து இராணுவ நடவடிக்கையின் போதும், அவரிடம் நிரம்பி இருந்த அவரது தனித்துவ மிக்க அஞ்சாநெஞ்ச குணாதிசியம் அச்சண்டையின் போது முதன் முதலில் வெளிப்பட்டது. எங்களுடைய படைபலம் பெருகிக் கொண்டே போனது. அச்சமயத்தில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சண்டையை நாங்கள் சந்தித்தோம். அச்சூழ்நிலை எங்களுக்கு மிகவும் பாதகமாக இருந்தது. கடற்கரையோரம் மிகுந்த ஆயுத பலத்துடனும், சிறப்பான காவல்களுடனும் அமைந்து இருந்த ஒரு எதிரி முகாமை வைகறையின் முழுவெளிச்சத்தில் தாக்க முடிவு செய்து இருந்தோம். எங்களுக்குப் பின் புறத்திலும் அருகிலேயே எதிரித் துருப்புகள் இருந்தன. அப்படிப்பட்ட குழப்பமான ஒரு சூழ்நிலையில் தங்களுடைய முழுத் திறமையையும் வெளிப்படுத்துமாறு அனைத்து தோழர்களும் கேட்டுக் கொள்ளப் பட்டார்கள். தோழர் ஜான் அல்டா மிகவும் கடினமான பணி ஒன்றான வழி நடத்தும் பணியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். எங்கள் படைவியூகத்தின் ஒரு பகுதி காலியாகவே இருந்தது; தாக்குதல் படை எதுவும் அங்கு இல்லாதிருந்த நிலையில், எங்களது முழுத்திட்டமுமே ஆபத்தான நிலையில் இருந்தது. அப்போதும் எங்கள் குழுவின் மருத்துவராய் இருந்த சே, உடனே ஒரு இயந்திரத் துப்பாக்கியை கேட்டு வாங்கிக் கொண்டு, இரண்டு மூன்று வீரர்களை அழைத்துக் கொண்டு, ஓரிரு நிமிடங்களிலேயே, தாக்குதலை மேற்கொள்ள அத்திசையை நோக்கி விரைந்து விட்டார். அச்சமயத்தில் அவர் ஒரு சிறந்த போராளியாக விளங்கியதோடு மட்டும் அல்லாது, சிறப்பான மருத்துவராகவும் செயல்பட்டார். காயம்பட்ட எங்களது தோழரைக் கவனித்துக் கொண்டதோடு, எங்களது எதிரி வீரர்களுக்கும் அவர் சிகிச்சை அளித்தார். அனைத்து ஆயுதங்களையும் கைப்பற்றிய பிறகு, அவ்விடத்தை காலி செய்து, எதிரித் துருப்புகளின் பலவித தொல்லைகளையும் கண்காணிப்புகளையும் மீறி, எங்கள்முகாமை மீண்டும் அடைவது அவசியமாயிற்று. அதனால் காயம் பட்டவர்களுன் யாராவது தங்க வேண்டியிருந்தது. சே அவராகவே முன் வந்தார். அவர்களுடன் தங்கி, அவர்களைக் கவனித்து, அவர்களது உயிரைக் காப்பாற்றி, பின்னர் அவர்களோடு வந்து எங்களுடன் இணைந்து கொண்டார்.

அந்நேரத்தில் இருந்து திறமையும் தளராத ஊக்கமும் நிறைந்த ஒரு தலைவனாக அவர் விளங்கினார். எந்தவொரு கடினமான சூழ்நிலையிலும், நீ போய் அதை முடி என்ற சொல்வதற்கு முன்பாக, அங்கே போய் நிற்கும் குணத்தை அவர் கடைசிவரை கைவிட வில்லை.

முதல் சில நாட்களில், எல் யுவரோ என்ற இடத்தில் கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவரின் துரோகச் செயல் காரணமாக, திடீரென்று நாங்கள் எதிர்பாராத விமானத் தாக்குதலை எதிர்க்கொள்ள வேண்டியிருந்தது. அதில் இருந்து மீண்டு சிறிது தொலைவு வந்தவுடன்தான், எங்களுடன் இணைந்து போராடி வரும் விவசாயத் தோழர்கள், குடும்பத்தினரைப் பார்க்க அனுமதி பெற்று போன போது தவறுதலாக சில துப்பாக்கிகளையும் உடன் எடுத்துப் போய்விட்டது தெரிய வந்தது. முதலில் அவைகள் தெலைந்து விட்டது என்றே எண்ணினோம். அச்சமயத்தில் மேலிருந்து விமானங்கள் பொழிந்த குண்டு மழைகளின் ஊடாகப் போய், அத்துப்பாக்கிகள மீட்டு வர, சே தானாகவே முன்வந்து, விரைவாகப் போய், அவைகளை கொண்டு வந்து விட்டார்.

மிகவும் அபாயகரமான பணிகளில் ஈடுபட, உடனடியாக முன்வந்து விருப்பம் தெரிவிப்பது, அவரது தலையாய குணங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. ஆகையால் இயல்பாகவே அவர் பலரின் மதிப்பையும் உடனே பெற்று விட்டார். அவர் கியூபாவில் பிறக்காமல் இருந்தும், எங்களுடன் இணைந்து போராடியதாலும், மிகவும் அறிவார்ந்த கருத்துகளை கொண்டிருந்த ஒரு மனிதராக அவர் விளங்கியதாலும், இக்கண்டத்தின் இதர பகுதிகளிலும், ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராட்டங்கள் வெடிக்கும் என்ற கனவுகளால் அலைக்கழிக்கப் பட்டுக் கொண்டிருந்ததாலும், பிறர்கென வாழும் கொள்கையுடையவராக அவர் திகழ்ந்ததாலும், சிறிதும் தன்னலமற்றவராக அவர் எப்போதும் விளங்கியதாலும், எல்லாவற்றிற்கும் மேலாக, மிகவும் கடினமான பணிகளில், தன் வாழ்க்கையையே பணயம் வைத்து, ஈடுபட விருப்பம் கொண்டிருந்ததாலும், சகபோராளிகளுக்கு, அவர் மேல் இருந்த நேசமும் மதிப்பும் பன்மடங்கானது.

இப்படிதான் அவர் சிரானா மாஸ்ட்ராவில் உருப்பெற்ற இரண்டாவது படைப் பிரிவின் தலைவராகவும், மேஜராகவும் உயர்ந்தார். இப்படியாக அவரது புகழ் வெகுவாக உயர்ந்து கொண்டே போனது. போரின் ஊடாகவே மிக உயர்ந்த பதவிகளை அடைந்த அவர், மிகச் சிறந்த போராளி என்ற புகழை எட்டினார். சே ஒப்பிட முடியாத அளவு பிரமாதமான போர்வீரர். சே ஒப்பிட முடியாத சிறந்த தலைவர். இராணுவக் கண்ணோட்டத்தில், சே அசாதாரணமான திறமைகளைக் கொண்டிருந்த வீரர்; அசாதாரணமான தைரியத்தைக் கொண்டிருந்த மனிதர்; அசாதாரணமான மூர்க்கத் தனத்தைக்

கொண்டிருந்த துணிச்சல்காரர். ஒரு கொரில்லா என்ற முறையில் அவரின் அக்கலி[3]ஸின் குதிகாலாக ஏதாவது ஒன்று இருந்திருக்கும் ஆனால், அது ஆபத்தை துச்சமென மதிக்கும், இந்த அசாதாரணமான மூர்க்கத் தனமாகத்தான் இருக்கும்.

சேயின் மரணத்தின் மூலம் சில முடிவுகளுக்கு வரமுடியும் என்று எதிரி நம்புகிறான். சே போர்க்கலையில் ஒரு விற்பன்னர்; கொரில்லாப் போராட்டக் கலையில் ஒரு நுட்பமான கலைஞர். இவைகளை அவர் எண்ணற்ற தடவை நிரூபித்தும் உள்ளார். அதில் சிறப்பாக இரண்டைக் குறிப்பிடலாம். ஒருமுறை சிறிதும் பழக்கமில்லாத சமவெளியான ஒரு இடத்தில் காமலே என்ற சிறப்பான தோழருடன் இணைந்து ஆயிரக்கணக்கான எதிரிப்படை வீரர்களைத் தாக்கி அழித்தார். அதை அவர் லாப் விலாஸ் பிராந்தியத்தில் நடந்த மின்னல் வேகத் தாக்குதலின் போதும் நிரூபித்துள்ளார். அதிலும், ஏழாயிரம் தரைப்படை வீரர்கள், டாங்குகள் மற்றும் மாபெரும் ஆயுதக் குவியல்களுடன் பாதுகாக்கப்பட்ட சாண்டா கிளாரா நகரத்தின் மீது வெறும் 200 படைவீரர்களை மட்டும் வைத்துக் கொண்டு, மிகுந்த தீரத்துடன் தாக்கி வெற்றி கொண்ட செயல் குறிப்பிடத்தக்கது.

இந்த இரு வீரத்தீரச் செயல்களும், அசாதாரணமான திறமைகளைப் படைத்த தலைவர், போர் விற்பன்னர் மற்றும் புரட்சிகரமான போர்க்கலையில் ஒரு நுட்பமான கலைஞர் ஆகிய முத்திரைகளை அவர் மீது பொறிக்கக் காரணமாயின. ஆனால் அவரது வீரம் கொப்பளிக்கிற, புகழ்மிக்க மரணத்திற்குப் பிறகு, அவரது கொள்கைகள் மற்றும் கொரில்லாக் கோட்பாடுகளின் மீது புழுதி வாரி இறைக்க சிலர் முயற்சிக்கின்றனர்.

அவர் வேண்டுமானால் இறந்திருக்கலாம். புரட்சிகரமான போர்களிலும், அபாயகரமான கொரில்லாப் போராட்டங்களிலும் தானாகவே விரும்பிப் பங்கேற்றக் கொண்ட அவர் இறந்ததில் ஆச்சரியப்பட ஒன்றுமேயில்லை. ஆனால் அவர் தனது வாழ்க்கையையும், தனது மேதமையையும் அர்ப்பணித்துக் கொண்ட அந்தக் கலை மட்டும் சாகவே சாகாது.

இத்தகைய தவைர் ஒருவர் ஒரு மோதலில் இறந்தார் என்பதில் என்ன விநோதம் உள்ளது? நமது புரட்சிகரமான போராட்டத்தில் எண்ணற்ற முறை அவர் தனது உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் செயல்களில் இறங்கியுள்ளார். அப்படிப்பட்ட தாக்குதல்களில் எல்லாம் இறக்காமல், இப்படி இறந்துள்ளதுதான் இதில் உள்ள விநோதம். கியூபப் போராட்டத்தின் போது, அதிக முக்கியத்துவம் இல்லாத செயல்களில் ஈடுபட்டு, ஆபத்தை விலைக்கு வாங்க அவர் முன்வந்துள்ள எண்ணற்ற சமயங்களில், அவரைத் தடுத்து நிறுத்த பெருமுயற்சி எடுக்க வேண்டியிருந்தது.

அவர் எத்தனையோ போர்க்களங்களில், தனது உயிரரைப் பணயம் வைததுப் போராடியிருக்கிறார். அதில் ஒரு தாக்குதலில், அவரது உயிரை மாய்த்துள்ளார்கள். அத்ததைகய தாக்குதல் எத்தகைய சூழ்நிலையில் உருவானது, அதில் அவரது வழக்கமான அசாதாரணமான மூர்க்கத்தனத்தின் பங்கு என்ன என்பது குறித்து அவதானிக்க நம்மிடம் போதுமான சான்றுகள் இல்லை. மீண்டும் நான் நினைவுப் படுத்துகிறேன். ஒரு கொரில்லா என்ற முறையில் அவரின் அக்கலிஸின் குதிகாலாக ஒன்று இருந்ததென்றால், அது ஆபத்தை துச்சமென மதிக்கும், அவரது இந்த அசாதாரணமான மூர்க்கத்தனமாகதான் இருக்கும்.

இங்குதான் நாம் அவருடன் கருத்து வேறுபாடு கொள்கிறோம். ஏனெனில் அவரது வாழ்க்கை, அவரது அனுபவம், அவரது தனித்துவமிக்க தலைமை, அவரது பெருமை மற்றும் அவரது வாழ்க்கை சுட்டிக்காட்டிய அனைத்துமே மிகவும் மதிப்பு வாய்ந்ததாக விளங்கின. அவர் அவரைப் பற்றி வைத்திருந்த நம்பிக்கையைக் காட்டிலும், ஒரு ஒப்பிட முடியாத அளவு விலை மதிப்பில்லாததாக இருந்தது.

தனிமனிதர்களுக்கு வரலாற்றில் மிகச்சிறிய பாத்திரமே உள்ளது என்பதிலும், மனிதர்கள் வீழ்ந்து விடும்போது, அவர்களோடு சேர்ந்து அவர்களது கொள்கைகளும் இறந்து விடுவதில்லை என்பதிலும், அவர் ஆழ்ந்த நம்பிக்கையுடையவராக இருந்ததால், அவரது நடத்தை அவ்வாறு இருந்திருக்கிறது.

இது உண்மை, இதில் எள்ளளவும் சந்தேகம் கிடையாது. மக்களின் மீது, கொள்கைகளின் மீது, மற்றும் எடுத்துக்காட்டுகளின் மீது, அவருக்கு உள்ள நம்பிக்கையை இது காட்டுகிறது. ஆனாலும் நான் சில நாட்களுக்கு முன்பு கூறியபடி, வெற்றி மேல் வெற்றியாக அவர் பெற்று குவிக்கவும், நாம் இதயபூர்வமாக விரும்பினோம். ஏனெனில் அவரைப் போன்ற அனுபவமுடைய அவரைப் போன்ற திறமையுடைய, அவரைப் போன்ற தனித்துவமிக்க ஒருவரைக் காண்பது எளிதல்ல.

---

3 அக்கலிஸின் (ACHILEES) - கிரேக்க பெருங்காப்பிய வீரன். அவனது ஒரே பலவீனமாமான பகுதி அவனது குதிகால்தான்.

அவரது உதாரணம் மிக்க மதிப்பு குறித்து, நாம் மிகச் சரியாகவே புரிந்து கொண்டுள்ளோம். அன்பான நமது மக்களிடையே இருந்து, அவரைப் போல, இன்னும் பலர் உதித்தெழுவார்கள். அவரது உயரத்தை தொட முயற்சிப்பார்கள் என்பதை நாம் முழு மனதோடு ஒப்புக் கொள்கிறோம்.

அவரிடம் ஒட்டிக் கொண்டிருந்த அனைத்து அற்புதமான குணங்களும் ஒருசேர பரிணமிக்கும் பிரிதொருவரைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமான காரியம். அவரைப் போன்ற ஆளுமையை தானாகவே உருவாக்கிக் கொள்ளும் ஒருவரை கண்டுப் பிடிப்பது அவ்வளவு சுலபமல்ல. அவருக்கு இணையான ஒருவரை ஒப்பிடுவது என்பதே சிரமமான விஷயம், அவரை ஒருவர் மிஞ்சுவது என்பது நடவாத காரியம் என்று கூடச் சொல்வேன். அதேசமயம் அவர் தோற்றுவித்த உதாரணம், அவரைப் போன்ற இன்னும் பலரை உருவாக்க வழி செய்யும் என்று மட்டும் தற்போது நான் கூறிக் கொள்கிறேன்.

சே ஒரு சிறந்த போராளி என்பதற்காக மட்டும் நாம் அவர் மீது மதிப்பு வைக்கவில்லை; மிகவும் அசாதாரணமான சாதனைகளைச் சாதிக்கக் கூடியவாராகவும் அவர் விளங்கியதாலும்தான். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆலோசகர்களால் பயிற்சி அளிக்கப்பட்டு, அடுத்துள்ள நாடுகளின் பொம்மை அரசர்களின் ஆசிர்வாதத்தோடு செயல்பட்டு வந்த ஆளும் கட்சியின் இராணுவத்தை, விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலருடன் சேர்ந்து எதிர்த்தச் செயலே, அவரது அசாதாரணமான சாதனை பற்றி எடுத்துரைக்கும்.

நாம் வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தோமானால், மிகக் குறைந்த தோழர்களை மட்டும் வைத்துக் கொண்டு இவ்வளவு முக்கியமான ஒரு காரியத்தில் ஈடுபட்ட ஒரு தலைவனை, இவ்வளவு சிறிய ஒரு படையை வைத்துக் கொண்டு, மிகப் பெரிய ஒரு இராணுவத்தை எதிர்த்துப் போராடிய ஒரு தலைவனை நம்மால் காணவே முடியாது. இத்தகைய தன்னம்பிக்கையின் நிரூபணத்த, போராளிகளின் போராட்டத் திறமையின் மீதுள்ள நம்பிக்கையின் நிரூபணத்தை, வரலாற்றின் பக்கங்களில் எவ்வளவு தூரம் தேடினாலும கிடைக்கவே கிடைக்காது.

**அவர் வீழ்ந்து விட்டார்:**

அவரது கொள்கையை வீழ்த்தி விட்டதாக, அவரது கொரில்லாத் தத்துவங்கள் அடித்து வீழ்த்தி விட்டதாக, ஆயுதப்புரட்சி பற்றிய அவரது கண்ணோட்டத்தை தகர்த்து எறிந்து விட்டதாக எதிரி நம்பிக் கொண்டிருக்கிறான். எதிர்பாராத அதிர்ஷ்டத்தின் மூலம், அவர்கள் சாதிக்க முடிந்தது எல்லாம், அவரது உடலைச் சிதைத்தது மாத்திரமே; ஒரு போரில் எதிர்பாராத நேரத்தில் எதிரி மீது கொள்ளும் வெற்றியைப் போன்றதே இது. இந்த அதிர்ஷ்டத்தை எதிரி பெறுவதற்கு, நாம் முன்பு கூறினோமே, அந்த அவரது மிதமிஞ்சிய மூர்க்கக் குணம் எவ்வளவு தூரம் உதவியது எனத் தெரியவில்லை.

இது போன்ற சம்பவம் ஒன்று நமது சுதந்திரப் போரிலும் நடந்துள்ளது. டாஸ் ரியோசில் நடந்த போரில் அவர்கள் நமது சுதந்திரப் போரின் ‘அப்போஸ்டலை’க் கொன்றனர். நூற்றுக்கணக்கான களங்களைக் கண்ட அண்ட்டோனியோ மாசியோவை, அவர்கள் புன்டா பிரேவாப் போரில் கொன்றனர். அதைப் போன்ற பல போர்களில், நமது சுதந்திரப் போரின் எண்ணற்ற தலைவர்கள், எண்ணற்ற தேசபக்தர்கள் கொல்லப் பட்டனர். அதனால் கியூபப் போராட்டம் பின்னடைந்து விடவில்லை.

சேயின் மரணம், நாம் ஒருசில நாட்களுக்கு முன்பு கூறியபடி, புரட்சி இயக்கத்திற்கு கிடைத்த ஒரு பேரிடிதான். ஏனெனில், சே சந்தேகத்திற்குப் புறம்பில்லாமல் ஒரு அனுபவம் வாய்ந்த சிறந்த தலைவராக விளங்கினார்.

ஆனால் இதை ஒரு மாபெரும் வெற்றி என்று முழுங்குபவர்கள் தவறு செய்கிறார்கள். அவரது இறப்போடு, அவரது சிந்தனைகள், அவரது தந்திரோபாயம், அவரது கொரில்லாக் கருத்துகள், அவரது கொள்கைகள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டன என்று, அவர்கள் நினைத்தால் அது மாபெரும் தவறு. ஏதோ ஒரு குருட்டு அதிர்ஷ்டத்தால் அவரைக் கொன்றவர்களைக் காட்டிலும், ஆயிரம் மடங்கு மேலான வீரனாக, தலைவனாக, துப்பாக்கி குண்டுகளுக்கு அஞ்சாத தியாக மறவனாக அவர் விளங்கினார்.

ஆனாலும் இத்ததைய கடுமையான பின்னடைவை புரட்சியாளர்களாகிய நாம் எவ்வாறு எதிர்கொள்வது? இந்த இழப்பை எப்படி ஈடு செய்வது? சே இருந்திருந்தால், இதற்கு எவ்வாறு ஆலோசனை தெரிவித்திருப்பார்? அவர் ஒரு கருத்து தெரிவித்து உள்ளார். லத்தீன் அமெரிக்க ஒருமைப்பாடு குறித்த கருத்தரங்கு ஒன்றிற்கு அவர் அளித்த செய்தியில் இவ்வாறு எழுதியிருந்தார். “என்னை எங்காவது இறப்பு எதிர்பாராமல் எதிர் கொண்டால், மகிழ்ச்சியாய் அதை அரவணைத்துக் கொள்வேன், என் புரட்சி அறைகூவல்களுக்கு ஏதாவது ஒரு காது செவிசாய்க்கும் பட்சத்தில்; என் கரங்களில் இருக்கும் துப்பாக்கிக்களை ஏந்திக் கொள்ள ஏதாவது ஒரு கரம் நீளும் பட்சத்தில்.”

அவரது புரட்சி அறைக்கூவல் ஒரேயொரு காதை மட்டும் அடையவில்லை. கோடிக் கணக்கான காதுகளை அடைத்துள்ளது. அவர் கைகளில் இருந்து வீழ்ந்த ஆயுதத்தை எடுக்க ஒரேயொரு கரம் மட்டும் நீளவில்லை. கோடிக்கணக்கான கரங்கள் நீண்டுள்ளன.

புதிய தலைவர்கள் உதித்தெழுவார்கள். அனைத்துப் புரட்சிகளின் போதும் தலைவர்கள் தோன்றியதைப் போன்று, இம்முறையும் அவரது அறைக்கூவலுக்கு செவி சாய்த்த மக்களிடம் இருந்து, புதியத் தலைவர்கள் தோன்றுவார்கள், சேயைப் போன்ற தனித்துவமான அனுபவமும் அசாதாரணமான திறமையும் கொண்ட தலைவர்கள், மக்களுக்கு கரம் கொடுக்க உடனடியாக கிடைக்க மாட்டார்கள்; இருந்தாலும் அப்படிப்பட்ட தலைவர்கள் போராட்டங்களின் ஊடாக வார்த்தெடுக்கப் படுவார்கள். சேயின் அறைக்கூவலுக்குச் செவிசாய்த்த கோடிக்கணக்கான மக்களின் மத்தியில் இருந்து அவர்கள் உருவாகி வருவார்கள். உடனேயோ அல்லது பின்னரோ ஆயுதங்களைத் தாக்கப் போகிற கோடிக்கணக்கான கரங்களுக்கு சொந்தக் காரர்களிடம் இருந்து அத்தலைவர்கள் உதித்தெழுவார்கள்.

புரட்சிகர போராட்டக் களத்தில் உடனடியாக சில பின்னடைவுகளை, அவரது மரணம் கண்டிப்பாக ஏற்படுத்தும் என்பதை, நாங்கள் உணராமலில்லை. போராட்டத்தின் வளர்ச்சிப் பாதையில் சில உடனடி பின்னடைவுகளை கண்டிப்பாக இது ஏற்படுத்ததான் செய்யும். சே ஆயுதத்தை மீண்டும் எடுத்த போது, உடனடி வெற்றி குறித்து சிந்திக்கவில்லை. ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராக, ஒரு மேல் வர்க்க குழு ஆட்சிகளுக்கு எதிராக, வேகமான வெற்றி குறித்து அவர் சிந்திக்கவில்லை. ஒரு அனுபவம் வாய்ந்த போராளி என்ற முறையில், ஐந்து பத்து பதினைந்து அல்லது தேவைப்பட்டால் இருபது வருடங்களுக்கும் நீடிக்கக்கூடிய போராட்டத்திற்கு அவர் தயாராகவே இருந்தார். அவர் பத்து பதினைந்து இருபது வருடங்கள் அல்லது தேவையெனில் வாழ்க்கை முழுவதும் போராட தயாரகவே இருந்தார்.

இந்தக் கால நோக்கிற்குள், அவரது இறப்பு அல்லது சரியாகச் செல்ல வேண்டுமானால், அவரது முன்னுதாரணம் மிகப்பலமான எதிரொலிகளைத் தோற்றுவித்திருக்கும். அந்த உதாரணத்தின் சக்தி, தோற்கடிக்க முடியாத ஒன்றாக இருக்கும்.

அதிர்ஷ்டத்தை நம்புபவர்கள் கூட, அவரது அனுபவம் மற்றும் அவரது தலைமை ஏற்கும் திறமையோடு அதைப் பொருத்திப் பார்க்க முடியாமல் திணறுவார்கள். சே ஒரு அசாதாரணமான, திறமையான, இராணுவத் தலைவர். ஆனால் சேயை நாம் ஞாபகப் படுத்திக் கொள்ளும் போது, சேயை நாம் நினைக்கும்போது, நமக்கு அவரது இராணுவத் திறமை முதலில் நினைவுக்கு வருவதில்லை. யுத்த நடவடிக்கை ஒரு வழிமுறையே, அதுவே முடிந்த முடிவான முடிவல்ல. போராளிகளுக்கு நடவடிக்கைகள் ஒரு சாதனம். இதில் முக்கியமானது புரட்சி, புரட்சிகர காரணம், புரட்சி கருத்துகள், புரட்சிகர குறிக்கோள், புரட்சிகர உணர்ச்சி, மற்றும் புரட்டிகர பண்புகள் கொண்டு நடவடிக்கைகளில் இறங்குவதுதான்.

இந்தத் தளங்களில், கருத்துக் களத்தில், உணர்ச்சிக் களத்தில், புரட்சிகர நற்பண்புக் களத்தில், அறிவுக் களத்தில் - அவரது இராணுவப் பண்புகளைத் தவிர்த்து - என்று புரட்சிகர இயக்கத்திற்கு அவரது இழப்பு எதை உணர்த்துகிறது என்பதை நம்மால் உணர முடிகிறது.

ஏனெனில் சேயின் அசாதாரணமான தனிச்சிறப்பியல்பு அரிதாக சேர்த்து காணப் படுகிற நற்பண்புகள் நிறைந்ததாகும். வெல்ல முடியாத செயல்வீரனாக, அவர் தனித்து நின்றார். அது மட்டுமல்ல; அவர் தெளிவாக நோக்கும் சிந்தனையாளராகவும், பரந்த மனப்பாங்கு உடையயவராகவும், சீரிய எண்ணஙகளுடையவராகவும் விளங்கினார். அவருக்குள் ஒரு செயல்வீரனும், ஒரு சிந்தனாவாதியும் ஒருங்கே இடம் பெற்றிருந்தான்.

அவர் சீரிய கருத்துகளையும் செயல் திறனையும் கொண்ட மனிதராக விளங்கியதோடு மட்டுமில்லை; ஒரு புரட்சிகர போராளிக்கு இருக்க வேண்டிய அனைத்து குணாம்சங்களும் உள்ளடங்கிய மனிதராகவும் அவர் விளங்கினார். ஒரு முழுமையான நேர்மையாளராக, உயர் ஒழுக்க நெறியை மதிப்பவராக, மிகவும் உண்மையுள்ளவராக, ஸ்டோயிக் மற்றும் ஸ்பார்ட்டன் வாழ்க்கை முறைகளைக் கொண்டவரனாக, அப்பழுக்கற்ற நடத்தை கொண்டவராக அவர் விளங்கினார். அவரது நற்பண்புகளில் மூலம் அவர் ஒரு உண்மையான புரட்சிகரப் போராளி இப்படிதான் இருக்க வேண்டும் என்று வாழ்ந்து காட்டி விட்டார். மனிதர்கள் இறந்துப் போனால் அவரைப் பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றுவது, அவரது நல்லியல்புகளை குறித்து பேசுவது வாடிக்கை. ஆனால் புரட்சிகர நல்லியல்புகளுக்கு ஒரு உதாரணமாக விளங்கிய சே குறித்து நாம் கூறுவது போல மேலும் துல்லியமாக, மேலும் நியாயமான வேறு ஒருவரைப் பற்றிக் கூற இயலாது.

அவர் வேறு ஒரு குணத்தையும் கொண்டிருந்தார். அவரது மனஉறுதி மூலமாகவோ, போராட்டங்களில் இருந்து பெற்ற அனுபவங்களில் மூலமாகவோ, அவர் பெற்ற பாடமாக அமைத்தது

அல்ல அந்தக் குணம். அது அவரது மென்மையான இதயம். அவர் மிகவும் அசாதாரணமான மனிதநேய மிக்க மனிதராகவும், அசாதாரணமான மென்மை உணர்வு படைத்தவராக விளங்கினார்.

அதனால்தான் அவரது வாழ்க்கை, சிந்தனையும் ஒருங்கே மேன்மையான புரட்சிகர நற்பண்களையும் சிறப்பான மனிதநேய உணர்வுகளையும் கொண்ட உறுதியான குணம் படைத்த விடாத்தன்மையுடன் விளங்கியது.

இத்தகைய காரணங்களால் அவர் வருங்காலத் தலைமுறையினருக்கு அவரது அனுபங்களை, அவரது சிறப்பான, இராணுவ அறிவை மட்டும் விட்டுச் செல்லாது அவரது அறிவாற்றலின் பயனையும் விட்டுச் சென்றுள்ளார். மொழியின் மீது மிகுந்த ஆளுமையுடன் அவர் எழுதி இருக்கிறார். போர் குறித்த அவரது வர்ணனைகள் ஒப்பிட முடியாதவை. அவரது சிந்தனையின் ஆழம் ஈர்க்கக் கூடியது. அசாதாரணமான தெளிவுடனேயே, அவர் அனைத்தையும் எழுதியுள்ளார். புரட்சிகர எண்ணங்களின் கலைக் கருவூலங்களாக அவரது எழுத்துகள் பாதுகாக்கப்படும் என்பதில் நமக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

அவரது அபரிதமான அறிவாற்றலின் பயன் காரணமாக அவர் நமக்கு எண்ணற்ற ஞாபகங்களை, எண்ணற்ற கதைகளை விட்டுச் சென்றுள்ளார். அவரது முயற்சி இல்லாமல், அவரது செயல் இல்லாமல் இருந்திருந்தால், அது ஒரேயடியாக அழிந்து போயிருக்கும்.

நமது தேசத்திற்காக அவர் உழைத்த நாட்களில் ஒரு நாள் கூட, ஓய்வு எடுத்துக் கொண்டது கிடையாது. பல பொறுப்புகள் அவரிடம் அளிக்கப்பட்டன; தேசிய வங்கியின் தலைவர், திட்டக்குழுவின் தலைவர், தொழில்துறை அமைச்சர், இராணுவப் பிராந்திய கமாண்டர், அதிகாரபூர்வமான அரசியல் பொருளாதார மற்றும் தோழமைக் குழுக்களின் தலைவர் போன்றவை. எந்த வேலை கொடுத்தாலும் அதை அதிகபட்ச உறுதியுடன் செய்யும் அசாத்திய அறிவாற்றல் அவருக்கு இருந்தது. அதனால் அவர் இராணுவ வீரர்களை போருக்குத் திறமையாக அழைத்துச் சென்றதைப் போல, அவருக்கு ஒதுக்கப்பட்ட நிர்வாகப் பணியில் ஒரு முன்னுதாரணமான தொழிலாளியாக விளங்கியதைப் போல, எண்ணற்ற சர்வதேசக் கருத்தரங்குகளில் நமது நாட்டை மிகத் திறமையாக பிரதிநிதித்துவப் படுத்தியுள்ளார்.

ஆனால் அவருக்கு ஓய்வு நாள் என்பதே கிடையாது; ஓய்வு மணித்துளிகள் கூட கிடையாது. அவரது அலுவலகத்தில் ஜன்னல் வழியேப் பார்த்தால், இரவு முழுவதும் விளக்குகள் எரிந்துக் கொண்டிருப்பதையும், அவர் வேலை செய்து கொண்டு இருப்பதையோ, படித்துக் கொண்டு இருப்பதையோ காணலாம். அவர் அனைத்து பிரச்சினைகளையும் ஒரு மாணவன் நிலையில் இருந்து அணுகியதால், ஒரு களைப்படையாத படிப்பாளியாக விளங்கினார். கற்றுக் கொள்ள அவருக்கு இருந்த தாகம் தணிக்க முடியாததாக இருந்ததால், அவர் தனது தூக்கத்தில் இருந்து நேரத்தை திருடி படிப்பதற்குச் செலவழித்தார். அவர் தனக்கு வேலை இல்லாமல் இருந்த நாட்களிலும், தானாக முன்வந்து வேறு வேலைகளில் ஈடுபடுவதற்கு அந்த ஓய்வைப் பயன்படுத்திக் கொண்டார். பலருக்கு அவர் ஒரு துண்டுகோலாக விளங்கினார். இன்று நாடெங்கும் பல்லாயிரக் கணக்கானவர்கள் செய்து வரும் செய்கைகளுக்கு அவர் ஒரு வழிகாட்டியாக விளங்கினார். நமது மக்கள் மென்மேலும் முயற்சி செய்யும் செயல்பாடுகளை அவர் தூண்டிவிட்டார்.

ஒரு புரட்சிவாதியாக, ஒரு கம்யூனிஸ்ட் புரட்சியாளனாக ஒரு உண்மையான கம்யூனிஸ்டாக அவர் மனிதனின் நன்னடத்தையில், அவனின் மனசாட்சியில் எல்லையற்ற நம்பிக்கை வைத்திருந்தார். மனித சமுதாயத்தில் கம்யூனிசத்தை நிர்மாணிக்க அடிப்படை சக்தியாய் நன்னடத்தை அமையுமென்பதை அவர் மிகத் தெளிவாக கண்ணுற்றார் என்றே நாம் கூற வேண்டும்.

அவர் சிந்தித்து செயல் பட்டு பலவற்றை எழுதினார். இன்று போன்ற ஒரு தினத்தில், சேயின் எழுத்துகளை நினைவுப் படுத்திக் கொள்வது சாலப் பொருத்தமாக இருக்கும். கியூப, லத்தீன் அமெரிக்க புரட்சிகர போராட்ட நடைமுறைக்கு சேயின் அரசியல் மற்றும் புரட்சிகர சிந்தனைகள், என்றென்றும் மதிப்பு மிக்கவையாக மிளிரும். அவரது செய்கைகள், அவரது கொள்கைகள், அவரது சிந்தனை, அவரது நல்லியல்புகள், அவரது மனித நேயம், அவரது அப்பழுக்கற்ற நடத்தை ஆகியவை உலகளாவிய மதிப்பு பெற்றிருப்பதிலும், அது தொடரும் என்பதிலும் நமக்கு சிறிதும் சந்தேகம் இல்லை.

இந்த கொரில்லாப் போராளியை போராட்டத்தின் போது கொன்று விட்டதாக கூறி எக்களிக்கிறது ஏகாதிபத்தியம். இத்தகைய அசாத்திய செயல்வீரனை அதிர்ஷ்ட தேவதையின் கண்ணசைப்பினால் ஒழித்துவிட்டதாக அது இறுமாப்புடன் கூறுகிறது. ஆனால் ஏகாதிபத்தியவாதிகளுக்கத் ஒன்று தெரியாது. அல்லது தெரியாதது போல நடிக்கிறார்கள். அப்போராளியின் பல முகங்களில், செயல் வீரனின் முகமென்ற ஒன்றும் உண்டு. நாம் நம்முடைய துக்கத்தை பற்றி பேசினால், செயல்திறன்மிக்க ஒரு மனிதனை இழந்ததால் ஏற்பட்ட துக்கத்தால் மட்டுமல்ல, உயர் நன்னடத்தையுள்ள ஒரு

மனிதனை இழந்ததால் ஏற்பட்ட துக்கத்தால், மிக உன்னத மனித உணர்வுள்ள ஒரு மனிதனை இழந்த துக்கத்தால் பாதிக்கப் படுகிறோம் என்பதால். அவர் இறக்கும்போது, அவருக்கு முப்பத்துஒன்பது வயதுதான் என்ற நினைப்பால் நாம் துக்கப்படுகிறோம். செழிப்பான அனுபங்களால் பழுத்திருந்த அந்த அறிவாற்றலின் இருந்து, இன்னும் பயன்பெற்றிருக்கலாமே என்ற எண்ணத்தால் நாம் துக்கப்படுகிறோம்.

புரட்சிகர இயக்கத்திற்கு ஏற்பட்டுள்ள பேரிழப்பின் அளவை நாம் அறிவோம். ஆனால் இதுதான் ஏகாதிபத்தியத்தின் பலவீனமான பகுதியாகும். ஒரு மனிதனை உடலியல்ரீதியாக அப்புறப் படுத்தியத்தின் மூலம் அவன் சிந்தனைகளை ஒழித்து விட முடியும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். அவரை ஒழித்ததன் மூலம் அவரது கருத்துகளை, அவரது நற்குணங்களை, அவரது முன்னுதாரணத்தை அழித்து விட்டதாக அவர்கள் நினைக்கிறார்கள். இந்த நம்பிக்கையில் அவர்களுக்கு துளி கூட வெட்கம் இல்லையென்பதை அவர்கள் வெளியிட்டுள்ள செய்தி தெரிவிக்கிறது. மோதலின் போது, அவர் தீவிரமாக காயமடைந்த பின், அவரைக் கொலை செய்துள்ளதை அவர்கள் வெட்கம் இன்றி ஒப்புக் கொண்டுள்ளனர். அந்தச் செய்தை எவ்வளவு வெறுப்பூட்டுவதாக, அந்த ஒப்புக்கொள்ளல் எவ்வளவு கேவலமான ஒன்றாக இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்து கொண்ட மாதிரி தெரியவில்லை. கடுமையாகக் காயமடைந்து இருக்கும் ஒரு புரட்சிக் கைதியை சுட்டுக் கொல்ல ஒரு கூலிப்பட்டாளத்திற்கு, பொறுக்கிகளுக்கு உரிமை இருக்கிறது என்பது போல அவர்கள் செய்தி வெளியிட்டு உள்ளனர். அதை விவரித்த செயலானது, இன்னும் மோசமானதாகும். சேயின் வழக்கு உலகையே உலுக்கிவிடும் என்பதையும், அந்த புரட்சியானனைச் சிறைச் சாலைக்குள் அடைப்பது என்பது இயலாத காரியம் என்பதையும் அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

அது மட்டுமல்ல, அவரது இறந்த உடலைக் கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை. உண்மையோ பொய்போ தெரியாது, அவர்கள் அவரது உடலை அடக்கம் செய்து விட்டதாக கூறியுள்ளனர். அவரை உயிரியல் ரீதியாக அழிப்பதன் மூலம் அவரது கொள்கைகளை அழித்துவிட முடியாது என்ற பயம் அவர்களுக்கு இருந்திருப்பதை இது சுட்டிக் காட்டுகிறது.

இந்தக் கண்டத்தில் உள்ள ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்களுக்காக, அவர்களின் நன்மைக்காக சே தன்னை அர்பணித்து விட்டார். இப்பூவுலகில் குடியுரிமை இல்லாதவர்களுக்காகவும், ஏழைகளுக்காகவும் போராடி அவர் வீழ்ந்து விட்டார். அக்கொள்கைகளைக் காக்க அவர் சுயநலமற்றும் சிறப்பாகவும் போராடினார் என்பதை அவரது கடுமையான எதிரிகள் கூட ஒப்புக் கொள்வார்கள். வரலாற்றில் அவரைப் போல செயல் பட்டவர்கள், ஒடுக்கப்பட்ட மக்களின் மேன்மைக்காக அனைத்தையுமே அர்பணித்த மனிதர்கள் ஒவ்வொரு நாளும் உயர்ந்து கொண்டே போகிறார்கள். மக்களின் மனதில் ஆழமாக பதிந்து கொண்டே இருக்கிறார்கள்.

எகாதிபத்திய எதிரிகளுக்கும் இது தெரியத் தொடங்கி இருக்கிறது. அவரது இறப்பு காலப்போக்கில் அவரைப் போன்றே நடக்க உறுதியாக இருக்கும், அவரது முன்னுதாரணத்தைப் பின்பற்றி அதே வழியில் நடக்க சித்தமாயிருக்கும் எண்ணற்ற மனிதர்களை உருவாக்கும் என்பது நிரூபிக்கப்பட நீண்டகாலம் ஆகாது.

அவரது இறப்பால் விழுந்த அடியில் இக்கண்டத்தின் புரட்சிகர குறிக்கோள் மீண்டு விடும் என்பதை நாம் முழுமையாக நம்புகிறோம். இதனால் புரட்சிகர இயக்கம் நசுக்கப்பட்டு விடாது என்று நாம் நம்புகிறோம்.

நமது மக்களின் புரட்சிகர நோக்கில், சேயின் உதாரணத்தை நாம் எப்படி பார்க்க வேண்டும்?

அவரை இழந்து விட்டோம் என்று நாம் உணர்கிறோமா? அவரது புதிய படைப்புகளை இனி நம்மால் பார்க்க முடியாது என்பது உண்மைதான். ஆனால் சே இந்த உலகற்கு ஒரு மரபுச் செல்வத்தை விட்டு சென்றுள்ளார். ஒரு மகத்தான மரபுச் செல்வத்தை விட்டுச் சென்றுள்ள அவரைப் பற்றி நன்றாக அறிந்த நாம், அவர் விட்டுச் சென்ற அந்த பணியின் வாரிசுதாரர்களாக பரிணமிக்கலாம்.

அவரது புரட்சிகர சிந்தனையை அவர் நமக்காக விட்டுச் சென்றுள்ளார். அவரது புரட்சிகரமான நடத்தையை, அவரது குணாம்சத்தை, அவரது மனஉறுதியை அவரது மேன்மையை, அவரது செயலூக்கத்தை, அவர் நமக்காக விட்டுச் சென்றுள்ளார். ஒரே ஒரு வார்த்தையில் சொல்வதானால், அவர் அவரையே ஒரு உதாரணமாக நமக்கு விட்டுச் சென்றுள்ளார். சே நம் மக்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கிறார். சேயின் உதாரணம் நம் மக்களுக்கு செம்மையான ஒரு முன்மாதிரியாக இருக்கும்.

நமது புரட்சிகரப் போராளிகள், நமது போர்வீரர்கள், நமது மக்கள் எப்படி விளங்க வேண்டும் என்பதை நாம் வர்ணிக்க வேண்டும் என்றால், தயக்கம் இல்லாமல் நாம் கூறலாம்: “சே போல இருக்க வேண்டும்’. நமது வருங்காலத் தலைமுறையினர் எப்படி விளங்க வேண்டும் என்று நாம்

விரும்புகிறோம் எனறு கேட்டால், நாம் கூறலாம்: “சே போல் இருக்க வேண்டும்”. நமது குழந்தைகள் எந்த வழியில் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நாம் விரும்புகிறோம் என்று கேட்டால், தயக்கமில்லாமல் நாம் கூறுவோம்: “சேயின் வழியில் அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்”. நமது காலக்கட்டத்தைச் சார்ந்திராத, வருங்காலத்தைச் சேர்ந்த ஒரு மனிதனுக்கு முன் உதாரணம் வேண்டும் என்றால், நான் என் இதயத்தின் அடித்தளத்தில் இருந்து கூறுவேன், செயலிலோ நடத்தையிலோ மாசு மறுவற்று விளங்கிய அந்த மாமனிதன் ‘சே’தான் என்று. நமது குழந்தைகள் எப்படி இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம் என்பதை விவரிக்க வேண்டியிருந்தால், புடம் போடப்பட்ட, புரட்சிவாதி என்ற முறையில் நமது இதயத்தில் இருந்து கூறலாம்: “சே போல அவர்கள் விளங்கட்டும்!”

நமது நாட்டு மக்களுக்கு மட்டுமல்லாமல் லத்தீன் அமெரிக்காவில் உள்ள ஒவ்வொரு இடத்திலும் உள்ள மக்களுக்கும், மனிதர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான முன்மாதிரியாக சே விளங்கியுள்ளார். புரட்சிகர நடுநிலைமையை புரட்சிகர அர்ப்பணிப்பை, புரட்சிகர போராட்ட குணத்தை, புரட்சிகர செயல்பாட்டை சே மிக உன்னத நிலைக்கு எடுததுச் சென்று விட்டார். மார்க்சிய-லெனினிச கோட்பாட்டை அதன் புத்துணர்ச்சி மிக்க, மிகத் தூய்மையான, புரட்சிகரமான வடிவத்திற்கு அவர் எடுத்துச் சென்றுவிட்டார். நமது காலக் கட்டத்தில் சர்வதேச பாட்டாளி வர்க்க உணர்வை, சேயைப் போல வேறு ஒருவரும், இவ்வளவு உன்னத நிலைக்கு எடுத்துச் சென்றதில்லை.

வருங்காலத்தில் ஒரு பட்டாளி வர்க்க சர்வதேசியவாதியின் உதாரணம் பற்றி பேசும் போது, பாட்டாளி வர்க்க சர்வ தேசியவாதியின் முன்மாதிரியாக ஒருவரைக் குறிப்பிட வேண்டி இருக்கும் போது, மற்ற எல்லோரையும் விஞ்சி அங்கே சே இருப்பார். தேசியக் கொடிகள், நடுநிலையற்றத் தன்மை, குறுகிய தேசியவெறி மற்றும் முன்வைப்பு ஆகியவை அவரது இதயத்தில் இருந்தும் எண்ணத்தில் இருந்தும் அடியோடு மறைத்து விட்டிருந்தது. எந்தவொரு மக்களுக்காகவும், அவர்களின் நியாயமான உரிமைகளுக்காகவும், தானாக முன்வந்து, தன் இரத்தத்தைச் சிந்த அவர் எப்போதும் தயாராக இருந்தார்.

இப்படிதான் பல மோதல்களில் அவர் காயம் அடைந்து, அவரது இரத்தம் நமது மண்ணில் சிந்தப்பட்டது. ஒடுக்கப் பட்டவர்களின் விடுதலைக்காக சுரண்டப் பட்டவர்களின் மீட்சிக்காக, அவர் தனது இரத்தத்தை பொலிவியாவில் சிந்தினார். அந்த இரத்தம் சுரண்டப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் அனைவரின் நன்மைக்காவும் சிந்தப்பட்டது. அந்த இரத்தம் அமெரிக்காவிலுள்ள அனைத்து மக்களுக்காகவும், வியட்நாமில் உள்ள மக்களுக்காகவும் சிந்தப்பட்டது. ஏனெனில் ஏகாதிபத்தியத்திற்கும், அதன் கைக்கூலிகளுக்கும் எதிராக அவர் பொலிவியாவில் போராடிய போது, வியட்நாமிற்கு மிக உயர்ந்த ஒருமைப்பாட்டை தாம் வழங்குகிறோம் என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

இந்தக் காரணத்திற்காக புரட்சியின் தோழர்களே, நாம் வருங்காலத்தை நம்பிக்கையுடன் எதிர் நோக்க வேண்டும். சேயின் உதாரணத்தில் நாம் ஒரு உத்வேகத்தை காண்கிறோம்; போராட்டத்திற்கான உத்வேகம், மேன்மைக்கான உத்வேகம், எதிரியை சர்வநாசம் செய்வதற்கான உத்வேகம், சர்வதேசியவாதத்தின் உயர்விற்கான உத்வேகத்தை நாம் காண்கிறோம்.

ஆகவே, இன்றிரவு நடந்த இந்த சிறப்பான விழாவிற்குப் பின்னர், இந்தப் பன்முகமான அங்கீகாரம் கலந்த விளக்கக்கூட்டத்தில் வியக்கத்தகு தன்னடக்கத்துடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் கலந்து கொண்ட பின்னர், தங்களுக்காக போரிட்டு மரணித்த தைரியசாலிகளை எப்படி கௌரவப் படுத்துவது என்பதைத் தெரிந்து வைத்துள்ள, உணர்ச்சிமிக்க, நன்றி உணர்வு கொண்ட நமது மக்கள், தங்கள் உணர்வுகளை இங்கு பிரமாதமாக வெளிக்காட்டி நின்றார்கள். இந்த மாதிரியான உணர்ச்சி வெளிப்பாடுகள், எப்படி புரட்சிப் போராட்டத்துடன் மக்கள் கைகோர்த்து நிற்கிறார்கள் என்பதையும், எப்படி புரட்சிக் கொள்கைகளையும், புரட்சிக் கொடியையும் மக்கள் மேலே தூக்கி தொடர்ந்து பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் மெய்பித்துக் காட்டுகிறது. இந்த மாதிரியான நினைவுக் கூரலின் போது, நமது எதிர்காலத்தை நாம் நம்பிக்கையையோடு தூக்கிப் பார்ப்போம். இறுதி வெற்றியின் மீது, அசைக்க முடியாத நம்பிக்கை வைப்போம். வெற்றியை நோக்கி முன்னேறுவோம் என்று சேயிக்கும், அவருடன் போராடி உயிர்நீத்த தோழர்களுக்கும் சொல்வோம்.

எப்போதும் வெற்றி நோக்கியே நமது முன்னேற்றம்!

வெற்றி நமதே!!

*(அக்டோபர் 18, 1967 அன்று, ஃபிடல் காஸ்ட்ரோ சேக்கு புகழஞ்சலி செலுத்திய போது ஆற்றிய உரை)*